# 47 நாட்கள்

good book

சிவசங்கரி

நூல் நிலையம்
- 600 01

SIV 38

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17

# 47 நாட்கள்

## 1

### முதல் நாள்

மாங்கல்ய தாரணம் ஆகப்போகிறது! வைக்கோல் திண்டுமேல் சித்தப்பா அமர்ந்திருக்க, அவர் மடிமேல் விசாலி உட்கார்ந்திருந்தாள். எதிரில் தாலியை கையில் தயாராய் வைத்துக்கொண்டு குமார். பக்கத்தில் தாலி முடியப்போகும் குமாரின் தங்கை. 'கௌரி கல்யாணம் வைபோகமே' என்று இஷ்டப்பட்ட சுருதியில் பாடும் மற்ற உறவுப் பெண்மணிகள். வலக்கை ஆள்காட்டி விரலை தலைக்குமேல் உயர்த்தி 'கெட்டிமேளம்...கெட்டிமேளம்' என்று உரக்கச் சொல்லி மந்திரத்தைக் கூறும் சாஸ்திரிகள்.

கையில் இருந்த மந்திராட்சதையை அண்ணாவாய் லட்சணமாய் மணமக்கள்மேல் ஆசிர்வதித்து எறிந்தபோது, சந்துருவின் மனசு ஏனோ கொஞ்சம் குறுகுறுத்தது.

பதினாறே வயசு நிரம்பிய விசாலிக்கு கல்யாணமா...? மடிசாரைக் கட்டி 'ஷோகேஸில்' வைக்கப்படும் சின்ன அழகான ஸெலுலாய்ட் பொம்மைபோல இருக்கும் விசாலிக்கா கல்யாணம்...?

அவசரப்பட்டுவிட்டோமோ...?

சரியாக ஒரு வாரத்திற்கு முன்னால் நினைத்த நினைப்பில்லாமல் விசாலியின் திருமணம் குதிர்ந்தபோதும் சந்துரு இப்படித்தான் நினைத்தான். இதையே அம்மாவிடம், சித்தப்பாவிடம், மற்ற தாயாதிப் பெரியவர்களிடமும் சொல்லவே செய்தான்.

''வலிய வர ஸ்ரீதேவியை வாண்டாங்கறதா...? வயது பதினாறு ரொம்பி, பதினேழு பொறந்திடுத்து...இன்னும் என்ன அவ குழந்தையா?'' என்று சித்தப்பாவும்—

''விசாலி வயசுலே எனக்கு சுப்புணி பொறந்துட்டான்; சின்ன வயசா இது?'' என்று சித்தியும்,

''அந்தக் காலத்திலே நம்ப பிராம்ணாளாத்தில் பெண்டுகள் இறள்றதுக்கு முன்னாலேயே கல்யாணம் பண்ணிடுவா... அதுதான் கொழந்தைகளுக்கு நல்லது. எல்லாம் தான்தோன்றித்தனமாய் நடக்கிற இந்தக் காலத்திலே உங்கப்பா தெய்வமா இருந்து விசாலிக்கு ஒரு நல்ல வழிகாட்டியிருக்கார். இதுக்கு என்னத்துக்காக, இத்தனை... யோசனை?'' என்று ஒருமுகமாய் மற்ற பெரியவர்களும்...

''பெரியவா சொல்றது நல்லதுக்குத்தாண்டா சந்துரு. ...மாப்பிள்ளை ஆத்துக்காரா நல்லமாதிரியா இருக்கா... வலிய வந்து கால்காசு செலவில்லாம பண்ணிக்கறேங்கறா... பையன் கைநிறைய சம்பாதிக்கிறான்...கண்ணுக்கு ராஜாவா இருக்கான். இந்தக் காலத்துலே சீமைக்குப்போய் குடுத்தனம் பண்றது தன்னிப்பட்ட பாடாய் இருக்கு... திருவையாத்து லட்சுமி பிள்ளையும், மாட்டுப்பொண்ணும் அங்கேதானே இருக்கா...? என்ன குறைஞ்சுபோயிட்டா...? எனக்கென்னமோ இந்த சம்பந்தத்தை விட்டுட மனசு இல்லை...'' என்று அம்மா பட்டம்மாவே தீர்மானமாய் சொன்னபிறகு இவன் வாயைத் திறக்கவில்லை.

வாஸ்தவம்தான்.

குமார் போன்ற மாப்பிள்ளை விசாலிக்கு வாய்ப்பான் என்று கனவில்கூட நினைத்திருக்க முடியுமா?

சீமையில் வேலை பார்க்கும் மாப்பிள்ளை.

கண்ணுக்கு மன்மதன்தான்!

வரதட்சிணை, அது இது என்று ஒரு தம்பிடி வாங்கவில்லை...



கல்யாணம் ஸிம்பிளாக இருக்க வேண்டும் என்று கண்டிஷன் வேறு...!

போதாகுறைக்கு விசாலிக்கு ஒரு கெம்பு செட், வைர மோதிரம், நாலு கெட்டிக்கரை பட்டுப்புடவைகள் எல்லாம் மாப்பிள்ளையின் தனிப் பரிசுகளாம்...!

போதுமா...?

ஊர் ஜனங்கள் விசாலிக்கு வந்த அதிர்ஷ்டத்தை எண்ணி மூக்கில் விரலை வைத்தார்கள்...இன்னும் எடுக்கவில்லை.

'எல்லாம் சரிதான்....ஆனாலும் ஏன் என் மனசு இப்படிக் குறுகுறுக்கிறது?' என்று இப்போது மணப்பந்தலுக்கு அருகில் நின்று, தங்கை அவள் கணவனைப் பார்க்கும்போது மீண்டும் நினைத்துப் பார்த்தான் சந்துரு.

ஒருவேளை விசாலிக்கும்—குமாருக்கும் வயசு வித்தியாசம் பன்னிரண்டு என்பதால் இருக்குமோ...?

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் பதினாறு வயசு வித்தியாசம். சித்தப்பாவுக்குப் பதினைந்து...இவர்கள் தாம்பத்திய சந்தோசத்துக்கு என்ன குறை?...ம்ஹூம்... ஒன்றுமில்லை. அந்தக் காலத்துக்காரர்கள் என்று இவர்களை ஒதுக்கிவிட்டாலும், சந்துருவுக்குத் தெரிந்த வகையில் இந்த ஆதிச்சபுரத்தில் பத்து வயசு வித்தியாசத்திலும், அதற்கு மேலும் கல்யாணம் பண்ணிக்கொண்ட எத்தனையோ சின்ன வயசுக்காரர்கள் இருக்கிறார்களே! எல்லோரும் குழந்தையும் குட்டியுமாய், வாய் நிறையச் சிரிப்பும், மனசு நிறைந்த வாழ்க்கையுமாய்த்தானே இருக்கிறார்கள்...? ஆக, வயசு வித்தியாசத்தைக் கண்டு என்னத்துக்காக மருள வேண்டும்?

'கண்காணாத தேசத்துக்கு கடைக் குட்டித் தங்கையை அனுப்புகிறோமே என்ற உணர்வு மனசை நெருடுகிறதோ?' சந்துரு யோசித்தான். 'இருக்கும் இருக்கும்.'

விசாலிமேல் அவனுக்கு அளவுகடந்த பாசம். அதுவும் அப்பா தவறிப்போகும்போது அவள் சின்னப்பெண். என்ன வயசிருக்கும்...? இவன் அப்போது எஸ்.எஸ்.எல்.ஸி படித்துக் கொண்டிருந்தான். அப்படியென்றால் இவனுக்குப் பதினாறு: விசாலிக் குட்டிக்கு எட்டு. அப்பா இல்லாத குறை குழந்தைகளுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக விசாலியிடம் தனிப்பட்ட அன்பை, கவனிப்பை சந்துரு இந்நாள் வரை செலுத்தி வந்தது உண்மை. ஒருவேளை இந்த ஆழ்ந்த பாசத்தின் காரணமாக, அவளை அயல் நாட்டுக்கு அனுப்பிவிட்டால் அடிக்கடி பார்க்கக்கூட முடியாதே என்ற காரணமாகத்தான் நெஞ்சு உறுத்துகிறதோ?— இருக்கும்...இருக்கும்.

விழுப்புரத்திலிருந்து நேராக திருச்சி போகும் நெடுஞ்சாலையில் மூன்று மைல்கள் போனால் ஞானபுரம் வரும். அங்கு ஒரு லெவல்-க்ராஸிங் உண்டு. அதற்கு முன்னால் வலது கைப்பக்கம் செம்மண் சாலை ஒன்று பிரியும். அதிலேயே வளைந்து வளைந்து பச்சை வயல்களையும், அல்லிப் பூக்கள் ஏகமாய் மலர்ந்திருக்கும் குளங்களையும், களத்துமேடுகளையும் கடந்து கிட்டத்தட்ட நாலு மைல்கள் போலச் சென்றால் மரகதபுரமும்—அதற்கு மேற்கே பாதையில் தொடர்ந்து போனால் ஆதிச்சபுரமும் வரும்.

அக்ரெஹாரத் தெரு ஒன்றும், ஒரு ரெட்டிமார் தெருவும் தான் ஆதிச்சபுரத்தின் பிரதான வீதிகள். ஒரு வீடு விடாமல் எண்ணினால்கூட தெருவுக்கு இருபது வீடுகள் தேறாது... சின்ன கிராமம். பிள்ளையார் கோயில் முக்கியமானது. அப்புறம் மாந்தோப்பில் உள்ள அம்மன் கோயில். சற்றுத் தள்ளிக் குடியானவர்கள் குடியிருப்பு. இன்னும் தூரத்தில் சேரி.

அக்ரஹாரத்தில் இருந்தவர்கள் அனைவருமே தாயாதிகள்தாம்! 'ஓஹோ' என்று கொழித்துக்கொண்டும், பண்ணை பிராகக் குடும்பம் என்று அந்தக் கிராமத்தில் யாரும் கிடையாது. எல்லோருமே தலைக்குப் பத்துப் பதினைந்து ஏக்கராக்களுக்குள் வைத்துக்கொண்டிருந்த சின்ன நிலக்காரர்கள்.



நிலத்தின் முக்கிய சாகுபடி கரும்பு...மற்றபடி வீட்டுச் சாப்பாட்டுக்குத் தேவையான நெல்லையும் அவரவர் பயிராக்கி உபயோகிப்பது வழக்கம்.

சங்கரய்யர்—சந்துருவின் தந்தை—பன்னிரண்டு ஏக்கரா நிலத்துக்கு உரிமையானவராக இருந்தவர். வருஷத்துக்குப் பத்தாயிரம்போல வருமானம் வரும்.

சந்துரு சீமந்த புத்திரன். அடுத்து ஞானம். கடைசியில் விசாலி.

ஆதிச்சபுரம் மரகதபுரத்துக் குழந்தைகளெல்லாம் படிக்க விழுப்புரம்தான் வரவேண்டும். யார் வீட்டு வண்டிக்கு வேலையில்லாமல் இருக்கிறதோ அவர்கள் வண்டியைக் கட்டி ஊர்க் குழந்தைகளை அதில் ஏற்றி ஞானபுரம் வரை கொண்டுவந்து விடுவார். அங்கிருந்து அவர்கள் பஸ் பிடித்து விழுப்புரம் வந்து பள்ளியில் படிப்பார்கள். மாலையில் பஸ்ஸில் ஞானபுரத்துக்கு வந்து ஏதாவது வண்டி வந்து காத்திருந்தால் அதில் ஏறி ஊர் திரும்புவார்கள். எந்தக் குழந்தையாவது ஞானபுரத்துக்கு டயத்துக்கு வந்து சேரவில்லை என்றால், கொஞ்ச நாழிகை காத்திருந்து பார்த்து விட்டு வண்டி கிளம்பிவிடும். அப்புறம் அந்தக் குழந்தை ஐந்து மைலுக்கு நடராஜாதான்! ஊரில் அறுப்பு, நடவு சமயமாக இருந்தால் வண்டிகளுக்கு வேலை இருக்குமாதலால் பாதி சமயங்கள் குழந்தைகள் நடக்கத்தான் நேரும். இதனாலேயே படிப்பை ஆர்வமாக ஆதிச்சபுரத்துக் குழந்தைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியவர்களும், 'படிச்சு என்ன கிழிக்கப்போகிறதுகள்...ஒரு நாள் வயலில் இறங்க வேண்டியதுகள்தானே?' என்ற அலட்சியத்துடனே இருந்ததால், உயர்நிலைப் பள்ளியை எட்டிப்பார்த்த பையன்களே அந்தக் கிராமத்தில் குறைவு. எஸ்.எஸ்.எல்.ஸி முழுசாக முடித்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்—அதில் சந்துரு ஒருவன் இல்லை.

சந்துரு பள்ளியில் இறுதி ஆண்டு படித்த வருஷத்தில் சங்கரய்யர் அகாலமாய் மாண்டுபோனார்.

காலையில் எழுந்து வயற்காட்டுக்குப் போனவர் உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும்போது வீட்டுக்குள் வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து, 'பட்டம்மா குடிக்க தீர்த்தம் கொண்டுவா...' என்றாராம். பட்டம்மா தம்ளரில் ஜலத்தோடு வந்தபோது மனுஷனுக்கு உயிர் இல்லை.

என்ன வியாதி, என்ன செய்தது என்றுகூட அந்த ஊர் ஜனங்களால் புரிந்துகொள்ள முடியாதபடி ஒரு சாவு அவருக்கு.

பத்து நாள் காரியங்களைப் பண்ணின கையோடு, பள்ளிப் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு—வயலில் வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு இறங்கி, அப்பாவுக்குப் பிறகு அந்த வீட்டின் பொறுப்பைச் சுமக்கும் ஆண்மகன் ஆனான் சந்துரு.

அப்பாவின் மரணத்துக்குப் பின் ஊரில் மற்றப் பெண்களோடு பதினெட்டாம்புள்ளி, பத்துக்கட்டம், பல்லாங்குழி ஆடிக்கொண்டு காலத்தைக் கழித்த ஞானத்துக்கு உன்பாடு என்பாடு என்று போன இரண்டாம் வருஷம்தான் கழுத்தில் மஞ்சள்கயிறு ஏறியது.

ஒரு மைல் தள்ளி உள்ள மரகதபுரம்தான் ஞானத்தின் புக்ககத்தார் வாழும் ஊர்.

கையில் இரண்டாயிரம், சீர்செனத்திகள், மாப்பிள்ளைக்கு மயில்கண் வேஷ்டி, மோதிரம் என்று எத்தனையோ சிறப்பாய் செய்தும் சம்பந்திகளுக்குத் திருப்தி இல்லை.

மாட்டுப்பெண் அவர்களைப் பொறுத்தவரை ஒரு வேலைக்காரிக்குச் சமம். வீட்டுக் காரியங்களைச் செய்து, மாட்டுத்தொழுவ வேலைகளைச் செய்து, நாள் பூராவும்



'லொங்கு லொங்கு' என்று உழைத்தாலும் வயிறு நிறைய சாதம் போடக்கூட ஞானத்தின் மாமியாருக்கு[ம்]மனசு ஆகாது. அப்படி ஒரு ஜன்மம்!

அத்தி பூத்தாற்போல இங்கு வரும் ஞானம் தன் கஷ்டங்களைச் சொல்லிப் பிழியப் பிழிய அழுவாள்.

விழுப்புரத்திற்கு சந்துரு போக வேண்டிய ஜோலி இருக்கும்போதெல்லாம் தார் வாழைப்பழம், பூசணிக்காய், தோட்டத்துக் காய்கறி என்று எதையாவது கொண்டு வாசல் திண்ணை நிறைய அடுக்கினால்தான், தங்கையை ஒரு நிமிஷம் பார்த்துப் பேச அனுமதிக்கப்படுவான். அப்போதும் சிண்டு முடியும் நாத்தனார் எமன் கூடவே இருக்கும்.

விசாலியை இந்த சீமை வரன் பெண் பார்க்க வந்தபோது எல்லாரும், 'சீமைக்கா பெண்ணை அனுப்புவது...?' என்று க்ஷணநேரம் யோசித்தபோது, பளிச்சென்று பேசி சந்தேகத்தைத் தீர்த்தவள் ஞானம்தான்.

ஜாதகப் பொருத்தம் பார்த்து, கூப்பிடு தூரத்திலே என்னைக் கொடுத்திருக்கேளே—நான் என்ன சுகத்தைக் கண்டுட்டேன்...? பொழுது விடிஞ்ச பொழுது போனா மாடாமாடா வேலை செய்யணும்—'அக்கடா'ன்னு ஒரு நிமிஷம் உட்காரக்கூடாது. கால் வயிறு சோறு. ஆம்படையான் மூஞ்சியை நின்னு பார்க்கணும்னாகூட அவாகிட்டே உத்தரவு வாங்கிக்கணும்...சீ...நாய் வாழ்க்கை—இந்த மாதிரி நானும் குடித்தனம் பண்றேன்னு சொல்றதுக்குப் பதிலா கழுத்துலே கயித்தை மாட்டிண்டு தொங்கிடலாம்...என் தலையெழுத்துதான் இப்படியாயிடுத்து—விசாலிக் குட்டியாவது நன்னா இருக்கட்டும்...யோசிக்காம இந்த வரனை முடிச்சிடும்மா! சந்துரு கெடக்கான்—ஆயிரம் வாண்டாத யோஜனை பண்ணிண்டு...நாளைக்கு அவ ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லாம ராணிமாதிரி வாழறப்போ இவனே

புரிஞ்சுப்பான்'' என்று ஆணித்தரமாய் திரும்பத் திரும்ப அவனே பேசி, இந்த சம்பந்தத்தை முடிப்பதில் குறியாய் நின்றான்.

முதலில் யோசித்த அம்மாகூட மாப்பிள்ளை பையனின் அழகையும், குணத்தையும், கனகதாரையாக விசாலிக்கு அவன் கொடுக்கும் பரிசுகளையும் கண்டு மனசு குதூகலித்துத் திருமண ஏற்பாட்டில் தீவிரமாய் ஈடுபட்டாள்.

இப்போது பந்தலில் மாங்கல்ய தாரணம் முடிந்த இந்த வேளையில் நின்று நிதானித்து யோசித்துக்கொண்டே மீண்டும் விசாலியைப் பார்த்தான் சந்துரு.

விசாலியை நெருங்கி மாப்பிள்ளை அவளுக்கு மட்டும் கேட்கும்படி என்னமோ சொல்லியிருப்பான் போலிருக்கிறது.

ஏற்கனவே தாமரையாய் இருந்த முகம் இன்னும் நாணத்தால் அழகு பெற்றுச் சிவக்க, தலையைக் குனிந்து கொண்டு தன் புன்னகையை விசாலி அடக்க முயற்சிப்பதை சந்துரு பார்த்தான்.

விசாலி சந்தோஷமாய் இருக்கிறாள்...அதுதானே முக்கியம்?

ஞானம் சொன்னாளே...'ஒரு பொண்ணுக்கு அவள் மனசைப் புரிஞ்சுண்டு, அன்பாய் இருக்கிற ஆம்படையான் கிடைச்சுட்டால் வேறு ஒண்ணுமே வாண்டாம்?'' என்று.

விசாலிக்கு அவள் மனம்போல மாங்கல்யமா...? இந்தக் கல்யாணத்தில் விசாலிக்கு பரிபூரண திருப்தி இருந்தால் அமெரிக்கா என்ன, லண்டன் என்ன...?

தலையை நிமிர்த்தி மணமேடையிலிருந்தே அண்ணாவைப் பார்த்து விசாலி புன்னகைக்கவும், சந்துருவும் பதிலுக்குத் தன் சந்தோஷத்தைக் காட்டிச் சிரித்தான்.

# 2

## மூன்றாவது நாள்

கார் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. 'வெள்ளிக்கிழமையா இருக்கு...புத்துமாரியம்மன் கோவில் பிரார்த்தனையை செலுத்திடலாமே...?' என்று விசாலியின் மாமியார் பண்ணியதால், எல்லோரும் கிளம்பியிருந்தார்கள். ஜன்னல் வழியாகப் புல்லென்று வீசிய குளிர் காற்று விசாலிக்கு ரொம்பப் பிடித்தது.

''காத்து அடிக்கிற வேகத்துலே உன் தலைமயிரெல்லாம் கலையறதே...கஷ்டமா இல்லை? கண்ணாடியைப் போட்டுடட்டுமா?''—அவள் அருகில் இருந்த குமார் கேட்டான். கணவனிடம் நிமிர்ந்து நின்று பேச விசாலிக்கு இன்னும் பழகவில்லை. 'வேண்டாம்' என்று தலையை ஆட்டினாள்.

'இந்தக் காத்து உனக்குப் பிடிக்கிறதா?'

என்ன இவர், விவரம் புரியாமல் மேலே மேலே எதையாவது கேட்டுண்டு...? சுத்தி மாமியார், நாத்தனார்கள் இருக்கிறப்போ இவரோடு 'ளவள'ன்னு பேசினா மரியாதைக் குறைவில்லையோ?

குமார் தன் இடது முட்டியால் விசாலியின் விலாவில் லேசாய் இடித்தான்.

''என்ன, பேசமாட்டியா?''

விசாலிக்கு படபடப்பாய் இருந்தது. கணவன் கை இடுப்பில் பட்டால் இப்படியா மனசு கிளுகிளுக்கும்? பதில் ஒன்றும் சொல்லாமல் கதவுப் பக்கமாய் நகர்ந்து உட்கார்ந்து, வெளியே பராக்குப் பார்ப்பதில் தீவிரமானாள்.

கல்மிஷம் இல்லாத, அப்பட்டமான கிராமத்துச் சிறு பெண்ணான, மிக அழகான விசாலியை சீண்ட குமாருக்கு ஆசை பிறந்தது!

இடது பாதத்தில் உள்ள செருப்பைக் கழட்டிவிட்டு, மெல்ல பாதத்தை நகர்த்தி விசாலியின் வலது பாதத்தின் மேல் தூக்கி வைத்தான்.

விசாலிக்கு உள்ளங்கையில் வேர்த்தது.

சற்று முன்னர் உண்டான கிளுகிளுப்பு உடம்பு பூராவும் பரவியது.

கொஞ்சமாய் தலையைச் சாய்த்து, அரைக்கண்ணால் கீழே நோக்கினாள்.

ரோஜாப்பூ நிறத்தில் இது என்ன பாதம்...? மெத்து மெத்தென்று. இவர் பாதம் இத்தனை மிருதுவாய் ஸ்வாமி பாதத்தைப் படத்தில் பார்க்கிறமாதிரி இருக்கு...?

என்னையே எல்லோரும் வெளுப்புனுதான் சொல்லுவா; ஆனாலும், இவர் பாதத்துக்குப் பக்கத்திலே என்னுது எத்தனை கறுப்பா இருக்கு...?

அமெரிக்காவிலே கொஞ்சம் வருஷம் இருந்துட்டதாலே அந்த ஊர்க்கார மாதிரி இவர் உடம்பும் இப்படி சிவந்து போயிடுத்தோ...? இவர் பாதத்துலே பித்த வெடிப்பே இல்லையே! என் குதிகால்லே நிறைய இருக்குமே...!

கண்களை நன்றாகத் தாழ்த்தி தன் பாதத்தைப் பார்த்தாள் விசாலி. கல்யாணத்துக்கு முதல்நாள் தேய்க்கிற கல்லிலே கால்களை நன்றாகத் தேய்த்திருந்ததில் பித்த வெடிப்புக்கள் மறைந்திருந்தன.

''என்ன பார்க்கறே?'' என்று மெல்ல கேட்ட குமார் அவள் காலை கட்டைவிரலால் சற்றே பலமாய் அழுத்தினான்.



பக்கத்தில் இருந்த மாமியார் பார்த்துவிட்டால் என்ன சொல்வது என்ற பயம் விசாலிக்கு எழுந்தது.

என்ன மனுஷர் இவர்? கொஞ்சம்கூட வெட்கம் இல்லாமல்...?

மணமேடையிலிருந்தே சமயம் கிடைத்தபோதெல்லாம் அவன் பேசுவது விசாலிக்கு புதுசாகவும், கஷ்டமாகவும் இருந்தது.

''ஏன் உனக்கு இப்படி வேர்க்கறது?''

''உனக்கு இந்த கலர் புடவை ரொம்ப நன்னா 'ஸூட்' ஆறது...!''

''போரி போடறப்போ உன் மருதாணி இட்ட கை எத்தனை அழகா இருக்கு தெரியுமா?''—இப்படி இவன் அவளின் அருகில் குனிந்து பேசினபோதெல்லாம், பதில் ஏதும் சொல்லத் தெரியாமல், வெட்கத்தாலும் பயத்தாலும் விசாலி தடுமாறிப்போனாள்.

குமாரைப் போன்ற ஒரு படித்த, அழகான, கலகலப்பான ஆண்மகன் அவளுக்கு—ஏன், அவள் கிராமத்துக்கே புதுசுதானே...?

''கல்யாணம் புதன்கிழமை ஆயிற்றா; 'வெள்ளிக்கிழமை நாள் நன்னா இருக்கு...அன்னிக்கே சாந்தி முகூர்த்தத்தை வெச்சுடலாமே நீ என்னப்பா சொல்லறே'ன்னு குமார்கிட்டே கேட்டேன். 'ஆஹா, உங்க இஷ்டம்ப்பா'னுட்டான். பிள்ளைனா இவன் இல்லையோ பிள்ளை? இந்த ஊரிலேயே தானும் எழுத்துப் படிச்சடுத்துன்னா ஒண்ணொண்ணும் தலைகால் புரியாம கூத்தாடறதுகள்...? என் பிள்ளை அமெரிக்காவிலே குடித்தனம் பண்ணியும் எப்படி இருக்கான் பார்த்தேளா?'' என்று கல்யாணத்தன்று மாமனார் வருவோர் போவோரிடம் எல்லாம் பெருமை பேசினதை விசாலியே கேட்டாள்.

கல்யாணமான மறுநாள் பாலிகை கரைத்துவிட்டு, கட்டுசாதக் கூடையுடன் குமாரின் ஊரான வில்லியனூருக்கு வந்து சேர்ந்தார்கள். கிருஹப்ரவேசம் தடபுடலாய் நடந்தது.

சாயங்காலம் கல்யாணம் விசாரிக்க வந்தவர்கள் கொஞ்சம் குறைந்த பின்னர், குமார் அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்த சாமான்களையெல்லாம் நாத்தனார்கள் காட்ட பிரமிப்புடன் விசாலியும், அவள் குடும்பத்தாரும் பார்த் தார்கள்.

மாவு அரைக்கும் மிஷின், கூந்தல் ஈரத்தை காய வைக்கும் மிஷின், கைக்கடிகாரங்கள், புடவைகள், சென்டு கள் அப்பாடி! ஒரு கடை வைக்கலாம்போல எத்தனை சாமான்கள்!

ரைஸ்மில் சொந்தக்காரரான சுப்பய்யரின் மூத்த மகன் குமார். அவனுக்குக் கீழ் சரியாக இன்னும் ஏழு தம்பி தங்கைகள். பெரிய குடும்பம். 'ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு; மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டு எப்படியோ குடும்பம் நடந்தாலும் புத்திசாலியான குமார் மட்டும் பிர மாதமாய்ப் படித்து, பள்ளியில் முதலாவதாய் தேறினான். பின்னர் ஸ்காலர்ஷிப்பில் சென்னை ஏ.ஸி. காலேஜில் படித்து, தன் இருபத்திமூன்றாவது வயசில் கட்டட நிபுணர் பட்டத்தையும் பெற்றான். அதோடு நிற்காமல் எங்கு பிடித் தானோ யாரைப் பார்த்தானோ தெரியாது—அமெரிக்க கம்பெனி ஒன்றில் வேலையை வாங்கிக்கொண்டு அமெரிக்கா போனவன்—வருஷம் ஐந்தான பிறகு இப்போதுதான் முதல் தடவையாக—அம்மாவின், 'வந்து கல்யாணம் பண்ணிண்டு போடா' என்ற அழுகைக்குச் செவிசாய்த்து வந்திருக்கிறான்.

தங்கள் குடும்பத்துக்குக் கதையையும், குமாரின் பெரு மையையும் வாய் ஓயாமல் விடிய விடியப் பேசி, தூங்கினோம் என்று பேர் பண்ணிவிட்டு—காலையில் அனைவரும் குளித்து புத்து மாரியம்மன் கோயிலுக்கு குடப்பால், அர்ச்சனை சாமான்களோடு புறப்பட்டார்கள்.



தூங்கி எழுந்து வந்த மகனிடம் புத்துமாரியம்மன் கோயிலுக்குப் போகப்போவதைத் தாய் சொன்னதும், ''ஏம்மா, அந்தக் கோயிலுக்குப் பொம்பளைகள்தான் போகணுமா?'' என்றான் அவன்.

''ஏண்டா?''

''நான் வரக்கூடாதா?''

குமாரின் தாய்க்கு வாயெல்லாம் பல்! 'இந்தக் காலத்துப் பிள்ளை; அதிலும் சீமையில் வேலை பார்ப்பவனாயிற்றே...! கோயில் குளம் என்று இழுத்தடித்தால் கோபித்துக் கொள்ளப்போறானே' என்று பயந்தவளுக்கு ரொம்ப சந்தோஷம்.

பத்தே நிமிஷத்தில் ஷேவ் பண்ணி, குளித்துத் தயாராகி விட்டான் குமார்.

கோயில் வந்துவிட்டது—

கோயிலுக்குள் சென்று பூசாரியிடம் பாலையும், அர்ச்சனை சாமான்களையும் கொடுத்தாள் குமாரின் தாய்.

''கர்ப்பகிருஹம் இரண்டு பாகமாய் இருந்தது. ஒன்றில் மூழு அம்மன். இன்னொன்றில் உயரமாய் ஒரு மண் புற்று.

விசாலி இந்தக் கோயிலைப் பற்றி கேள்விப்பட்டிருக் கிறாளே தவிர, பார்த்ததில்லை.

முதலில் புற்று இருந்த அறைக்குள் எட்டிப் பார்த்த போது அந்த இருளும், பெரிய புற்றும் 'திக்'கென்றிருந்தது.

பாலைப் பாத்திரத்தில் பூசாரி கொட்டி வைத்தார்.

''ராவுக்கு நாகம் வந்து குடிக்கும். முட்டை கொண்டு வந்திருக்கீங்களா?''

இவர்கள் 'இல்லை' என்றார்கள்.

வாழும் நாகம் அங்கு இருக்கிறதாம். தங்க நிறமாய் கட்டைவிரல பருமனுக்கு. முழ நீளமே உள்ள அழகான நல்ல பாம்பாம்! கோயிலில் இஷ்டம்போல் நடமாடுமாம். பாலைக் குடித்து, முட்டையை நாக்கால் துவாரமிட்டு உறிஞ்சிக் குடிக்குமாம்!

பூசாரி ஒரு காலி முட்டை ஓட்டை எடுத்துக் காட்டினார். ஓரத்தில் குண்டூசியால் செய்தது மாதிரி ஒரு துவாரம் இருந்தது.

பிராகாரத்தில் வலம் வரும்போது குமாரின் தாய் சொன்னாள்: ''இந்தக் கோயில் அம்மனுக்கு ரொம்ப சக்தி. நினைச்சது நடக்கும். நம்ப ஜாதிக்காரா ரொம்பபேர் இங்கே பிரார்த்திச்சிப்பா. இந்த குமார் இருக்கானே, இவன் அஞ்சு வருஷ காலமாய் கல்யாணமே வாண்டாம்னு இருந்தான்... 'எப்படியாவது எம் பிள்ளை மனசு மாறி கல்யாணத்துக்கு ஒத்துக்கட்டும்—உனக்குப் பால் அபிஷேகம் பண்ணி, காணிக்கை போடறேன்'னு போன ஆடி வெள்ளிக் கிழமைதான் வேண்டிண்டேன்—பாரு—கைமேல பலன். பிள்ளை மனசு மாறி, கார்த்திகை கடைசி வாரத்திலே கல்யாணம் ஆகி, பிரார்த்தனை செலுத்த அவனே வந்துட்டான்! எல்லாம் அவ அருள்...சுவரி...தாயே...லோக மாதா...!''

குமாரின் தாயார் சொல்லுவதும் நிஜம்தான்! எத்தனையோ கடிதங்களில், 'எங்களுக்குப் பேரனைப் பார்க்கணும்போல இருக்குடா...எங்கேயோ கண்காணாத தேசத்திலே ஒண்டியா இருக்கயே...ஒரு வாய் சாதம் வடிச்சுப் போட ஆள் இல்லாம திண்டாடறியே ஒரு நடை வந்து நல்ல பெண்ணாய் கல்யாணம் பண்ணிண்டு போகக் கூடாதா?' என்று புலம்பி எழுதினதுக்கெல்லாம், எனக்கு கல்யாணமே வேண்டாம்—என் வேலைதான் 'எனக்குப் பெண்டாட்டி!' என்று பதில் எழுதினவன் திடுதிப்பென்று,



தான் நாலு வார லீவில் வரேன்—நல்ல குடும்பப்பாங்கான பெண்ணாய் பார்த்து வையுங்கள்; பண்ணிக்கொள்கிறேன் என்று எதனால் மனசு மாறிக் கடிதம் எழுதினான்...?

சரியாகப் பத்து நாட்களுக்கு முன்பு விழுப்புரத்தில் இருந்த ஒன்றுவிட்ட மாமா பெண் கல்யாணத்துக்காக சந்துருவும் விசாலியும் வர நேர்ந்தது. விடியற்காலையில் முகூர்த்தம் என்பதால், முதல்நாள் ஜானவாசத்துக்கு வந்தவர்கள் கல்யாண வீட்டிலேயே படுத்துக்கொண்டார்கள். அதே கல்யாணத்துக்காக; வில்லியனூரிலிருந்து பிள்ளை வீட்டுக்காரர்களாய் குமாரின் குடும்பமும் வந்திருந்தது.

கல்யாணத்தில் ஓடி ஓடி வேலைகளைச் செய்து சம்பந்திகளை உபசரித்த விசாலி, குமார் கண்ணில் நன்றாகவே பட்டு விட்டாள்.

விசாலியின் அழகு அப்படிப்பட்டதுதான்!

ஜோரான சிகப்பு கலந்த வெள்ளை நிறம், நல்ல உயரம்; அதற்கேற்ற வளர்த்தி. இடுப்பும் கிண்ணம் கவிழ்த்த மாதிரியான மார்பகங்களும், பருத்த துடைகளும்...

சுருட்டை இல்லாத வழவழப்பான கறுத்த நீண்டமுடி. எண்ணெய் தடவி இழைய இழைய வாரி இறுகப் பின்னியதும், அது நடக்கும்போது குதிரைவால் மாதிரி தொடையில் 'ம்'மென்று இடித்து ஆடியது. முகத்திலும், கை கால்களிலும் பசும் மஞ்சள் பூச்சு. பெரிய குங்குமப் பொட்டு. கண்ணில் பட்டையாய் மை...

விசாலிமேல் வைத்த பார்வையை குமாரால் எடுக்க முடியவில்லை!

அன்று இரவே அம்மாவைத் தனியாக அழைத்துப் போய் விஷயத்தைச் சொன்னான்.

அம்மா விசாரித்துவிட்டுப் பையனிடம் வந்தாள்.

"ஆதிச்சபுரத்துப் பொண்ணு—பேரு விசாலம். அப்பா இல்லை, செத்துப்போய் ஒன்பது வருஷமாறதாம்...கெட்டியாய் நெருநெருன்னு இருக்காள்பாரு. அவள்தான் அண்ணா. பெரிசாய் சொத்துப் பத்து கிடையாது. முக்கியமாய் பெண் ஆறாம் கிளாஸ் தாண்டலை. நீ அழகை மாத்திரம் பார்த்து மயங்காதே...உனக்குத் தோதுப்படாது...!''

தாயும், தகப்பனும் ஊர் திரும்பினதும், திரும்பத் திரும்ப பிள்ளையை உட்கார வைத்துக்கொண்டு இதையே சொன்னார்கள்.

'ஆனானப்பட்ட படிப்பு படிச்ச பெண்கள் ஜாதகங்களை யெல்லாம் பொருத்தம் பார்த்து ஏற்பாடுபண்ணி வைச்சிருக் கோம். நானுதான் முந்தி மெட்ராஸிலே பார்த்த இரண்டு பெண்களுக்கும் என்ன குறைச்சல்...? ஒருத்தி டாக்டருக்குப் படிக்கிறா. மத்தவ லட்சாதிபதி வீட்டுப் பொண். படிப்பும் பி. ஏ. இருக்கு...இன்னும் அடுத்த வாரம் நீ பார்க்க ஏற்பாடு பண்ணி இருக்கிற பொண்களும், படிப்பிலேயோ அந்தஸ்திலேயோ அழகிலேயோ குறைஞ்சவா இல்லை... யோசிச்சச் சொல்லு...''

குமார் மசியவில்லை

''எனக்குக் குடும்பப்பாங்கான பெண்தான் வேணும்? பணமோ படிப்போ பெரிசில்லை. நான் வேணு சம்பாதிக் கிறேன். அவளும் அங்கே வந்து சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை;...நன்னா வீட்டைக் கவனிச்சுண்டு எனக்கு நல்ல பெண்டாட்டியா, குடுத்தனப்பாங்கா, தெய்வபக்தி உள்ளவளா இருந்தா போதும்! உங்களுக்கு அம்மா கிடைச்ச மாதிரி எனக்கும் ஒரு பண்பான பெண்டாட்டி கிடைக் கணும்னு நினைக்கிறேன்...அவளுக்கு பார்ட்டி ஆசை ஊர் சுத்தற ஆசை கூடாதுன்னு விருப்பப்படறேன். இது தப்பா?''

மறுநாளே ஓர் உறவுக்காரரை அனுப்பி சந்துருவை வில்லியனூருக்கு வரச்செய்தார்கள்.



பன்னிரண்டு வயசு வித்தியாசம், விசாலி படிக்காதது, தங்களால் பெரிசாய் சீர்செனத்தி செய்யமுடியாதது என்று சந்துரு எடுத்துச்சொன்ன எல்லாவற்றிற்கும் குமார் சம்மதித் தான்.

புளியங்கொம்பாய் பல இடங்களைத் தயார்ப் பண்ணி வைத்திருக்கும்போது. இப்படி வெகு சாதாரண இடத்தில் சம்பந்தம் பேசும்படி ஆனதே என்று குமாரின் பெற்றோர் வருத்தப்பட்டாலும், தேற்றிக்கொள்ளவே செய்தனர்.

பின்னே, வேறு என்ன பண்ணுவதாம்...?

ஐந்து வருஷ காலமாய் திருமணம் வேண்டாம் என்ற பிள்ளை மனசு வந்து சம்மதித்ததே பெரிசு! இதுவும் இல்லை என்று ஆகி சீமைக்குப் போய்விட்டால் திரும்ப எத்தனை வருஷங்கள் கழித்து வருவானோ...?

தவிர, 'பெண்டாட்டியுடன் போய்விட்டால் என் கம்பெனியில் சம்பளத்தை அதிகப்படுத்தறதா சொல்லி யிருக்கா...அதனாலே நான் ஊர் திரும்பினதும் உங்களுக்கு மாசம் ஐம்பது டாலருக்குப் பதிலாக நூறாய் அனுப்பப் போறேன்' என்றும், முதல்நாள் பேச்சுவாக்கில் குமார் சொல்லியிருந்தானே? நூறு டாலர்கள். கிட்டத்தட்ட எண்ணூற்றுச் சில்லறை. ஏ, அப்பா! வில்லியனூரில் இது வெல்லாம் இல்லையா? இவன் மனசுபோல பெண் பிடித்து, கல்யாணம் நடக்காவிட்டால், இவன் தனியாகப் போய் விட்டால் உபரிப் பணம் கிடைக்காதே!

பெண் அழகு, குணம் எல்லாவற்றிலும் குமாருக்கு ஏற்றவள்தான்! படிப்பு பணம் இல்லை. ஆனால் பிள்ளை தான் 'பரவாயில்லை, குடும்பப் பாங்கான பெண்தான் வேண்டும்' என்று அடம் பிடிக்கிறானே...? நாலையும் யோசனை பண்ணி நட்சத்திரப்பொருத்தம், மனசுப் பொருத் தம் பார்த்து முடித்ததும் கார்த்திகை மாசத்துக் கடைசி முகூர்த்தத்தை நிச்சயம் பண்ணியது இந்தத் திஜுசில்தான்.

# 3 நான்காவது நாள்

"அடியம்மா, இந்தப் பொண்ணுக்கு இருக்கிற அழுக்கைப் பாரேன்! வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னா என்னவாம்?"

முகவாயில் கையை ஊன்றி, கண்ணைப் பெரிசாய் விரித்து ஆச்சரியப்பட்ட ஞானம் பேசினாள்.

முதல் நாள் வெள்ளிக்கிழமை ராத்திரி தங்கள் சக்திக்கு ஏற்ற தினுசில் புது மெத்தை வகையறா வாங்கி—பால், பழங்கள், இனிப்புகள் அடுக்கி—வாசனை மலர்களால் ஜோடித்த அறைக்குள் பெரியவளாய் லட்சணமாய் ஞானம்தான் தங்கையை விட்டு வந்தாள்.

படித்த பையன்—சீமையில் இருப்பவன்—ஏதோ ஆசையில் தங்கையைப் பண்ணிக்கொண்டாலும், ஜோடிப் பொருத்தம் சரிதானா? மாப்பிள்ளை எதிர்பார்க்கும் தினுசில் விசாலிக்கு நடந்துகொள்ளத் தெரியுமா? இவள் அசல் பட்டிக்காடு—படிக்காத சின்னப்பெண். ராத்திரி புருஷன் மனசு கோணாமல் இதமாய் இருக்கத் தெரியுமா...?

ஞானத்தின் மனதில் ஆயிரம் கவலைகள். இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும் என்று குறியாக இருந்தாலும், நிதர்சனமான சில விஷயங்களைப்பற்றி நினைக்கையில் தவிப்பாகத்தான் இருந்தது.



ராத்திரி நல்ல பொழுதாகக் கழிந்துவிட்டால் ஓரளவுக்குக் கவலை இல்லை என்றே ஞானம் நினைத்தாள்.

விசாலியை அறையில் விட்டுவிட்டுக் கூடத்தில் மற்றப் பெண்களுடன் படுத்தவள், பின்னதாய் ஏதேனும் சப்தம் கேட்டாலோ...இல்லை, காற்றில் கதவு அடித்துக்கொண்டாலோ, 'சரி...மாப்பிள்ளை விசாலியிடம் கோபித்துக்கொண்டு வெளியே அனுப்பிவிட்டார்' என்ற நினைப்பில் இரவு முழுவதும் தூங்காமல் எழுந்து உட்கார்ந்து, சாத்தின கதவைப் பார்த்துவிட்டே பிறகு படுத்தாள்.

காலை மணி ஐந்து அடிக்கும் முன்னரே, சம்பிரதாயப்படி ஞானம் எழுந்து மூடியிருந்த கதவைத் தட்டி, 'விசாலி' என மெல்ல அழைத்தாள். தங்கை கதவைத் திறந்துகொண்டு வந்ததும், அவள் கையைப் பிடித்து கொல்லைக்கட்டுக்கு இட்டுச் சென்று அவளை நன்றாய் ஊன்றிப் பார்த்தாள்.

முதல்நாள் கட்டியிருந்த பட்டுச் சேலை இப்போது விசாலி உடம்பில் இல்லை...மாற்றுச் சேலையாக வைத்திருந்த நைலான் புடவையைத்தான் உடுத்தி இருக்காள்! சரிதான்...

முகத்தில் நாணம். என்னை நிமிர்ந்து பார்க்க முடியாதபடி வெட்கப்படறா...சரிதான்!

தூக்கமில்லாததால் சிவந்த கண்கள், அதில் கூத்தாடும் சந்தோஷம். சரிதான்...சரிதான்!

தான் பயந்தது வீண் என்பது புரிந்துபோனதும், பல் தேய்த்துக் குளிக்கும் நாழிகையில் தங்கையின் வாயைக் கிண்டத் தொடங்கினாள் ஞானம்.

"என்னடி விசாலி எல்லாம் சரியாயிருந்ததா?"

பல்பொடியை விரலில் எடுத்து அழுந்தத் தேய்த்த விசாலி தலைநிமிராமலேயே, 'ம்...' என்றாள்.

"நான் சொன்னமாதிரி பாலை அவர் கையிலே கொடுத்து நமஸ்காரம் பண்ணினியா?"

"ம்ம்..."

"அப்புறம்?"

"......"

"அட என்கிட்டே சொன்னா என்னடீ? சொல்லேன்!"

விசாலி என்னவென்று சொல்வாள்?

"சினிமா கதாநாயகன்மாதிரி இருக்கார்...சினிமாவிலே இருக்கிறவர்...நடந்ததும் சினிமா முதல் இரவு மாதிரியா...?"

ஞானத்தின் கேலி தொடர்ந்தது...

"சினிமா மாதிரியா? அதெல்லாம் எந்த மூலைக்கு? மனுஷர் எமகாதர்...!"

"போடி, விசாலி...வாயைத் திறந்தா என்னவாம்?"

"போக்கா...!" என்றாள் இத்தனைக்கும் பதிலாய் விசாலி.

"என்ன போக்கா...? ஆதிச்சபுரத்துக்குப் போனா அம்மா மத்த பெண்டுகள்ளாம் கேட்பாளே—நான் என்ன பதில் சொல்லட்டும்?"

இதற்கும், "போக்கா..." என்றே சொன்னாள் விசாலி.

"மாப்பிள்ளை என்ன சொன்னார்? உங்கிட்டே ஏதாவது பேசினாரா? நீ அவருக்கு புத்திசாலித்தனமா பதில் சொன்னாயா?"

விசாலிக்கு இப்போது கூச்சம் கொஞ்சம் குறைந்து போனது.

"ரொம்ப நாழி பேசிண்டிருந்தார்க்கா. அவர் இருக்கிற ஊர்பத்தி தன் பழக்கவழக்கங்கள் பத்தி எல்லாம் சொன்னார்."

"நிஜமாகவா...?" ஞானத்துக்கு ஆச்சரியமா இருந்தது. பெண்டாட்டிக்கு சரியாய் புருஷன் பேசுவானா? அதுவும் முதல் இரவிலேயா?



தொன்னிக்காய் கிராமம்—மரகதபுரம். இதில் பிறந்து வளர்ந்த அவள் கணவன்! அவனை மதித்து இன்றுவரை இரண்டு வார்த்தைகள் பேசியதில்லை—சீமை மாப்பிள்ளை, படிக்காத விசாலியிடம் ஒன்னரை நாழிகை பேசி விவரங்களைச் சொல்லி இருக்கிறான் என்றால் அது லேசா—?

ஞானத்துக்கு தன் 'முதல் இரவு' ஞாபகத்துக்கு வந்தது.

லாடின் மெத்தை தைக்கவில்லை...சாதாரண மெத்தை கொடுத்து ஏமாற்றிவிட்டார்கள் என்று அவள் மாமியாருக்கு ஏகக் கோபம். மாலையிலிருந்தே வாய் ஓயாமல் கத்திக் கொண்டிருந்தாள்.

"எங்கம்மாக்கு அவமானம்னா எனக்குமதானே? எனக்கு பொண்டாட்டியும் வாண்டாம்—ஒரு மண்ணும் வாண்டாம்" என்று அம்மாவுக்கு ஏத்த பிள்ளையாய் மாப்பிள்ளையும் கூத்தடித்தான்.

உன்பாடு, என்பாடு என்று சமாதானம் செய்து அறையில் மணமக்களை விடும்போது மணி பதினொன்று. அரை மணிக்குள், 'மாரை வலிக்கிறது...என் பிள்ளையைக் கூப்பிடுங்கோ' என்று மாமியார்க்காரி மாய்மாலம் பண்ண, மாப்பிள்ளை, 'அம்மா அம்மா' என்று புலம்பிக்கொண்டு அவள் அருகிலேயே இருந்தான். இரவு மணி மூன்றரை நெருங்குகையில் திரும்ப அறைக்குள் இவர்கள் விடப்பட்டார்கள்.

ஆச்சுபோச்சென்று மிருகத்தன வெறியுடன் ஞானத்தை அணுகினான் அவள் கணவன்...ஓர் இதமான பார்வை, ஒரு சுகமான அணைப்பு...ஓர் அழகான பேச்சு ம்ஹூம். இல்லவே இல்லை! அன்றும் இல்லை—இன்றும் இல்லை.

அதனால், விசாலியின் புருஷன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, அமெரிக்காவைப் பற்றிச் சொல்லி, அவளை சகஜ நிலைக்குக் கொணர்ந்து பயத்தை அகற்றி, உல்லாசபுரியில் உலவவிட்டிருக்கிறான் என்பது ஞானத்துக்கு பிரமிப்பாகவே இருந்தது.

அக்காவின் கேள்விகளுக்கு ஒரு மாதிரியாய், பட்டும் படாமலும் பதில் சொல்லிய விசாலி, ''குளிச்சுட்டு வந்துடறேன்கா...'' என்றபடி குளியல் அறைக்குள் புகுந்துகொண்டாள்.

ஞானத்தின் முதலிரவு அவளுக்கும் ஞாபகம் இருந்ததால் அக்காவின் வியப்பு விசாலிக்குப் புரிந்தது. என்ன கத்தல், என்ன சண்டை, என்ன ஆர்ப்பாட்டம்! சந்தையில் மாடு பிடிக்கிற மாதிரி! அத்திம்பேரைப் போன்ற ஆண்மக்களையே கிராமத்தில் பார்த்துப் பழகி இருந்த விசாலிக்கு, தன் கணவரை நினைக்கையில் உள்ளம் பூரித்துப்போயிற்று.

அக்கா சொன்னாளே, 'சினிமா மாதிரின்னா இருக்கு!' அது எத்தனை நிஜம்...

பாலை கையில் கொடுத்து நமஸ்காரம் பண்ண எங்கே விட்டார்...?

கதவை மூடியதுமே, தோளைப் பிடித்து அணைத்து நடத்திச் சென்று படுக்கையில் உட்கார வைத்து, 'என்னத்துக்கு பயப்படறே விசாலி...நான் என்ன புலியா?'ன்னு கேட்டு சிரிச்சாரே—அம்மம்மா! எத்தனை அழகு!

''நா உன்னை ஒண்ணுமே பண்ணப்போறதில்லை—சும்மா கொஞ்ச நாழிகை பேசிண்டு இருக்கலாமா? நா அமெரிக்காவில் எந்த ஊர்லே இருக்கேன் தெரியுமா?—ஷிகாகோ—அங்கே நமக்கு சௌகரியமான வீடு இருக்கு—உனக்கு வேலை பண்ணற கஷ்டமே தெரியாது. துணி தோய்க்க மிஷின், பாத்திரம் அலம்ப மிஷின்...எல்லாம் மிஷின்தான்!'' அமெரிக்க வாழ்க்கையைப் பற்றி, பத்திரிகைகளில் சில எழுத்தாளர்கள் எழுதிய பயணக் கட்டுரைகள் மூலம் விசாலி கொஞ்சம் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாலும், கணவனிடமிருந்து அதை நேராகக் கேட்டறியும் போது ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.



குமார் பேசப் பேச விசாலியின் பயம் எங்கோ ஓடிப் போனது. குபேர பட்டினத்தில் குடித்தனம் பண்ணப்போறோம் என்ற ஆர்வம் கூடிப்போனது.

அரைமணி நேரம் அவள் கைகளைத் தன் கைகளோடு கோத்துக்கொண்டு தன் அமெரிக்க வாழ்க்கையின் தரத்தைச் சொன்னவன், அவளின் படபடப்பு குறைந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டவனாய், ''என்னைப் பத்தியே பேசிண்டு இருக்கேனே...உன்னைப்பத்தி ஏதாவது சொல்லேன்?—'' என்று மெல்லப் பேச்சைத் திருப்பினான்.

''எனக்கு என்ன தெரியும்? நான் என்ன உங்களை மாதிரி படிச்சிருக்கேனா...இல்லே புத்திசாலியா? உங்களுக்குச் சரியா நா பேச நினைக்கிறது தப்பில்லையா.''

—விசாலி தன் மனதில் இருப்பதை வெளியில் சொல்லி விட்டாள்.

''அடே! உனக்கு சேர்ந்தாப்பல நாலு வரி பேசக்கூடத் தெரியுமா, என்ன? 'ம்...இல்லே, வாண்டாம்...'னு ஒரு வார்த்தையில்தான் சொல்லத் தெரியும்னு நினைச்சேனே...''

அவன் அவள் மோவாயைத் தன் பக்கம் திருப்பி, இப்படிச் சொல்லிச் சிரித்துவிட்டு, ''ஐ லவ் யுவர் இன்னோசென்ஸ் அண்ட் யுவர் பியூட்டி'' என்றும் சொன்னான்.

அவன் ஆங்கிலத்தில் சொன்னது ஒரு வார்த்தைகூட புரியாமல் விசாலி விழிக்கவே, ''உனக்குப் புரியலை?'' என்றான் குமார்.

''ம்ஹூம்.''

''உனக்கு இங்கிலீஷ் கொஞ்சம்கூடவா புரியாது?''

''ம்ஹூம்...''

''சின்னச் சின்ன வார்த்தைகள்கூட?''

''ம்ஹூம்...நாதான் படிக்கலே இல்லையே?''

ஆறாவது வரை படிக்கலை...? அதுலே உனக்குக் கொஞ்சமாவது சொல்லிக் கொடுத்திருப்பாளே?''

படிப்பைப் பற்றிக் கணவன் துருவித் துருவிக் கேட்பது விசாலிக்கு பயமாக இருந்தது.

''நா இங்கிலீஷ் படிச்சது ரொம்ப கொஞ்சம்...அதுவும் வருஷம் ஆனதுனாலே மறந்துபோயிடுத்து...''—விசாலியின் கண்கள் கலங்கிப்போயின.

குமார் அவளை இழுத்து அணைத்துக்கொண்டான்.

''இதுக்காக ஏன் வருத்தப்படறே, விசாலி? இங்கிலீஷ் தெரியாட்டா என்ன குடியா முழுகிடும்? எனக்குப் பிடிச்ச மாதிரி நீ இருக்கே...அது போதுமே! நீ எத்தனை அழகா இருக்கே தெரியுமா? உன் கை காலெல்லாம் மழமழன்னு எப்படி இருக்கு தெரியுமா?'' என்றவன் மெதுவாய் குனிந்து அவள் கண்களை, கன்னங்களை, உதட்டை இதமாய் முத்தமிட்டுவிட்டு, அவள் கழுத்தில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அதன்பின் விசாலியை அவன் தூங்க அனுமதித்தபோது, அவன் கைக் கடிகாரத்தில் மணி நான்காகிவிட்டிருந்தது.

''விசாலி...எத்தனை நாழி குளிப்பே? உங்க மாமியார் ரெண்டுதரம் வந்து எட்டிப் பார்த்துட்டுப் போயிட்டா!''

அக்கா கதவைத் தட்டவும்—அவசரம் அவசரமாய் குளித்து, துவட்டி, புடவையைச் சுற்றிக்கொண்டு வெளியே வந்தாள் விசாலி.

நெத்திக்கு இட்டுக் கொள்ளும்போது, ஏதோ நினைத்தவளாய் அவள் ஞானத்திடம் சொன்னாள்:

''இன்னும் ரெண்டு நாள்லே மெட்ராஸுக்குப் போகணுமாம்க்கா...அவர் சொன்னார். டிக்கெட் வாங்க, ஏற்பாடு பண்ண...''



''அதுக்கு மாப்பிள்ளை போனா போதாதா? நீ வேற கூடப் போகணுமா?''

''இல்லேக்கா. அமெரிக்காவுக்கு டிக்கெட் வாங்கணும்னா என்னை நேரிலே பார்த்தாதான் கொடுப்பானாம்!''

பாஸ்போர்ட், விசா வாங்குவதற்கு விசாலியும் நேரே வரவேண்டும் என்பதை குமார் முதல்நாள் சொல்லியிருந்தான். அவன் சொன்ன விவரம் புரிந்ததே ஒழிய, குறிப்பாய் பேர்கள், மற்றது விசாலிக்குப் புரியவில்லை.

''இன்னும் இரண்டு வாரத்துக்குள்ளே கிளம்பிடணுமாம்...அதுக்காகத்தான் அவசரமாய் மெட்ராஸுக்குப் போகணும்னு சொன்னார்.''

''இரண்டு வாரத்திலேயா? அது முடியுமாடி? திருவையாறு லட்சுமி மாமி பிள்ளை தலைகீழாய் நின்றான் தன்னோடயே பெண்டாட்டியை அழைச்சுண்டு போகணும்னு—நடக்கலியே—அப்புறம் நாலு மாசம் கழிச்சுத்தானே அவ தனியா போனா...?''

''நாகூட அவர்கிட்டே கேட்டேன்கா... ''எனக்கு மெட்ராஸிலே தெரிஞ்சவா இருக்கா. உன்னை உடன் அழைச்சுண்டு போக ஏற்பாடு பண்ணிடுவேன்...'' என்றார்.

அக்காவும், தங்கையும் சமையற்கட்டுக்குள் சென்றார்கள்.

ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணிய விசாலி, காபி கலந்துகொண்டிருந்த மாமியாரையும்—பின் அக்காவையும் நமஸ்கரித்தாள்.

''தீர்க்காயுசோடு இரும்மா'' என்ற மாமியார் விசாலி பார்க்காத வகையில் ஞானத்தை நோக்கி, 'என்ன எல்லாம் சரியாக இருந்ததாமா?' என்பதுபோல பாவனை செய்ய, ஞானமும் சந்தோஷத்தோடு, 'எல்லாம் நல்ல படியா நடந்திருக்கிறது' என்று சொல்லும் தினுசில் தலையை ஆட்டினாள்.

# 4 எட்டாவது நாள்

மாரீஸ் ஓட்டலின் எட்டாவது மாடியிலிருந்து குனிந்து கீழே பார்த்ததில் விசாலிக்கு தலையைச் சுற்றியது. நீளமாய் தெரிந்த சாலையும், அதில் கலர் கலர் புள்ளிகளாய் ஓடும் கார்களும், அவளுக்குப் பார்க்கப் பார்க்க அலுக்கவில்லை.

சென்னைக்கு பாஸ்போர்ட், விசா விஷயமாக விசாலியை அழைத்துக்கொண்டு போக குமார் முடிவு எடுத்ததை அறிவித்ததும்...

''இவ்வளவு சுருக்காகவா, குமார்...? இன்னும் நாலு நாள் கழிச்சுப் போகப்படாதோ...?'' என்று அம்மாவும் அப்பாவும் கேட்கவே செய்தார்கள்.

''எனக்கு லீவு இன்னும் பதினெட்டு நாள்தாம்பா இருக்கு—அதுக்குள்ள பண்ணற ஏற்பாடுகளைப் பண்ணிண்டு கிளம்ப வேண்டாமா...? சொன்ன தேதிக்குள்ள போகலைன்னா என் ஆபீசர், ''நீ வரவே வேண்டாம் உங்க மனுஷாளோட கொஞ்சிண்டு உங்க நாட்டிலேயே இரு'ன்னு சீட்டைக் கிழிச்சு அனுப்பிடுவான். தே ஆர் வெரி ஸ்ட்ரிக்ட்...''

''சரிப்பா—நீ வேணா முதல்லே புறப்பட்டுப் போ... விசாலி சின்னப் பொண்ணு. அங்கே இப்போ ரொம்ப குளிர்னு நீதானே சொன்னே? அவளை இந்தக் குளிர்லே



அங்கே அழைச்சுண்டு போவானேன்...? சித்த வெயில் வந்ததும், இரண்டு மாசம் பொறுத்து நாங்க அனுப்ப றோமே...!''

''என்னம்மா இது...? கல்யாணம் பண்ணிக்கோ, பண்ணிக்கோன்னு கழுத்த அறுத்தே...இப்போ பெண்டாட்டியை விட்டுட்டுப் போங்கறேயே...?'' சிரித்தான் குமார்.

''அதுக்காக சொல்லலை குமார். நீ இருக்கப்போறதே இன்னும் இரண்டு வாரம்தான்—இதுலே மெட்ராசுக்கும் இதுக்கும் இவ டிக்கெட்டுக்காக அலையறதுலேயே உன் போது போயிடப்போறதே! உன்னோட கொஞ்சநாள்கூட சேர்ந்து இருக்க முடியாதேங்கற ஆதங்கம் எனக்கு. நீ விஸ்ராந்தியா புறப்பட்டுப் போனா அலைஞ்சு செய்யற காரியத்தை அப்பா கவனிச்சு இவளை மெதுவா அனுப்பலா மேன்னு சொன்னேன்.''

இதுக்கும் குமார் சிரித்தான்.

''அலைச்சலும் இல்லை—ஒண்ணும் இல்லை. மெட்ராஸிலே என் சிநேகிதன் 'ட்ராவல் ஏஜண்டாக' இருக்கான். நிமிஷமாய் காரியத்தை முடிச்சுக் கொடுத்துடுவான். நாங்க போயிட்டு இரண்டு நாள்லே திரும்பிடுவோம்...''

குமார் தீர்மானமாகச் சொன்னதும் மேற்கொண்டு யாரும் வாயைத் திறக்கவில்லை.

''விசாலிக்குத் தனியா எங்கேயும் போய் வந்து பழக்கமில்லை—நாவேணா உங்க ரெண்டுபேருக்கும் உதவியா கூட வரனே...!'' சந்துரு தன்னிடம் கேட்டபோது அழுவதா சிரிப்பதா என்று குமாருக்குப் புரியவில்லை.

கல்யாணமான ராத்திரியே 'ஹனிமூனுக்கு தம்பதிகள் போகும் இந்நாளில்—இரண்டு நாட்களுக்கு மெட்ராஸுக்குப் போய் வருகிறோம் என்றால் அண்ணன்காரனும் கூட கிளம்புகிறானே?...

ஒரு சில நிமிஷங்கள் யோசித்தான் குமார். பிறகு சம்மதித்தான். மூவருமாய் பாண்டிச்சேரி எக்ஸ்பிரஸில் கிளம்பி மெட்ராஸுக்கு வந்தார்கள். ரயில் எந்த ஸ்டேஷனில் நின்றாலும் கோல்ட் ஸ்பாட், காபி, காட்பரீஸ் சாக்லெட் என்று எதையாவது விசாலிக்கும், சந்துருவுக்கும் குமார் வாங்கித் தந்தான்.

''இப்போ எதுக்கு மாப்பிள்ளை?'' என்று சந்துரு சொல்வதையோ...

''எனக்கு வயிறு முட்டறது—ஒன்னும் வாண்டாம்'' என்று விசாலி சிணுங்குவதையோ, அவன் காதில் போட்டுக் கொண்டதாலே தெரியவில்லை.

எக்மோரை வண்டி நெருங்கும்போது ''அத்தை ஆத்துக்குத்தான் போகப்போகிறோம். பழைய மாம்பலத்துலே இருக்கு, அவ அகம். கல்யாணத்துலே அவளைப் பார்த்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கோ மாப்பிள்ளை...? கொஞ்சம் குட்டையாய், ரெட்டை நாடியாய் சிவப்பாய்...?

''அத்தையா ஞாபகம் இருக்கு....ஆனா நாங்க அவாத்துலே தங்கப்போறதில்லை, சந்துரு...''

''பின்னே...? உங்க உறவுக்காரா இருக்கானா, என்ன?''

''ம்ஹூம்,..ஓட்டலிலே தங்கப் போறோம்!''

''ஓட்டலிலேயா...?'' சந்துரு திகைத்தான். ''அத்தை ஆத்தும் இருக்கறச்சே ஓட்டலிலே தங்கினா கோவிச்சுப்பாளே...?''

''யாரும் கோவிச்சுக்கமாட்டா...நம் சௌகரியம்னு ஒண்ணு இருக்கே? எனக்கு பழைய மாம்பலத்துலே இருக்கிறது சரிபட்டு வராது. மோர் ஓவர், பாஸ்போர்ட், விசா விஷயமாய் அலையணும். போன் பண்ணணும். அதுக்கெல்லாம் ஓட்டல்தான் சரி. நீ வேணா உங்க அத்தையாத்துலே தங்கிக்கோ...நானும் விசாலியும் ஓட்டலிலே இருக்கோம். என்ன...?''



இனி சந்துரு என்ன சொல்ல முடியும்?

ஆக, மூவரும் நேரே மரீனா ஓட்டலுக்குப் போனார்கள். எட்டாவது மாடியில் ரூம் கிடைத்தது. லிப்டில் ஏறிக் கொண்டு மேலே போவது விசாலிக்குப் புது அனுபவம்.

காதை அடைக்கிற மாதிரி இருந்தது. வயிற்றில் 'ஜில்' லென்று ஒரு உருளல்.

''அமெரிக்காவிலே இப்படித்தான் இருக்கும்; இல்லியா மாப்பிள்ளை?''

''இப்படியா...? ப்ஷூ! இது எட்டு மாடிக் கட்டிடம். அங்கே எல்லாம் ஐம்பது, நூறு மாடிக் கட்டடம் அதுதான் வித்தியாசம்!''

அறைக்குச் சென்றதுமே மணியைத் தட்டி 'ரூம் பாயை' அழைத்தான் குமார்.

''ஜில்லுனு என்னப்பா இருக்கு?''—அவன் சொன்னான்.

''சரி, மூணு பாதாம்கீர்—மூணு ப்ளேட் முந்திரிப் பருப்பு.''—ஆர்டர் கொடுத்தான்.

''இப்போ எதுக்கு பாதாம்கீரும், முந்திரியும்? பசிக்கவே இல்லையே...''—சந்துரு ஆட்சேபித்தான்.

பசிச்சுத்தான் சாப்பிடணுமா என்ன? ரயில், டாக்ஸியிலே வந்தது தாகமா இருக்கு! சும்மா லைட்டாய் தானே...?

''ஆனாலும் நீங்க பணத்தை தண்ணி மாதிரிதான் செலவு பண்ணறேள், மாப்பிள்ளை!''—சந்துருவின் குரலில் பெருமை எட்டிப் பார்த்தது.

''எதுக்கு சம்பாதிக்கிறோம், செலவழிக்கத்தானே? நான் யூ. எஸ். டாலர்கள் எத்தனை கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா? நாலாயிரம்—தட் ஈஸ் மோர்தேன் முப்பத்தையாயிரம் ரூபாய் செலவழிக்கத்தானே கொண்டு வந்திருக்கேன்... சும்மா திரும்ப எடுத்துண்டு போகவா...? ம்...''

சந்துருவும், விசாலியும் பிரமித்துப் போனார்கள்.

''அப்புறம் இன்னொண்ணு சந்துரு...உன் வயசு என்ன? இருபத்தஞ்சு. இருபத்தாறு...உன்னைவிட நான் இரண்டு வயசுதான் பெரியவன். என்னைப் போய், 'மாப்பிள்ளை... மாப்பிள்ளைன்'னு உறவு சொல்லிக் கூப்பிட்டுண்டு இ டோண்ட் லைக் திஸ் ஃபார்மாலிடி. சும்மா பேரைச் சொல்லியே கூப்பிடு என்ன...?''

''அது எப்படி...நீங்க பெரியவர். மரியாதைக் குறைவா...எப்படி?''

''நோ—எனக்குப் பிடிக்கலை. நீ எனக்கு சந்துரு—நான் உனக்குக் குமார்...ஓ. கே?''

—தன் வழக்கமான சிரிப்பு ஒன்றை குமார் சிரித்துவிட்டு பாத்ரூமுக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டான்.

விசாலி அறையைச் சுற்றிப் பார்த்தாள். டெலிபோன், பாடும் ரேடியோ, சௌக்கியமாய் உறங்கக் கட்டில், பெரிய வட்டக் கண்ணாடி...இதுவே அமெரிக்கா மாதிரின்னா இருக்கு.

அறையை ஒட்டியிருந்த பால்கனிக்குப் போய் எட்டிப் பார்த்தாள்—கண்ணெதிரில் மெட்ராஸ் பரந்து, விரிந்து தெரிந்தது.

''அண்ணா...ஸ்...அண்ணா இங்கே வாயேன்!''—ரகசிய குரலில் சந்துருவைக் கூப்பிட்டாள்.

தங்கைக்கருகில் அண்ணன் வந்து நின்றான்.

''கீழே பாரேன்—மயக்கமா வரலை? ஏண்ணா எட்டா வது மாடிலேந்து பார்த்தாலே இப்படி இருக்கே—எண்பதா வது மாடிலேந்து பார்த்தா கீழே மனுஷா தெரிவாளோ? இல்லே மேகம் மறைச்சுடுமோ...?''

''இதெல்லாம் எனக்கு எப்படிம்மா தெரியும்? நா சாதாரண ஆதிச்சபுரத்துவாசி—உங்காத்துக்காரரைக் கேட்க வேண்டியதை என்னைக் கேட்டா...?''



—அவன் கேலி செய்தான்.

அறையின் மணி பாடியது—பேரர் இவர்களின் ஆர்டருடன் வந்தான். பாதாம்கீரைக் குடித்து முடித்ததும்—

''நீங்க ரெண்டுபேரும் இங்கேயே இருங்கோ—நான் என் பிரெண்டை பார்த்துட்டு விவரம் தெரிஞ்சுண்டு வரேன்'' என்று சொல்லி குமார் வெளியே போனான்.

ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். போனவன் திரும்பி வந்தான்.

நண்பனைப் பார்த்துவிட்டானாம். பாஸ்போர்ட் சம்பந்தப்பட்ட பேப்பர்களை வாங்கி வந்திருக்கிறானாம். எழுதிக் கொடுத்துவிட்டால் எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சுருக்க ஏற்பாடு பண்ணுவதாக நண்பன் சொல்லிவிட்டானாம்...

மூவரும் கீழே டைனிங்-ஹாலுக்குப் போய் உணவருந்தி வந்தார்கள்.

''நாங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறோம்—நீ உங்க அத்தை வீட்டுக்குப் போயிட்டு நாலுமணிக்கு வா சந்துரு—பாஸ்போர்ட்டுக்காக விசாலியை போட்டோ எடுக்கப் போகணும்'' என்றான் குமார்.

மாலையில் சந்துரு வந்ததும் டாக்ஸியில் மவுண்ட் ரோடுக்குப் போனார்கள். ஒரு போட்டோ ஸ்டுடியோ வாசலில் டாக்ஸியை நிறுத்திவிட்டு, இவர்கள் உள்ளே போய்ப் படம் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

அங்கிருந்து 'ஸ்னேக் பார்க்'குப் போனார்கள். சந்துரு உடன் இருப்பதை லட்சியம் பண்ணாமல் மனைவியின் தோளில் கை போட்டு அணைத்துப் பாம்புகளை வேடிக்கை காட்டினான் குமார்.

அப்புறம் 'டிரைவ்-இன்-ரெஸ்டரண்டு'க்கும் போய் டிபன். பின்பு பீச்—

'கோன்' ஐஸ்க்ரீமை வாங்கித் தின்றவண்ணம் மணலில் கால் வலிக்க வலிக்க நடந்தார்கள். அங்கிருந்து பழைய மாம்பலம் போய் சந்துருவை இறக்கும் சாக்கில் அத்தை வீட்டில் ஒரு நிமிஷம் எட்டிப் பார்த்துவிட்டு, மணி இரவு ஒன்பதை நெருங்குகையில் மீண்டும் அறைக்கு வந்தார்கள்.

கணவனின் உபசரிப்பிலும், அன்பான கவனிப்பிலும் விசாலி தன்னையே மறந்திருந்தாள்.

சந்துரு அண்ணாவின் முகத்தில் சந்தோஷம் தாண்டவ மாடுவதைப் பார்த்ததில் அவளின் குதூகலம் நான்கு மடங்காகியது.

பீச்சில் குமார் ஐஸ்க்ரீம் வாங்கப் போனபோது, ''நீ அதிருஷ்டசாலி விசாலி—உன் ஆம்படையான் உன்னைத் தலையிலே வைச்சுண்டு தாங்கறான். எனக்கு மனசு நிறைஞ்சு இருக்கு!'' என்று சந்துரு சொன்னதும், சந்தோஷத்தில் விசாலிக்கு அழுகை வந்துவிட்டது.

ஓட்டல் அறைக்குத் திரும்ப வந்தார்கள். ''ஏதாவது சாப்பிடறயா?'' என்று குமார் கேட்டான். அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

''அம்மாடி நம்மாலே ஆகாது...வாயைத் திறந்தா காக்காய் கொத்தும்போல இருக்கு...!'' என்றபடி படுக்கையில் தொப்பென்று உட்கார்ந்தாள்.

கணவனுடன் கூட ஒரு வார காலமாக இருப்பதில், அவளின் கூச்சம் ரொம்பக் குறைந்திருந்தது.

ரேடியோவில் இங்கிலீஷ் பாட்டை மெல்ல வைத்து வராந்தா விளக்கை மட்டும் போட்டு விட்டு மற்ற விளக்குகளை அணைத்தான் குமார்.

மனைவியின் அருகில் அமர்ந்தான்.



மெல்லிய வெளிச்சத்தில், சிகப்பு நைலான் புடவையும் தலை நிறைய மல்லிகைப் பூவுமாய் விசாலி தேவதை மாதிரி இருந்தாள்.

குழந்தை முகம்-பளபளத்த குண்டுக் கன்னங்கள், கறுப்பு சாந்துப் பொட்டு-அவன் அவளுக்கு அளித்திருந்த சென்டை தாராளமாய் தூவியிருந்ததில் அவள் மணத்துக்கொண்டிருந்தாள்.

எழுந்த வெறியில் அவளை அப்படியே அள்ளி கைக்குள் அடக்கிக்கொள்ளவேண்டும்போல் குமாருக்குத் தோன்றியது.

விசாலி அவனைக் கண்டு பயப்படாமல் இருப்பது அவனுக்கு ரொம்ப முக்கியம்.

மென்மையாய் அவளைப் படுக்கையில் படுக்க வைத்து, தானும் படுத்தான்.

கொஞ்ச நேரம் சென்றதும், பெட்ஷீட்டையே எடுத்து உடம்பில் சுற்றிக்கொண்டு, தன் ப்ரீப்கேஸிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

பெரியவர்களுக்குத் தெரியாமல் கணவன் புகை பிடிப்பதை விசாலி கல்யாணமான இரண்டாம் நாளே தெரிந்து கொண்டாள். முதல் தடவை அவன் பிடித்தபோது அவள் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தைக் கண்டு அவனாகவே சொன்னான்.

''குளிர் அதிகமுள்ள ஊர்லே இருக்கறதுலே சூட்டுக்காக இது பிடிக்கறது பழகிப்போச்சு...பெரியவாக்கெதிரே குடிச்சா மரியாதை இல்லே. அதனாலே இப்படித் தனிமை கிடைக்கிறப்போ பிடிக்கறேன். உனக்குப் பிடிக்கலைனா விட்டுடறேன்...''

சினிமாவில் வர கதாநாயகர்கள் எல்லாம் புகை பிடிப்பதுபோல சிகரெட்டை கணவன் கையில் வைத்துக் கொண்டிருந்ததுகூட ஒரு ஸ்டைலுடன் இருந்ததாக

விசாலி நினைத்தாள். பீடி நாற்றம்போல இல்லாமல் இது வாசனை மிகுந்ததாக இருக்கவே ''நீங்கள் பிடிக்கறதை வாண்டாம்னு நா எப்படிச் சொல்ல முடியும்...உங்க இஷ்டம்...'' என்றாள்.

''நான் சிகரெட் பிடிக்கறது பெரியவாளுக்குத் தெரிஞ்சா வருத்தப்படுவா...'' என்றான் குமார்.

''ஐய்யய்யோ...நான் சொல்லமாட்டேன். உங்க விருப்பம்தான் எனக்கும்.''

அவள் தன் வீட்டாரிடம்கூட இதுபற்றிப் பேசமாட்டாள் என்பது குமாருக்குத் தெரியும். 'இது நானும், என் கணவரும் சம்பந்தப்பட்ட விஷயம்' என்பதுபோல ஒரு பெருமை அவள் தொனியில் இருந்தது.

கணவன் படுக்கையில் அமர்ந்து சிகரெட் பிடிப்பதையே பார்த்துக்கொண்டிருந்த விசாலி கேட்டாள்.

''அமெரிக்காவிலே நம்ப வீடு இந்த ஓட்டல் ரூம் மாதிரி ஜோரா இருக்குமா...? குழாயைத் திறந்தா வெந்நீர் வரும் னேளே—இங்கேயும் அப்படித்தானே இருக்கு...?''

சிகரெட்டை கடைசியாய் இழுத்து அணைத்தான் குமார்.

''ம்ஹூம்...இதைவிட இன்னும் ஆயிரம் மடங்கு அழகாய், நாகரிகமாய் கண்ணைப் பறிக்கிற மாதிரி இருக்கும்.''

''இதை விடவா...? அதெப்படி இன்னும் ஜோரா யிருக்கும்.''

''நீ இன்னிக்கு சமுத்திரம் பார்த்தியோன்னோ...?

''ம்...''



''கடலே பார்க்காத ஒருத்தர் உன்கிட்டே வந்து 'சமுத்திரம் எப்படி இருக்கும்'னு கேட்டா நீ ஒரு டபரா ஜலத்தை எடுத்துக் காட்டி, இந்த மாதிரி ஆயிரமாயிரம் டபரா ஜலம் இருக்கும்—நீலமாய் இருக்கும்—அலைகள் இருக்கும் பெரிசாய் இருக்கும்'னு எத்தனைதான் சொன்னாலும், அந்த ஆளுக்கு சமுத்திரம்னா என்னன்னு கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா...? அது மாதிரிதான். ஆதிச்ச ராத்தில் வளர்ந்த உனக்கு அமெரிக்கா பத்தி எத்தனை சொன்னாலும் அதைக் கற்பனை பண்ணமுடியாது. பார்த்தா தான் புரியும்!''

கணவன் கொடுத்த விளக்கம் விசாலிக்கு நவீனமாய் இருந்தது.

''நீங்க எத்தனை அழகாய் பேசறேள் தெரியுமா?'' என்றாள் தன் வியப்பைத் தெரிவித்து.

''ம்...? நீ எத்தனை அழகா இருக்கே தெரியுமா?'' குமார் கிட்டத்தில் வந்து அணைத்தான். அந்த ராத்திரி முடிவில்லாத ராத்திரியாக நீண்டுகொண்டே போனது.

# 5 பத்தொன்பதாவது நாள்

ஏண்டி விசாலி பருப்புப் பொடியைத்தான் பிளாஸ்டிக் பையிலே போட்டுக் கட்டச் சொன்னே...புளிக்காச்சலை எப்படிடா பையிலே கட்டறது? எண்ணையெல்லாம் ஒழுகிடுமே?''

''அவர்தான் சொன்னார்ம்மா...பாட்டில்லே எதையும் போடாதே, கூடுமானவரை பிளாஸ்டிக் பையிலே கட்டிடுனு எனக்கென்ன தெரியும்?''

சாயங்காலம் மாப்பிள்ளை வருவாரோன்னோ...? அப்ப கேட்டுடு. அதுவரை பாத்திரத்தோடயே சூடு ஆறிண்டு இருக்கட்டும் என்ன...?

ஆதிச்சபுரமே அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது.

விசாலியின் அமெரிக்கப் பயணம் கல்யாணமாகி எண்ணிப் பத்தொன்பதாம் நாள் தொடங்கிவிடும் என்று யாரும் எதிர்பார்க்காததால் சாமான்கள் தயாரிப்பதும்—எடுத்து வைப்பதும், உறவுக்காரர்கள் வீட்டுக்கு விருந்துக்குப் போவதும், அப்படியே சொல்லிக்கொண்டு வருவதுமாக அமர்க்களப்பட்டது.

சென்னையிலிருந்து அவர்கள் திரும்பி வந்த நான்காம் நாளே பாஸ்போர்ட், விசா ரெடி என்று ட்ராவல் ஏஜண்ட் வில்லியனூர் போஸ்ட் ஆபீஸுக்கு போன் பண்ணிவிட்டான்.



சரியாக அதற்கு மூன்றாம் நாள் 'ஏர்-இண்டியா' விமானத்தில் புறப்படவும் ஏஜண்ட் மூலமே குமார் ஏற்பாடு பண்ணிவிட்டான். திங்கள் இரவு விமானத்தைப் பிடிக்க வேண்டும். இன்று ஞாயிறு.

புறப்பட வேண்டிய தேதி தீர்மானமான அன்றே—ஊருக்கு என்னென்ன தயார் பண்ணிக்கொண்டு வரவேண்டும் என்ற 'லிஸ்டோடு' விசாலியை ஆதிச்சபுரத்தில் கொண்டு விட்டான் குமார்.

குழம்புப் பொடி, பருப்புப் பொடி, தோசை மிளகாய்ப் பொடி, வடாம், வத்தல், பட்சணம், ஊறுகாய், புளிக் காச்சல்.

''துவரம்பருப்பு, புளி எல்லாம் வாண்டாமா...?''

''வாண்டாம்—அதெல்லாம் அங்கேயே கிடைக்கும்.''

''பட்சணம் என்னென்ன எடுத்துக்கட்டும்?''

''உன் இஷ்டம் விசாலி?''

''உங்களுக்குப் பிடிக்கறதைச் சொல்லுங்களேன்...!''

''ம்...கை முறுக்கு—கடலை உருண்டை.''

''அப்புறம்...?''

''அப்புறம் உனக்குப் பிடிச்சதெல்லாம் எனக்கும் பிடிக்கும்...!''

''குழம்புப் பொடி எத்தனை எடுத்துக்கணும்...?''

''ஆறு மாசத்துக்கு வர மாதிரி எடுத்துக்கோ. நடுவிலே வேணும்னா போஸ்ட்லே இவாளை அனுப்பச் சொல்லலாம்.''

''ஏண்டா குமார்—முதல் தடவை நீ புறப்பட்டுப் போனப்போ, இத்தனை எடைதான் இருக்கணும்னு சொன்னதாலே பெட்டியை டாக்டர் ஆத்துக்கு எடுத்துண்டு போய் நிறுத்துண்டு வந்தியே...அப்படி இப்பவும் எடை போடணுமா?''

"ம்ஹூம்—வாண்டாம். இப்போ டிக்கெட்டுகளை நா டாலர் கொடுத்து வாங்கி இருக்கேன். அதனாலே நிறைய எடை எடுத்துண்டு போக அனுமதிப்பா. கவலை இல்லை."

ஆதிச்சபுரத்தில் விசாலியை விட்டுத் திரும்பியபோது "நா ஞாயிற்றுக்கிழமை உன்னை வந்து கூட்டிக்கறேன். ராத்திரி வில்லியனூர்லே படுத்துண்டுட்டு கார்த்தாலே பாண்டிச்சேரி எக்ஸ்பிரஸில் புறப்பட்டுப் போனா, கடைசி நிமிஷ ஷாப்பிங்கை மெட்ராஸிலே முடிச்சுண்டு கிளம்ப சரியாய் இருக்கும். உன் சாமான் எல்லாம் இந்த நீல பெட்டியிலே வைச்சுடு. சமையல் சாமானை எல்லாம் வைக்க நான் வேற பெட்டி கொண்டு வரேன். உன் பழைய புடவைகளை எடுக்காதே—கல்யாணப் பட்டுப் புடவைகளை எடுத்துக்கோ—மெட்ராஸிலே இன்னும் புடவை வேணும்னா வாங்கிக்கலாம்—என்ன...?"—குமார் முன்யோசனையுடன்... வில்லியனூருக்கு வந்த மறுநாளே, விசாலிக்கு பன்னிரண்டு வெள்ளை, ஒரு கறுப்பு, ஒரு சிகப்பு கலர்களில் உள் பாவாடைகள், இரண்டு டஜன் ரவிக்கைகள் தேவைக்கேத்த கலரில் வாங்கித் தைக்கச் சொல்லியிருந்தான். அதுவும் ரெடிதான்!

சனிக்கிழமை பூராவும் சாமான்களை எடுத்து வைப்பதிலும், அம்மாவிடம் என்னென்ன தயார் பண்ணவேண்டும் என்று சொல்வதிலும் விசாலியின் போது சரியாக இருந்தது.

இன்று காலை எழுந்து குளித்து, பிள்ளையார் கோயிலில் அம்மா விசேஷமாய் ஏற்பாடு செய்திருந்த அபிஷேகத்துக்கும் மாந்தோப்பு அம்மன் கோயிலுக்கும் போய்ப் பிரார்த்தித்து விட்டு வந்தாள். பின் ஞானத்தோடு அக்ரஹாரத்து வீடு ஒவ்வொன்றுக்கும் சென்று உறவினரிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

"என்னடி பெண்ணே—மாப்பிள்ளையையும், உன்னையும் விருந்துக்குக் கூப்பிட்டு மரியாதை பண்ணக்கூட அவகாசம் கொடுக்காம, இப்படி திடுதிப்னு கிளம்பறே...?



—வீட்டுக்கு வீடு இதே புகார்தான்!

"அமெரிக்காவிலே மஹாராணியாட்டம் குடித்தனம் பண்ணப்போறே, எங்களை எல்லாம் நெனைச்சுக்கோ, மறந்துடாதே...என்ன?"—என்றும்;

"அர்ஜுனன் மாதிரி ஆம்படையான் வாய்ச்சிருக்கான்—சமத்து, கெட்டிக்காரின்னு பேர் வாங்கணும்—என்ன?" என்றும் வீட்டுக்கு வீடு புகழாரங்கள்; புத்திமதிகள்.

"இனிபோல கிராமத்துலே வளைய வந்துண்டு இருந்தே—நீ இல்லாம எங்களுக்கெல்லாம் வெறிச்சுனு போயிடப் போறது" என்றும்,

"கண்காணாத தேசத்துக்குப் போறே. அம்மாவையும், அண்ணாவையும் விட்டுட்டு எப்படி கொழுந்தே இருக்கப் போறே...?" என்றும் சிலர் அழுது மூக்கைச் சிந்தி விடை கொடுத்தனர்.

**மா**லை நான்கு மணி அளவில் டாக்ஸியில் குமார் வந்தான். சாமான்களை ஏற்றி, பட்டம்மா, ஞானம் அவள் புருஷன், சந்துரு என்று ஒட்டுமொத்தமாக விசாலியின் குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு வில்லியனூர் திரும்பினான்.

ராத்திரி தடபுடலாய் டின்னர். வருவோரும், போவோரும் ஏகக்கூட்டம்.

பெண்ணை வெகு நாழிகை தன் அருகில் உட்கார வைத்து முகத்தைத் தடவி கையைப் பிடித்துக்கொண்டு பட்டம்மா அழுதாள். ஞானம் அழுதாள். சந்துருகூட கண் கலங்கினான்.

விசாலியின் துக்கத்துக்கு முடிவே இல்லாமல் இருந்தது. என்னதான் அமெரிக்கா ஆசை, அன்பான கணவன் என்ற இனிமை நெஞ்சைத் துள்ள வைத்தாலும்—பிறந்தகத்தாரை விட்டுப் பிரியும் துக்கமும், தாள முடியாமல் இருந்தது.

ஆதிச்சபுரத்தில் இரவு எட்டு மணிக்குமேல் ஒரு வீட்டிலும் விளக்கு எரியாது. அப்படி எரிந்தாலும் நாற்பது வாட் பல்பு 'முணுக்கு முணுக்'கென்று ஆடும்! தெருமுனையில் பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் ட்யூப் லைட் இரவு முழுவதும் ஒளிவிடும்—அவ்வளவுதான்.

இங்கே மெட்ராஸ் ஏர்-போர்ட், இரவு ஒன்பது மணிக்கு இப்படி ஜகஜ்ஜோதியாய் திருவிழாக் கோலம் பூண்டிருந்ததைப் பார்த்து, லவுஞ்ஜில் ஒரு பக்கமாய் அமர்ந்திருந்த தங்கையிடம் ஞானம் மெல்ல கேட்டாள்.

''என்னத்துக்காக இப்படி இத்தனை விளக்கை எரிய விட்டு ராத்திரியை பகலாக்கியிருக்கா···? அடியம்மா கண்ணைப் பறிக்கிறதே...!''

''இதுக்கே இப்படிச் சொல்றியேக்கா—அமெரிக்காலே விளக்கை அணைக்கவேமாட்டாளாம்! அணைச்சு ஏத்தினா ஆகறதைவிட எரிஞ்சுண்டே இருந்தா ஆகற செலவு கம்மியாம் இவர் சொன்னார்.''

ஞானம் ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோனாள். மரகதபுரத்தில் அவள் புக்ககத்தில் முன்பக்கத்து அறைகளுக்கும் சமையற்கட்டுக்கும்தான் தலா ஒரு மங்கலான மின்சார பல்பு உண்டு. கிணற்றடி, தாழ்வாரம், கொட்டில் இங்கெல்லாம் போக வேணுமானால் அரிக்கேன் லாந்தரை எடுத்தால்தான் வெளிச்சம். எந்த கருமையில் தேள் இருக்குமோ, பாம்பு பூரான் இருக்குமோ என்று பயந்துகொண்டேதான் காலை வைப்பாள் ஞானம்.

அதிசயமாய் விசாலியின் கணவன் வீட்டாரிடம் தன் நாட்டாண்மையை செலுத்தாதது மட்டுமல்ல, ஓரளவுக்கு அனுசரணையுடனேயே தன் மாமியார்க்காரி நடத்திக் கொள்வது ஞானத்துக்கு சௌகரியமாக இருந்தது. பணம் பத்தும் செய்யும் அல்லவா...? செய்திருக்கிறது. குமார் அவன்



கணவனுக்கு டெரிகாட் சட்டை, அவளுக்கு நைலான் புடவை என்று சீமையிலிருந்து வாங்கி வந்ததை அளித்தது—நற்சமயத்துக்கு அவன் பெருமையை புக்ககத்தில் உயர்த்தியதும் அல்லாமல், நான்கு நாளாய் விசாலியுடன் இருக்கவும், அவளை விமானம் ஏத்த சென்னைக்கு வருமளவுக்கும் அனுமதித்திருக்கிறது என்பது எத்தனை பெரிய விஷயம்

குமாரின் தந்தை, தாய், சந்துரு, இவள் ஆக எல்லாரும் கூட்டமாய்த்தான் வழியனுப்ப வந்திருந்தார்கள்.

''இப்போ கிளம்பினா உங்க ஊர் போய்ச்சேர எத்தனை நாழியாகும்...?''

ஏற்கனவே ஞானம் பலமுறை கேட்டதுதான்—திரும்ப கேட்டாள்.

''இங்கேருந்து பம்பாய் போவோமாம். அங்கே பிளேன் மாத்தணுமாம்...அப்புறம்...'' விசாலிக்கு கணவன் சொன்ன மத்த ஊர் பேர்களெல்லாம் நினைவுக்கு வரவில்லை.

பம்பாய், குவெய்த்—பிராங்பர்ட். லண்டன் வழியாய் நியூயார்க்குக்கு நாங்க அந்த ஊர் மணிப்படி நாளை சாயங்காலம் போவோம்!''—குமார் சொன்னான்.

ரொம்ப புரிந்த மாதிரி ஞானம் கேட்டுக்கொண்டாள்.

ஒலிபெருக்கி வழியாக ஒரு பெண் குரல், பயணிகளைக் கிளம்பத் தயாராகச் சொன்னது.

'நாழியாயிடுத்து. நாங்க போயிட்டு வரோம்ப்பா. அம்மா உடம்பைப் பார்த்துக்கோ ஜோ, ரைட்டோ சந்துரு வா விசாலி. உள்ளே பொம்பளை ஒருத்தி உன் கைப்பையைத் திறந்து காட்டச் சொல்லுவா. உடம்பைத் தடவிப்பாப்பா. பயப்படாதே—உன்கிட்டே துப்பாக்கி. கத்தி எதுவும் இல்லைங்கறதை சோதனை பண்ணித் தெரிஞ்சுப்பா—!''

குமார் எழுந்துவிட்டான்.

''போயிட்டுவரேன்'' என்று மாமியார்—மாமனாரிடம் சொல்லிய பிறகு ''வரேன்க்கா—வரேன் சந்துருண்ணா'' என்றவள் விசித்து விசித்து அழலானாள்.

அவர்கள் அழ, இவள் அழ—அழுதுகொண்டே செக்யூரிடி வாசலை அடைந்தார்கள்.

''நீங்க இங்கேயே நின்னுடணும்—பாஸஞ்சர் மட்டும் தான் உள்ளே வரலாம்!'' செக்யூரிடி தடுத்துவிட்டார்.

தோள்பட்டையில் ஒரு பையை மாட்டிக்கொண்டு இடது கையில் ப்ரீஃப் கேசைப் பிடித்தவன், வலது கையால் விசாலியை அணைத்து, ''அசடு—மையெல்லாம் கரையறது மாதிரியா அழுவா...? எத்தனைபேர் ஜோடியா வரா பாரு...'' என்று சமாதானம் செய்து அவளை நடத்திப் போனான்.

அவர்களை விமானத்துக்கு அழைத்துப்போக பஸ் தயாராக நின்றிருந்தது.

ஏறி உட்கார்ந்தார்கள்.

''அங்கே பாரு—அந்தப் பக்கம் உங்க அண்ணா தெரியறான். சிரிச்சுண்டு கையை ஆட்டு...அப்பத்தான் அவாளுக்கு நிம்மதியாய் இருக்கும்...ம்...''

விசாலி, கண்களைத் துடைத்துக்கொண்டாள்; கணவன் சொன்னமாதிரி வாயெல்லாம் சிரிப்பாக அண்ணனைப் பார்த்துக் கையை வீசினாள்.

'போயிட்டு வரேன்...' என்று அவனுக்கு கேட்கும் என்கிற நினைப்பில் முணுமுணுத்தாள்.

பஸ் நகர்ந்தது.



707 விமானம் ஒன்று இறக்கை நுனிகளில் விளக்கு பளிச்சிட நின்றிருந்தது. அதன் அருகில் சென்று பயணிகளை பஸ் இறக்கிவிட்டது.

அலுமினிய படிகளில் அவர்கள் ஏறினார்கள்.

விமானத்தின் நுழைவாசலில் நீலப் பட்டுப்புடைவை உடுத்தி, சின்னதாய்க் கொண்டை போட்டு, கண்களுக்கு மேல் கருநீலச் சாயமும், உதட்டில் ஆழ்ந்த ரத்தச் சிகப்புச் சாயமும் பூசியிருந்த பெண் ஒருத்தி கைகளைக் கூப்பி வரவேற்றாள்.

உள்ளே ஜில்லென்றிருந்தது.

குமார் 'போர்டிங் பாஸ்களை' எடுத்து பணிப் பெண்ணிடம் நீட்ட, அவள் அவர்களின் இருக்கைகளைக் காட்டினாள்.

''நேரே போ விசாலி—கடைசியில் இருக்கு நம்ப ஸீட். ஆ...இதுதான்.

தோல் பை, ப்ரீஃப் கேஸை தலைக்குமேலிருந்த சின்ன அலமாரியில் வைத்துவிட்டு, ''நீ ஜன்னல்கிட்டே உட்காரு. வெளியே பராக்குப் பார்க்கலாம்'' என்று சொல்லி விசாலியை அமர்த்திவிட்டு, தானும் உட்கார்ந்தான் ஸீட்டிலிருந்து பெல்ட்டை எடுத்து அவள் இடுப்பில் கட்டி, தன் இடுப்பிலும் கட்டிக்கொண்டான்.

விசாலியின் முகம் வெளுத்திருந்தது. கைகள் ஜில்லென்று இருந்தன—

''ரிலாக்ஸ் விசாலி...''

''என்ன...?''

''ஒண்ணுமில்லை—பயப்படாதே...'' என்று சொல்லி அழகாய்ப் புன்னகைத்தான் குமார்.

விமானத்தின் கதவுகள் சாத்தப்பட்டு 'ங்கொய்...' என்ற ரீங்காரம் பலமாய் எழுந்து விமானத்தில் ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று.

கைகளை மடியில் கூப்பி வைத்துக்கொண்டு, அம்மா சொன்ன அறிவுரைப்படி—

''ஆபதாம் அபஹர்த்தாரம்
தாதாரம் சர்வ சம்பதாம்
லோகாபி ராமம் ஸ்ரீராமம்
பூயோ பூயோ நமாம்யஹம்''

என்ற ஸ்லோகத்தை அவள் திருப்பித் திருப்பி மெதுவாக சொல்லத் தொடங்கினாள்.

அவள் ஸ்லோகம் சொல்வதையும், கைகளைக் கூப்பி பிரார்த்திப்பதையும் கண்ட குமாரின் உதடுகளில் கேலி சிரிப்பொன்று எழுந்து மறைந்தது.

# 6

## இருபதாவது நாள்

விமானம் புறப்பட்டு, பாதையின் மூலைக்கு நடந்து போய் ஒரு நிமிஷம் நின்றது.

பெரிசாய் 'தம்' பிடித்துக்கொண்டு மேலே தாவ எண்ணுவதுபோல தன் இன்ஜின்களை ஆக்ரோஷமாகக் கத்தவிட்டது—

'தட-தட'வென்று ஓடத் தொடங்கி, கண்மூடித் திறப்பதற்குள் 'கும்'மென்று மேலே ஆகாயத்தில் சாய்ந்து ஏறத் தொடங்கியது.

விசாலிக்குத் தொண்டையை அடைத்தது. வயிற்றைப் பிசைந்தது.

''பயமா இருக்கு...'' என்றாள் குமாரின் பக்கம் திரும்பி.

''பயத்துலே ரசிக்க வேண்டியதை விட்டுடாதே—அங்கே பாரு, மெட்ராஸ் ஸிடிலைட்ஸ் ராத்திரி நேரத்துலே எப்படி ஜொலிக்கிறது பாரு...!''

விசாலி பார்த்தாள்.

ஆஹா...இதென்ன...!

அமாவாசை வானத்தைத் தலைகீழாகக் காலுக்கடியில் பார்ப்பது மாதிரி இது என்ன விந்தை...!

குத்த பூமியில் மஞ்சளாய், வெள்ளையாய், சிகப்பாய்... அம்மாடி, எத்தனை விளக்குகள்! மெட்ராஸ் பெரிய வை... நெக்லஸைப் போட்டுண்ட மாதிரி இது என்ன ஜொலிப்பு

அழுகையை விசாலி மறந்துபோனாள். ஜன்னலில் தலையை முட்டுக் கொடுத்துக்கொண்டு, கண்ணைச் சிமிட்டாமல் தன் கீழே விரிந்த காட்சியில் மூழ்கிப்போனாள்.

அவள் தலைக்கு மேலிருந்த ஒரு குமிழிலிருந்து 'புஸ்' ஸென்று குளிர் காற்று திடீரென்று வீசத் தொடங்கியது. நிமிர்ந்து பார்த்தாள்.

''பிளேன் மேலே ஏறியாச்சு—ஸீட்பெல்டை அவிழ்க்கலாம்...'' குமார் அவள் பெல்ட்டை தளர்த்தினான்.

தன்னைச் சுற்றிப் பார்த்தாள் விசாலி, எத்தனை மனுஷர்கள்—தினுசு தினுசாய் உடை உடுத்திக்கொண்டு சிரித்துக்கொண்டு, பேசிக்கொண்டு...எத்தனை ஜாதி மனுஷர்கள்—இத்தனைபேரை சுமந்துண்டு இந்த பிளேன் எப்படி மேலே பறக்கறது...? சாமான்கள் வேற...கன... தாங்காமல் பொத்துனு விழுந்துட்டா...?

விமானப் பணிப்பெண் பிஸ்கட், கப், ஸாஸர் இருந்த தட்டை இவர்கள் முன் வைத்துவிட்டுப் போனாள்.

கொதிக்கும் காபி டிக்காஷன் ஒரு கையிலும், பா... இன்னொரு கையிலும் எடுத்துக்கொண்டு வந்தாள்.

''டீ ஆர் காபி ப்ளீஸ்...''

''காபி'' என்றான் குமார். அவள் ஊற்றிவிட்டு நக... தாள்.

எத்தனை நாசுக்குடன் அந்தப் பெண் கொதிக்கிற கா... யைப் பரிமாறினாள்.



தட்டிலிருந்த பேப்பர் பாக்கெட்டைக் கிழித்து சர்க்கரையைக் கொட்டி, விசாலியின் காப்பியைக் கலந்தான் குமார்.

''குடி...''

குடித்தாள்.

''தண்ணியா இருக்கே—ரெண்டாம் ஜலத்தில் கலந்திருப்பாளோ...?''

''இது 'பர்குலேடர் காபி'—இப்படித்தான் இருக்கும்!''

''அப்படீன்னா...?''

''பில்டர் மாதிரி இன்னொண்ணு.''

விசாலி பிஸ்கட்டைத் தின்றாள். காபியை வைத்துவிட்டாள்.

''ஏன் வைச்சுட்டே...?''

''மணி பத்தாறது. இன்னேரத்துக்குக் காபி குடிச்சா எனக்குத் தூக்கம் வராது!''

சற்று தயங்கின விசாலி கணவன் காதருகில் நெருங்கி ''எனக்கு பாத்ரூம் போகணும்'' என்றாள்.

பின்னால் கையைக் காட்டி, ''அதோ நாலு கதவு தெரியறது பாரு, அங்கேதான். போயிட்டு வா...'' என்றான்.

விசாலி பார்த்தாள்—வழி நெடுக ஆண் பிள்ளைகள்... சிகரெட் புகை.

''நீங்களும் வாங்களேன்.''

குமார் எழுந்து கூடச்சென்று கதவைத் திறந்துவிட்டு, ''நான் ஸீட்டுக்குப் போறேன். நீ வந்துடு'' என்று சொல்லி திரும்பி வந்தான்.

அவன் உட்காரும் முன் அவளும் பின்னாலேயே வந்தாள்

''என்ன...?''

தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்து விட்டு மெல்ல, ''அந்த ரூம்குள்ள என்ன பண்ணறதுன்னு எனக்குத் தெரியலை—வழுவழுன்னு ஒண்ணுமே புரியலை...'' என்றாள்.

எழுந்த எரிச்சலை குமார் அடக்கிக்கொண்டான். மீண்டும் அவளோடு போய், பாத்ரூமில் குழாய் எது, டவல் எங்கு இருக்கும், பின் அதைத் தூக்கி எறியும் இடம் எல்லாவற்றையும் விளக்கி, ''தண்ணியைத் தரையில் கொட்டாதே, பேஸினில கை அலம்பினால் டவலாலே சுத்தமாய் துடைச்சுட்டு வந்துடு—அதுதான் மரியாதை'' என்று சொல்லிவிட்டு தன் இடத்துக்கு வந்தான்.

விசாலியின் அறியாமை, தெரியாத்தனம் அவனுக்குக் கோபமூட்டினாலும், சிரிப்பொன்று சிரித்து அவன் அதை தாங்கப் பழக்கிக்கொண்டிருந்தான்.

இந்த எளிமை அறியாமைக்காகத்தானே அவன் அவளை முக்கியமாய் மணந்தான்.

விசாலி வந்து அவனைத்தாண்டி தன் இடத்தில் அமர்ந்து கணவனைப் பார்த்து வெட்கத்துடன் சிரித்தாள்.

டெம்பிள் பார்டர் போட்ட அகல மஸ்டர்ட் பட்டுப் புடவை, மஸ்டர்டு ரவிக்கை, கைகளில் தங்க வளையல் கழுத்தில் தாலி—தலையில் பூ—கறுப்பு சாந்துப் பொட்டு கண்களில் மை.

விசாலியின் பவித்திரமான அழகு கண்ணை இழுக்கத்தான் செய்தது!

அவளின் அறியாமைக்குமட்டுமா குமார் விசாலியை மணந்தான்? இந்த அழகை ஆளும் ஆசைக்காகவும்தானே!

அவள் ஸீட்டில் சாய்ந்துகொண்டாள். குமார் எழுந்து அலமாரியிலிருந்து ஒரு தலைகாணியையும், சால்வையையும் எடுத்துக் கொடுத்து, ''தூங்கு விசாலி...பம்பாய் வர நாழி இருக்கு'' என்றான்.



கண்ணாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் விசாலி. இருட்டில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் விளக்குகள் தெரிந்தனவே தவிர, ஒன்றும் பார்க்கும்படி இல்லை. கண்களை மூடிக்கொண்டு தூங்கத் தொடங்கினாள்.

விசாலி தூங்கும்போது அவள் ஒரு குழந்தைமாதிரி இருந்தாள்.

மாதிரி என்ன...? குழந்தைதானே!

தலையை நிமிர்த்தி மேல் விட்டதை உற்று நோக்கிய குமாருக்கு, தன் திட்டம் கடுகத்தனையும் பிசகாமல் நடப்பது பெருத்த திருப்தியைக் கொடுத்தது.

ஆகஸ்டு மாதம் எழுந்த எண்ணத்துக்கு செப்டம்பர் திட்டம் போட்டு, டிசம்பரில் நிறைவேற்றிவிட்டான்! யாருக்கு நடக்கும் இப்படி கரெக்டாய்! காட்! ஐ ஆம் லக்கி.

'எஸ்—என் அதிர்ஷ்டத்திற்கு இன்றுவரை என்ன குறைச்சல்' என்று எண்ணும்போது குமாருக்குப் புன்னகைக்கத் தோன்றியது.

பிறந்த வீடு, ஊர் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் அவன்? அவன் புத்தி...?

பள்ளியில், கல்லூரியில் அவன்தான் முதல். இந்தப் புத்திசாலித்தனத்தோடு, கலகலவென்று யாரிடமும் பழகும் அவன் சுபாவமும் சேர்ந்துகொண்டதால் வாழ்க்கையில் முன்னேறிவிட்டான்.

'ஆர்கிடெக்சர்'ல் டிகிரி வாங்கினபோது, அமெரிக்காவின்மேல் உள்ள அடக்கமாட்டாத ஆசையின்பேரில் நான்கைந்து யூனிவர்ஸிடிகளுக்கு மேல்படிப்புக்கும், ஏழு எட்டு கம்பெனிகளுக்கு வேலைக்கும் எழுதிப்போட்டான்.

கிணற்றில் விழுந்த கல்தான்!

ஆனால், மிடில் ஈஸ்ட் நாடான மஸ்காட்டில் அவனை வேலைக்கு எடுத்துக் கொள்ள ஒரு நிறுவனம் முன்வந்தது.

சின்ன வயசிலிருந்தே சந்தர்ப்பவாதியான குமாரா கிடைத்த வேலையை விடுவான்...?

மஸ்காட்டுக்குப் போனான். கைநிறைய சம்பளம்—ஏஸி வீடு, கார், இத்யாதிகளுக்குப் பஞ்சமில்லை—ஆனாலும் குமாருக்கு சந்தோஷம் இல்லை. பர்தா போட்ட பெண்களும் பரந்த மணல் பிரதேசங்களும் வறட்சியான சீதோஷ்ணமும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

எண்ணி எட்டே மாதங்கள்! மஸ்காட்டில் சிநேகிதம் செய்துகொண்டே அமெரிக்கர்களை, தன் புத்தியாலும் சிரிப்பாலும் கவர்ந்து—வெகு விரைவிலேயே அமெரிக்காவில் ஒரு உத்யோகத்தைத் தேடிக்கொண்டான்.

நியூயார்க்கில் ஜாகை, அந்த லைஃப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அது ஒரு தனிக் கதை—

பணம், சௌகரியம், விருப்பம்போன்ற வாழ்க்கை—எதற்குக் குறை...? ஒன்றுமில்லை.

அமெரிக்காவுக்குப் போய் வருஷம் இரண்டாகையில் ஒரு சனி, ஞாயிறு அதிகம் குடித்து, அதிகமாய் உல்லாசமாக இருந்துவிட்டானோ என்னவோ? திங்கள் தூங்கி எழுந்தால் தலையை வலித்தது. 'ஒன்றுமில்லை' என அசட்டையாக இருந்தவனுக்கு வலி விடாமல் இருக்கவே, மறுநாள் தன் டாக்டருக்குப் போன் பண்ணினான்.

'டாக்டர் ஊரில் இல்லை...' என்றாள் செகரெட்டரி.

தன் தலைவலியைப் பற்றிச் சொல்லி அவளிடமே வைத்தியம் கேட்டான் குமார்.

''தலைவலி என்றால் எப்படியும் டாக்டர் உங்களை ஒரு ஸ்பெஷலிஸ்டிடம் அனுப்பி இருப்பார்...நீங்கள் டாக்டர் வில்லியம்ஸைப் பாருங்களேன்!'' என்றவள், அந்த டாக்டரின் போன் நம்பரைக் கொடுத்தாள்.



இவன் போன்மூலம் அப்பாய்ன்ட்மென்ட் வாங்கிக் கொண்டு டாக்டர் வில்லியம்ஸை பார்க்கப் போனான்.

டாக்டர் வில்லியம்ஸ் நல்ல ப்ராக்டிஸ் உள்ள டாக்டர் என்று வெளிப்படையாய்த் தெரிந்தது.

அமெரிக்காவில் வைத்தியர்கள் வருமானத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா...?

இவன் வரவேற்பறையில் காத்திருந்தான். இவனைத் தவிர இன்னும் இருவர் இருந்தனர். நாலரைக்கு இவன் அப்பாய்ன்ட்மென்ட்.

நாலு முப்பத்தைந்துக்கு, 'ஸாரி டு ஹாவ் கெப்ட் யூ வெய்ட்டிங்' என்று மன்னிப்புக் கேட்டபிறகு, ரிஸப்ஷனிஸ்ட் உள்ளே குமாரை அனுப்பி வைத்தாள்.

அறைக்குள் நுழைந்த குமாருக்கு ஒரு சின்ன அதிர்ச்சி—டாக்டர் வில்லியம்ஸ் ஆண் இல்லை; பெண்.

வயசு என்ன இருக்கும்?

முப்பத்தி எட்டு, நாற்பது...? தெரியவில்லை.

டாக்டர் இவனுடைய வலியைப்பற்றிக் கேட்டாள்—பரிசோதனை செய்து பார்த்தாள்—ஓரிரு டெஸ்டுகள் எடுக்கச் சொன்னாள்—மறுநாள் திரும்ப வந்து பார்க்கச் சொன்னாள்.

குமாருக்கு பயப்படும்படி ஒன்றும் இல்லை. இரண்டு நாட்கள் ரெஸ்டில் இருக்கச் செய்து ட்ராங்குலைஸரும், மருந்தும் கொடுத்தாள்.

குமார் பழையபடி ஆகிவிட்டான். மறுவாரம் மியாமியில் ஒரு 'செமினார்'ல் டாக்டர் வில்லியம்ஸ் பேசினதை டி.வி. நிகழ்ச்சியில் பார்த்தான். பிரபலமாகி வரும் அமெரிக்க நரம்பியல் டாக்டர்களில் வில்லியம்ஸ் ஒருத்தி என்பது குமாருக்குப் புரிந்தது.

ஒரு சனிக்கிழமை லிங்கன் சென்டரில் 'ஸிம்பனி' கேட்கப் போயிருந்தபோது லவுஞ்சில் டாக்டரைச் சந்தித்தான். அவள்கூட ஒரு தாடிக்காரன்.

அவள் அவனை ஞாபகம் வைத்திருந்தாள்.

'ஹலோ டாக்டர்' என்றான் குமார்.

'ஓ! ஹலோ தேர்' என்றாள் அவள்.

'என்னை ஞாபகம் இருக்கிறதா...? போன மாசம் உங்களைப் பார்க்க பேஷண்ட்டாக வந்திருந்தேன்...'

'ம்...ஐ ரிமம்பர்.'

டாக்டர் வில்லியம்ஸுக்கு அபூர்வமாய்க் கிடைக்கும் ஓய்வில் சங்கீதம் கேட்பது ரொம்பப் பிடிக்குமாம்! கூட இருந்தவரை டாக்டர் ஜெர்க்கின்ஸ் என்று இவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

'உங்களுக்கும் சங்கீதத்தில் ஈடுபாடு உண்டா என்றாள்.

'சங்கீதமாவது மண்ணாங்கட்டியாவது! நண்பன் ஒருவ இழுத்தடித்தான்—வந்தேன்' என்ற உண்மையை குமா சொல்லவில்லை. 'ஆமாம்' என்றான் அடக்கமாக.

அதற்கப்புறம் யாரோ சொல்லிக் கொடுத்தாற்போ மீண்டும் எதேச்சையாய் இண்டியன் ரெஸ்டாரண் அடுத்த ஞாயிற்றுக்கிழமையே டாக்டரைச் சந்தித் குமார்.

'ஓ! த வோர்ல்ட் ஈஸ் ரியலி ஸ்மால்' என்று சிரித் இவனைக் கண்டதும் அவள்.

டாக்டர் வில்லியம்ஸுக்கு இந்தியன் கறி, சே என்றால் ரொம்பப் பிடிக்குமாம்! முடிந்த சமயத்தில் எல் இந்த உணவு விடுதிக்கு வந்து ஒரு கை பார்ப்பத தவறமாட்டாளாம்!



குமாரும் தனியாக வந்திருந்ததால், 'மே ஐ ஸிட் வித் யூ' என்று அவள் அனுமதியைக் கேட்டு உட்கார்ந்தாள்.

பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். அவள் இந்தியாவைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் அவன் பதில் சொன்னான். சாப்பாடு முடிந்ததும், 'ஸோ நைஸ் டு ஹாவ் மெட் யூ' என்று சொல்லி அவள் விடைப்பெற்றுப் போனாள்.

நான்கு நாட்கள்போல ஆனதும், 'எனக்கு இந்தியர்கள் என்றால் பிடிக்கும். அவர்களில் பழகும் தன்மை, சட்டென்று பழகும் சுபாவம் எல்லாம் என்னைக் கவர்ந்த விஷயம்' என்று டாக்டர் சொல்லி இருந்தது நினைவுக்கு வர, குமார் வலிய அவளுக்கு போன் செய்து, அந்த சனிக்கிழமை இரவு, அவனுடன் இந்திய விடுதிக்கு சாப்பிட வர அவளுக்கு இயலுமா?' என்று கேட்டான்.

'என்னை டாக்டர் என்று அழைக்காதே—என் பெயர் ஜூலியா' என்று அவள் சொன்னதும் அப்போதுதான்...

'இந்த விடுதி உணவைக் காட்டிலும் நான் நன்றாகச் சமைப்பேன்' என்று குமார் சொன்னதை பிடித்துக்கொண்டு 'நாளை ராத்திரி என் வீட்டுக்கு நிரூபித்துக் காட்ட வாயேன்' என்று அழைத்ததும் அப்போதுதான்!

# 7 இருபத்தொன்றாவது நாள்

பம்பாயிலிருந்து ஜம்போவில் பயணம். ஒரு பெரிய பங்களாமாதிரி விமானம் இருந்தது. நூற்றுக்கணக்கில் ஜனங்கள்; 'ஜகஜக'வென்று கல்யாண வீடுபோல.

நடுநிசி தாண்டிப் புறப்பட்ட விமானம் குவெய்த்தில் இறங்கி, மீண்டும் புறப்பட்டதும் 'ப்ரேக்—பாஸ்ட்' பரிமாறத் தொடங்கினார்கள்.

தட்டில் பொட்டலம் பொட்டலமாய் என்னென்னவோ.

''இதெல்லாம் என்ன...?''

குமார் சொன்னான்.

''ரொட்டி ஏன் இப்படி முடிச்சு முடிச்சா இருக்கு...?''

''இதுக்குப் பேர் ரோல்—இதுவும் ரொட்டிதான். சாப்பிடு...''

விசாலிக்கு ரொட்டி பிடிக்கும், நிறைய வெண்ணெய், ஜாம் போட்டுக்கொண்டு சுவைத்து உண்டாள்.

''இது என்ன...?''

''சீஸ்.''

''அப்படின்னா...?''

''வெண்ணை மாதிரி பாலிலேந்து தயார் பண்ணறது.''



அதனை ஒரு கடி கடித்தாள் விசாலி. அவளுக்குப் பிடிக்கவில்லை.

''ஐயே...நாத்தமானா இருக்கு! புளிக்கிறதே...!''—அவள் வைத்துவிட்டாள். பழத்தைச் சாப்பிட்டு காபியைக் குடித்தாள்.

''அடுத்தது என்ன ஊர்...?''

''ஃப்ராங்பர்ட்—இது ஜெர்மனியில் இருக்கு...''

நன்றாக விடிந்துவிட்டதால் விசாலி ஜன்னலுக்கு வெளியில் பார்க்கத் தொடங்கினாள்.

கண்ணுக்கு எட்டியவரை மணல் பிரதேசங்கள்—திட்டுத் திட்டாய் மேகங்கள்.

கடலுக்குமேலும், மலைகளுக்குமேலும் விமானம் பறந்ததைக் காணும்போது நம்புவது கஷ்டமாக இருந்தது.

ஃப்ராங்பர்ட்டில் விமானம் நின்றதும் ஏர்போர்ட்டுக்குள் இறங்கிப்போக அனுமதித்தார்கள்.

விமானத்தின் கதவோடு ஒரு சுரங்கப் பொருத்தி அது வழியாக கட்டடத்துக்குள் பயணிகளைப் போகச் சொன்னார்கள்.

சென்னை, பம்பாய் ஏர்போர்ட் மாதிரி இல்லாமல் இது பிரும்மாண்டமாய், புது தினுசாய் இருந்தது.

மாடிப்படி ஒன்று நகர்ந்துகொண்டே போனது. எல்லோரும் அதில் ஏறி மேலே போனார்கள்.

''இது என்னது?''—விசாலிக்கு ஒரே ஆச்சரியம்.

''எஸ்கலேட்டர். வா போகலாம்.''

''எனக்கு பயமா இருக்கு.''

''சே...நான்தான் கூட இருக்கேனே. என்ன பயம்?''

மெல்ல காலை ஒரு படியில் வைத்தபோது அது காலை இழுத்துக்கொண்டு போனமாதிரி இருந்தது. கைப்பிடியைப் பிடித்தாள்—அதுவும் நகர்ந்து அவளைத் தடுமாற வைத்தது. விழப்போன அவளைக் குமார் பிடித்துக்கொண்டு சிரித்தான். விசாலிக்கும் சிரிப்பு வந்தது.

கொஞ்சம் நடந்ததும் நீளமான வராந்தா. தரையின் ஒரு பகுதியே நகர்ந்துகொண்டிருந்தது.

''இது 'மூவிங் காரிடார்.' அந்தக் கோடிக்குப் போக நடக்கத் தேவையில்லை. இங்கே ஏறி நின்றால் போதும்!''

ஏறிப் போனார்கள். முடிவில் பெரிய ஹால். நிறைய கடைகள். வெள்ளை வெள்ளையாய் மனிதர்கள். புரியாத பாஷை. இவர்கள் அறைக்குள் நுழைந்தபோது கதவுகள் தானாகத் திறந்து, வழிவிட்டு, பின் மூடிக்கொண்டன.

விசாலிக்கு பேச்சுக்கூட எழவில்லை.

இது என்ன கூத்து...? மாயாபஜார் சினிமாவில் வர்ர மாதிரி!

பிலிம்ரோல் ஒன்று வாங்கி விசாலியை பல இடங்களில் நிற்கவைத்து போட்டோ எடுத்தான் குமார்.

''ஜெர்மன் சாக்லட் தின்று பார்'' என்று வாங்கிக் கொடுத்தான். ஒவ்வொன்றும் ஒரு புஸ்தகம் மாதிரி பெரிசாய் இருந்தது.

பயணத்தின் அடுத்த இடமான லண்டனில் கொஞ்சம் இளைப்பாறிவிட்டு, நியூயார்க்கை நோக்கி விமானம் பறக்கத் தொடங்கியதும் சாப்பாடு கொடுத்தார்கள். வேகாத அரிசியும், மசாலா கூட்டும் விசாலிக்குப் பிடிக்கவே இல்லை. ரொட்டி, வெண்ணெய், பழத்தை சாப்பிட்டு விட்டு மற்றவைகளைத் தொடக்கூட மறுத்துவிட்டாள்.

குமார் சாப்பிட்ட தட்டிலிருந்தவை வித்தியாசமாக இருந்தன.



உருண்டை உருண்டையாய், சிகப்பாய்... ''என்ன அது...?'' என்று கேட்டாள்.

''நான்—வெஜிடேரியன் சாப்பாடு.''

''அப்படின்னா?''

''மாமிசம்.''

''என்னது...? நீங்க அதெல்லாம் சாப்பிடுவேளா, என்ன?''

''அந்த ஊரிலே இதெல்லாம் சகஜம் விசாலி. நீகூட கொஞ்ச நாளிலே சாப்பிட ஆரம்பிச்சுடுவே!''

''சீ...நா மாட்டேன்ப்பா...''—விசாலி அருவருப்புடன் முகத்தைச் சுருக்கிக்கொண்டாள்.

இந்தியாவில் இருந்தவரைக்கும் தன் விருப்பு வெறுப்புகளைக் கட்டுப்படுத்தி இருந்த குமார், இனி கொஞ்சம் கொஞ்சமாய் விசாலி விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்ததால், வேண்டுமென்றே நான்—வெஜிடேரியன் சாப்பாட்டையும், ஒரு பாட்டில் 'ட்ரிங்'கையும் தன் முன் வைத்துக்கொண்டிருந்தான்.

விசாலி இப்போது முகத்தைச் சிணுங்கினால் என்ன... போகப்போகப் பழகவேண்டிய விஷயங்கள்தானே!

விமானத்தில் சினிமா காட்டத் தொடங்கி விட்டார்கள்?

புரிந்ததோ, இல்லையோ விசாலியும் ஆர்வத்துடன் பார்க்க முற்பட்டாள்.

இதே படத்தை ஊசியாவுடன் ஒருமுறை தியேட்டரில் குமார் பார்த்திருக்கிறான்—ஏன், பின்னர் ஒரு சமயம் டி.வி.யில்கூட பார்த்துவிட்டான்.

அதனால் இப்போது பார்க்க விருப்பம் இல்லாதவனாய் தூங்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டான்.

ஜூலியாவை நினைக்கையில் அவள் அவன்மேல் கொண்டுள்ள அதீதமான பிடிப்பு—'பொஸஸிவ்னஸ்' ஞாபகத்துக்கு வந்து ஒரு வினாடி உடம்பு குலுங்கியது. 'இட்டப்படி இத்தனை நடந்தபிறகு, என்னத்திற்காகக் கவலைப்பட வேண்டும்? எவ்ரிதிங் ஈஸ் கோயிங் ஆன் ஸ்மூத்லி...பிறகு என்ன?'

ஜூலியாவின் வீட்டுக்கு அவன் முதல் முறை போன போது சமையலில் கெட்டிக்காரன் என்று நிரூபித்தான். மூன்றாம் முறையா...? எஸ்—மூன்றாம் முறை போனபோது அவளின் மனசை, உடம்பை திருப்தி செய்வதிலும் தான் பலே கெட்டிக்காரன் என்பதை நிரூபித்தான்.

அழகான, துடிப்பான எத்தனையோ இளம் பெண்களைத் தன் வசம் இழுக்கச் செய்யும் ஆகர்ஷண சக்தி தன்னிடம் இருப்பதைக் குமார் கண்கூடாக அனுபவித்ததுண்டு.

இரண்டு வருஷ நியூயார்க் வாழ்க்கையில் அவன் ருசிக்காத பெண்களா...?

பின் ஜூலியாவைத் தொடர்ந்து சந்தித்து அவளுடன் உடல் உறவு கொள்ள வேண்டிய அவசியம் என்ன...?

ஜூலியா அவனைவிட வயதானவள்—பிரமாத அழகோடு சேர்த்தி இல்லை. இன்பாக்ட், அவள் மார்பகங்களிலும், கைகளிலும் உள்ள பழுப்புப் புள்ளிகள்—ஃப்ரெகிள்ஸ்—அவனுக்குப் பிடிக்காததும்கூட. பின் எதற்காக இந்தத் தொடர்பு வளர வேண்டும்...?

குமார் யோசித்ததில் அவனுக்கே காரணம் புரிந்தது.

ஜூலியா சின்ன வயசிலே முன்னேறிவிட்ட டாக்டர்—படித்தவள்—நிறைய சம்பதிப்பவள். முக்கியமாய் அவன் தனிமையை விரும்புவதும், அதிகமாய் சமூக கேளிக்கைகளில் கலந்துகொள்ளாமல், சாதாரண ஆசாபாசங்களுடன்



வாழாமல் இருந்ததும், அவனிடம் ஒரு கவர்ச்சியைக் குமாருக்கு உண்டாக்கி 'தன்னிடம் மயங்குபவனாக இவனைச் செய்வது தன் 'ஈகோ'வுக்கு ரொம்ப முக்கியம்' என்ற ஒரு துடிப்பில் அவனைத் தொடர்ந்து சந்தித்து, தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டது அவனுக்குப் புரியவே செய்தது.

'ஈகோ' வை திருப்தி செய்வதில் ஆரம்பித்த இந்த நட்பு எப்போது திசை மாறியது...?

அவர்கள் பழகத் தொடங்கி சில மாசங்கள் ஆன சமயத்தில்தானே...?

ஜூலியா தன்னைப்பற்றி ரொம்ப சொல்லாவிட்டாலும் கொஞ்சம் சொன்னதுண்டு.

அவள் தந்தை ஷிகாகோவில் பெரிய ஸ்டாக்மார்க்கெட் புள்ளியாய் இருந்தவர்—இப்போது இல்லை. அம்மா மட்டும் உண்டு. கூடப்பிறந்தவர்கள் யாரும்கிடையாது—இதெல்லாம் குமாருக்குத் தெரியும். அப்பா, அம்மாவின் படங்களை அவன் அபார்ட்மெண்ட்டில் பார்த்திருக்கிறான்.

ஜூலியா பணக்காரி என்பதை அவன் அபார்ட்மெண்டடைப் பார்த்ததும் நன்றாகவே உணர்ந்தான்.

பார்க் அவென்யூவில், லட்சாதிபதிகள் மட்டும் வாழத் தகுதியுள்ள அந்த எழுபது மாடிக் கட்டிடத்தில் அவளின் சொந்த அபார்ட்மெண்ட் இருந்தது.

வீட்டில் ஒவ்வொரு பொருளும் 'கஸ்டம்மேட்,' சாப்பாட்டுத் தட்டுக்கள், கிண்ணங்கள் எல்லாம் அசல் ப்யூடர் வெள்ளி.

நெருக்கமாகப் பழகத் தொடங்கின பிறகு இருவருமாய் பிராட்வே நாடகங்கள், மற்ற இடங்களுக்கு எப்போதாவது போகத் தொடங்கினர். ஆனால் செலவுக்குக் குமாரின் பணத்தைத் தொட மறுத்தாள் ஜூலியா.

'நான் கூப்பிட்டுத்தானே நீ வருகிறாய்...நான் கொடுத்தால் என்ன? நீ கொடுத்தால் என்ன!' என்று தடுத்து விடுவான்.

குமாரின் பிறந்தநாள் வந்தபோது அமர்க்களப்படுத்தி விட்டாள்.

அவள் அபார்ட்மெண்டில் இரவு விருந்து. 'ராயல் சல்யூட்'—குமாருக்குப் பிடிக்கும் என்பதால் அதுவும், சோடாவும் தயாராக இருந்தன. 'மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் டார்லிங்' என்று சொல்லித் தன் பரிசை நீட்டினாள். ஒரு ஜதை வைரம் பதித்த கஃப்லிங்ஸ்!

இதெல்லாம்கூட குமாரின் உள்ளத்தில் பெரிய சலனங்களை ஏற்படுத்தவில்லை.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை—பார்த்துவிட்டு வரலாம், நீயும் வாயேன்' என்று சொல்லி அழைத்துப் போனாளே அப்போதுதான் குமார் மாறிப்போனான்.

ஷிகாகோவை அடுத்துள்ள சுற்றுப் பகுதியில் அவள் இல்லம் இருந்தது. பணக்காரர்கள் வாழும் இடம் என்பது குமாருக்குப் பார்த்த மாத்திரத்தில் புரிந்தது. பல ஏக்கர்கள் நடுவில் அமைந்திருந்தது அந்த வீடு. சுற்றிலும் பச்சைப் புல்வெளிகள். பூத்துக் குலுங்கும் பெரிய பெரிய மரங்கள்—அழகான தோட்டம்—பின்னால் நீச்சல் குளம்.

போய் இறங்கினதுமே அசந்துபோனான் குமார்.

இந்த வீட்டுக்குச் சொந்தக்காரி ஜூலியாவா...?

இது மட்டுமல்ல; இன்னும் இதுபோன்ற பல சொத்துக்களுக்கும் ஜூலியாதான் ஒரே வாரிசு என்றும் வெகு சீக்கிரத்திலேயே புரிந்துகொண்டான்.

பாரிசவாயு தாக்கிப் படுத்துக்கிடந்த தன் தாயிடம் குமாரை, 'என் சிநேகிதன்' என்று அறிமுகப்படுத்தினாள் ஜூலியா.



தாய் ஏற இறங்கப் பார்த்தாள். மெல்லச் சிரித்து 'ஹாப்பி டு மீட் யூ' என்றாள். அவ்வளவுதான்.

அன்று இரவு உணவுக்குப் பின் புல்வெளியில் உலாவச் சென்றபோது தன் மனசைத் திறந்து பேசினாள் ஜூலியா.

சின்ன வயசில் தான் ஜிம்மைக் காதலித்ததை—அவன் வியட்நாம் யுத்தத்தில் இறந்துபோனதை—அதன்பின் தான் உலக வாழ்க்கையை வெறுத்து டாக்டர் பணியில் முழு மனசுடன் ஈடுபட்டதைப் பற்றிச் சொன்னாள்.

தன் தந்தையைப்பற்றிப் பேசினாள். அவருடைய ஆகிருதியை, அன்பை, சிரித்தபோது கண்கள் சிரிப்பதை அவர் இல்லாமையை தான் வெகுவாக உணருவதைப்பற்றி பேசினாள்.

தன் தந்தை தனக்கு விட்டுப் போயிருக்கும் சொத்துக்களைப் பற்றிச் சொன்னாள். லாஸ் ஏஞ்சலீஸில் உள்ள தங்கள் வீட்டைப்பற்றி, கம்பெனிகளில் உள்ள ஷேர்களைப் பற்றி, பாங்கில் உள்ள பணத்தைப்பற்றிச் சொன்னாள்.

குமார் வாயைத் திறக்கவில்லை.

ஜூலியா ஒரு மில்லியனரஸ்—நம்மூர் கணக்குப்படி ஒரு கோடீஸ்வரி என்பதை அவன் தெரிந்துகொண்டபோது 'பூம்' என்ற இரைச்சலுடன் அவன் மனதில் பேராசை ஒலிக்கத் தொடங்கியது.

ஜூலியாவின் அம்மா ஆறு மாசத்தில் இறந்துபோனாள். அப்பா அம்மா வாழ்ந்த வீட்டைப் பூட்டிவைக்க அவள் மனசு கேட்கவில்லை.

ஸப்பர்ப் வீட்டில் இருந்துகொண்டு, ஷிகாகோ டவுனில் தன் ப்ராக்டீஸை வைத்துக்கொண்டால் என்ன என்று யோசித்தாள். டவுண்டனில் ஒரு பிரபல ஆஸ்பத்திரியும்,

ஷிகாகோ யூனிவர்ஸிடியும் அவளின் சில ஆராய்ச்சிகளுக்கு எல்லா சௌகரியங்களும் பண்ணிக் கொடுப்பதாக ஆசை காட்டின.

குமாரிடம் இதுபற்றி விபரமாகப் பேசினாள். முடிவில், ''உன்னோடு பழகின இந்த ஒரு வருஷத்தில் வாழ்க்கைக்கு புது அர்த்தம் தெரிகிற மாதிரி நான் நினைக்கிறேன். ஆண்களை அதிகம் நெருங்கவிடாமல் இருந்தவள் உன்னிடம் மட்டும் எதனால் மயங்கிப்போனேன் என்று யோசனை செய்தேன். குமார், நீ சிரிக்கும்போது உன் கருப்புக் கண்களும் சிரிக்கிறதே, அதில் நான் என் அப்பாவைப் பார்ப்பதைப் பற்றி உனக்குச் சொன்னதில்லை, இல்லையா? இன்று சொல்லுகிறேன். உன்னை என் கூடவே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை...இல்லை வெறி, என்னுள் அதிகம் பரவி இருக்கிறது...இது சாத்தியமா, குமார்?'' என்றாள்.

தானாக வலிய இவளிடம் இந்தப் பேச்சை எடுத்தால், அதற்கு எந்த மாதிரியான வரவேற்பு இருக்கும் என்று புரியாததாலேயே இதுநாள்வரை சும்மா இருந்த குமார்—தான் அப்பட்டமான ஆண்மகன் என்பதை லூஸியாவுக்கு நிரூபிப்பதைப்போல, ''ஐ ஹாவ் பீன் வாண்ட்டிங் டு ஆஸ்க் யூ திஸ்-வில் யூ மேரி மீ, லூஸி ஹனி?' என்றான் அமெரிக்க பாணியில்.

''நீ என்னைவிட, எட்டு வயசு சின்னவள்...பரவா யில்லையா?''

''மனசு முக்கியம், லூஸி—வயசு அல்ல?''

''உன் பெற்றோர் என்ன சொல்லுவார்கள்...?''

''நிச்சயம் தடுப்பார்கள். ஆனால் என் மனசின் சந்தோஷம்தானே எனக்கு முக்கியம்? அவர்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பதுதான் நான் செய்யும் உதவி.''

ஆக குமார்—லூஸியாவின் கல்யாணம் எளிமையாய் நடக்க நிச்சயம் ஆனது.

# 8

## இருபத்தொன்றாவது நாள்

ஆரம்ப நாளிலிருந்தே சக இந்திய நண்பர்களுடன் குமார் நெருக்கமான நட்பை வளர்த்துக்கொண்டிருக்க வில்லை. தன் நடவடிக்கைகள் பற்றின செய்தி நண்பர்கள் மூலம் இந்தியாவுக்குச் சென்றுவிடலாம் என்ற பயம் ஒரு காரணம்; இரண்டாவது, அமெரிக்க நண்பர்களை அவனுக்கு இந்தியர்களைவிட அதிகம் பிடித்தது இன்னொரு காரணம். இந்த பழக்கத்தின் காரணமாய், தன் திருமணச் சேதி இந்தியாவுக்குத் தெரிந்துவிடுமே என்ற பயம் அவனுக்குக் கொஞ்சம்கூட இல்லை.

மேலும், புது ஊரான ஷிகாகோவுக்கு போகப் போகிறான், அங்கு இவனை யாருக்கும் தெரியாது.

திருமணத்துக்கு முன் குமார் தானே லூஸியாவிடம் ஒருநாள் பேச்சுக் கொடுத்தான்:

''உன்னோடு என்னால் உடனடியாக ஷிகாகோவிற்கு வர இயலும் என்று தோன்றவில்லை லூஸி! அங்கு எனக்கு சரியான ஒரு வேலை கிடைத்த பிறகுதான் என்னால் வர முடியும்...''

லூஸியா நெருங்கி வந்து அமர்ந்து அவன் கைகளைக் கோத்துக்கொண்டு பதில் சொன்னாள்:

''நானே இதுபற்றி உன்னிடம் பேச நினைத்தேன் குமார். ஒன்று சொல்வேன், தவறாக எடுக்கமாட்டாயே...?'

குமார் 'மாட்டேன்' என்றான்.

''நீ எதற்காக ஒருவரிடம் கை நீட்டி வேலை பண்ண வேண்டும்? சொந்தமாக தொழில் செய்யும் ஆசை உண்டு என்று என்னிடம் சொல்லியிருக்கிறாயே...? அதைச் செய்தால் என்ன?''

முன்பொரு முறை குமார், ''எனக்கு தனியாய் தொழில் செய்து சுதந்திரமாய் இருக்க ஆசை. ஆனால் அது நடக்குமா?'' என்று கேட்டதை நினைவு வைத்துக்கொண்டு ஜூலியா பேசினாள்.

''மூலதனத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஷிகாகோவுக்குப் போனதும் ஒரு நல்ல இடமாய்ப் பார்த்து, உன் தொழிலைத் தொடங்கலாம். வேண்டிய உதவிகளை நான் பண்ணுகிறேன். என்னிடம் இருக்கும் பணம் எல்லாம் உனக்கும் சொந்தம்தானே?'' என்று ஜூலியா விவாதம் பண்ணியபோது, மனசில்லாமல் சம்மதிப்பதுபோல குமார் 'சரி' என்றான்.

குமார்—ஜூலியா கல்யாணம் நடந்து இப்போது மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன.

டாக்டர் தொழிலில் பிரமிக்கும் ஜோரில் ஜூலியா முன்னேறிவிட்டாள். நல்ல பெயர். எக்கச்சக்கமான பணம்—அதற்கேற்ப ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை.

குமார்...?

ஜூலியா அமைத்துக் கொடுத்த ஆபிஸில், 'நானும்—வேலைக்குப் போகிறேன்' என்று பேர் பண்ணுகிறான்—கவலை பொறுப்பு இல்லாத வாழ்க்கை.

இந்த மூன்று வருஷங்களில் ஜூலியாவின் புகழையும், பண ஓட்டத்தையும் பார்த்து சந்தோஷித்த குமார், அதே சமயத்தில் மாபெரும் பூதமாய் தன்பால் வளர்ந்துவிட்ட அவளின் காதலையும், கண்மூடித்தனமான பிரேமையையும் நினைத்துச் சங்கடப்படவே செய்தான்.



மூன்று வருஷங்களுக்கு முன்னால் குமார் இத்தனை மோசம் இல்லை... ஜூலியாவின் பணம்—அதுதான் அவனைக் கெடுத்துவிட்டது. எடுக்க எடுக்க வற்றாத ஊற்று மாதிரி அது என்ன செல்வம்...? ஜூலியாவின் அப்பன் பலே கெட்டிக்காரராகத்தான் இருந்திருக்க வேண்டும்!

பெண்ணின் எதிர்காலத்தை ஆழ்ந்து சிந்தித்து ஏற்பாடு செய்துவிட்டே போயிருந்தார்.

கல்யாணமான சில மாதங்களிலேயே குமாரின் அதிகக் கவனிப்பிலும், அன்பிலும் தன்னைப் பரிபூரணமாக இழந்துவிட்ட ஜூலியா—அவள் சம்பந்தப்பட்ட பாங்கு கணக்குகளையெல்லாம் ஜாயிண்ட் அக்கௌண்ட்டாக மாற்றிவிட்டாள்.

எத்தனை வேண்டுமானாலும் நினைத்தபோது குமார் எடுத்துச் செலவு பண்ணலாம்—அத்தனை சுதந்திரம்.

அவளுடைய டாக்டர் தொழிலில் வருமானம் அருவியாய்க் கொட்டியது. தொட்ட இடங்களிலெல்லாம் பணம் திரும்பி வழிந்ததால் கணக்குப் பார்த்துச் செலவு செய்வதையோ, 'ஏன் இந்த உபரிச் செலவு' என்று கேட்பதையோ அவள் தன் பழக்கமாகக் கொள்ளவில்லை.

சும்மா சொல்லக்கூடாது! குமார் அவளைப் பொறுத்த வரை ஓர் இதமான கணவனாக நடப்பதை வெகு சிரத்தையுடன் செய்துவந்தான்.

ஜூலியாவுக்கு காபியைக் கலந்து கையில் கொண்டுவந்து கொடுப்பான். 'நேற்று தலைவலி என்றாயே தேவலையா?' என்று மறுநாள் மறக்காமல் கேட்பான். ஜூலியாவுக்குப் பிடித்த இண்டியன் சிக்கன் கறியைச் செய்து, அவள் க்ளினிக்கிலிருந்து திரும்பும்போது சுடச்சுடப் பரிமாறுவான். 'ஜூலியா, உனக்கு இந்தநிறம் ரொம்ப நன்றாக இருக்கிறது'

என்பான். அவள் சிகை அலங்கார நிலையத்துக்குப் போய் வந்தால்—வந்து இறங்கும்போது அவளை ஊன்றிப் பார்த்து, 'ப்யூட்டிஃபுல்' என்று சொல்லி அணைத்து முத்தமிடுவான். இரவு நேரங்களில் 'உனக்குத்தான் ஓய்வில்லாமல் எத்தனை அலைச்சல்?' என்று கூறி உடம்பை இதமாகத் தடவி விடுவான். அவளின் பெண்மையில் தான் மயங்கிக் கிடப்பது போன்ற பிரமையை லூஸியாவுக்கு நன்றாகவே உண்டாக்கி இருந்தான்.

'காணாததைக் கண்ட மாதிரி' என்று சொல்லுவார்கள் பாருங்கள்! லூஸியாவின் நிலை அப்படித்தான் இருந்தது.

குமாரின் பரிவு, கவனிப்பு, அன்பு, காதல், ஆண்மையின் தீவிரம் எல்லாம் அவளைப் பித்துக்கொள்ளவே செய்தன.

'குமார்—யூ ஆர் தி மீனிங் ஃபார் மீ இன் லைஃப்' என்பாள்.

'நீ எத்தனை பெருமை கொள்கிறாய் என்பதற்காகவே நான் மேன்மேலும் புகழ் அடைய விரும்புகிறேன்' என்பாள்.

'யூ ஆர் மை வோர்ல்ட்' என்பான்.

'உன்னைப் போன்ற சிறந்த கணவனை அடைந்த நான் அதிருஷ்டசாலி' என்பாள்.

இன்னும் என்னென்னவோ...

அவளின் உலகம்—டாக்டர் தொழில், ஆராய்ச்சி, குமார் இவ்வளவே—

தன் தொழில்போல கணவனின் தொழில் வளர்ச்சி பெறவில்லையே என்ற வருத்தம் எழுந்தாலும், அதைப் பற்றிக் குமாரிடம் பேசவேமாட்டாள்—அவன் மனம் புண் பட்டுவிடும் என்பதால், அதிசயமாய்க் குமாராகவே, ''உன் அளவுக்கு எனக்குத் திறமை இல்லை லூஸி! எத்தனை உழைத்தும் என்னால் என் தொழிலை வளர்க்க முடிய வில்லையே...' என்று முதலை கண்ணீர் வடித்தால், இவள்



வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குப் போவாள்... 'உன் திறமைக்கு என்ன குறை குமார்? உன் தொழிலில் போட்டி அதிகம்—எவ்வளவு முயல்கிறாய் என்று எனக்குத் தெரியாதா...? தவிர, எதற்காக நீ அனாவசியமாய் உடலை வருத்திக்கொள்ள வேண்டும்? நமக்கு இருக்கும் பணம் போதாதா...?' என்று சமாதானம் செய்வாள்.

அவர்கள் வீட்டில் உதவி செய்ய வயதான நீக்ரோ பெண்மணி ஒருத்தி உண்டு. லூஸியாவின் சின்ன வயதிலிருந்தே இருப்பவள். 'சாப்பிட்டாயா மார்த்தா...? ஏன் களைப்பாக இருக்கிறாய்? ஓய்வு எடுத்துக்கொள் மார்த்தா...' என்று அன்புடன் கவனித்து அவளிடமும் நல்ல பேர் எடுத்துவிட்டான் குமார். அவனுக்கு எதிரிலேயே மார்த்தா, லூஸியாவிடம் சொல்லுவாள்: 'குமார் மாதிரி உன்னதமான கணவன் வேறு எந்த அமெரிக்கப் பெண்ணுக்கும் கிடைக்கமாட்டான்' என்று!

ஒழுங்காக இருந்த குமாரைக் கையில் புரண்டோடிய பணப்பிரவாகம் ஒரு சில மாசங்களுக்குள் சோம்பேறி ஆக்கியதால், ஆபீஸுக்குப் போகிறேன் என்று பேர் பண்ணத் தொடங்கினான். குமாரிடம் வேலை பற்றிப் பேசினால் அவன் மனசு நொந்துவிடுவான் என்ற பயத்தில் மற்றவர்கள் வாயைத் திறக்காமல் இருந்தது அவனுக்கு சௌகரியமாய் இருந்தது.

ஆபீஸில் வேலை குறைந்தபிறகு அதை வேறு பல வேலைகளுக்கும் குமார் பயன்படுத்தத் தொடங்கினான்.

வேலையற்ற அமெரிக்க நண்பர்களுடன் குடிப்பது அங்கேதான்!

லூஸியாவின் உடம்பு இவனுக்கு போர் அடிக்கத் தொடங்கியபோது, தனக்கு வேறு ஒரு வடிகால் இருந்தால் தான் லூஸியாவிடம் தான் காட்டும் பணிவை, சிரத்தையை

தொடர முடியும் என்று புரியவே—சின்ன அழகான பெண் ணுடன் பகல் பொழுதுகளில் உல்லாசமாக இருக்கவும் தொடங்கினான்.

பணம் எதைத்தான் கொடுக்காது...?

குமார் விஷயத்தில் சௌகரியம், உல்லாசம் எல்லா வற்றையுமே கொடுத்தது.

இவர்கள் வீடு ரோலிங் மெடோஸ் தாண்டி. ஜானியாவின் க்ளினிக்கோ முப்பது மைல் தள்ளி உள்ள டவுனில். காலையில் க்ளினிக் கன்ஸல்டேஷன் முடிந்தபிறகு யுனிவர்ஸிடியில் லெக்சர் இருந்தால் போவாள்—இல்லை என்றால் அங்கேயே இருக்கும் ஒரு சின்ன அபார்ட் மெண்ட்டில் சிறிது தங்கி, ஆஸ்பத்திரியையும் மாலை கன்ஸல்டேஷன்களையும் முடித்துக்கொண்டு, அவள் வீடு திரும்ப ஏழு ஆகிவிடும். அதற்குள் தன் ஆட்டத்தையெல் லாம் முடித்துக்கொண்டு, சமர்த்தாய் வீட்டுக்கு வந்து, குளித்து சுத்தமாய் மனைவியின் வரவை ஆவலுடன் எதிர் பார்க்கும் கணவனைப்போல குமார் காத்திருப்பான்.

மாசத்தில் சில நாட்கள் ஜானியாவுக்கு வெளியூரிலிருந்து லெக்சர் செய்ய, செமினார்களில் கலந்துகொள்ள அழைப்பு வருவதும் இவனுக்கு ரொம்ப சௌகரியமாக இருந்தது.

தட்டுத் தடங்கல் இல்லாமல் சுகமாய் ஓடிய வாழ்க்கை இந்த வருஷத் துவக்கத்தில் மாறத் தொடங்கியது.



குமார் எத்தனைதான் அது
மனைவி என்ற நினைக்
...ம்... மேலும் குழந்தை
அவன் விட்டுப்
...தான் கண்ட
...—குழந்
என்ன

# 9

## இருபத்தொன்றாவ

நியூ இயர் பார்ட்டிக்கு நண்பர் ஒருவர் இல்லத்துக்குப் போய்விட்டு காலை மூன்று மணிக்கு வீடு திரும்பினார்கள். முழங்கால் அளவு பனி சாலையெங்கும்...பனிக்குபோல வீடுகளும், தரைகளும் பனிப்போர்வையில் மினுமினுத்தன. வீட்டுக்குள் வந்து கதவைத் திறந்துக்கொண்டு உள்ளே நுழைந்ததும், குமாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அங்கேயே நின்று அவனை அழுத்த முத்தமிட்டாள் ஜானியா.

''ஐ வாண்ட் டு ஹாவ் சைல்ட், டார்லிங்...'' என்றாள்.

இரண்டு வருஷ காலமாய் தோன்றாத ஆசை இப்போது தோன்றுவானேன்?

திருமணத்தின்போதே ஜானியா தீர்மானமாய்ச் சொல்லி இருந்தாள். 'குழந்தை பிறந்தால் தொழிலில் கவனம் செலுத்த முடியாது; தவிரவும் குமாரிடம் கொண்டுள்ள காதலால் மணவாழ்க்கைக்கு அவள் தயாரானாளேயன்றி குழந்தை குட்டிமேல் உள்ள ஆசையால் அல்ல' என்று...

இந்த ஏற்பாடு குமாருக்கும் பிடித்தது.

இப்போது திடீரென்று ஏனிந்த ஆசை...?

ஜானியாவே விளக்கினாள். குமாரின் உன்னதமான அன்பு அவளைச் சிலிர்க்க வைக்கிறதாம்...இவன் குணங் களைக் கொண்டு பிறக்கும் குழந்தை இவனைப்போலவே

ம்—அதனால் என்ன குமார்
தொடர முடியும் என்று '' பிறப்பித்து, வளர்க்க வேண்டும்
களுடன் பகல் பொழுதுவிட்டதாம்...!
தொடங்கினான். ...த்தைக் காட்டி இவள் மனசை மாற்றலாம்
பணம் என்று குமார் பேசினான்:

''என் வருமானம் நம் குழந்தையை வரவேற்கும்படி வசதியாக இல்லையே...இன்னும் கொஞ்சநாள் பொறுக்கக்கூடாதா, பேபி...''

''திரும்பத் திரும்ப என்னத்திற்காக உன் வருமானத்தைப் பற்றியே பேசுகிறாய், டார்லிங்? நீ வேலை பண்ண வேண்டாம்—என் பணம் எல்லாம் உனக்குத்தானே...? நாளைக்கே வேணுமானால் என் சொத்துக்களையும், பணத்தையும் உன்பேரில் எழுதி வைத்துவிடட்டுமா... அப்போது இந்த மனக்குறையை அகற்றுவாயா...?''

இனி குமார் வாயைத் திறக்க இயலுமா...?

சரியாக அந்த மே மாசம்—தான் ஐம்பது நாள் கர்ப்பம் என்றாள் ஜூலியா...

இதற்கப்புறம்தான் நிஜ பூதமே கிளம்பியது!

திடீரென்று யாரும் எதிர்பார்க்காத நிலையில் அந்த ஆகஸ்ட் முதல் வாரத்தில் மார்த்தா மாரடைப்பால் இறந்து போனாள்.

இந்த மரணம் ஜூலியாவை வெகுவாகத் தாக்கியது. ஒரு வாரம்போல துக்கத்துடன் தன் வேலைகளைக்கூட கவனிக்காமல் இருந்தவள் அன்று ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்ட பிறகு, 'நான் உன்னிடம் முக்கியமாய் சில விஷயங்கள் பற்றிப் பேச வேண்டும் குமார்' என்று உட்கார்ந்தாள்.

ஜூலியா குழந்தை பிறந்த பிறகு அவள் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிடப் போகிறாளாம்! மார்த்தா இருந்த வரைக்கும் வீட்டுக் கவலை இல்லாமல் இருந்தாளாம். இனி



அப்படி இருக்க முடியாதாம். குமார் எத்தனைதான் அனுசரிக்கும் கணவனாக இருந்தாலும், மனைவி என்ற நிலையில் அவளுக்கு சில கடமைகள் இருக்கிறதாம்... மேலும் குழந்தை பிறந்த பிறகு அதை கண்ட ஆட்களிடம் அவள் விட்டுப் போகத் தயார் இல்லையாம். தொழிலில் இதுதான் கண்ட புகழும், செய்த சேவையும் போதுமாம்...கணவனை—குழந்தையைப் பேணுவதுதான் இனி அவள் தலையாய என்னமாம்...தர்மமும்கூடவாம்.

என்னது...?

ஜூலியா டாக்டர் தொழிலை விடப்போகிறாளா?... குமார் அதிர்ச்சிக்குள்ளானான்.

ஜூலியாவின் பெரும் வருமானத்தை இழக்க அவன் எப்படிச் சம்மதிப்பான்? அட, அந்தப் பணம் போனாலும் அக்ஷய பாத்திரம் மாதிரி அவளின் சொத்துக்களின் வருமானம் இருக்கிறது, கவலையில்லை...

ஆனால்...?

ஒரு நாளில் கிட்டத்தட்ட பதினான்கு மணி நேரங்கள் இவன் ஆனந்தமாய் அனுபவிக்கும் சுதந்திரம் போய் விடுமே!

வீட்டிலேயே ஜூலியா இருந்தால் கண்டிப்பாய் இவன் எங்கிருக்கிறான் என்ன வேலை செய்கிறான் என்பதையெல்லாம் பற்றிச் சிந்திக்க நிறைய போது இருக்குமே—விடுவாளா...?

இப்போது மூக்குவரை அவளுக்கு வேலை—'ஹனி, டார்லிங்' என்பதிலேயே எஞ்சிய போதும் ஓடிவிடுகிறது!

இனி அதெல்லாம் சாத்தியமா...?

என்னென்னவோ சொல்லி ஜூலியாவிடம் வாதாடினான்.

ஜூலியா மசியவில்லை.

குமாருக்குக் கை கொடுப்பதுபோல அன்றைய தபாலில் அலுவலகத்திற்கு அவன் அம்மாவின் கடிதம் வந்தது.

'உன் வயசுப் பையன்களுக்கெல்லாம் கல்யாணமாகி—குழந்தைகள் பிறந்து, அதுகளுக்குப் பூணல்கூட போட்டாச்சு. நான் சாகிறதுக்குள்ள உனக்கு ஒரு பெண்டாட்டி வந்து பார்ப்பேனா? எங்கோ கிடந்து திண்டாடறியே... உன்னைப் பார்த்துக்க ஒருத்தியைக் கல்யாணம் பண்ணி அழைச்சிண்டு போயிட்டா, நா நிம்மதியா இருப்பேன்' என்று அம்மா எழுதியிருந்த கடிதம் குமாருக்கு மணியான யோசனை ஒன்றைத் தந்தது.

மாலையில் ஹானியா வீடு திரும்பியதும் பேச்சைத் துவங்கினான்:

'அம்மாவிடமிருந்து லெட்டர் வந்திருக்கிறது, பேபி! என் தங்கைக்கு நிச்சயதார்த்தம் பண்ணப்போகிறார்களாம்! நவம்பர் மாதம் கல்யாணமாம்...மூத்தபிள்ளையாய் லட்சணமாய் வா என்று அம்மா எழுதியிருக்கிறாள்' என்றவன் தொடர்ந்து, 'இந்தியாவுக்குப் போய் நல்லவிதமாய் நம் திருமணத்தைப் பற்றியும் பேச இது சந்தர்ப்பம். போய் நிலைமையைக் குறித்து எழுதுகிறேன்—நீயும் வந்து போகலாமே...' என்றான்.

ஹானியா 'சரி' என்றாள்.

செப்டம்பர் மாசம் அம்மாவுக்கு எழுதிவிட்டான் தனக்குப் பெண் பார்க்கச் சொல்லி.

நவம்பர் துவக்கத்தில் அம்மா பெண்களைப் பார்த்துத் தயாராய் வைத்திருக்கிறேன் என்று எழுதின கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு, 'தங்கைக்காகப் பார்த்த பையன் விபத்தில் இறந்துபோய் விட்டானாம்...தங்கை கலங்கிப்போயிருக்கிறாளாம். நான் என்ன செய்வேன், ஹானி?' என்று மூக்கைச் சிந்தி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினான்.



'போன்மூலம் நிலைமையை விசாரியேன்' என்றாள் ஹானியா.

'ஐயோ எங்கள் ஊர் சின்ன கிராமம்—போன் வசதி கிடையாதே...!' என்று மேலும் குமுறினான்.

'சரி நீ உடனே கிளம்பிப் போய் இதமாய் இருந்துவிட்டு வா, குமார்!' என்றாள் ஹானியா...

'ஒரு விஷயம் ஹானி...ஒருவேளை என் தங்கைக்கு இடமாறுதல் தன்மை செய்யுமானால் இங்கு கூட்டி வரட்டுமா? உன் பிரசவத்தின்போதும், குழந்தையைப் பார்த்துக் கொள்ளுவதற்கும் அவள் சௌகரியமாய் இருப்பாளே... சின்னப்பெண்; அவளுக்கும் மனசு திருப்தியாக இருக்குமே?'

உடனடியாய் ஆமோதித்தாள் ஹானியா, 'என்னைக் கேட்க வேண்டுமா...? உன் தங்கை என் தங்கைபோல... இஷ்டம்போல செய் ஹனி' என்றாள்.

குமார் நவம்பர் கடைசியில் தாயகத்துக்குத் திரும்பினான்.

ரொம்பப் படிக்காத, சின்னப் பெண்ணாகப் பார்த்து மணந்துகொண்டு இங்கு கூட்டிக்கொண்டு வந்தால்—பாஷை தொந்தரவு பிரச்சினையால் ஹானிக்கு உண்மை தெரிய வராது...எனவே பயம் இல்லை—அம்மா அப்பாவிடமும் 'சமர்த்துப் பிள்ளை' என்ற பேர் வாங்கிவிடலாம்!

நம்மூர் கிராமத்துப் பெண்களை, 'சீ—நாயே கிட' என்றால் அடங்கிக் கிடப்பார்கள். 'கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்' என்று பொறுமையாய் இருப்பார்கள்.

குமார் கெட்டிக்காரத்தனத்துடன்தான் திட்டமிட்டு நடந்தான்.

சின்னப் பெண், படிக்காத பெண், கிராமத்துப் பெண் என்று தேடிய அவனுக்கு—அழகான பெண்ணுமான விசாலி கிடைத்தாளே அதற்குப் பேர் என்ன...?

## 10 இருபத்தொன்றாவது நாள்

விசாலிக்கு உடம்பை வலித்தது. இருபது நாட்களாய் ஓயாத அலைச்சல். இரவில் சரியான தூக்கம் இல்லாதபடி கணவனின் விஷமங்கள்! இப்போது கிட்டத்தட்ட முப்பத்தி ஆறு மணி நேரங்களாய் ஒரே இடத்தில் உட்கார்ந்து பயணம் செய்வது அவளுக்குச் சலிப்பைக் கொடுத்து உடம்பு வலியை அதிகரிக்கச் செய்தது.

ஜன்னல் வழியாக எத்தனை நேரம் பார்ப்பது...?

விடாமல் கடலுக்கு மேலே விமானம் பறந்தபோது அவளுக்குப் பயமாக இருந்தது.

கீழே விழுந்தால் தனக்கு நீஞ்சக்கூடத் தெரியாதே என்று கவலையாக இருந்தது.

'இவருக்கு நீஞ்சத் தெரியுமோ...?'

'அப்படீன்னா கவலை இல்லை.'

'மணி இப்போ என்ன இருக்கும்?'

இவரைக் கேட்டால் முதல்லே பகல் பன்னண்டுன்னார் அப்புறம் திரும்ப பன்னண்டுங்கறார்! கேட்டா, 'நம்ப அமெரிக்காவை நோக்கிப் பறக்கறதுனாலே மணி குறைஞ்சுடும்' என்கிறார்.

அது எப்படி...?

விசாலிக்கு போர் அடித்தது,

மெல்ல குமாரின் கையைத் தொட்டு அவனை உலுக்கி, ''மணி என்ன...?'' என்றாள்:

''ம்...இரண்டாகப் போறது...''



'அப்பாடி—ஒரு வழியாய்ப் பன்னெண்டைத் தாண்டியாச்சா...?'

''நாம்ப எப்ப ஊருக்குப் போவோம்?''

''இன்னும் ஒரு மணி நேரத்துல நியூயார்க்கில் இறங்கிடலாம். ஆமாம்! உனக்கு தூக்கம் வரலை? இப்போ இண்டியாவிலே நடு ராத்திரி ஆச்சே...?''

இந்தச் சித்தாந்தம் விசாலிக்கு முழுமையாகப் புரியவில்லை. பத்திரிகைகளில் படித்த விஷயம்தான் என்றாலும், 'நமக்குப் பகல்; இந்தியாவில் இப்போது இரவு' என்றால் நம்புவது கஷ்டமாக இருந்தது.

'இன்னும் ஒரு மணிநேரம்தான்—அப்புறம் ஊர் வந்துடுமாமே...?

'நியூயார்க் எப்படி இருக்கும்? ரொம்ப குளிருமா...?

ஊருக்கு புறப்படும் தினத்தில் சென்னையில் பெரிய ரெடிமேட் கடைக்கு அழைத்துப்போய் ஒரு கனத்த ஸ்வெட்டரையும், கம்பளி—ஸாக்ஸ்களையும், ஷூவையும் குமார் அவளுக்கு வாங்கிக் கொடுத்தான்.

''இப்போ அமெரிக்காவிலே விண்டர். குளிர் அதிகம். போய் இறங்கினதுமே உனக்கு நான் புது ஓவர்கோட், மத்த சங்கதியெல்லாம் வாங்கிடுவேன். அதுவரைக்கும் தாக்குப் பிடிக்க இதெல்லாம்...'' என்றான்.

செருப்புக் கடையில் ஷூவைக் காலில் மாட்டிக் கொண்டு, நடந்து பார்த்தாள் விசாலி. விழாமல் இரண்டடி எடுத்து வைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது!

ஒரு பெரிய கைப்பை—இரண்டு ஜதை உயர்ந்த செருப்புகள், நாலு பட்டுப் புடவைகள், கோட்டா புடவை, சுங்கடி புடவைகள் என்று ஏகமாய் அன்று வாங்கினான் குமார். இவை தவிர, 'என் அமெரிக்க நண்பர்களுக்காக' என்று வி.டி.ஐ.யில், ராதா ஸில்க் எம்போரியத்தில் என்னென்னவோ வாங்கினான்.

விமானத்தில் ஏறுமுன் ஜரிகை போடாத பட்டுப்புடவை பொருத்தமான ரவிக்கை. கையில் கறுப்பு ஹாண்ட்பேக் காலில் புதுச்செருப்பு என்று தயாரான தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டபோது விசாலிக்கு ஏக சந்தோஷமாக இருந்தது.

''இப்பவே சீமைலேந்து வந்தவ மாதிரின்னா நீ இருக்கே...'' என்று ஞானம்கூட பெருமையாகப் பேசினாள்.

நகைகளை 'டாய்லட்' சாமான்களோடு கலந்து பேப்பரில் சுத்தி தன் ஷோல்டர் பேக்கில் பத்திரமாய் வைத்திருந்தான் குமார்.

''பௌடரும், சோப்பும் இருக்கிற டாய்லட் பேக்கை யாரும் சோதனை போடமாட்டா கஸ்டம்ஸில் ஏது கேட்டாலும் நான் பதில் சொல்லறேன். நீ பேசாமல் இரு'' என்று அவன் சொல்லி இருந்தான்.

அதிகாரிகள் ஆங்கிலத்தில் குமாரிடம் ஏதோ கேட்டார்கள். இவன் சிரித்துக்கொண்டே பொறுமையாய்ப் பதில் சொன்னான். ஒரு நிமிஷம் பார்த்து என்னமோ குறித்துக் கொண்டு அனுப்பிவிட்டார்கள்.

''உனக்கு வாட்ச் அங்கே போய் நல்லதாய் வாங்கப் போறேன். அதனால் கைக்கு ஒரு தங்க வளையல் மட்டும் போட்டுண்டு, சிம்பிளாய் வா பாக்கி எல்லாம் 'பாக்' பண்ணி உள்ளே வச்சுடு'' என்று குமார் சொல்லிவிட்டதால், அணிய வேண்டும் என்று ஆசைப்பட்ட நகைகளையெல்லாம உள்ளே வைத்துவிட்டாள் விசாலி.

அமெரிக்காவிலே நித்தியப்படி நகை போட்டுண்டா இவருக்குப் பிடிக்குமோ? வைர மோதிரத்தையாவது கையோட போட்டுண்டா நன்னா இருக்கும்...

''பிளேன் இறங்கப்போறது விசாலி. ஸீட் பெல்டைக் கட்டிக்கோ! அப்புறம் ஜன்னல் வழியா பாரு, நியூயார்க் தெரியும்; மான் ஹாட்டனைப் பார்க்கத் தவறாதே...''



வானத்தைத் தொட்டுக் கிழிக்கிற மாதிரி உயரமான கட்டடங்கள் தெரிந்தன. தரையே தெரியவில்லை—கும்பல் கும்பலாய்க் கட்டடங்கள்.

விசாலிக்கு எங்கிருந்தோ புதுசாய் உற்சாகம் கொப்பளித்தது.

உதடுகள் புன்னகையால் விரிய ஜன்னல் வழியாக மிகுந்த குதூகலத்துடன் பார்க்கத் தொடங்கினாள்.

குமார் தன் திட்டத்தின் கடைசிக் கட்டத்துக்கு வந்துவிட்டான்.

நியூயார்க் வரும் வரைக்கும் விசாலியிடம் எதுவுமே சொல்லக்கூடாது, நியூயார்க்கிலிருந்து ஷிகாகோ போனதும் அவளிடம் பக்குவமாக ஹோஸியா பற்றிப் பேச வேண்டும் என்றே அவன் நினைத்திருந்தான்.

இதுவரை எல்லாம் நல்லவிதமாக நடந்தமாதிரி இனியும் சென்றுவிட்டால் அவன் ராஜாதான்—கட்டிப் பிடிக்க முடியாது!

கல்யாணம் பண்ணிக்கொண்டு அமெரிக்கா திரும்புவது என்ற தீர்மானத்துடன் அவன் புறப்பட்டதால், அதற்குத் தகுந்த விதத்தில் தன்னைத் தயார் செய்துகொண்டே சொந்த ஊருக்கு வந்திருந்தான்.

போய் இறங்கிய கையோடு கல்யாணம் செய்துகொண்டு, கூட்டோடு கூடாய்ப் புதுமாப்பிள்ளையின் அழகில்—தாராள குணத்தில் மற்றவர் மயங்கி இருக்கையிலே இவன் பெண்டாட்டியுடன் கிளம்பிவிட வேண்டும்? அப்போதுதான் அனாவசியமான கேள்விகள், துருவிப் பார்க்கும் உள்ளங்களின் குறுக்கீடுகள் ஓரளவுக்கு இருக்காது.

விசா, பாஸ்போர்ட் வாங்க நல்ல பயண ஏஜெண்ட் ஒருத்தனைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும்!

வந்து இறங்கினதும், சென்னை ஏர்போர்ட்டில் கஸ்டம்ஸ் அதிகாரிகள் சுங்கவரி கட்டச் சொன்னதற்கு சிரித்துக்கொண்டே ஒப்புக்கொண்டான்.

'பல வருஷங்கள் கழிச்சு வரேன்—வெறுங்கையோட எப்படி வர்றது...? பரவாயில்லை; உங்க ட்யூட்டியை நீங்க பாருங்க'' என்று பெருந்தன்மையுடன் பேசி, தேவையான டாலர்களை நீட்டி, வரியைக் கட்டிவிட்டுக் கச்சிதமாக வெளியே வந்தான்.

பின் அன்றே பெரிய ட்ராவலிங் ஏஜெண்ட் ஆபீஸொன்றுக்குப் போய், சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொண்டான்.

ஆபீஸர் ஸீத்திக்காரர்—இவனுக்கு ரொம்ப சௌகரியமாகப் போயிற்று?

''நாலுவார விஸில் வந்திருக்கிறேன். போகும்போது என் தங்கையை அழைத்துப் போக வேண்டும். புருஷனுடன் தகராறு. மனசு நொந்துபோயிருக்கிறாள். அதனால் ஒரு மாறுதலுக்கு அவளை அழைத்துப்போகிறேன். எத்தனை சீக்கிரம் 'முடியுமோ—புறப்பட எண்ணம்—'' என்றவன், ஒரு 'ரெட் லேபிள்' விஸ்கி பாட்டிலைத் தன் ப்ரீப்கேஸிலிருந்து எடுத்து, 'பிளேனில் வாங்கினேன், ஒரு நண்பனுக்குக் கொடுக்க! ஆனால் அவன் ஊரில் இல்லை. என் கிராமத்துக்கு எடுத்துப்போக முடியாது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் என் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்களேன்...'' என்றான்.

ஆபீஸருக்கு லேசில் கிடைக்கக்கூடிய சமாசாரமா அது...?

''உங்க தங்கைக்கு இரண்டே நாளில் பாஸ்போர்ட் விசா வாங்க நான் ஏற்பாடு பண்ணுகிறேன், சரிதானே?'' என்றார் அவர்.



''எத்தனை நாள் விசா வாங்க முடியும்? என் தங்கை எவ்வளவு நாட்கள் இருந்தாலும் எனக்கு சந்தோஷம் தான்...!''

ஆபீஸர், ''ஆறுமாத டூரிஸ்ட் விசாதான் வாங்கித்தர இயலும். பாக்கி எதாவது என்றால் நாள் ஆகும்'' என்று சொன்னார்.

''ஆல் ரைட்—ஸிக்ஸ் மந்த்ஸ்...வில் பி ஓ.கே...நான் உங்களைப் பிறகு பார்க்கிறேன்'' என்று கூறி விடை பெற்றான்.

குமாருக்கு இது தெரிந்த விஷயம்தான்! டூரிஸ்ட் விசா வாங்கினால்தான் உடனடியாகக் கிளம்ப முடியும். 'இமிக்ரேஷன்' என்று பாஸ்போர்ட்டில் குறிப்பிட்டால், மனைவி விசாவை உடனடியாக வாங்க முடியாது. ஷிகாகோவில் அவனுடைய அமெரிக்க நண்பன்—கில்பாடி ஒருத்தன் இருக்கிறான்! அவன் உதவியோடு விசாவை மாற்ற குமாரால் இயலும்...

ஸோ...இப்போதைக்கு அவன் தன் தங்கையை டூரிஸ்ட் விசாவில் அழைத்துப் போகப்போகிறான்...ஓ.கே!

பாஸ்போர்ட், விசா வாங்க—உதவி செய்ய ''அண்ணனாகிய தன் பெயர், வேலை, பாங்க் பாலன்ஸ், லெட்டர் ஆஃப் அபிடவிட் முதலியவைகளை ஏஜண்ட்டிடம் குறித்துக் கொடுத்துவிட்டு, இவன் நிம்மதியாய் வில்லியனூருக்குப் புறப்படுமுன்—பெற்றோர் பேசி வைத்திருந்த இரண்டு பெண்களை சென்னையில் பெண் பார்த்துவிட்டுப் புறப்பட்டான்.

குமாருக்குத் திருப்தி இல்லை. இருவருமே படித்த பெண்கள். 'ம்ஹூம்...வேண்டாம்.'

''குடும்பப் பாங்கான பெண்தான் வேணும்மா! வேலைக்குப் போகிற பெண்கள் வேண்டாம். இத்தனைப் படிப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை...''

சொல்வதைச் சமயம் பார்த்துப் பக்குவமாய்ச் சொன்னான். இவன் தன் அவசரத்தில் ஏடாகூடமாய்ப் பேசி—அது சந்தேகத்தைக் கிளப்பி விட்டுவிடக்கூடாதே...: அதனால் படுஜாக்கிரதையாய்ப் பேசி, நடந்து எல்லோரையும் கவர்ந்தான்.

ஒருவேளை இவன் விருப்பப்படி பெண் அமையா விட்டால்...? அதையும் யோசித்துவிட்டான் குமார்?

கிடைத்தால் பார்ப்பது, இல்லாவிட்டால் தனியாகவே ஊர் திரும்பி அங்கேயே வேறுவழி எதையாவது சிந்திக்க வேண்டியதுதான்!

ட்ராவல் ஏஜெண்ட்டுக்குக் கொடுத்த ஒரு பாட்டில் 'ரெட் லேபிள்' தண்டமாகும்! தட்ஸ் ஆல்.

ஆனால் குமார் அதிர்ஷ்டக்காரன்தான்!

அவன் ஆசைப்பட்ட மாதிரி படிக்காத, வெளிதேசத்து விவகாரங்கள் தெரியாத, நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த முக்கியமாய் அழகான சின்னப்பெண் ஒருத்தியே அவனுக்குக் கிடைத்துவிட்டாள்...

இவனின் பண்பான நடத்தையையும், சிரித்துப் பழகும் முகத்தையும் கண்டு அத்தனைபேரும் மயங்கிப்போனது நிஜம்! 'இப்படிப்பட்ட கணவன் எனக்குக் கிடைக்க நான் என்ன தவம் பண்ணினேன்...' என்று விசாலி நெகிழ்ந்திருப்பதும் நிஜம்!

கல்யாணமாகி பாஸ்போர்ட் வாங்க இவர்கள் சென்னைக்குப் புறப்பட்டபோது, சந்துருவும் கூடக் கிளம்பினது முதலில் குமாருக்கு அசௌகரியமாகவே இருந்தது. விசாலிக்கு இங்கிலீஷ் தெரியாது; ட்ராவல் ஏஜெண்ட்க்குத் தமிழ் தெரியாது...தங்கை என்றால் நம்பத்தான் வேண்டும். ஆனால் சந்துரு அப்ளிகேஷன் பாரத்தைப் பார்க்க நேர்ந்துவிட்டால்...? அவனுக்கு இங்கிலீஷ் கொஞ்சம் தெரியுமே!



யோசித்தான். 'வரவேண்டாம்' என்று தடுத்தால் சந்தேகம் வரக்கூடும் என்று சந்துரு உடன்வர குமார் சம்மதித்தான். ட்ராவல் ஏஜெண்ட்டைப் பார்க்க தனியாகப் போய் ஒரு 'ரெவ்லான் இன்டிமேட்' பாட்டிலைக் கொடுத்து, ''என்னிடம் நிறைய இருக்கின்றன. உங்கள் மனைவிக்குக் கொடுங்கள்...'' என்று சொல்லி, பாஸ்போர்ட் அப்ளிகேஷனை வாங்கி வந்தான். மறுநாள் போட்டோ அப்ளிகேஷனுடன் மீண்டும் ஏஜெண்ட்டைப் பார்த்தபோது, ''என் தங்கையை அழைத்து வரவேண்டுமா? வெளியுலகத்தைப் பார்க்கவே வெட்கப்படுகிறாள்...'' என்று வருத்தமாய்ப் பேசினான்.

''சேச்சே...வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன். கவலைப்படாதீர்கள். வீணாக உங்கள் தங்கையை தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று அவர் தடுத்துவிட்டார்.

'ரெட்லேபி'ளும் 'ரெவ்லான் இன்டிமேட்டும்' போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்தன! 'எம்பஸி'யில் ஏஜெண்ட் யாரைப் பார்த்தாரோ, என்ன பேசினாரோ—நான்காம் நாள் வில்லியனூருக்கு 'எல்லாம் ரெடி' என்று குமாருக்கு போன் பண்ணிவிட்டார்.

ஆக, குமாரின் திட்டம் இந்த நிமிஷம் வரை 'ஜம்' மென்று நிறைவேறிவிட்டது.

இனி விசாலியைச் சரிக்கட்ட வேண்டியது ஒன்றுதான் பாக்கி...!

விசாலி கணவன் பேச்சுக்குக் கட்டுண்டவளாய் நடந்துகொண்டால் பிரச்சினைகளே இல்லை...

நிஜமாகவே லூஸியாவுடன் தொடர்ந்து அமெரிக்காவில் என்றென்றும் குடித்தனம் செய்ய குமாருக்கு விருப்பம் இல்லைதான்...

ஜூலியாவுக்குத் தெரியாமல் தனியாய் அவ்வப்போது கிடைக்கும் பணத்தையெல்லாம் தனி பாங்கில் வைத்திருக்கிறான். அது கணிசமான தொகையாகிவிட்டால், பிறகு ஜூலியாவையும் அமெரிக்காவையும் உதறிவிடலாம்! பத்து லட்சம் பணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு இந்தியா திரும்பினால் சென்னையில் சொந்தமாக தடபுடலாக ஓர் அலுவலகம் துவங்கலாம்...பாக்கிப் பணத்தை பாங்கில் போட்டுவிட்டு 'ஹாய்'யாக இருக்கலாம்!

தமிழ் நாடகங்களுக்காக ஏங்க வேண்டாம்...

இட்லி கொத்ஸுக்காகத் தவிக்க வேண்டாம்...

''போடா மடையா...'' என்று திட்டிப் பேச முடியவில்லையே என்று துடிக்க வேண்டாம்...

விசாலி படிக்கவில்லையே தவிர அசடு இல்லை, கெட்டிக்காரியாய்த்தான் தோன்றுகிறாள். நல்ல அழகி. ஐந்து வருஷம் அமெரிக்காவில் வாழ்ந்துவிட்டால் நிறைய நாகுக்கு கற்றுக்கொண்டுவிடுவாள். அப்புறம் சென்னையில் குடித்தனம் பண்ணும்போது, நாலுபேர் மதிக்கும்படி பணம், அழகு, நாகரிகம் எல்லாமே இருக்கும்.

எனக்கு முதல் பெண்டாட்டி இருக்கிறாள் என்பதைத் தவிர இங்கு விசாலிக்கு என்ன குறை? மற்றபடி—ஒன்றுமில்லை. வீட்டில் பாலும் தேனுமாய் ஓடுகின்றன... நாளைக்கே ஷிகாகோவில் இண்டியன் ஸ்டோருக்கு அழைத்துப் போய் அவள் திகைக்கிற மாதிரி ஒரேயடியாய் இருபத்தைந்து புடவைகள், ஆடமாடிக் கைக்கடிகாரம் என்று வாங்கித் தள்ளினால், இளித்துக்கொண்டு நான் சொல்வதற்கு 'சரி' என்பாள்.



'ஜூலியா...?' அவளைப்பற்றி நினைக்கும்போது அவளுடைய அன்பு—ஆசை—அரவணைப்புகள் எல்லாமே நினைவுக்கு வந்தன. அவள் பாவம்—நல்லவள்! விசாலியை என் தங்கை என்று எண்ணிக் கொண்டாடப்போகிறாள்! வீட்டு நிர்வாகத்தையும், குழந்தையையும் விசாலி பார்த்துக்கொள்வது அவளின் பெரிய பிரச்சினையைத் தீர்த்துவிடும். தொடர்ந்து அவள் டாக்டர் தொழிலைச் செய்வாள்...

எனக்கு நிகர் யார் இருக்க முடியும்...? பகல் நேரத்துக்கு ஒரு பெண்டாட்டி, ராத்திரிக்கு ஒருத்தி. போதாவிட்டால் இன்னும் பலர் வெளியில்...பணத்துக்கோ கவலை இல்லை.

சந்தோஷம் அதிகமாகவே, பெரிசாய் சிரித்தான் குமார்.

# 11 இருபத்தொன்றாவது நாள்

ஜே. எஃப். கே. இன்ட்டர்நேஷனல் ஏர்போர்ட்டில் இவர்களது விமானம் இறங்கும்போது மணி மூன்று.

விமானப் பணிப்பெண்ணிடம் கையை அசைத்து விடை பெற்றுக்கொண்டு, டர்மினலுக்குள் நுழைந்து லக்கேஜ் எடுக்கும் இடத்துக்குப் போனார்கள். அடுத்தடுத்து பல கன்வேயர் பெல்ட்டுகள் சுழன்றுகொண்டிருந்தன. ஏர் இந்தியாவின் லக்கேஜ் எதில் வரும் என்று பக்கத்தில் இருந்த அறிவிப்பில் பார்த்துவிட்டு அங்கு சென்று நின்றார்கள்.

'பொத்...பொத்' என்ற சப்தத்துடன் பெட்டிகள் சுழலும் பெல்ட்டில் விழத்தொடங்கின. உட்கார்ந்து கொண்டும், படுத்துக்கொண்டும், சாய்ந்துகொண்டும் ஒருக்களித்துக்கொண்டும் பெரிசும், சிறிசும், புதுசும், நசுங்கினதுமான பெட்டிகள் வலம் வரத்தொடங்கின.

அவரவர்கள் தம்தம் பெட்டிகளை எடுத்துக் கொண்டார்கள்.

அடுத்து கஸ்டம்ஸ் இமிக்ரேஷன் கவனிப்பு முடிந்தது.

''யுவர் ஸிஸ்டர்...?'' என்றார் அதிகாரி விசாலியை நோக்கி.

''யா...'' என்றான் குமார்.

முத்திரையை பாஸ்போர்டில் குத்தி, ''ஹாவ் எ நைஸ் டைம்'' என்றபடியே அனுப்பி வைத்தார்.



ஒரு பக்கமாய் அடுக்கி வைத்திருந்த சக்கரவண்டிகளில் ஒன்றை இழுத்து வந்து பெட்டிகளை அடுக்கி, தள்ளிக் கொண்டே வெளியில் வந்தார்கள்.

பெரிய கண்ணாடிக் கதவுகள் மரியாதையாய்த் திறந்து வழி விட்டன.

''கொஞ்சம் நில்லு—நான் ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன்.''—குமார் சற்று தள்ளி வரிசையாய் இருந்த போன் கூண்டு ஒன்றில் புகுந்துகொண்டான். ஆபரேட்டரை அழைத்து, ஷிகாகோவில் ஜூலியாவின் க்ளினிக் நம்பரைச் சொல்லி, 'கலெக்ட் கால்' போடச் சொன்னான்.

ஜூலியாவின் செக்ரட்டரி பேசினாள். ஜூலியா ஊரில் இல்லையாம். லெக்சர் ஒன்றுக்காக லாஸ் ஏஞ்சல்ஸ் போயிருக்கிறாளாம். நாளை மதியம் விமானத்தில் வருவாளாம்.'

இதுவும் நல்லதுக்குத்தான்...!

வீட்டுக்கு விசாலியை அழைத்துப்போனதும், நிதானமாய்ச் சமாசாரத்தைச் சொல்லி—ஜூலியா வரும் முன் அவளைத் தயார் பண்ணிவிடலாம்!

டாக்ஸி ஒன்றை அழைத்து சாமான்களை ஏற்றினான். சமீபத்தில் திறக்கப்பட்ட தென் இந்திய உணவு விடுதி ஒன்றின் விலாசத்தைக் கூறி அங்கு ஓட்டச் சொன்னான்.

ஏர்போர்ட்டிலிருந்து வெளியே வந்து டாக்ஸியில் ஏறுவதற்குள் குளிர் விசாலியின் எலும்பை வெட்டியது.

மௌனமாய் தன் அருகில் உட்கார்ந்து வரும் விசாலியின் கையை எடுத்து முத்தமிட்டு, ''என்ன விசாலி பேச்சையே காணோம்?'' என்றான் குமார்.

''ம்...இந்த ஊர், இந்த மனுஷா, இவா பேச்சு எல்லாம் எனக்குப் புதுசா இருக்கறதுனாலே பயமா இருக்கு.''

''பயமா? அசடே...''

''நீங்க ஏர்போர்ட்டிலேயும், இந்த டாக்ஸிகாரன் கிட்டேயும் என்ன பாஷையிலே பேசறேள்...!'

''ஏன்? இங்கிலீஷ்தான்...''

''என்னமோ பாஷை மாதிரினா இருக்கு! நீங்க ஊர்லே பேசின இங்கிலீஷுக்கும் இதுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கே! அங்கே பேசறப்போ என்னால் ஒரொரு வார்த்தையாவது புரிஞ்சுக்க முடிஞ்சுது...இங்கே 'ஙழா...ஙழா'னு ஒண்ணுமே புரியலையே!''

அடி சக்கை! இப்படி ஓர் அதிர்ஷ்டமா? இந்த பாஷை சுத்தமாய் விசாலிக்குப் புரியாதது இவனுக்கு நல்லதுதானே!

''அமெரிக்கன் இங்கிலீஷ் வித்தியாசமாய் இருக்கும். 'ர' வார்த்தையை 'ழ'னு கொஞ்சம் மூக்காலே பேசுவா. சரி இங்கே பாரு. அந்த கட்டடங்களையெல்லாம்...திமிர்ந்து உச்சியைப் பாரு!''

விசாலி கட்டடங்களைப் பார்த்தாள். குன்றுகளென குவிந்திருந்த பனியைப் பார்த்தாள். ரோட்டில் மனுஷர்கள் நடமாட்டம் அதிகம் இல்லை. ஆயிரமாயிரம் கார்கள்தான் வேக வேகமாய் விரைந்துகொண்டிருந்தன. என்னத்துக்காக இத்தனை ஸ்பீடாய் போகிறான் இந்த டிரைவர்...?

அந்த டாக்ஸி ஓட்டி ஒரு நீக்ரோ. அவனின் ஆகிருதியும், தலைமயிரும், வெள்ளைப் பற்களும் பெரிய கைகளும் விசாலிக்கு பயத்தைத் தந்தன.

கிறிஸ்துமஸ், நியூயியர் கொண்டாட்டங்கள் சமீபத்தில் தான் நடந்திருந்ததால், தெருக்கள் இன்னும் விழாக் கோலம் பூண்டிருந்தன.

தோரணங்கள், வளைவுகள், அலங்கார விளக்குகள்...

ரெஸ்ட்டாரன்ட் வந்துவிட்டது; டாக்ஸி ஓட்டியைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனார்கள்.



நடராஜர் சிலையும், ஊதுபத்தி வாசனையுமாக அந்த இடம் மணத்தது.

அமெரிக்கர் பலர் உணவருந்திக்கொண்டிருந்தனர்.

மசாலா தோசை, சப்பாத்தி, குர்மா என்று குமார் ஆர்டர் கொடுத்தான்.

வயிறாரச் சாப்பிட்டாள் விசாலி. சாப்பிட்டு, நல்ல காபியையும் குடித்ததும் புதுத் தெம்பு வந்துவிட்டது.

அங்கிருந்து டிபார்ட்மென்டல் கடை ஒன்றுக்குப் போய் விசாலிக்கு ஓவர் கோட், லெதர் கையுறைகள் வாங்கினான். பின்னர், டி. டபிள்யூ. ஏ. ஏர் டர்மினலுக்கு டாக்ஸியை ஓட்டச் சொன்னான்.

பத்து மணி விமானத்தில் ஷிகாகோ போக அவன் ஏற்கனவே புக் செய்திருந்ததால், பெட்டிகளை 'செக் இன்' செய்துவிட்டு, பயண 'கேட்'டை நோக்கி நடந்தார்கள்.

''விமானக் கூடத்துக்குள்ளும் டாக்ஸியினுள்ளும், அந்த சாப்பாட்டு ஓட்டலுள்ளும் குளிரே தெரியவில்லையே! ஆனால் இறங்கி வெளியில் ஒரு நிமிஷம் நடப்பதற்குள் ஏன் இப்படிக் குளிருகிறது?'' விசாலி கணவனிடம் சந்தேகத்தைக் கேட்டாள்.

''[illegible]ம் கார் எல்லாம் இங்கே, ஸென்டரலி ஹீட்டட். அதாவது உஷ்ணக் காத்து மூலம் சூடாக்கி இருக்கா. அதனால்தான் இப்படிச் சௌகரியமா குளிர் தெரியாம இருக்க முடியறது...''

காலில் ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு கம்பளி ஸாக்ஸையும், ஸ்வெட்டர்மேலே புதுசாய் வாங்கின ஓவர் கோட்டும், கைகளில் உறைகளும் அணிந்திருந்தும்கூட விசாலிக்கு குளிர்ந்தது.

காமாசோமா- ஸாக்ஸ், ஓவர்கோட்டெல்லாம் போட்டுக் கொண்டு அவளுக்கு நடக்கவே தெரியவில்லை. தடுக்கித் தடுக்கி பலமுறைகள் விழப் பார்த்தாள்.

பத்து மணிக்கு ஷிகாகோ விமானம் புறப்பட்டுவிட்டது. மான்ஹாட்டனின் விளக்குகள் விமானத்திலிருந்து காண்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

அசதியின் காரணமாய் விமானத்தில் ஏறிய உடனேயே ஓவர்கோட்டை அவிழ்த்து மடியில் வைத்துக்கொண்டு விசாலி நன்றாய்த் தூங்கிவிட்டாள்.

ஷிகாகோவை விமானம் இரண்டு மணி நேரத்தில் அடைந்தது. நியூயார்க் மணியைவிட ஷிகாகோ மணி ஒரு மணி நேரம் குறைவாதலால், பதினொன்றுக்கு இவர்கள் 'ஓஹேர்' விமான கூடத்தில் இறங்கிவிட்டார்கள்.

டாக்ஸியில் சாமான்களோடு வீட்டுக்கு வந்தபோது மணி பன்னிரண்டரை.

பெட்டிகளை உள் ஹாலில் வைத்தபின் கூடத்தில் விளக்குகளைப் போட்டான் குமார். அவனைத் தொடர்ந்து உள்ளே வந்த விசாலி, இத்தனை பெரிய வீட்டுக்கு நாம சொந்தக்காரியாக இருப்போம் என்று நினைக்கவேயில்லை.

''என்ன விசாலி அப்படியே நின்னுட்டே....வா.. முதல்லே சூடா ஒரு கப் காபி சாப்பிடலாம்.'' இரண்டு உள்ளங்கைகளையும் பரபரவென்று தேய்த்துக்கொண்டே சொன்னான் குமார்.

''இந்த வீடு நம்பளுதா?'' என்றாள் விசாலி.

''ம்...''

''நிஜமாவா?''

''ம்...''

''எவ்வளவோ பெரிசா இருக்கு! இதெப்பத்தி நீங்க ஒண்ணுமே சொல்லலியே.''



''உன்கிட்டே பேசறதுக்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கு விசாலி! நேரம் எங்கே இருந்தது? கல்யாணம் பண்ணிக்கறதுக்கும், டிக்கெட் வாங்கறதுக்கும், புறப்படறதுக்கும்தானே நேரம் சரியா இருந்தது? சரி, வா— சமையல் ரூமுக்குப் போகலாம்...''

ஒரு பெரிய டைனிங் ஹால்.

அழகான மேஜை. பத்துபேர்கள் உட்கார்ந்து சாப்பிடுறமாதிரி நாற்காலிகள். தாண்டிக்கொண்டு போனால் விஸ்தாரமான சமையல் ரூம். காட்ரேஜ் பீரோ மாதிரி ஆரஞ்சு கலர் ஃப்ரிஜ்; அதே நிறத்தில் குக்கர், டிஷ்வாஷர், அலமாரிகள், வட்டமான மேஜை, நாலு நாற்காலிகள், ஆடும் நைலான் திரைச்சீலைகள்—தொங்கும் பச்சைச் செடி கொண்ட சட்டிகள்.

கொத்துவிளக்கைப் போட்டதும் அறை பளபளத்தது.

இதுவா சமையல் ரூம்? எத்தனை சுத்தமா, அழகா இருக்கு...? ஒரு ஆம்பிள்ளையால் இத்தனை நன்னா வைச்சுக்க முடியுமா? இந்தமாதிரி எனக்கு துடைச்சு வைக்கத் தெரியுமா?

''என்ன பிரமை புடிச்ச நின்னுட்டே? உட்காரு...'' அவளை நாற்காலியில் அழுத்திவிட்டு ஃப்ரிஜிலிருந்து பால் எடுத்து ஸாஸ் பேனில் ஊற்றி அடுப்பில் வைத்தான்.

''அது என்னது?''

''பால்.''

''பெரிய ஜாடி மாதிரி இருக்கு. அது பூராவுமா பால்?''

''ம்...''

இப்போ ஏது பால்? யார் வாங்கி வைச்சா...? நீங்கதான் புறப்பட்டு வந்து ஒரு மாசம் ஆறதே...!''

"அதெப்பத்தி உனக்கு என்ன கவலை? காபி வேணுமா வேண்டாமா? இதைப் பாத்தியா, இது ஃப்ரிஜ்—அது டீப்ஃப்ரிஜிர். இதுலே எத்தனை நாள் வேணாலும் சாமான்களை வைச்சிருக்கலாம்—கெடாது!"

பாலில் இன்ஸ்டண்ட் காபியைப் போட்டு, சர்க்கரையுடன் கலந்து அவளிடம் ஒரு 'மக்' கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துக்கொண்டு விசாலியின் எதிரில் உட்கார்ந்தான்.

"காபி எப்படி?"

ஊதிக் குடித்தாள் விசாலி.

"எவ்வளவு நன்னா கலந்திருக்கேள்! உங்களுக்கு இதெல்லாம்கூட தெரியுமா...?"

"ஆ...இதென்ன? நாளைக்கு உனக்கு மிளகுக் குழம்பு பண்ணிப் போடறேன் பார். அசந்துபோயிடுவே!"

"வாண்டாம்...வாண்டாம்...இத்தனை வருஷமாதான் தனியே சமைச்சு சாப்பிட்டுக் கஷ்டப்பட்டாச்சு...! நான் வந்தப்புறமும் எதுக்கு சிரமப் படணும்?"

"வேற ஏதாவது சாப்பிடறயா? ப்ரெட், பழம்? நிறைய இருக்கு. பசிச்சா சொல்லு..."

விசாலி பசிக்கவில்லை என்றதும், பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு மாடிக்குப் போனார்கள். மெத்து மெத்தென்று கால் வைத்த இடமெல்லாம் கார்பெட், சினிமாவுக்குப் போட்ட ஸெட் மாதிரி இருந்தது வீடு.

"வாசலைப் பூட்டலியே...அப்படியே விட்டால் பரவாயில்லையா...?"

"கதவு சாத்தினா அது தானாக 'லாக்' ஆயிடும். அப்புறம் வெளியிலேருந்து திறக்கணும்னா சாவி போட்டால் தான் திறக்கும். இங்கே எல்லார் வீடும் அப்படித்தான்!"

மாடியில் நான்கு படுக்கை அறைகள் இருந்தன.



வலது கோடியில் இருப்பது ஹாலியாவும் இவனும் உபயோகிப்பது.

மாடிப்படி ஏறினதும் முதலில் உள்ள படுக்கை அறையைத் திறந்து விளக்கைப் போட்டான். நீல நிறத்தில் கார்பெட், சுவர்கள், படுக்கை, ட்ரஸ்ஸிங் டேபிள் எல்லாம் அழகாய் இருந்தன.

"இதுதான் உன் ரூம்..." என்றான் குமார்.

"என் ரூமா? அப்படின்னா உங்களுது? நமக்கு எதுக்கு தனித்தனியா ரூம்...?" விசாலியின் கேள்விக்கு குமார் பதில் சொல்லவில்லை.

இங்கே பார்த்தியா—இதுதான் பாத்ரூம், இது 'டப்' இதைத் திறந்தா வெந்நீர் வரும். இதில் பச்சைத் தண்ணி. இது..." குமார் அவளுக்கு விளக்கினான்.

"இப்போ படுத்துக்கலாம். காத்தால எழுந்ததும் உனக்கு மற்றதையெல்லாம் விவரமாய்ச் சொல்றேன். என்ன?"

விசாலி பட்டுப்புடவையை அவிழ்த்துவிட்டு பாத்ரூமுக்குள் சென்று அலுப்புத் தீர வெந்நீரில் குளித்து நைலான் புடவை ஒன்றை உடுத்திக்கொண்டாள். மெத்தென்ற படுக்கையில் படுத்த சில நிமிஷங்களில் உறக்கத்தில் ஆழ்ந்துபோனாள்.

நடுவில் ஒரு முறை குமார் அவளை எழுப்பி அவளிடம் காதல் செய்த பிறகும் உடனே அவள் தூங்கிவிட்டாள். கணவனின் தோளில் தலையைப் பதித்து, அவனை ஒரு கையால் இறுக அணைத்து உறங்கினாள்.

நிம்மதியாய், மனசெல்லாம் காதலில் கிளுகிளுக்க அமைதியாய் அமெரிக்காவில் தான் இந்த ஓர் இரவு மட்டும் தான் உறங்கப்போகிறோம் என்பதை அவளால் அப்போது எப்படி உணர முடியும்...!

## 12 இருபத்ரெண்டாவது நாள்

மறுநாள் காலை விசாலி கண் விழித்தபோது பக்கத்தில் குமார் இல்லை.

'தடக்'கென்று எழுந்து உட்கார்ந்தாள். அறையில் மெலியதாய் வெளிச்சம். மணி என்ன? இவர் எங்கே காணோம்...? பக்கத்திலிருந்த சைட்டேபிள் கடிகாரம் மணி ஒன்பதைக் காட்டியது.

மணி ஒன்பதா...? சிவசிவா...இத்தனை நாழியா தூங்கிட்டேன்?

கொஞ்சம் திறந்திருந்த கதவு வழியாக குமாரின் குரல் கேட்டது. கூடவே ரேடியோ பாடும் சப்தம்.

இவர் கீழே போயிட்டாரா...? என்னை ஏன் எழுப்பலை! கீழே என்ன பண்ணறார்...? 'நாளைக்கு உனக்கு மிளகுக் குழம்பு சமைச்சுப் போடறேன்'னாரே...சமைக்கப் போயிட்டாரா...?

அட, கஷ்டகாலமே...!

பரபரவென்று பாத்ருமுக்குள் ஓடினாள். பல் தேய்த்து முகம் அலம்பி, பொட்டு இட்டு, கலைந்திருந்த கேசம்—புடவையைச் சரி செய்துகொண்டு கீழே வந்தாள்.

குமார் தனியாக இல்லை. கூடவே இன்னொருத்தன். கையில் காபி 'மக்'குடன் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.



விசாலியைக் கண்டதும் எழுந்து நின்றான்.

''எழுந்துட்டாயா...? நன்னா தூங்கினாயா...? வா காபி சாப்பிடு.'' ஸ்வாதீனத்துடன் குமார் அவள் அருகில் வந்து தோளை அணைத்து அழைத்தான்.

பின் ஆங்கிலத்தில் பேசினான்.

''ஸாம், திஸ் ஈஸ் மை வைஃப்...விசாலி'' என்றான்.

ஸாமுக்கு இருபது வயசிருந்தால் அதிகம். சிகப்பாய், உயரமாய் உறுதியான கைகளோடு சிரித்த முகமாய் இருந்தான்.

''ஹலோ மேம்...வெல்கம் டு யு. எஸ்'' என்று அவளை வரவேற்றான்.

ஒன்றும் புரியாவிட்டாலும், அவன் தன்னிடம் ஏதோ சொல்லுகிறான் என்பது விளங்க தலையைக் குனிந்துகொண்டாள் விசாலி.

'ஷீ டஸ்ன்ட் அண்டர்ஸ்டான்ட் வாட் யூ ஸே, ஸாம்' என்ற குமார், விசாலிக்கு அவனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''விசாலி! இது ஸாம். அடுத்த தெருவில் இவன் வீடு இருக்கு. நான் ஊர்லே இல்லாத தினங்களில் முடிந்த சமயத்துலே கார்த்தாலே இரண்டு மணி நேரம் வந்து தோட்ட வேலை பார்த்துட்டுப் போவான். காலேஜிலே படிக்கிறான்.''

இவனா? தோட்டக்காரனா! காலேஜிலே படிக்கிறானா...? நிமிர்ந்து ஸாமைப் பார்க்க விசாலிக்கு வெட்கமாக இருந்தது.

''இப்போ விண்ட்டர் இல்லையா...? தோட்ட வேலை இல்லை. பாதையிலே, வீட்டைச் சுத்தி இருக்கிற 'ஸ்னோ'வை ஒழிச்சுப் போட ஒரு ஆள் வேணுமே...? நாம்ப

இன்னிக்கு திரும்ப வர்றது தெரியாததாலே வந்திருக்கான்'', என்று சொல்லிக்கொண்டே விசாலிக்கு காபி கலந்து கொடுத்தான் குமார்.

''அவனுக்கெதிரே நீங்க காபி கலந்து எனக்குக் கொடுத்தா அவன் என்ன நினைச்சுப்பான்...? கேலி பண்ணப் போறான்!''—அடுப்படிக்குச் சென்று கணவனிடம் முணு முணுத்தாள் விசாலி.

'ஒண்ணும் நினைச்சுக்கமாட்டான். இந்த ஊரிலே இதெல்லாம் வழக்கம்.''—குமார் சிரித்தான்.

''நான் கிளம்புகிறேன்; எனக்குக் காலேஜுக்கு நேரமாகி விட்டது.'' ஸாம் கிளம்பினான். போவதற்கு முன் ''ஸீயு மேம்...'' என்று சொல்லிக்கொண்டு, குமாரிடம், ''ஜீஸஸ்! ஷி ஈஸ் ப்ரட்டி'' என்றான்.

சமையல் அறையை ஒட்டியிருந்த லிவிங் ரூமின் ஒரு பக்க வலைக்கதவைத் திறந்துகொண்டு ஸாம் போனான்.

''அவன் என்ன சொல்லிவிட்டுப் போனான் தெரியுமா...? நீ ரொம்ப அழகாயிருக்கியாம்...''

''சீ—போங்கோ...எப்பப் பார்த்தாலும் உங்களுக்கு விளையாட்டுதான்...!''

''இல்லே விசாலி, நிஜம்மாதான் சொன்னான். இதெல்லாம் இந்த ஊர்லே சகஜம். ஆமா...ராத்திரி நன்னா தூங்கினையா...?''

''மணி இப்போ என்ன...? நிஜமாவா ஒம்பது ஆறது! என் ஆயுசுலே நான் இத்தனை நாழி தூங்கினது கிடையாது. அம்மாவுக்குத் தெரிஞ்சா 'நன்னாயிருக்குடி நீ குடித்தனம் பண்ணறது'னு கோவிச்சுப்பா...''

''நீ தூங்கறது ஒண்ணும் அதிசயம் இல்லை. இங்கே பகல்னா இந்தியாவிலே ராத்திரி. தவிர இரண்டு நாள் தூக்கம் இல்லாம வந்திருக்கே உங்கம்மாகிட்டே யார்



சொல்லப்போறா...? நான் சொல்லமாட்டேன், பயப் படாதே'' என்றவாறு இட்ட வந்து குமார் கட்டிக் கொண்டான்.

ராத்திரி மூடியிருந்த திரைச்சீலைகளை இப்போது ஒதுக்கியிருந்ததால் அறையில் வெளிச்சம் நன்றாகப் பரவி இருந்தது.

''விடுங்கோ—யாராவது பார்க்கப்போறா...''

''இங்கே யாரு இருக்கா...!''

''ஏன், அந்த வெள்ளைக்காரன் இருக்கானே...?

''ஸாமா...? அவன் புறப்பட்டுப் போயாச்சு. சரி, டிபன் சாப்பிட்டுட்டு நாம கொஞ்சம் கடைக்குப் போயிட்டு வருவோம். வீட்டுக்கு வேணுங்கற சாமான், உனக்கு வேணுங்கற புடவை எல்லாம் வாங்கிண்டு வரலாம். கிளம்பறயா...?''

விசாலி, ''சரி'' என்றாள்.

''நீ மாடிக்குப் போய் குளிச்சுட்டு ரெடியாகு. நான் உன் பின்னாலேயே வரேன்...''

''பெட்டி எல்லாம் ஒழிச்சு வைக்க வாண்டாமா...? சமைக்கணுமே...?''

''அதைப்பத்திக் கவலைப்படாதே...நீ முதல்லே குளிச்சு, ஜம்முனு ரெடி பண்ணிண்டு வா பார்க்கலாம்...''

விசாலி மாடிக்குப் போனாள்.

பட்டுப் புடவை ஒன்றை எடுத்து வைத்துவிட்டு குளித்து வந்தாள்.

த[illegible]மயிரை இழைய வாரி, பின்னி, முகத்தில் பௌடர் போட்[illegible]டும இட்டு, பெரிசாய் வட்டமாய் குங்குமத்தை இட்[illegible]த்க்கொண்டாள்.

தயாரானதும் ஜன்னலில் தொங்கிக்கொண்டிருந்த திரைகளை விலக்கினாள். அடியில் மெலியதாய் வெளிர் நீல நைலானில் இன்னொரு திரை இருந்தது. அதையும் விலக்கி வெளியே பார்த்தாள்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெள்ளைவெளேரென்று பனிப் போர்வை. தரையே தெரியாமல் பனித்துளிகள்—கடற்கரையில் பரந்து கிடக்கும் மணற்பரப்பைப் போல புசு புசுவென்ற வெள்ளை 'ஸ்னோ' விழுந்து கிடந்தது.

ஆங்காங்கு தெரிந்த மரங்களெல்லாம் மொட்டையாய் 'ஸ்னோ'வைத் தாங்கிக்கொண்டு இருந்தன.

இந்தப் பனியில் மனுஷாள் எப்படி இருக்கா...? மார்கழி மாசக் குளிரையே நம்ப ஊரிலே தாங்க முடியாதே, இதை எப்படித் தாங்கிக்கறது...?

விசாலி கீழே போகத் திரும்பினாள். அறைக்கு வெளியே வந்ததும் பக்கவாட்டிலும் எதிரிலும் அறைக் கதவுகள் தள்ளித் தள்ளி இருப்பதைப் பார்த்தாள்.

ஒண்டிக்கட்டைக்கு இத்தனை ரூம்கள் எதற்கு...?

வலப்பக்கத்தில் இருந்த இரண்டு அறைகளில் ஒன்றின் கதவைத் திறந்தாள்.

அழகான அறை—சுவரெல்லாம் முயல், கரடி படங்கள். ஓரமாய் ஆளுயரத்துக்கு நாய் பொம்மை. ஒன்று நைலான் துணிகளைக் கொசுவி அலங்கரித்திருந்த சின்னத் தொட்டில். அறையில் வேலை நடந்துகொண்டிருப்பதை உணர்த்த சுத்தியல், ஆணிகள், பெயின்ட், பிரஷ், பேப்பர் வகையறா ஒரு பக்கமாய் இருந்தன.

இது யார் ரூம்...? ஒரு குழந்தைக்கவே... ணுங்கற சாமான்களெல்லாம் இங்கே இருக்கே..? த... ட்டில் வேற யாராவது குடி இருக்காளோ...?



விசாலி வெளியில் வந்து அடுத்த அறையில என்ன இருக்கு என்று பார்க்க நினைக்கையில், 'போன்' மணி ஓசையும், தொடர்ந்து சிரித்த குரலில் குமார் பேசுவதும் ட்டது.

இப்போது கீழே போய்விடுவோம்...பிற்பாடு அவரோடு து பாக்கி அறைகளைப் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டு கீழே இறங்கி குமாரின் குரல் கேட்ட இடத்தை தேடிப் போனாள் விசாலி.

சாப்பாட்டு ஹாலைத் தாண்டி இருந்த மற்றொரு அறையிலிருந்து குமார் 'போன்' பேசிக்கொண்டிருந்தான்.

விசாலி அறைக்குள் நுழையாமல் வாசலிலேயே நின்று பார்த்தாள். இரண்டு பக்கச்சுவர்களில் வரிசை வரிசையாய்ப் புத்தகங்கள்? நடுவில் பெரிய மேஜை, நாற்காலி ஓர் ஆபீஸ் இருப்பதுபோல். இந்தப் பக்கமாய் ஆழ்ந்த சிகப்பு நிறத்தில் சோபாஸெட்—இன்னும் என்னென்னவோ.

இதுதான் இவர் வேலை பார்க்கற இடமா...? திருச்சி அச்சு மாமா வீட்டில் இருக்கிற மாதிரின்னா புஸ்தகங்கள், இருக்கு!

எதிர்ப்பக்கமாய் இருந்த கண்ணாடிச் சுவரின் திரை விலகி இருந்தது. விசாலி கிட்டத்தில் சென்று பார்த்தாள்.

மேட்டுப்பாங்கான இடத்தில் வீடு இருந்ததால் சற்றே சரிந்த பூமியில் பார்த்த வரைக்கும் 'ஸ்னோ'தான். உற்றுக் காணுகையில் தூரத்தில் கறுப்பாய் கார் ஒன்று போவது தெரிந்தது. ஓ! அங்கேதான் ரோடு இருக்கா...? வீட்டுக்கும் ரோட்டுக்கும் இத்தனை தூரமா...? பக்கத்திலே வீடுகளையே காணோமே!

''என்ன பார்க்கறே, விசாலி?'' குமார் போன் பேசி முடித்துவிட்டான்.

''ம்...? ஒண்ணுமில்லே—வெளியிலே பார்த்தா வீடுகளே தெரியலையே, ஏன்?''

''இந்த வட்டாரமே அப்படித்தான். வீடுகள் நெருக்கமா இருக்காது. தள்ளித் தள்ளித்தான்...''

''மனுஷாளே இல்லாம இப்படி 'ஹோ'ன்னு அத்[illegible]மா இருந்தா பயமா இருக்காது...?''

''என்ன பயம்? தனிமையாய் இருக்கணும்னுதானே விலை அதிகமாகக் கொடுத்து இங்கே வீட்டை வாங்னோ!''

குமார் சமையல் ரூமுக்குப் போக, விசாலியும் பின் தொடர்ந்தாள்.

விசாலிக்கு ஃப்ரிஜ்ஜை திறந்து காட்டி அதில் உள்ள சாமான்களை விளக்கினான் குமார். பின்பு அலமாரிகளில் எங்கெங்கு என்னென்ன சாமான்கள் இருக்கும் என்று சொன்னான்:

''பாலைச் சுடவைக்கணும்னா இந்தப் பட்டனைத் திருகினா போதும்—தானே பத்திக்கும்! நெருப்புக்குச்சி [illegible]தேவையில்லை.''

நெருப்புக்குச்சி இல்லாமல் அடுப்பை பற்ற வைப்பது என்பது விசாலிக்கு ஆச்சரியமாக இருந்தது.

பிரெட்டை ரோஸ்ட் செய்து, வெண்ணெய்—ஜாம் தடவித் தந்தான். அவள் சாப்பிட்டாள்.

''என்ன சமைக்கறது...? நீங்க சொல்றேனா, நான் சமைக்கறேன்.''

'வேண்டாம்' என்று தலையாட்டினான் குமார், '[illegible]றன் குக்கர்லே சாதம் வச்சுட்டு வெளியே போயிடலாம். [illegible]ம்[illegible] வரச்சே சாதம் சூடாய் இருக்கும். புளிக்காய்ச்சல் இ[illegible]க்கு தயிர் இருக்கு. சிப்ஸ் இருக்கு. இன்னிக்குப் போதாத[illegible]...?'

''எதேஷ்டம். ஆனால் தயிர் ஏது, சிப்ஸ் ஏது.. [illegible]பா பாலைக் காய்ச்சி உறை குத்தினா...?''

அட்டைப் பாத்திரத்தில் இருந்த கட்டித் [illegible]யை ஐஸிலிருந்தும், அலமாரியிலிருந்து ஒரு பெரிய பா[illegible]ல் நிறைய சிப்ஸும் எடுத்து நீட்டினான் குமார்.



குளிருக்கு ஏற்ற ஓவர்கோட் வகையறாவை அணிந்து கொண்டு புறப்பட்டார்கள்.

லிவிங் ரூமுக்கு எதிர்ப்பக்க பாலேஜில் சென்று ஒரு கதவைத் திறந்தான் குமார். பெரிய கார் ஷெட், நீளமாய், அகலமாய் ஒரு கார் நின்றிருந்தது.

ஷெட் 'ஜில்'லென்று இருந்தது.

காரில் ஏறிக்கொண்டதும் ஹீட்டரை ஓட்டினான் குமார். ஒரு சில நிமிஷங்களில் கார் சூடாகிவிட்டது.

காரை ஸ்டார்ட் செய்து பின்னால் நகர்த்தினான்.

''ஷெட்டு கதவை திறக்கலியே நா இறங்கித் திறக்கட்டுமா?...'' விசாலியின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே காரைச் செலுத்தினான்.

கார் அருகில் வந்ததும், 'சூ! மந்திரக்காளி' என்றது போல கதவு தானே திறந்தது. கார் வெளியில் சென்றதும் பழையபடி மூடிக்கொண்டது.

''இதுலே ஒரு பட்டன் இருக்கு. அதை அமுக்கினா ஷெட் தானாய் இயங்கும். நாம சிரமப்பட வேண்டாம்'' என்று டாஷ்போர்டில் இருந்த சின்ன ஸ்விட்சை குமார் காட்டினான்.

இந்த ஊர்லே எதற்குனு ஆச்சரியப்படறது...?

இரண்டு பக்கமும் 'ஸ்னோ' மூடிக்கிடக்க யாரோ து[illegible]டைத்துவிட்டதுபோல சாலை மட்டும் பளிச்சென்று இ[illegible]ந்தது.

வீட்டிலிருந்து செல்லும் சாலையில் வண்டி சென்று பெ[illegible] ரோட்டை அடைந்ததும் தூரத்தில் ஒரு பங்களா தெ[illegible]ந்தது. கார் வீதியில் [illegible]டியபோது இங்கொன்றும் அ[illegible]ன்று[illegible] [illegible]செய்து [illegible]டுகள்.

டவுனில் இருந்த 'இண்டியன் ஸ்டோரு'க்குப் போனார்கள். குமார் கையில் 'லிஸ்ட்' கொண்டு வந்திருந்தான். துவரம்பருப்பு, புளி, ரவை, கடுகு, மிளகு, ஜீரகம் என்று வாங்கினான். காலை நேரமாதலால் கடையில் கூட்டம் இல்லை. ஒரு சர்தார்ஜி கடை வியாபாரங்களைக் கவனித்து வந்தார்.

அங்கிருந்து இண்டியன் ஸில்க் பாலஸுக்குப் போனார்கள். நாலு உல்லி ஜார்ஜெட், இரண்டு அமெரிக்கன் ஜார்ஜெட், இரண்டு ரூபியா வாயில் புடவைகளை வாங்கியதும் வீடு திரும்பினார்கள்.

காரில் சாய்ந்து உட்கார்ந்த விசாலிக்கு பெருமை தலைக்கேறியது.

எந்த பெண்டாட்டிக்கு இப்படி ஓர் ஆம்படையான் கிடைப்பான்...!

விசாலியின் சந்தோஷம் குமாருக்குத் திருப்தியை அளித்தது. இப்படியொரு இன்பத்தில் அவளைத் திக்கு முக்காட வைத்தால்தானே தன் வழிக்கு அவளைக் கொண்டு வருவது சுலபம்...?

அன்று காலை ஜூலியாவுடன் போனில் பேசி தங்கையுடன் தான் வந்திருப்பதைச் சொல்லிவிட்டான்.

''முக்கியமான லெக்சர்—நான் வரவேண்டி இருந்தது. இல்லாவிட்டால் உன்னையும், உன் தங்கையையும் வரவேற்க நானே ஏர்போர்ட்டுக்கு வந்திருப்பேன்...'' என்று வருத்தப்பட்டாள் ஜூலியா.

அன்று பிற்பகல் ஐந்துமணி விமானத்தில் வருகிறாளாம். சொன்னாள். ஏர்[illegible]க்கு இவன் போக வேண்டாம் [illegible] அவர்களுக்கு இரன்[illegible] ஓட்டினான் [illegible] ஜூலிய[illegible] வெளியூர் போக



போய், வண்டியை அங்கேயே நிறுத்திவிட்டு வெளியூர் போவாள். இரண்டு நாட்களில் திரும்ப வந்து காரிலேயே வீட்டுக்கு வந்துவிடுவாள். இதுதான் பழக்கம்.

வீடு வந்துவிட்டது.

குமாரின் யோசனைப்படி புளியஞ் சாதமும் தயிர் சாதமும் சாப்பிட்டார்கள். எச்சில் பாத்திரங்களை, பாத்திரம் அலம்பும் 'டிஷ் வாஷ்'ரில் அடுக்கி, சோப்பு போட்டு ஸ்விச்சை தட்டினான் அவன்.

''அரைமணியிலே பாத்திரம் அலம்பி ரெடியாயிடும்! வா, நாம கொஞ்சம் படுத்துக்கலாம்'' என்று அழைத்தான்.

விசாலிக்கு மனமும், வயிறும் நிறைந்திருந்தன.

''படுத்துக்க வேண்டாம். எனக்கு இன்னும் நம்ப வீட்டை நீங்க காட்டவேயில்லையே...''

''சரி வா...''

கீழே லிவிங், டைனிங், ஸ்டடி, ட்ராயிங் ரூம்கள்.

வரவேற்பு அறை சுவரில் ஜூலியாவின் தாய்—தந்தை படம் பெரிசாய் இருந்தன. 'ஃபயர் பிளேஸ்'க்குமேல், ஜூலியாவுடன் குமார் இருக்கும் படம்.

''இது யாரு...?''

''ம்...? சொல்றேன். மாடிக்குப் போகலாம் வா...''

ஸ்டடியிலும் ஜூலியாவின் போட்டோ.

மாடிக்குப் போனார்கள்.

''படுத்துண்டே பேசலாம் வா, விசாலி...''

விசாலியிடம் நிஜத்தைச் சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது! பூராவும் சொல்லலாமா...? இல்லை. கொஞ்சம் சொல்லி மாலையில் ஜூலியா வருவதற்குள் ஊரை[illegible]வுக்குத் தயார் செய்தால் போதுமா...?

குமார் யோசனை செய்து பேசத் தொடங்கினான்.

# 13 இருபத்ரெண்டாவது நாள்

''நீயே ஒரு அமெரிக்கன் போட்டோவைப் பாத்துட்டு 'இது யாருன்னு'னு கேட்டியே...அவ பேரு ஜூலியா. இந்த ஊரிலே பிரபல்யமான டாக்டர். பணக்காரி. இப்போ நாம்ப இருக்கிறது அவளோட பங்களாதான்! இந்த மாதிரி சௌகரியமான பல பங்களாக்கள் அவளுக்கு இருக்கு. ரொம்ப நல்லவ. ஜூலியா பத்தின விவரங்களெல்லாம் இன்னொரு நாள் சாவகாசமாகச் சொல்றேன். அவளோட பழகினா நீயே அவ நல்ல குணத்தைப் புரிஞ்சுப்பே. அவகிட்டே நல்ல பேர் வாங்கற மாதிரி நீ நடந்துக்கறது எனக்கு ரொம்ப முக்கியம். புரியறதா...?''

'புரிகிறது' என்று தலை ஆட்டினாள் விசாலி.

''ஜூலியா ஒரு வேலை விஷயமாய் வெளியூர் போயிருக்கா. இன்னிக்கு சாயங்காலம் ஆறு மணி பிளேன்லே வருவா. அவளுக்கெதிரிலே நான் எப்படி நடந்துக்கச் சொல்லறேனோ, அப்படி நடந்துக்கணும் என்ன?...''

'சரி' என்றாள் விசாலி.

''ஜூலியா மனசு சந்தோஷிக்கிற தினுசுலே நீ நடந்துண்டா நம்ப இரண்டுபேருக்குமே நல்லது. நான் சொல்லறதை நீ சரியா புரிஞ்சண்டா அப்புறம் ஆயுசுக்கும் பணத்திலே நாம்ப முங்கி வாழலாம். உங்க அண்ணாவுக்குப் பணம் எதுக்காவது வேணும்னால்...ஸ்கூட்டர் ...த்த ஆசையாய் இருக்குன்னான். அதுக்கு இல்லை, வீட்டுக்



கொஞ்சம் ரிப்பேர் பண்ணணும்னான். அதுக்கு தாராளமாய் அனுப்பலாம். உங்கக்கா ஞானத்துக்குப் புடவை வாங்கி அனுப்பலாம். அவ ஆம்படையானுக்குக் கைக்கடிகாரம் வேணாலும் அனுப்புவோம். அவ மாமியார் பணத்துக்கு இளிக்கிறவள்—நாம்ப அனுப்பற சாமான்களைக் கண்டு மலைச்சுப்போய் ஞானத்தை நன்னாக்கூட வைச்சுப்பா—என்ன சொல்றே...?''

விசாலிக்கு ஒன்றுமே புரியவில்லை. அமெரிக்காவுக்கு வந்து முழுசாய் ஒருநாள் ஆகலை...நான் சமர்த்தாய் சமைச்சுப்போட்டு, வீட்டைப் பார்த்துண்டு நல்லபெண்டாட்டினு பேர்கூட எடுக்கலை—எதனால் இவர் இப்படி 'ஓஹோன்'னு பணத்தை என் குடும்பத்துக்காகச் செலவழிக்கறேங்கறார்? சந்துரு அண்ணாவுக்கு ஸ்கூட்டர் வாங்கறதுக்குப் பணம் அனுப்பறதும், அத்திம்பேருக்கு வாட்ச் அனுப்பி ஞானத்தோட மாமியாரை 'தாஜா' பண்ணறதும் நல்லதுதான். ஆனா இத்தனை சீக்கிரத்தில் என்னத்துக்காக இப்படி பணத்தை வாரி இறைக்கணும்...?

அவள் இதுநாள் அறிந்திராத குமாராக, அவன் மெதுவாய் சிரித்து, கொஞ்சிப் பேசாமல், ஒருவித கண்டிப்புடன் பேசுவதாகத் தோன்றியதால், வாயைத் திறந்து தன் சந்தேகத்தைக் கேட்கத் தயங்கினாள்.

யார் இந்த வெள்ளைக்காரி...? இவரோட ஆபீஸரா...? இருக்காதே. இவர் இன்ஜினீயர்; அவ டாக்டராமே! அவளோட இவருக்கு என்ன சம்பந்தம்...? அவ வீட்டிலே நாம்ப குடியிருக்கோமேன்னு பயப்படறாரா...? கிராமத்துப் பெண்ணாச்சே, வீட்டை அசிங்கப்படுத்தினால் அவளுக்குக் கோபம் வந்துடும்னு நினைக்கிறாரா? அதுக்காகத்தான் முன்னெச்சரிக்கையா இத்தனை சொல்லிக்கொடுக்கிறாரோ?

இருக்கும்...இருக்கும். ஒண்ணுமில்லாத ஆடிச்சுரத்து அக்ரஹாரத்துலே பட்டணத்து ஸோல்ஜர் மாமா ஒரு ஓட்டு வீட்டைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கார். இரண்டு

மாசத்துக்கொரு தடவை வந்து தேங்காய் மாங்காய் பறிச்சுண்டு 'இங்கே ஏன் கறியைத் நித்தினே... இங்கே ஏன் வரட்டி தட்டினே...வீடே அசிங்கமாயிடுத்து'ன்னு குதிச்சுட்டுப் போவாரே! இத்தனை உசத்தியா வீடு கட்டிப் போட்ட அந்த வெள்ளைக்காரி நன்னா வீட்டை வைச்சுக்கணும்னு எதிர்பார்க்கறதுல என்ன தப்பு...?

''நா நீங்க சொல்லிக் கொடுத்தபடி நடந்துண்டு அவகிட்டே நல்ல பேர் வாங்கறேன். நீங்க வீணா கவலைப்படாதீங்கோ...!

இப்போதைக்கு இவ்வளவு சொன்னது போதும் என்று குமார் நிர்மானித்துவிட்டான்.

ஜூலியா இந்த வீட்டில் இருக்கப்போகிறாள் என்பதை சொல்லியாகிவிட்டது. அவள் வீட்டுக்காரி, நாம குடித்தனக்காரர்கள் என்று விசாலி நினைத்துக்கொண்டிருப்பதை ஏன் மாற்ற வேண்டும்...?

தானே போகப் போக விஷயங்களைப் புரிந்துகொள்ளும் போது அவளை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி விசாலிக்கு ஏது...?

குமார் தூங்கின நாழிகையில், 'இதுதான் உன் பீரோ' என்று அவன் சொல்லி இருந்ததில் தன் உடமைகளை அடுக்கி வைத்து, பெட்டிகளையும் அடித் தட்டிலேயே வைத்து மூடினாள்.

கையோடு கொண்டு வந்திருந்த மீனாக்ஷி அம்மன் படத்தை எங்கு மாட்டுவது என்று ஒரு நிமிஷம் யோசித்தாள்.

கீழே சமையல் கட்டுலே மாட்டினால் நன்னா[illegible]லே[illegible]ம். அன்றாடம் குளிச்சுட்டு விளக்கேத்தி, நமஸ்காரம் ப[illegible] ந[illegible] சுலோகம் சொல்லிண்டே சமைக்கலாம். ஆனா வீட்[illegible] இதுக்கு சம்மதிக்கணுமே! அவ வெள்ளைக்கா[illegible] பூஜைக்கு ஒத்துப்பாளோ, மாட்டாளோ? ஆமா, ச[illegible]



கட்டு இரண்டுபேருக்கும் போதுதானா இவர் வீட்டைக் காட்டினப்போ வேறு சமையல்கட்டை தான் பார்க்கலியே! படுக்கை அறைகள் நிறைய இருக்கு. சாப்பாட்டு அறை இரண்டு இருக்கு—ஆனா சமையல் கட்டு ஒண்ணுதானே! இத்தனை பெரிசாய் வீட்டைக் கட்டினவன் தனித்தனியாய் இரண்டு சமையல் ரூம்—சின்னதாய் ஒரு பூஜை அறைன்னு முன்னேற்பாடாய் கட்டமாட்டானோ! [illegible] மெட்ராஸிலே எல்லாம் எத்தனை நறுவிசாய், தனித்தனி போர்ஷனை ஒருத்தரோட ஒருத்தர் முட்டிக்காம கட்டி வைச்சிருக்கா...!

திடீரென்று விசாலிக்கு அந்த வெள்ளைக்காரி 'அசைவ' உணவு சமைப்பாளோ என்ற சந்தேகம் தோன்றியது.

அட ராமா! அவ சமையல் கட்டுலே கண்டதை சமைச்சா, நான் என்ன பண்ணுவேன்? கொஞ்சம் பொறுத்துப் பார்க்கறது... இல்லைனா இவர்கிட்டே, 'ஒரு பக்கமாய் தடுத்துக் கொடுத்துடுங்கோ—கலக்காமல் இருக்கும்'னு சொல்லிட வேண்டியதுதான்! ஆயிரந்தான் நல்லவளாக இருந்தாலும், இதிலெல்லாம் எப்படி விட்டுக் கொடுக்கறது?

விசாலி அம்மன் படத்தை அங்கிருந்த டிரெஸிங் டேபிளில் சாய்த்து வைத்தாள். சின்னக் குத்துவிளக்கைத் துடைத்து அதன் பக்கத்தில் வைத்தாள். ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த அன்றாடம் தேதி கிழிக்கும் 'இதயம் பேசுகிறது' காலண்டரை சுவரில் தொங்கின ஒரு படத்தின் கம்பிமேல் மாட்டினாள்.

இன்னிக்கு புதன்கிழமையா...? நல்லநாள். சாயங்காலமா கைகளை அலம்பிண்டு, சாமி விளக்கை ஏத்தி கொஞ்சம் பாயஸம் பண்ணி நிவேதனம் பண்ணணும். அம்மா சொல்லியிருக்கா; 'புதுக் குடித்தனம் தொடங்கற அன்னிக்[illegible]க்கு பாயஸம் பண்ணி, நல்லபடியா சிரோடும் சிறப்[illegible] [illegible]லியைக் கட்டிண்டு இருக்கணும்னு வே[illegible] [illegible]ண்ட [illegible]

மணி நாலாகையில் குமார் எழுந்தான். இருவரும் கீழே போனார்கள்.

''நான் காபி கலக்கிறேன். சரியான்னு பாருங்கோ...'' விசாலி ஐஸ் பெட்டியிலிருந்த பாலை எடுத்துக் காய்ச்சி, காபி கலந்தாள்.

''தேவலையே—கெட்டிக்காரியா ஒருதரம் சொன்னா புடிச்சுக்கறயே...!''

—விசாலிக்கு கணவனின் பாராட்டுரை சந்தோஷமாக இருந்தது.

''ராத்திரிக்கு என்ன சமைக்கலாம்? கத்திரிக்காய் சாம்பார், உருளைக்கிழங்கு வெங்காயம் கறி, தக்காளி ரஸம்—அப்பளாம், கருவடாம் பொரிக்கலாம்—ஓகே...?''

அடேயப்பா! இந்த ஊரில் இத்தனை தினுசு பண்ண முடியுமா என்ன?...''

''பாயஸமும் பண்ணலாமே! முதல் முதல்லே குடுத்தனத்தை ஆரம்பிக்கறோமே...!''

''ஐமாய்! என்ன பாயஸம் பண்ணறே...?''

''பால் இருக்கா...? பால் பாயஸம் செய்யட்டுமா...?''

ஊனியாவுக்கு இனிப்பு என்றால் வெகு ஆசை—'சரி' என்றான் குமார்.

சாமான்களைக் கிட்ட இருந்து எடுத்துக்கொடுத்துக் காய்கறிகளை நறுக்கி மிக்ஸியில் சாம்பாருக்கு அரைத்துக் கொடுத்து குமார் உதவினான். பிரஷர் குக்கரில் பருப்பு எப்படிப் போடுவது, மிக்ஸியை எப்படி உபயோகிப்பது என்று குழந்தைக்குச் சொல்லிக் கொடுப்பதுபோலப் பொறுமையுடன் விளக்கினான்.

வீட்...

விசாலி உவப்புடன் கற்றுக்கொண் ...ள்ளை சமை... ...தில் ...அ... ...டிக் ...ருக் வாசனை வாசலை எட்டியது!



''பிரமாதமா சமைப்பே போல
போயிடப்போறேன்!''—குமார் கேலி, விளையாட்டுப் பேச்சை
''வீட்டுலே உட்கார்ந்து 'குண்டு ச.
ஓட்டினது'க்கு இதுகூட நன்னா பண்ணலைன்னா கஷ்டம்

''பாயஸம் நிறைய வை, விசாலி...ஹ... ...யணரோன்னு ரொம்பப் பிடிக்கும்.'' ...போட்டுக்

நிமிர்ந்து பார்த்த விசாலியிடம் தொடர்ந்து குமார் சொன்னான்: ''அவ தினமும் நம்மகூடத்தான் சாப்பிடுவா—அவளுக்கு நம்மூர் சமையல்னா ரொம்பப் பிடிக்கும். காரம் கொஞ்சம் கம்மியா போடணும்—அவ்வளவுதான். என்னிக் காவது சாயங்காலம் அவ இருப்பிக்காக நான்—வெஜிடேரியன் செய்வாள்—அதைப் பெரிசு பண்ணாதே, என்ன?'' என்று சொல்லி வைத்தான்.

சமையல் ஆனதும் விசாலி மாடிக்குப் போய் முகம் அலம்பி, தயார் ஆனாள்.

''ஸ்வாமி விளக்கு ஏத்தணும், நல்லெண்ணெய் இருக்கா...?''

''அடேடே—கார்த்தாலயே சொல்லி இருந்தா இண்டியன் ஸ்டோர்ல வாங்கியிருக்கலாமே...பரவாயில்லை இந்த வெஜிடபிள் எண்ணெயவிட்டு விளக்கேத்து. ஸ்வாமி கோவிச்சுக்கமாட்டார்! ஆமா—விளக்கு எங்கே ஏத்தப் போறே?''

விசாலி சொன்னாள்.

''மாடி பெட்ரூமிலேயா...? வாண்டாம் விசாலி. எல்லாம் மரக் கட்டடம்—நைலான் துணி பக்கத்திலேயே இருக்கு. எண்ணெய் சிந்தினா கஷ்டம். நீ உன் பூஜை அலமா...யக் கீழே பேஸ்மென்டில் வைச்சுக்கோயேன்...?''

''...மென்டா...? அது எங்கே இருக்கு?''

...ருக்க—

...லி ஒர... ...ழைத்துப் போனான்.

மணி நாலாகையில் ...ர் ஷெட்டுக்குப் போகும் முன் ...ன். கீழே போனார்கள்.

''நான் காபி ...டக்கட்டுகள்.

விசாலி ஐஸ் ஹால். ஒரு பக்கம் டேபிள் டென்னிஸ், காபி கலந்த டேபிள் அலமாரிகள் சாமான்கள்—ஹாலின் ... நீளமான தடுப்பு இருந்தது—'ட்ரும்' என சப்தம் அதனுள்ளிருந்தது.

தடுப்பைத் தாண்டி அழைத்துப் போனான் குமார். வீட்டை குட்டியாய் வைக்கும் கருவி, கோடைக் காலத்தில் குளிர் செய்யும் கருவிகள் இருந்தன.

மீண்டும் இந்தப் பக்கம் வந்தார்கள்.

''இதுக்குப் பேர்தான் பேஸ்மெண்ட். இது பூரா காங்க்ரீட்டில் ஆனது. இங்கே ஒரு அலமாரி ஒழிச்சுத் தரேன், ஸ்வாமி படத்தையும், குத்துவிளக்கையும் வைச்சுடு, ...கே...?''

சாமான் ரூமிலே எத்தனையோபேர் ஆத்துலே பூஜை அலமாரி வைக்கறதுபோல நாமும் வைச்சுடலாம்—பரவா யில்லை. தரை காங்க்ரீட்டா இருக்கு. கோலம் போட சௌகரியம். அவசரம்னா மடி துணிகூட உலர்த்திக்க இடம் இருக்கு.

'அமா, இந்தப் பெரிய பெரிய டேபிளெல்லாம் எதுக்கு?'

''அது டேபிள் டென்னிஸ் ஆட—இது பில்லியர்ட்ஸ் ஆட...''

''விளையாடறதுக்கா?''

''ம்...''

''யாரோட ஆடுவேள்...? அந்த வெள்ள...க்காரி யோடவா? அவளோடு இங்கே இன்னும் எத்த... ...பேர் இருக்கா...?''

...



குமார் எதையாவது சொல்லி வீணாகப் பேச்சை வளர்க்க விரும்பவில்லை.

''இங்கே குளிர் ஜாஸ்தி தெரியும். கல் கட்டடம் இல்லியா? அதனால் ரொம்ப நாழி பூஜை பண்ணறேன்னு இருக்காதே. காலிலே எப்போதும் செருப்பு போட்டுக் கணும்னு சொல்லி இருக்கேனே. செருப்பு எங்கே? போட்டுக்கோ. உனக்கு வாங்கின ரப்பர் செருப்பு இந்த ஊர்லே மரியாதைக் குறைச்சல்!'' வெறுங்காலோட இருக்

ஸ்வாமி அலமாரியைத் தயார் செய்து விளக்கை ஏற்றி நமஸ்கரித்து, பாயஸத்தை நைவேத்யம் பண்ணினாள் விசாலி.

''மனசிலே நிம்மதியோட, நல்லவிதமாய் குடித்தனம் பண்ணி தீர்க்க சுமங்கலியாய் வாழணும்'' என்று மனசார வேண்டிக்கொண்டாள். எங்கோ இருக்கும் அம்மா, அண்ணா, அக்கா, மாமியார், மாமனாரை மனசில் நினைத்துக்கொண்டு மீண்டும் நமஸ்கரித்தாள்.

லிவிங் ரூமில் குமார் டி.வி. பார்த்துக்கொண்டிருந்தான். விசாலி டி.வி. பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறாள். புஸ்தகத்தில் படித்திருக்கிறாள். ஏன்...? ஒரு சமயம் விழுப்புரத்துக்குப் போனபோது தனு வாசலில் இருந்த டி.வி. முன் நின்று 'ஒளியும்—ஒலியும்' நிகழ்ச்சி பார்த் திருக்கிறாளே!

இந்த டி.வி. பெரிசாய் இருந்தது. படங்கள் கலரில் தெரிந்தன.

''டி.வி. எப்படி வைக்கறதுன்னு சொல்லித் தரட்டுமா? இந்தப் பட்டனை அமுக்கினால் மாறும். இது சப்தத்தை குறைக்க—கூட்ட. இது வெளிச்சம் கண்ட்ரோல் பண்ண...'' விசாலி ஓரளவுக்குப் புரிந்துகொண்டாள்.

மணி எழுக்கு ஒரு சில நிமிஷங்கள் இருக்கையில், "ஊலியா வந்துட்டா..." என்று சொல்லிக்கொண்டு குமார் எழுந்தான். "விசாலி, நான் சொன்னதெல்லாம் நினைவு இருக்கட்டும். சமர்த்தா நடந்துக்கோ!"

கார் ஷெட் கதவு திறந்தது. புஸு புஸுவென்ற உரோமக் கோட்டும் ஹாட்டும் அணிந்திருந்த ஊலியா, "ஹலோ தேர்" என்ற வண்ணம் உள்ளே நுழைந்தாள்.

"ஊலி ஹனி, ஐ மிஸ்ட் யூ ஸோமச்."—குமார் இரண்டே தாவலில் அவளை நெருங்கி இறுக அணைத்து வாயில் முத்தமிட்டான். ஊலியா கையிலிருந்த பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, "ஐ மிஸ்டு யூ டூ—ஐ லவ் யூ டார்லிங்"! என்ற வண்ணம் அவன் தாவலுக்குள் புகுந்துகொண்டாள்.

பார்த்துக்கொண்டே இருந்த விசாலிக்கு 'திக்'கென்று இருந்தது. என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்? எதற்காக இந்தக் கூச்சல்? கொஞ்சல்? முத்தம்?

சீ. இந்த ஊர் பொம்பளைகள் மோசம்னு சொல்வா... நிஜம்தான் போலிருக்கே!

ஊலியாவின் கையைப் பிடித்து உள்ளே அழைத்து வந்த குமார், விசாலியை நெருங்கித் தோளை அணைத்து, "ஊலி, மீட் மை வைஃப், விசாலி" என்றான்.

இரண்டு கைகளாலும் விசாலியை அணைத்து, லேசாய் கன்னத்தில் முத்தமிட்டு, "ஐம் ஸோ ஹாப்பி டு மீட் யூ வைஷாலி. ஐம் ரியலி ஹாப்பி தட் குட் கம்" என்று சிரித்து வரவேற்றாள்.

இவ என்ன, எல்லார்கிட்டேயும் கட்டி, முத்தம் கொடுத்துத்தான் பேசுவாளா!

நிமிர்ந்து ஊலியாவைப் பார்த்தாள் விசாலி. அவள் சிரிப்பு கல்மிஷம் இல்லாததாய் தோன்றவே, 'நல்லவதான் போலிருக்கு' என்று நினைத்துக்கொண்டு பதிலுக்குச் சிரித்தாள்.



"ஓ! யுவர் ஸிஸ்டர் ஈஸ் ப்யூட்டிபுல். ஹௌ லக்கி யூ லக்ஸ்?"—விசாலியின் அழகை ஊலியா வாய்விட்டுப் பாராட்டினாள்.

"ஊலியா உன்னை ரொம்ப அழகுங்கறா, விசாலி."

"அவகூடத்தான். நன்னா இருக்கா—சிரிச்ச முகமாய்" அடக்கமாய் மரியாதைக்குப் பதில் சொன்னாள் விசாலி.

அதை மொழி பெயர்த்து ஊலியிடம் சொல்லிவிட்டு, இன்னும் விசாலி சொல்லாத சில விஷயங்களையும், "உன் வீடு ரொம்ப அழகாக இருக்கிறதாம்! உன்னைப் பார்க்க அவள் துடித்துக்கொண்டிருந்தாளாம்! தன்னை இங்கு வரவழைச்ச உனக்கு எத்தனை பெரிய மனசு என்கிறாள்..." என்று சேர்த்துச் சொன்னான்.

ஊலி சிரித்துக்கொண்டு, "யூ ஸ்வீட் கேர்ல்" என மறுபடியும் விசாலியின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு மாடிக்குப் போனாள்.

திரும்ப அவள் கீழே வந்து மூவருமாய் சாப்பிட்ட போது ஊலியை நன்றாய் விசாலி பார்த்தாள்!

கோட்டை அவிழ்த்துவிட்டு, ஒரு ஸ்லீவ்லெஸ் ஃப்ராக் அணிந்திருந்த ஊலியாவின் ஒன்பது மாத கர்ப்பம் தெளிவாய்த் தெரிந்தது.

சாப்பாடு ஆனதும், "உனக்கு களைப்பாய் இருக்கும், நீ போய் படுத்துக்கோ. நான் இவகிட்டே பேசவேண்டிய வேலை இருக்கு. அப்புறமாய் வரேன்" என்று குமார் சொன்னதால், விசாலி மட்டும் மாடிக்குப் போய் படுத்துக் கொண்டாள்.

'இந்த ஊலி யாரு? தனியா இருக்காளா...? பிள்ளை யாண்டு இருக்காளே...? ஆம்படையான் யாரு?' என்று யோசித்துக்கொண்டே தூங்கிப்போனாள்.

# 14 இருபத்துமூன்றாவது நாள்

காலை ஆறுமணிக்கெல்லாம் எழுந்துவிட்டாள் விசாலி. கணவன் ராத்திரி முழுவதும் படுக்க வரவேயில்லை என்பது கசங்காத படுக்கையிலிருந்து தெரிந்தது.

எங்கே போய்ட்டார்?

மெல்லக் கதவைத் திறந்து வெளியில் எட்டிப்பார்த்தாள். வீடு மௌனத்தில் மூழ்கிக் கிடந்தது.

எதிர் பெட்ரும்லே படுத்துண்டு இருக்காரா? கதவைத் திறந்து பார்க்கலாமா?

வீட்டுக்காரி படுக்கும் அறையை இவள் தவறிப்போய் திறந்து அவளுக்குக் கோபம் வந்துவிட்டால்...

பாத்ரூக்குள் போய், பல்லைத் தேய்த்துவிட்டு மீண்டும் வெளியில் வந்தாள். இப்பவும் நிசப்தம்தான்.

என்ன பண்ணலாம்?

கீழே போய் காபி சாப்பிடலாமா?

இவர் என்ன இப்படிச் சொல்லாமக் கொள்ளாம, காணாம போய்ட்டார்?

விசாலிக்குத் 'திடும்' என்ற பயத்தில் ..ர்கை எழுந்தது.



எதுக்காக இப்படி ஒன்றுமில்லாததுக்கெல்லாம் பயந்துண்டு... கீழே போய் காபி குடிக்கறதுலே என்ன தப்பு? இது எங்க வீடுந்தானே?

விசாலி கீழே போய் காபியைக் கலந்தாள். ஒரு மக்கில் ஊற்றிக்கொண்டு ஊதிக் குடித்தாள். பேஸினில் மக்கை அலம்பிக் கவிழ்த்தாள். சமையல் அறை ஜன்னல் திரைச் சீலையை ஒதுக்கிவிட்டு வெளியே பார்த்தாள்.

வெள்ளை வெளேரென்று பனிமழை. வானத்திலிருந்து யாரோ பஞ்சு மூட்டைகளை உதறுவதுபோல ரம்யமாகப் பெய்துகொண்டிருந்தது.

சில நிமிஷங்கள் வேடிக்கை பார்த்து முடிந்ததும் பேஸ்மென்டில் இருக்கும் ஸ்வாமி படம் நினைவுக்கு வரவே அங்கு போனாள்.

ஸ்வாமி விளக்கை ஏற்றி நமஸ்கரித்து, 'ஸர்வமங்கள மாங்கல்யே' ஸ்லோகம் சொன்னாள்.

பேஸ்மென்டில் குளிர் அதிகமாக இருந்ததால் கை விரல்கள் மரத்துப் போயின. மீண்டும் மேலே வந்தவள் பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஜூலியா முதலில் இறங்கிவர மாடியிலிருந்து குமாரும் வந்தான்.

முதல்நாள் ஒன்பது மணிக்கு எழுந்தாள்...இன்றும் அப்படித்தான் முழிப்பாள். அதற்குள் அவள் அறைக்குள் போய் பக்கத்தில் படுத்துக்கொண்டுவிடலாம் என்று குமார் நினைத்துக்கொண்டு மெதுவாக வந்தான்.

''குட்மார்னிங், விசாலி—ஹாட் எ குட் ஸ்லீப்?''—ஜூலியா வெளியில் போகும் உடையில் இருந்தாள். அவள் ஏழுமணிக்குப் புறப்பட்டால்தான் எட்டுக்கு க்ளினிக்கை அடைய முடியுப் ... மூன்று நாட்களாக ஊரில் இல்லாததால் இன்று கண்டி..வந்..ய் க்ளினிக்குக்குப் போகவேண்டிய நிர்பந்தமாம்...விசாலி...ம் அவள் சொன்னாள்.

..ங்கி..
..ான் வ..டு
..க்கொ..

‘‘காபி குடிச்சுட்டயா? பால் பாத்திரம் வெளியே இருக்கே?’’—குமார் இரண்டு மக்குகளில் காபி கலந்து ஒன்றை ஊஷியாவிடம் கொடுத்துவிட்டு மற்றதைத் தான் அருந்தினான்.

‘‘உன் தங்கை ரொம்பப் பேசமாட்டாளோ? என்னிடம் தான் பேசமுடியாது—உன்னிடமாவது பேசலாமே?’’

‘‘கிராமத்தில் வளர்ந்த பெண். ஆண்களிடமும், பெரியவர்களிடமும் எதிரில் நின்று அதிகம் பேசினால் தப்பு என்று நம்பிக்கையுடன் வளர்ந்தவள்’’ என்றான் குமார்.

ஊஷியா கிளம்பிவிட்டாள்.

‘‘பை ஹனி’’ என்று குமாருக்கு முத்தம் கொடுத்துவிட்டு ‘‘**ஸீ யூ**, விசாலி’’ என்று அவள் தோள்களைத் தட்டிவிட்டு வெளியேறினாள்.

அவளை அனுப்பினதும் உள்ளே வந்தான் குமார். கார் புறப்பட்டு ஷெட் கதவு சாத்திக்கொண்ட சப்தம் கேட்ட பிறகு விசாலியை நெருங்கி அணைத்தான். அலக்காகத் தூக்கி சோபாவில் கிடத்தி அழுந்த முத்தமிட்டான்.

‘‘ராத்திரி எங்கே போயிருந்தேள்...?’’

‘‘எங்கேயும் இல்லையே...’’

‘‘பொய். நீங்க படுக்கவே வரலை.’’

‘‘ஓ! அதைக் கேக்கறியா? ஸ்டடி ரூம்லே வேலையா இருந்தேன். ரொம்ப நாழியாயிடுத்து. இங்கே சோபாவிலே படுத்துண்டே தூங்கிட்டேன். உன்னை இரண்டு தரம் வந்து பார்த்தேன். நீ நன்னா தூங்கிண்டு இருந்தே. வீணா உன் தூக்கத்தைக் கெடுப்பானேன்னு இங்கேயே [illegible]ருந்துட்டேன்.’’

விசாலிக்கு அவ்வளவாக நம்பிக்[illegible]க்கவில்லை. அவனை ஒதுக்கிவிட்டு எழுந்து உ[illegible]ாள்.



‘‘என்ன டிபன் பண்ணப்போறே, விசாலி...? பிரெட் தானோ? இல்லை உப்புமா இப்புமா உண்டா? ஆபீஸுக்கு நேத்தே போன் பண்ணி இன்னும் நாலு நாளைக்கு வரமாட்டேன்னுட்டேன். வீட்டுலே தனியா இருக்கப் பழகறவரைக்கும் நான் வரமாட்டேன்னுட்டேன் எப்படி...?’’

—வேண்டுமென்றே குழந்தைத்தனமாய் முகத்தை வைத்துக்கொண்டு குமார் பேசினான்.

விசாலி சிரித்துவிட்டாள்.

அவள் எழுந்து வெங்காயம், பச்சை மிளகாய் நறுக்கி வதக்கி, ரவை உப்புமாவை மணக்க மணக்கச் செய்தாள்.

ஒரு பிடிபிடித்தான் குமார்.

பின், ‘‘வாயேன் கொஞ்சநாழி படுத்துக்கலாம்... ராத்திரிகூட உன்னோட சேர்ந்து இருக்க முடியலை...’’ என்றவன், அவளின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு மேலே போனான்.

குமார் செய்த அட்டஹாஸமான குறும்புத்தனங்களில் முதல் நாள் அவன் படுக்க வரவில்லை என்பதையும், ஊஷியா பற்றிக் கேட்கவேண்டிய கேள்விகளையும் விசாலி மறந்தேபோனாள்.

மணி பத்தாகியது.

‘‘நீ எழுந்து, குளிச்சுட்டுவா. நான் வெளியே போய் பால், தயிர் இதெல்லாம் வாங்கிண்டு வந்துடறேன். தனியா இருக்கணுமேன்னு பயப்படாதே. இங்கே பயமே வாண்டாம் சாக்கை வராது. நான் கதவை வெளியிலே பூட்டிண்டு போறேன், நீ குளிச்சு முடிக்கறதுக்குள்ளே நான் வந்து[illegible]வேன்.’’

‘‘[illegible]

விசாலி [illegible] வெந்நீரில் ஆனந்தமாய் குளித்தாள். குமார் முதல் நாள் வ[illegible]ங்கிக் கொடுத்த ரூபியா வாயில் புடவையை உடுத்திக்கொ[illegible]யவிட்டு வெளியே வந்தாள்.

இவர் போய் அரைமணி ஆகியிருக்குமா? உடனே வந்துடறேன்னாரே...? ஏன் வரலை?

கீழே போக நினைத்தவளுக்கு எதிர் அறைகளில் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆசை எழுந்தது.

வீட்டுக்காரி இல்லை. இவர்கூட இல்லை. எட்டிப் பார்த்துட்டு நைஸா கீழே போனால் யாருக்கென்ன தெரியும்...?

விசாலி தன் படுக்கை அறைக்குப் பக்கத்தில் இருந்த கதவைத் திறந்தாள். இவள் அறை மாதிரியே அழகாய் அலங்கரிக்கப்பட்டு அது இருந்தது. யாரும் புழங்குகிற மாதிரி தெரியவில்லை.

எதிர் ரூமை நேற்றே பார்த்துவிட்டாள். திருப்பத்தில் இருந்த அறையைத்தான் பார்க்கவில்லை.

குமிழைப் பிடித்துத் திறந்தாள்.

அறை இவள் ரூமைவிட இரண்டு பங்கு பெரிசாய் இருந்தது. வேலைப்பாடமைந்த இரட்டைக் கட்டில்—ரோஜா வர்ண சுவர், திரைச்சீலை, சோபாஸெட், கார்பெட், சுவரில் பொருத்தப்பட்ட அலமாரிகள், படுக்கைக்குப்பின் இருந்த ஸ்டாண்டில் ஊர்மிளாவின் படம், பக்கத்தில் குமாரின் படம்.

'ட' போன்ற அறைத் திருப்பத்தில் ட்ரெஸ்ஸிங் டேபிள் இருந்தது. தங்க நிறத்தில் கொடிகள் ஓடும் சட்டம் போடப்பட்ட கண்ணாடி ஒரு சுவரையே அடைத்துக்கொண்டிருந்தது. மேஜைமேல் பெரிசும், சின்னதும், நீளமும், குட்டையுமாய் என்னென்னவோ செண்ட் பாட்டில்கள். நிமிர்ந்து பார்த்தால் விசாலியின் முழு உருவமும் கண்ணாடியில் பளிச்சிட்டது. தொடர்ந்து பார்த்தும்.

மறுபடியும் படுக்கை அறைக்குள் வந்தாள் [illegible]சாலி. நாற்காலியில் கிடந்த பைஜாமா, சட்டை அ[illegible] [illegible]ள் கவனத்தைக் கவர்ந்தது.

இதைத்தானே இவர் தினம் போ[illegible] [illegible]ட[illegible] [illegible]ார்...?



கையில் எடுத்துப் பார்த்தாள். அடியில் இன்னொரு மெல்லிய நைட் கவுன்!

என்னது இது?

மனசு பதைக்கத் தொடங்கியது.

கட்டிலுக்குப் பக்கத்தில் குமார் ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த பெட்டி திறந்து கிடந்தது. பக்கத்தில் இரண்டு புதுப் பட்டுப் புடவைகள். சற்று தள்ளி இருந்த டேபிளில் விசாலிக்கென அவன் பரிசளித்த கெம்பு நகை செட்.

இந்த நகை ஏன் இங்கே இருக்கு? யாரோ போட்டுப் பார்த்த மாதிரி பெட்டியிலிருந்து வெளியே கழட்டி வைச்சிருக்கே?

அப்போதுதான் அந்தப் படத்தைப் பார்த்தாள் விசாலி. 'செஸ்ட் ஆஃப்ட் ராயர்ஸ்' மேல்—வெள்ளி ப்ரேமுக்குள் ஊர்மிளாவை தோளோடு தோள் அணைத்து குமார் நின்றிருந்தான். ஊர்மிளாவின் உடை புதுமாதிரி இருந்தது. தலையில் வெள்ளை லேஸ் துணி. கைகளில் மலர்க்கொத்து. அவர்கள் முகத்தில் பொங்கும் சிரிப்பு.

இது என்ன?

மாடிப்படியில் ஏறிக்கொண்டே 'விசாலி' என்று குமார் அழைப்பது கேட்டது.

விசாலி அசையாமல் நின்றாள்.

'தட், தட்' என்று இரண்டு கதவுகளைக் குமார் திறந்து சாத்தும் சப்தம்.

அடுத்து இந்த அறைக்குள் நுழைந்தான்.

"டிய[illegible] பண்ணறே, விசாலி...உன்னை யாரு இங்கே வரச்[illegible] ''.......ா?'' என்று அதட்டினாற்போல் கேட்டபோதே அவ[illegible] ''என்னைரித்துவிட்டது—விசாலி என்னமோ ஊகித்து விட்டாளாவது.

''உங்க பைஜாமா இங்கே எப்படி வந்தது?''

குமார் பதில் சொல்லவில்லை.

''இந்த போட்டோவிலே என்ன பண்ணறேள்? ஜானி எதுக்காக இப்படி ட்ரஸ் பண்ணிண்டு இருக்கா...?

விழுப்புரத்தில் ஒரு சமயம் கவிதா தியேட்டரில் அண்ணாவோடு படம் பார்க்கப் போயிருந்தாள் விசாலி. பாலசந்தர் படம். ரொம்ப நன்றாய் இருக்கிறது என்பதால் போயிருந்தார்கள்.

விழுப்புரம் கான்வென்டைத் தாண்டும்போது பஸ் கொஞ்சம் தாமதித்தது. பக்கத்தில் இருந்த சர்ச்சில் கிறிஸ்துவ கல்யாணமாம்! மணமக்கள் காரில் வந்து கொண்டிருந்தார்கள். நின்ற சில விநாடிகளில் அவர்களை நன்கு பார்த்தாள் விசாலி. வெள்ளை வேலில் தலையிலிருந்து துணி. கை நிறையப் பூக்கள்...

''என்னண்ணா?'' என்றாள் அண்ணாவிடம்.

'ஆங்கிலோ இண்டியன்ஸ் இங்கே நிறைய இருக்கா. அவா கல்யாணம். பொண்ணுக்கு இப்படித்தான் ட்ரஸ் பண்ணுவா' என்றான் சந்துரு.

அந்த நினைப்பு இப்போது மனசில் ஆட விசாலி கேட்டாள்.

''ஏன் பேசாம இருக்கேள்? நா கேக்கறதுக்குப் பதில் சொல்லுங்கோ.''

—அதட்டலாய் விசாலி கேட்டாள்.

'சுர்' என்று குமாருக்குக் கோபம் எழு[illegible]த்த இரண்டு வாண்டு—பட்டிக்காட்டுப் பெண் [illegible]ன்ன இப்படி அதட்டுவது என்ற எரிச்சல் எழுந்தது.



'இவனிடம் எனக்கு என்ன பயம்?' என்பதுபோல தலையை நிமிர்த்தி விசாலியை உறுத்துப் பார்த்தவன், ''என் பைஜாமா இங்கே ஏன் கிடக்கறதுன்னாக்க பெண்டாட்டி ரூம்லே என் துணி இல்லாம வேற எங்கே இருக்கும்?'' என்றான்.

''அப்படீன்னா...?''

''அப்படீன்னா ஜானி என் பெண்டாட்டின்னு அர்த்தம்... இது எங்க கல்யாண போட்டோன்னு அர்த்தம்...''

முகத்தில் அறைந்தாற்போல் இப்படி விசாலியிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று நினைக்காத குமார், ஏதோ ஒரு வெறியில் அப்பட்டமாய்ப் பேசினான்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாய் போடும் வேஷம், ஜானியாவிடம் பக்குவமாய்ப் பின்னப்பட்ட பொய்கள், இந்தியாவில் சிரித்து மற்றவர்களைக் கொள்ளை கொள்ளப் போட்ட வேஷம், 'விசாலியே தன்னுடைய உலகம்' என்று எல்லாரும் நம்ப வேண்டும் என்பதற்காகக் காட்டிய பரிவு—அடக்கம், திரும்ப இங்கு வந்து விசாலியை வகையாய் வழிக்குக் கொண்டுவர எடுக்கும் பிரயத்தனங்கள், ஜானியாவுக்கு உண்மை தெரியாமல் இருக்க வேண்டி சதா இதனுள் இருக்கும் ஒரு கவனம்—இவைகளின் அழுத்தம் திடீரென்று பீறிட விசாலியிடம் பகிரங்கமாய் உண்மையைச் சொல்லி தன் 'டென்ஷனை'க் குறைக்க முற்படுவதுபோல இருந்தது அவன் செய்கை.

ஒரு நிமிஷத்துக்கு மௌனம்.

''அப்போ...நா உங்களுக்கு இரண்டாவது பெண்டாட்டியா...?''

''......''

''என்னை இவாகிட்டே யாருன்னு சொல்லியிருக்கேள்? இரண்டாவது பெண்டாட்டினா?''

''இல்லே. தங்கைன்னு...''

''தூ...!''—விசாலிக்கு அழுகை உடைத்துக்கொண்டு கிளம்புகிறது.

விசித்து விசித்து அழுதபடி அவனைத் தாண்டி ஓடி, தன் அறைக்குள் புகுந்து தரையில் மண்டி இட்டு உட்கார்ந்து, வாயை விட்டு அலறத் தொடங்கினாள்.

குமார் இந்த விளைவை எதிர்பார்த்தவன்தானே...? கலங்கவில்லை.

கிட்டத்தில் போய் அவளைத் தொட்டு, ''விசாலி—இங்கே பாரேன்...'' என்றான்.

''தூ...! அந்தண்ட போங்கோ. என்னைத் தொடாதீங்கோ—கிட்ட வராதீங்கோ...'' அவள் ஆக்ரோஷமாகக் கத்தி மேலும் அழுதாள். இத்தனை உரக்க இவளால் கத்திப் பேச முடியுமா...? எத்தனை கோபமாகக் கத்துகிறாள்?

பக்குவமாய் விஷயத்தைச் சொல்லாமல் கன்னத்தில் அறைகிறமாதிரி சொன்னேனே! நான் ஒரு மடையன்—இத்தனை நாளா பொறுமையாய் இருந்த எனக்குத் திடீரென்று என்ன வந்துடுத்து...?

குமார் தன்னை நொந்துகொண்டான்.

மானம் அவமானம் பார்த்தால் முடியுமா, என்ன...?

மறுபடி கிட்டப்போய் ''ஏய், விசாலி! நான் சொல்றதைப் பூரா கேளேன்...'' என்றான்.

''நா எதுவும் கேட்க வேண்டாம். நீங்க வெளியிலே போகப்போறேளா, இல்லையா...?''—விசாலியின் குரல், அழுகை இன்னும் பெரியதாய் ஒலித்தது.

குமார் எழுந்து வெளியில் வந்தான். கொஞ்ச நாழிகை அழட்டும், அப்புறம் சமாதானம் பண்ணலாம் என நினைத்துக் கீழே போனான்.



ஒரு கப் காபி சாப்பிட்டு பேப்பரை மேலெழுந்தவாரியாய் பார்த்தான். மணி ஒன்று.

மாடிக்குப் போனான். விசாலியின் அறை தாள் போடப்பட்டிருந்தது.

''விசாலி...விசாலி!''—கதவைத் தட்டி அழைத்தான்.

பதில் இல்லை.

''விசாலி—கதவைத் திறக்கறயா...? இல்லை உடைக்கட்டுமா...!''—கழுத்தில் சுருக்கு கிருக்குப் போட்டுண்டுட்டாளா? மனசு சற்றே சலசலத்தது.

மீண்டும் படபடவென்று உலுக்கித் தட்டினான்.

''நா[illegible] திறக்கமாட்டேன்...''

அப்[illegible]படி—முழுசாய்த்தான் உள்ளே இருக்கிறாள்!

''சா[illegible]ப்பிட வா, விசாலி மணி ஒண்ணு.''

''எ[illegible]னக்கு வாண்டாம்!''

''எ[illegible]ன்னது இது, பச்சைக் குழந்தை மாதிரி? வந்து சாப்பிடு, [illegible] நான் சொல்றதைக் கேளு.''

பதி[illegible] இல்லை.

விச[illegible]லியின் கோபம் இத்தனை பலம் கொண்டதாக இருக்கும் [illegible]என்று குமார் நினைக்கவில்லை.

போ[illegible]ன் கிணுகிணுத்தது.

''வி[illegible]சாலி எப்படி இருக்கிறாள்? சாப்பிட்டாளா...?'' என்று [illegible]ரவி விசாரித்தான்.

''ஓ! [illegible] எஸ்—எவ்ரி இஸ் சஸ்ஃபைன், பேபி'' என்று பேசி போனை [illegible] வைத்தான். அவனுக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லை.

லிவி[illegible] ரூம் சோபாவில் அமர்ந்து டி.வி.யைப் பார்க்[illegible]

[illegible]ில் வாரத்துக்கு இரண்டுமுறை வீட்டைச் சுத்தம் செய்ய [illegible] விசிண்டி இரண்டு மணிக்கு வந்தாள். இங்களும் என்றாலும் அவளின் வேலை முறை.

''ஓ! மிஸ்டர் குமார், ஊரிலிருந்து எப்போது வந்தீர்கள்? நல்ல பயணமா!'' என்று கேட்டுக்கொண்டே ஓவர் கோட்டை அவிழ்த்து எப்ரனைக் கட்டப்போனவளைத் தடுத்து நிறுத்தினான் குமார்.

''இன்று உனக்கு வேலை இல்லை, விண்டி. லீவு எடுத்துக்கொள்! ஊரிலிருந்து கொண்டு வந்த சாமான்களை அப்படி அப்படியே இறக்கி வைத்திருக்கிறேன். என் தங்கைக்கு வேறு உடம்பு சரியில்லை—நீ அடுத்த திங்கள் வா. நான் உன் வேலைகளை நாளைக்குச் செய்துவிடுகிறேன்...''

விண்டி, 'நன்றி' சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனாள். விசாலி அழுவது விண்டிக்குக் கேட்டு, அவள் ஏதாவது ஹூலியிடம் உளறிவிடப் போகிறாளோ என்ற பயம் குமாருக்கு.

மணி மூன்று இருக்கும்.

மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள் விசாலி.

ஏகமாய் அழுததில் மூஞ்சி வீங்கிப்போயிருந்தது.

நேராய் அவனிடம் வந்தவள் அவனை திரசியைப் பார்ப்பதுபோல வெறுப்புடன் நோக்கி, ''என்னை ஊருக்கு அனுப்பிச்சுடுங்கோ...'' என்றாள்.

# 15 இருபத்துமூன்றாவது நாள்

'ஹூலியா என் பெண்டாட்டி' என்று குமார் வெளிப்படையாகச் சொன்னதைக் கேட்டபோது விசாலிக்கு வேதனையுடன் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்ற ஆத்திரமும் எழுந்தது. ஆறுதல் சொல்லக்கூட—கிட்டத்தில் அம்மா சந்துரு அண்ணா ஒருத்தரும் இல்லை. தான் அனாதையாய் மாட்டிக் கொண்டுவிட்டோம் என்ற கோபம்.

தரையில் மண்டி இட்டு அழுதவளுக்கு குமார் நெருங்கித் தொட்டதால் ஆத்திரம் அதிகமானது. அவன் அவளை விட்டுக் கீழே சென்றதும், தனியாய் இருக்கவேண்டி கதவைத் தாளிட்டுக்கொண்டு அழுது தீர்த்தாள்.

அம்மா, நா என்ன பண்ணுவேன்...!

ஐயோ...சந்துருண்ணா—கண்காணாத தேசத்துலே தங்கையைக் கொடுக்கப்படாதுனு முதல்லே முட்டிண்டாயே. யாருமே கேக்கலையே...!

என்னை ஏமாத்திட்டாரே...

முதல் பெண்டாட்டியை வைச்சுண்டு என்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்காரே...

பகவானே! நா யாருக்கு என்ன கெடுதல் பண்ணினேன்...?

விசாலி நெஞ்சு வலிக்க அழுதாள். குமார் 'சாப்பிடவா' என்று கூப்பிட்ட போதும் அவள் ஓய்ந்திருக்கவில்லை. பதின்

கூட சொல்லப் பிடிக்கவில்லை. பிறகு எங்கே கதவை சொன்னபடி உடைத்துக்கொண்டு வந்துவிடுவாரோ என்று பயம் எழ, 'நா வரலை' என்று குரல் கொடுத்தாள்.

மேலும் ஒரு நாழிகைப் பொழுது, தான் ஏமாற்றப்பட்டு விட்டதை எண்ணிக் குமுறியவளுக்கு, 'அம்மாவைப் பார்க்கணும், அண்ணாகிட்டே இருக்கணும்' என்ற தாபம் எழ ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் எழுந்து கீழே போய் அதே வேகத்தோடு லிவிங்ரூமில் இருந்த குமாரிடம், 'என்னை ஊருக்கு அனுப்பிச்சுடுங்கோ' என்று கேட்டுக் கொண்டாள்.

அழுது சிவந்த கண்களும், மிளகாய்ப் பழமாய் இருந்த மூக்கையும் பார்க்க குமாருக்கு பாவமாக இருந்தது.

சின்னப் பெண்—ஏமாந்துபோயிட்டோம்னு [illegible] வந்திருக்கு; நியாயம்தானே...?

''வா—விசாலி இப்படி உட்காரு. நா சொல்றதை நிதானமா கேளு...''

''எனக்கு ஒண்ணும் கேட்க வேண்டாம். என்னை ஊருக்கு அனுப்பிடுங்கோ.''

''வெறும் வயத்தோட இருக்கியே. காப்பியாவது கலந்துண்டு வரேன் இரு,''—குமார் எழுந்துபோய் காபியைக் கொணர்ந்து அவளிடம் கொடுத்தான்.

இந்த உபசரிப்பு, இந்த அன்பு, இந்த நிதானம் தானே அவளை அவன்பால் இப்படிப் பைத்தியமாகக் காதல் கொள்ள வைத்தது? இப்போதும் அவன் பேச்சை [illegible] அமர்ந்து கேட்க இந்தப் பணிவிடை உதவியது.

''என்னமோ நடந்துடுத்து விசாலி. அதுக்காக இப்படி கோவிச்சுண்டா எப்படி...?''

காபியைக் குடிக்காமல் பக்கத்தில் வைத்தாள் விசாலி.



''நா ஊருக்குப் போறேன், என்னை அனுப்பிச்சுடுங்கோ'' என்றாள் மீண்டும்.

''திரும்பத் திரும்ப அதையே சொன்னா என்ன அர்த்தம்...? நான் சொல்றதைப் பூராக் கேளேன்...''

''வாண்டாம்—எனக்கு எங்கம்மா, அண்ணாவைப் பார்க்கணும். என்னை அனுப்பிச்சுடுங்கோ!''—அழுகை பொத்துக்கொண்டு எழுந்தது.

கோபத்தை அடக்கிக்கொண்டான் குமார்.

''காபி ஆறறது சாப்பிடு...அப்புறம் பேசலாம்.''

குமார் சொன்னதை விசாலி காதில் போட்டுக்கொள்ள வில்லை, தொடர்ந்து அழுதாள்.

காபிமேல் ஏடு படிந்து குளிர்ந்தது.

''நா உங்களுக்கு ரெண்டாவது பொண்டாட்டியா இருக்க விரும்பலை, என்னை அனுப்பிடுங்கோ.''

''அனுப்பிடுங்கோ—அனுப்பிடுங்கோன்னா எப்படி...? என்ன பக்கத்தகமா நினைச்சா வரத்துக்கும், நினைச்சா போறத்துக்கும்...? உன்னை உடனே அனுப்பறத்துக்காகவா இத்தனை செலவு செய்து கல்யாணம் பண்ணி, இங்கே கூட்டிண்டு வந்தேன்...? ம்..,சொல்லு?''

பதில் பேசாமல் விக்கினாள் விசாலி.

''உனக்கு இங்கே என்ன குறை...? நீ ஆதிச்சபுரத்துலே வாழ்ந்த வாழ்க்கை இதைவிட உசத்தியா என்ன? யோசிச்சுப் பாரு, விசாலி. நான் உன்கிட்டே ஆசையா இல்லையா? நம்மூர்லே மட்டும் இரண்டுபெண்டாட்டிக்காரா இல்லையா? சின்ன விஷயத்துக்குப் போய் இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணறியே; கொஞ்சம் அனுசரிச்சு நடந்துண்டா எல்லாம் சரியாயிடும்...''

''எனக்கு எங்கண்ணாவைப் பார்க்கணும்.''—விசாலி அவன் சொன்னதை மனசில் வாங்காமல் கேவினாள்.

''விசாலி, கொஞ்சம் அழுகையை நிறுத்திட்டு நான் சொல்றதைக் கேளேன்...!''

''வாண்டாம்! உங்களுக்கு என்மேலே நிஜமா ஆசை இல்லை. நீங்க என்னை ஏமாத்திட்டேள்...எங்காத்திலே பொய் சொல்லி ஏமாத்திட்டேள்!''

'சரி நா பண்ணது தப்புதான்...ஆனா, ஆசையில்லேன்னு எப்படிச் சொல்லலாம்? உங்க அத்திம்பேர் ஞானத்துக்கிட்டே இருக்கிற மாதிரியா நான் உன்கிட்டே நடந்துக்கிறேன்? என்மேல உனக்கும், உன் மேல எனக்கும் ஆசை இல்லைனு சொல்லு, பார்க்கலாம்.''

''......''

''உனக்கு முதல்லே வருத்தமா இருக்கறது நியாயம் தான்—ஆனால், நாலையும் யோசிச்சுப் பார்த்தா உனக்கே புரியும். வாழ்க்கை நிம்மதியா இருக்கணும்னா அதுக்குப் பணம் வேணும், விசாலி! ஹாலிகிட்டே அது நிறைய இருக்கு. அதை நாம்ப அனுபவிக்கணும்னா கொஞ்சம் அனுசரிச்சுப்போனா என்ன தப்பு...?''

ஹாலி பேரை எடுத்ததுமே விசாலியின் துக்கம் அதிகமானது.

''எனக்குப் பணம் வாண்டாம். ஒண்ணும் வாண்டாம் என்னை எங்காத்துக்கு அனுப்பிடுங்கோ, தயவுசெஞ்சு.''

''திரும்பத் திரும்ப அதையே சொன்னா எப்படி...கிளிப் பிள்ளையாட்டம்? இது என்ன விளையாட்டா...? பத்தாயிரம் ரூபாயை வைச்சாதான் கிளம்ப முடியும். யோசிக்காமப் பேசக்கூடாது, விசாலி''. குமாரின் பொறுமை குறைந்ததால் ஆத்திரம் குரலில் தெரிந்தது.

சட்டென்று எழுந்து மாடிக்கு ஓடினாள் விசாலி.



குமார் தொடர்ந்து வந்து நிறுத்துவதற்குள் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு பெரிய குரலில் அழத் தொடங்கினாள்.

குமாருக்கு நிஜமாகவே கோபம் வந்தது. ''அழுது தொலைக்கட்டும்...எனக்கென்ன...'' என்று முணுமுணுத்தவன் லிவிங் ரூம் சோபாவில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டான்.

கிராமத்துப் பெண்ணான விசாலியை வழிக்குக் கொண்டு வருவது சுலபம் என்று நம்பியிருந்தானே...! ஏன் இப்படி... அதட்டினால் பணிவாள் என்று நினைத்தது நடக்கவில்லையே!

மாலை மணி ஆறை நெருங்கியபோது, ஹாலி வந்த பிறகும் இவள் இப்படியே இருந்தால் என்ன செய்வது என்ற பயம் எழ, குமார் யோசித்தான்.

விசாலியின் போக்குப்படி பேசி அவளை வழிக்குக் கொண்டுவர நினைத்து மாடிக்குப் போனான்.

''சரி விசாலி, நீ ஜெயிச்சுட்டே, உன்னை ஊருக்கு அனுப்பறேன். கொஞ்சம் கதவைத் திற...'' என்று மெல்லப் பேசிக் கதவைத் தட்டினான்.

விசாலி நம்பி வெளியே வந்தாள்.

சாப்பிடாமல் பட்டினி கிடந்து அழுததில் அவள் சோர்ந்துபோயிருந்தாள்.

''உன்னை ஊருக்கு அனுப்பணும், அவ்வளவுதானே...? ஆல் ரைட்—ஆனா, நா பணத்துக்கு ஏற்பாடு பண்ணி, டிக்கெட் வாங்க நாளாகும். நீ அதுவரைக்கும் பொறுமையா இருக்கணும். எதையும் கண்டுக்காம சாதாரணமா நடந்துக்கணும்—அப்படிச் செய்யறேன்னு நீ சத்தியம் பண்ணினால், நான் உன்னை திரும்ப ஊருக்கு அனுப்பறேன்.''

''எப்போ அனுப்புவேள்...?''

''அதான் சொன்னேனே—ஏற்பாடு பண்ணினப்புறம்னு...''

''நாளைக்கு அனுப்புவேளா...?''

''கஷ்டம். முயற்சி பண்ணறேன். நீ ஒழுங்கா இருந்தா சுருக்க அனுப்புவேன்.''

''சத்தியமா...?''

''நீ ஒழுங்கா இருக்கேன்னு சத்தியம் பண்ணு முதல்லே.''

''நா இருக்கேன்...நீங்க நாளைக்கே என்னை அனுப்பணும்...''

பொங்கி வந்த ஆத்திரத்தை முழுங்கினான் குமார். இப்போதைக்கு இவள் சமாதானம் ஆனால் சரி. நாளைக்கு ஜானி வேலைக்குப் போனபின் இவளை மீண்டும் சமாதானப்படுத்த முயலலாம்.

பால் ஒரு டம்ளர் குடித்துவிட்டு, முகம் அலம்பித் தயாரானாள் விசாலி.

''உனக்குத் தலைவலின்னு சொல்லறேன். ஜானி வந்ததும் இரண்டுநிமிஷம் இருந்துட்டு மாடிக்குப் போயிடு.''

ஜானி வந்தாள்.

கட்டல், முத்தம் எல்லாம் ஆயிற்று!

''விசாலிக்குத் தலைவலி, ப்ளஸ் ஹோம் சிக்னஸ்'' என்றான் குமார்.

கிட்டத்தில் வந்து தொட்டுப் பார்த்தாள் ஜானியா. ''ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்'' என்று பரிவுடன் சொன்னாள்.

கையோடு கொண்டு வந்த கொத்து ரோஜா, க்ரிஸாந்தமம் மலர்களை அவளிடம் கொடுத்து, ''நேற்று இரவு பேஸ்மெண்டில் இருக்கும் ஸ்வாமி படத்தைப் பார்த்தேன். பூ



இல்லை என்று நீ வருத்தப்பட்டதை குமார் சொன்னான். வரும் வழியில் பூக்கடையில் வாங்கினேன். போதுமா விசாலி?'' என்றாள்.

விசாலிக்குக் குமார் மொழிபெயர்த்துச் சொன்னான்.

தான் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்ற பச்சாத்தாபத்தில் அழுங்கிக் கிடந்தவளுக்கு, ஜானி பூ வாங்கி வந்தது பெரிசாய்த் தோன்றவில்லை—

''வாங்கிக்கோ. சிரி—நன்றி சொல்றமாதிரி.''

வாங்கிக்கொண்டாள். மெல்ல நடந்து மாடிக்குப் போய்விட்டாள்.

தூக்கம் வரவில்லை. கண்களை மூடிக்கொண்டாள். குமார் தன்னைத் தொட்டதும், காதலித்ததும், தான் மயங்கியதும், உருகியதும், அவள் நினைவில் கூத்தாடின.

மணியைப் பார்த்தாள்.

பத்து.

இப்போ அவ ரூம்லே இருப்பாரா? என்கிட்டே செய்ததெல்லாம் அவகிட்டயா? இவர் ஏன் என்னை ஏமாத்திட்டார்? எத்தனை ஆசை! எத்தனை அன்பு! எல்லாம் பொய்யா?

நினைக்க நினைக்க அவளின் துக்கம் தாங்கமாட்டாமல் போயிற்று.

நாளைக்கு ஊருக்கு அனுப்பிடுவாரா...? நம்பலாமா...? டிக்கெட் கிடைக்குமா...? எனக்குத் தனியாகப் போகத் தெரியுமா—?

மேஜைமேல் இருந்த பூக்களின் சுகந்த மணம் நெடியேறத் திரும்பிப் பார்த்தாள்.

எத்தனை அழகான ரோஜா? இதெல்லாம் நிஜம்தானா, இல்லை மெழுகுலே பண்ணதா? வாசனை வரதே! இந்த ஊர்லே எது நிஜம், எது பொய்னு புரிஞ்சுக்கவே ரொம்ப

கஷ்டப்படணுமோ? ஆமா, இந்த ஊனி என்னத்துக்கு எனக்காகப் பூ வாங்கிண்டு வரணும்? அவ முகம் என்கிட்டே பேசறப்போ வெகுளித்தனமா இருக்கே! நா தங்கைனு நினைச்சுண்டுதானே இருக்கா? நிஜம் தெரிஞ்சுதுன்னா என்ன பண்ணுவா? இல்லை அவளும் இவரோட சேர்ந்துண்டு நாடகமாடறாளா?

அறையின் வாசலில் பேச்சுக் குரல் கேட்டது. பிறகு கதவு திறந்தது.

தூங்காமல் மொட்டுமொட்டென்று கலங்கிய கண்களுடன் விசாலி இருப்பதைக் கண்டு கட்டத்தில் வந்து உட்கார்ந்தாள் ஊனி.

தலைமயிரைக் கோதிவிட்டாள்.

நெற்றிப் பொட்டில் மெல்ல அமுக்கிவிட்டாள்.

''டஸ் இட் பெயின் ஸோ மச்...? யூ ஷுட் நாட் பீ ஸோ ஹோம் ஸிக், டியர்...எவ்ரிதிங் வில் பீ ஆல்ரைட். ப்ளீஸ், ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட்...''

சின்னக் குரலில் அன்புடன் அவள் பேசவும், 'ஐயோ—இவ நல்லவதான். நாடகம் ஆடலை. என் மனசு வேதனையிலே இவளைக்கூடத் தப்பா நினைக்கிறேனே...' என்று எண்ணியதால், விசாலியின் கண்களிலிருந்து நீர் பெருகி கன்னத்தில் வழிந்தது.

''ரிலாக்ஸ், விசாலி...ஐ அண்டர் ஸ்டாண்ட் யுவர் ஃபீலிங்ஸ்...''—எழுந்து வெளியே போன ஊனி, ஒரு நிமிஷத்துக்கெல்லாம் மறுபடி வந்தாள். தலைவலி மாத்திரை. ஒரு ட்ராங்குலைசர் மாத்திரையை அவள் கையில் கொடுத்தாள். குமாரிடம், ''ப்ளீஸ் கெட் ஹர் எ கிளாஸ் ஆஃப் ஹாட் மில்க்''—என்று பணித்தாள்.

சூடாகப் பால் வந்தது.



பாலோடு மாத்திரைகளை விழுங்கச் செய்தாள். கண்ணீரைத் துடைத்து, ''லை டவுன், டியர்—யூ வில் பீ ஆல்ரைட்'' என்று படுக்க வைத்தாள். குனிந்து கன்னத்தில் முத்தமிட்டு போர்த்தினபின் விளக்கை அணைத்து, குமாருடன் வெளியே வந்து கதவைச் சாத்தினாள்.

தன் படுக்கை அறைக்குப் போய் குளித்து, நைட்கௌன் போட்டுக்கொண்டவள், ஆடும் நாற்காலியில் யோசனையுடன் அமர்ந்திருந்த குமாரிடம் வந்தாள்.

''உன் தங்கையின் நிலை எனக்குப் புரிகிறது, குமார். வாழ்க்கையில் எத்தனையோ கனவுகள் கண்டிருப்பாள். மணம் ஆகும் முன் மாப்பிள்ளை இறந்தது அவளுக்கு அதிர்ச்சியாக இருக்கும். இங்கு வேறு எல்லாம் புதுசாக இருக்கிறது பாவம்....''

''நீ சொல்வது சரிதான், ஊனி. வீட்டு ஞாபகத்தில் கஷ்டப்படுகிறாள். சரியான தூக்கம் இல்லை. இன்னும் இந்தப் பகல், இரவு மாற்றத்தை அவள் அனுசரிக்கப் பழக வில்லை.''

''என்ன அவசரம், டார்லிங்? அவள் போக்குப்படி விட்டுவிடு. எதற்கும் கட்டாயப்படுத்தாதே. கண்ணைக் கட்டிக் காட்டில்விட்ட மாதிரி இருந்தால் அவள்தான் என்ன பண்ணுவாள்? நாளை மறுநாள் சனி, ஞாயிறு இந்த இரண்டு நாட்களிலும் வெளியில் அழைத்துப்போய் ஷிகாக்கோவைக் காட்டி மனசைத் தேற்றவேண்டும். பாவம், சின்னப்பெண்.''

மறுநாள் காலை ஊனி வேலைக்குப் புறப்பட்டபோது விசாலி தூங்கிக்கொண்டிருந்தாள்.

அவளை அனுப்பிவிட்டு, காபியுடன் மாடிக்குப் போய் விசாலியின் பக்கத்தில் உட்கார்ந்தான் குமார். காபியை சைட் டேபிளில் வைத்தான். துடைத்துவிட்ட மாதிரி அழகான முகம், மமாட்டுப் போன்ற உதடுகள், மரவட்டை

மொய்ப்பதுபோல கரிய புருவங்கள். நீளமாய் வளைந்த இமைகள்—விசாலியின் பரிசுத்தமான அழகு குமாரைப் பர பரக்கச் செய்தது.

இந்த அழகை ஆண்டு அனுபவிக்காமல் விட்டால், எப்படி?

குனிந்து அவள் இமைகளை முத்தமிட்டு, அவளை வாரி மடியில் கிடத்திக்கொண்டான்.

தூக்கமாத்திரையின் பலன் முழுசாய் இன்னும் அகல வில்லை. கண்களைச் சற்றே பிரித்துப் பார்த்தாள் விசாலி. குமாரின் அன்பான முகம் தெரிய, முதல் நாள் நடந்தது மறந்துபோக அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

ஒரு வினாடிதான்.

மறுகணம் அவன் தன்னை ஏமாற்றியது நினைவுக்கு வர தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

காபியை அவளிடம் நீட்டினான்.

''பல் தேய்க்காட்டா பரவாயில்லை. தலைவலி தேவலையா விசாலி? நன்னா தூங்கினாயா?'' என்று மிகுந்த பரிவோடு கேட்டான்.

ராத்திரி குமாரும் சரியாகத் தூங்கவில்லை என்பது அவனின் ஜிவுஜிவுத்த முகத்திலிருந்து தெரிந்தது.

என்னை ஏமாத்திட்டு, தானும் எதுக்காக இப்படி அவஸ்தைப்படணும்?

கொஞ்ச நாழிகைக்கு ஒருத்தரும் பேசவில்லை. பிறகு தான் ஏற்கெனவே திட்டமிட்டிருந்த தினுசில் குமார் பேசினான்:

''நா உன்கிட்டே நிறையப் பேசணும் விசாலி. பொறு மையா கேளு. நா லூஸியை ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணிக்கலை. அசம்பாவிதமா அப்படி நடந்துடுத்து.



என்னமோ வாழ்ந்துண்டு இருக்கேன். என் இஷ்டம் என்னான்னா இன்னும் ஒரு வருஷம் இங்கே பல்லைக் கடிச் சுண்டு இருந்துட்டா—என்கிட்டே கணிசமா பணம் சேர்ந் துடும். அப்புறமா நாம இந்தியாவுக்குப் போய் நீ இஷ்டப் பட்ட தினுசில் இருக்கலாம். அதுவரைக்கும் நீ பொறுமையா இருந்தா, நம்ம இரண்டுபேருக்கும் நல்லது. நீ எனக்கு மனைவியா வந்தப்புறம்தான் நா நிஜமாய் சந்தோஷமாய் இருக்கேன். நீ புரிஞ்சுண்டா சரி...''

—துக்கமாக முகத்தை வைத்துக்கொண்டு பேசும் கணவனைப் பார்த்தாள் விசாலி.

ஒரு வருஷத்திலே இந்த லூஸியை விட்டுட்டு என்னோட வந்துடறேங்கறாரே...இது சாத்தியமா? நடக்குமா? என் மேலே நிஜமாய் அத்தனை அன்பு உண்டா?

''ஒரு வருஷம் ஏன் காத்துண்டு இருக்கணும்? நாம்ப இப்பவே புறப்பட்டு ஊருக்குப் போயிடலாம். சந்தோஷங் கறது நம்ப மனசிலே இருக்கு. பணத்திலேயா இருக்கு?''

''நீ சின்னப் பெண் விசாலி. உனக்குப் புரியாது. சௌகரியங்களோடு வாழப் பணம் வேணும்!''

''எனக்கு சௌகர்யம் வேண்டாம்! இத்தனை வருஷமா எந்த சௌகரியத்தோட நா ஆதிச்சபுரத்திலே இருந்தேன்? மனசிலே சந்தோஷத்தோடதானே வாழ்ந்தேன்?''

''கொஞ்சம் பொறுத்துக்கோ, விசாலி. உனக்கே நான் சொல்லறது புரியும்.''

''நீங்க நடக்கற விஷயமா பேசறதா எனக்குத் தோணலை. இவளை விட்டுட்டு நீங்க எப்படி வருவேள்?''

''இந்த ஊர்லே விவாகரத்து பண்ணறது சுலபம். மனசுக்குப் பிடிக்கலைன்னா சரி.''

ஹாஸியிடம் குமார் பழகும் விதத்தை இரண்டு நாட்களாய் விசாலிதான் பார்க்கிறாளே—என்ன கட்டல், கொஞ்சல்! அவளுக்குப் பரிந்து பரிந்து குமார் உபசரிப்பதும், அவள் கண்களில் காதலை தேக்கிக்கொண்டு குமாரிடம் பேசுவதும் விசாலிக்குப் புரிகிறதே—எந்தக் காரணத்தைச் சொல்லி குமார் இவளை விடுவான்...?

ஏதோ வாழ்ந்துண்டு இருக்கேன்றாரே; அப்போ ஹாஸி பிள்ளையாண்டு இருக்கறது எப்படி? இவா சந்தோஷமா தான் வாழ்ந்றுண்டு இருக்கா. இவர் சொல்றதெல்லாம் பொய். என்னை மறுபடி ஏமாத்தப் பாக்கறார்.

விசாலி தனக்குத்தானே யோசனை பண்ணினாள். முடிவில் 'நீங்க என்ன வேணா பண்ணிக்கோங்கோ. ஆனா என்னை மட்டும் இன்னிக்கே ஊருக்கு அனுப்பிடுங்கோ. நா இங்கே இருக்க விரும்பலை'' என்றாள் தீர்மானமான குரலில்.

முதல்நாள் அழுத அழுகையில் அவளுக்கு இப்போது கண்ணீர் வரவில்லை. தவிர, ஹாஸிக்கு விஷயம் தெரியாமல் இருக்க குமார் பாடுபடுகிறான் என்ற நினைப்பும் தந்த தைரியத்தில் அவள் எண்ணியதைப் பேசினாள்...

# 16

## இருபத்துநான்காவது நாள்

பிரும்மாண்டமான பிரச்சினைகளையெல்லாம் ஊதித் தள்ளிவிட்டதாலும், இதுநாள் வரை அவன் இஷ்டம் இம்மி பிசகாமல் நடந்ததாலும், 'இவள் என்ன கிராமத்துக் கத்துக்குட்டி—ஒரே நொடியில் சமாளித்துவிடலாம்' என்று நம்பியிருந்ததாலும், உண்மை தெரிந்த மறுகணத்திலிருந்து விசாலி விடாமல் முரண்டு பிடிப்பது குமாருக்கு ஓர் அதிர்ச்சியாகவே இருந்தது.

கெஞ்சிப் பார்த்தாகிவிட்டது. கொஞ்சிப் பார்த்தாகிவிட்டது...ஒன்றுக்கும் பலன் இல்லை.

'என்னை ஊருக்கு அனுப்பிடுங்கோ...' என்ற ஓயாத பல்லவிதான்!

அன்று மதியமும் குமார் சாப்பிடக் கூப்பிட்டபோது வர மறுத்துவிட்டாள் விசாலி. பேசினால் பதில் கிடையாது. படுக்கையில் குப்புறப் படுத்து, தலையணையில் முகம் பதித்தவள்தான்—இவன் இஷ்டத்தில் வந்து என்ன கேட்டாலும் பிடிவாதமாய், மௌனமாய் இருந்தாள்.

முந்திய தினம்போல அவளால் கதவைத் தாளிட்டுக் கொள்ள இயலவில்லை. காலையில் விசாலி எழுந்திருக்கும் முன்னரே குமார் அவள் அறைக் கதவைப் பூட்ட முடியாதபடி செய்து, மற்ற அறைகளைப் பூட்டி சாவியை வைத்துவிட்டான்.

தனியாய் இருக்கக்கூட விடமாட்டேன் என்கிறாரே என்ற கோபமும் சேர்ந்துகொண்டதால், ஓரிரு முறைகள் குமார் அவள் கிட்டத்தில் வந்து தொட்டபோது அவன் கையைத் தட்டிவிட்டு, 'என்னைத் தொடாதீங்கோ' என்று கத்தினாள் விசாலி.

மாடியில் அவள் இருக்க, குமார் கீழே வந்து குட்டி போட்ட பூனைமாதிரி இப்படியும் அப்படியும் நடந்தான். ஊனி போன் செய்து விசாலி எப்படி இருக்கிறாள் என்ற போது, 'சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறாள்' என்று பொய் சொன்னான்.

மணி இரண்டு.

சாயங்காலம் ஊனி வருவதற்குள் இவன் எப்படியாவது விசாலியை வழிக்குக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த இரண்டு நாட்கள் சனி, ஞாயிறு ஊனி வீட்டில் இருப்பாள். அவளுக்கெதிரில் விசாலியிடம் எதுவும் செய்ய முடியாது. ரொம்ப விசாலி முரண்டு பிடித்தாலும் ஊனிக்கு ஏதாவது சந்தேகம் தோணலாம். என்னத்திற்கு வீண் வம்பு...?

குமாரின் பொறுமை தன் எல்லையைத் தொட்டுவிட்டது. இன்னும் மூன்று மணி நேரங்களில் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்த்தால்தான் பிழைத்தான்...விசாலி எதையாவது சொல்லப்போய், ஊனி கடுகத்தனை புரிந்துகொண்டாலும் வேறு வினையே வேண்டாம்!

என்ன செய்யலாம்...?

என்ன சொல்லி விசாலியை வழிக்குக் கொண்டு வரலாம்?

பிடி கொடுத்துப் பேச மறுக்கிறாளே...! 'ஊருக்கு அனுப்புகிறேன்' என்றால் இனி நம்பமாட்டாள். இந்த ஒரு நாளில் அவளுக்கு அந்த நம்பிக்கை போய்விட்டது.

பொறுமை கரையக் கரையக் குமாருக்கு எரிச்சல் ஏறத் தொடங்கியது.



என்ன பண்ணலாம்...? மண்டையை உடைத்துக் கொண்டான்.

இதுவரை விசாலியிடம் பிரயோகிக்காத மிரட்டலைக் கையாண்டு பார்க்கலாமா? அது ஒரு சமயம் பலனைத் தருமோ...

மாடிக்குப் போனான்.

பழைய அன்பு, பச்சாதாபம் எதுவுமே இல்லாதவனாய் ஊனி வருவதற்குள் இவளைச் சரிக்கட்டியாக வேண்டும் என்ற வேகம் மட்டுமே நிறைந்தவனாய், 'ஏய், எழுந்திரு...' என்று அதட்டல் போட்டான். விசாலி தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

பாக்கெட்டுகளில் கையை விட்டுக்கொண்டு குமார் நின்றிருந்த விதம், அவன் கண்களில் தெரிந்த கோபம் அவளுக்குப் புதுசாய் இருக்கவே மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

''ம்...எழுந்திரு—கார்த்தாலேருந்து என்ன மாய்மாலம் பண்ணறே? நானும் போனாப்போறதுன்னு இரண்டு நாளாய்ப் பார்க்கிறேன். இது என்ன வீம்பு...? ம்...? எழுந்திரு.''

குமாருக்குக் கோபம் என்று விசாலி புரிந்துகொண்டாள் என்றாலும், கல்லுளிமங்கத்தனம் செய்துகொண்டு எழுந்திருக்காமலே இருந்தாள்.

''நா சொல்லறது காதிலே விழலை?''

''விழறது; என்னை எப்போ ஊருக்கு அனுப்பப் போறேன்னு சொல்லுங்கோ எழுந்துக்கறேன்.''

சனியன்—இதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறாளே!

''அனுப்ப முடியாதுன்னா என்ன பண்ணுவே?''

—இந்த விதத்தில் பதிலை விசாலி எதிர்பார்க்கவில்லை.

''அனுப்பமாட்டேளா? ஏன்?''

''என்னா? அப்படித்தான். உனக்கு விவரமா நா பதில் சொல்ல விரும்பலை''.

''ஓ! அப்ப நான் ஜானி வந்தவுடனே அவகிட்டே சொல்லிடறேன்.''

குமார் ஏளனமாய் சிரித்தான்.

''ஜானிக்கிட்டேயா? நீயா? காட்! அவ்வளவு இங்கிலீஷ் பேச உனக்குத் தெரியுமா.''

—கை கொட்டிச் சிரித்தான்.

''பாஷை தெரியாட்டா என்ன...? எப்படியாவது சைகை மூலமா சொல்லிவிடுவேன்.''

''என்னன்னு சொல்லுவே...?''

''தாலியைக் காட்டுவேன்—இவர் கட்டினார்னு சொல்லுவேன்.''

''எப்படிச் சொல்லுவே? பரதநாட்டியத்திலே இரண்டு விரலாலையும் கழுத்தைச் சுத்தி முடிச்சுப் போட்டுக் காட்டுறாளே, அப்படியா?''

''......''

''தாலின்னா ஜானிக்கு என்ன புரியும்? இந்த வெள்ளைக்காராளுக்கு அதெல்லாம் தெரியாது. அதனாலே நீ விழுந்து விழுந்து டான்ஸ் ஆடினாலும் அவளுக்குப் புரியாது விசாலி!''

இவர் சொல்றது நிஜம்தானே! நா எப்படி ஜானிகிட்டே பேச முடியும்? எனக்கு ஒரு வார்த்தைகூட இவா பேசற தினுசிலே பேசத் தெரியாதே...ஜானி தாலியைக் கண்டாளா, இல்லை மெட்டியைக் கண்டாளா?

இந்த மாதிரி ஏதாவது கஷ்டம் பின்னால் வரலாம்னு தானோ என்னவோ குமார், கல்யாணத்துலே போட்டோ கூட எடுக்கவேண்டாம்னு முன்னேற்பாடா இருந்துட்டான்.



கல்யாணத்தின்போது நடந்த சம்பவம் விசாலிக்கு நினைவு வந்தது.

''போட்டோ எடுக்க கொண்டுவா காமிராவோட வரச் சொல்லலாம்னு இருந்தேம்மா...ஆனா மாப்பிள்ளை தன்கிட்டே உசந்த காமரா, கலர் ஃபிலிம் எல்லாம் இருக்கு; வேற, போட்டோகிராபர் என்னத்துக்கு அனாவசியமாய்னு சொல்லிவிட்டார்...அதுவும் சரிதானே?''—என்று சந்துரு அண்ணா அம்மாவிடம் சொல்லியதை விசாலியே கேட்டாள்.

ஆனால் திருமணத்தன்று குமார், 'என் காமரா கெட்டுப் போயிடுத்து. சரியா வேலை பண்ணலை. பரவாயில்லை, அப்புறமா ஸ்டுடியோவில் போய் எடுத்துண்டாப் போச்சு!'' என்று சமாதானம் கூறினான்.

ஆக, ஜானியிடம் இவளால் எதுவும் செய்யமுடியாது.

''அழுவேன்—சதா முரண்டு பிடிப்பேன். அப்போதாவது எனக்கு ஏதோ மனக்கஷ்டம்னு அவளுக்குப் புரியாதா...?''

''ம்ஹூம்—புரியாது. நா உன்னைப் பத்தி அவகிட்டே என்ன சொல்லி இருக்கேன் தெரியுமா...உனக்குக் கல்யாணம் நிச்சயமான பிறகு, மாப்பிள்ளைப் பையன் ஆக்ஸிடெண்டில் செத்துட்டான். நீ மனசு ஒடிஞ்சுபோயிட்டதாலே உனக்கு மாறுதல் தேவைன்னு இங்கே அழைச்சிண்டு வந்திருக்கேன்னு'. அதனால்நீ என்ன அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாலும், 'என் தங்கைக்கு மனசு சரியில்லை, துக்கப்படறாள்'னு சமாளிச்சுடுவேன்!''

'சீ நீங்களும் ஒரு ஆம்பளையா?'—ஆத்திரம் அழுகையாய் மாற, ''நா ஊருக்கு லெட்டர் எழுதி உண்மையைச் சொல்லிடறேன்'' என்றாள் விசாலி.

''எப்படி எழுதுவே...? யார்கிட்டே கேட்டு கவர் வாங்கிப்பே? ஜானி உனக்கு ஏர்மெயில் லெட்டர் கொடுத்

னாலும் அவளுக்கு உன் அட்ரஸ் தெரியாது. என்கிட்டே தானே கொடுப்பா. என்னைத் தாண்டிண்டு உன் லெட்டர் போயிடுமா?''

இந்த வழியும் சரிப்படாதா?

''நா ரொம்ப நாள் லெட்டரே போடாம இருந்தா, எங்கண்ணா என்னமோ ஏதோன்னு கவலைப்படுவான். அப்போ எப்படியாவது நிஜம் தெரிஞ்சுடாதா?''

''உங்கண்ணாவால் என்ன பண்ண முடியும்? பறந்து அமெரிக்கா வரமுடியுமா? முந்தாநாள் நீ ஒரு லெட்டர் எழுதியிருக்கே. உன்னை நா எடுத்த போட்டோ நிறைய இருக்கு. வாரம் ஒரு லெட்டர் நானே எழுதி, உன் போட்டோவையும் வெச்சு, 'விசாலி எத்தனை சந்தோஷமா இருக்கா பாருங்கோ; அவளுக்கு வேலை ஒழியலை. அப்புறமா எழுதுவா'ன்னு அனுப்பிடுவேன். அப்போ யாருக்கு என்ன சந்தேகம் வரும்?''

''...........''

''ஏன் பேசாம இருக்கே? இன்னும் ஏதாவது வழி கண்டு பிடிச்சு சொல்லேன்!''—விசாலியின் மௌனம் குமாருக்குச் சிரிப்பாக இருந்தது.

''நா ஒண்ணும் உன்னை மாதிரி முட்டாள் இல்லை, விசாலி! என் வீட்டு அட்ரஸ், உங்காத்துக்கோ எங்காத்துக்கோ தெரியாது. என் ஆபீஸ் விலாசம்தான் தெரியும். 'வீடு மாறினாலும் மாறுவேன். ஸ்திரமாய் ஒரு வீட்டுக்குக் குடிபோனதும் விலாசம் சொல்றேன்'னு சொல்லி இருக்கேன். அதனால் உங்கண்ணா அம்மா லெட்டர்களை நீ படிக்கணும்னாகூட உனக்கு என் தயவுவேணும்...புரியறதா?''

என்ன பண்ணுவாள் விசாலி? ஆத்திரமும், அழுகையும் சேர்ந்து எழுந்தன.

''நா ஓடிப்போயிடுவேன். எங்கேயாவது நம்ம மனுஷா இருக்கமாட்டாளா? எனக்கு உதவி பண்ணமாட்டாளா?''



''வீட்டுக்கு வெளியே பார்த்தியா? முழங்கால் அளவு ஸ்னோ. அதுலே நடக்கக்கூட உனக்குத் தெரியாது. எங்கே போவே? உனக்கு யார் வீடாவது தெரியுமா? வழி தெரியுமா? ஐயோ விசாலி! இது முழுக்க முழுக்க அமெரிக்கர்கள் வாழற இடம். உன் பாஷையைப் பேசி, உன் புலம்பலையோ என்னு கேட்க ஒரு நாதி கிடையாது. தப்பித் தவறி நீ வெளியே போனாலும் உனக்கு வழி தெரியாது. இந்த 'ஸ்னோ'லே மாட்டிண்டு உறைஞ்சு செத்துப்போக வேண்டியதுதான்!''

—பெரிசாய் சிரித்தான் குமார்.

''மரியாதையாய் நா சொல்றபடி இருந்தா எல்லா சௌகரியத்தோடயும் நீ நன்னா இருக்கலாம். மாட்டேன்னு பிடிவாதம் பண்ணா ...து உனக்கு நல்லதில்லை!''

''......''

''நா ...சொல்லறதை எல்லாம் சொல்லிட்டேன். இனிமே புத்தியோட நடந்துக் ...றது உன் கையிலே இருக்கு. மணி இப்போ நாலாறது. ...ஆறு மணி வரதுக்குள்ளே உன் மனசத் தேத்திண்டு முகம் ...லம்பி, நீ சிரிச்ச முகத்தோட கீழே வரணும். இல்லை, ...ப்படித்தான் நிப்பேன்னு பிடிவாதம் பண்ணினா, நா பெ...ல்லாதவனா ஆயிடுவேன். எனக்குக் கோபம் வந்து நீ பா...த்ததில்லையே? பயங்கரமாய் கோபம் வந்தால் என்ன ப...ண்ணுவேன்னு எனக்கே தெரியாது. என் பொறுமையை ரொம்ப சோதிச்சுட்டே. இனிமே ...யாவது புத்தியோட நடந்துக்கோ.''

முதல் நாள் கு...மார் ஏற்கெனவே மணமானவன் என்ற சேதி தெரிந்ததும் வி...சாலிக்கு உண்டான அதிர்ச்சி மறுநாள் கோபமாக மாறியது. இப்போது குமார் மிரட்டிப் பேசுவதைக் கேட்டதும் ...னசில் இருந்த ஆத்திரம் போய், பயம் பரவியது.

எனக்கு விமோ...சனமே கிடையாதா? ஆள் தெரியாத காட்டிலே மாட்டிக்...கிட்டேனோ? ஊருக்கு நிச்சயமாய்

அனுப்பப்போறதில்லை. அண்ணா அம்மாவுக்கு என் நிலைமையையும் தெரிவிக்க முடியாது. இந்த ஜானியோட பேசவும் எனக்குத் தெரியலை. நா என்ன பண்ணுவேன்...?

ரொம்ப கோபமாய் பேசறாரே. 'என்ன பண்ணுவேன் தெரியுமா'ன்னு மிரட்டறாரே—என்ன செய்வார்?

கொன்னுடுவாரா?

விசாலிக்கு ரொம்பப் பயமாக இருந்தது.

''என்னடி, நாபாட்டுக்குப் பேசிண்டே இருக்கேன்;
ஜடமாட்டம் உட்கார்ந்திருக்கே...எழுந்திருச்'' அப்
போதும் விசாலி அசையாமல் இருக்கவும் ஆத்திரம்
வெடித்துக்கொண்டு எழ அவளின் கூந்தலைப் பிடித்து
இழுத்து இரண்டு கன்னங்களிலும் ஓங்கி அறைந்தான் குமார்.

பிறகு கழுத்தில் ஒரு கையை வை த்து, பாத்ரூமுக்குள்
அவளை எக்கித் தள்ளினான்.

''சரியா பத்து நிமிஷம் டைம் தரேன், நீ ட்ரஸ்
பண்ணிண்டு கீழே வரலை—உன் ழி ரெண்டையும்
தோண்டி எடுத்து, உன்னை வீட்டுக்குப் ன் பக்கம் 'ஸ்னோ'
விலே புதைச்சுடுவேன். ஆமாம்!''—கும ர் உறுமினான்.

பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்ட
விசாலிக்கு அழுகை பீரிட்டது. ரொம்ப பயமாக இருந்தது.
சொன்னபடி செய்யாவிட்டால் சாவு நிச்சயம் என்ற
நடுக்கம் எழ குமாரின் கட்டளைக்கு அடி பணிந்தாள்.

தயாரானதும் அவள் கையைப் பற்றி இழுக்காத
குறையாய் அழைத்துச் சென்று, வி ங் ரூம் கதவைத்
திறந்துகொண்டு வெளியே போனான் கு மார்.

இருள் சூழ ஆரம்பித்துவிட்ட நேரம்

குளிர் எலும்பை வெட்டியது. விசாலிக்கு காலில்
செருப்பு இல்லை, குளிருக்கு அடக்கமான டைகூட இல்லை.



நேதன் கொட்டுவதுபோல வெறும் தரை ஜில்லிட்டது. ஒரு நிமிஷம் ஆவதற்குள் அவள் கால்கள், கை விரல்கள், முகம் எல்லாம் விரைத்து நீலம் பார்க்கத் தொடங்கின.

''எப்படி இருக்கு...சுகமா இருக்கா! வெளியே போறேன்னியே, போயேன். ம்...''

உதட்டைக் கடித்து அழுகையை அடக்கிக்கொண்டாள் விசாலி. உடலெங்கும் ஊசி குத்துவதுபோலக் குளிர் வாட்டி எடுத்தது.

''நா பொல்லாதவனுக்குப் பொல்லாதவன்! என் பொறுமையைச் சோதிக்க, வீணா இந்த 'ஸ்னோ'லே உன் சமாதியை நா கட்டும்படி செய்யாம இரு. புரியறதா...?''

மீண்டும் அறைக்குள் அவளை அழைத்து வந்து கதவைச் சாத்தினான்.

சோபாவில் விழுந்த விசாலியால் தேகத்தின் வலி தாள முடியாததாக இருந்தது.

இரண்டு ரொட்டித் துண்டுகளில் வெண்ணெய்—ஜாம் தடவி, காபியுடன் மேஜையில் வைத்துவிட்டு, ''இங்கே வா'' என்றான் அவளிடம் குமார்.

இரண்டு நாட்களாய் சாப்பிடாததால் உடம்பில் தெம்பில்லை. இப்போது மனசில் இருந்த கொஞ்ச நஞ்ச தைரியத்தையும் இழந்தவளாய் விசாலி எழுந்து வந்தாள்.

''சாப்பிடு.''

சாப்பிட்டாள்.

''இத பாரு விசாலி. ஜானி வந்தப்புறம் கலகலப்பா இருக்கணும். எல்லாருமா டி.வி. பார்க்கலாம். நீ பேஸ்மெண்ட்டுக்குப் போய் உன் சாமி விளக்கை ஏத்தி, ஜானி வாங்கி வந்த பூவை வை. அவ சந்தோஷப்பட்டுப்பா. சனி,

ஞாயிறுலே உன்னை ஊர்சுத்திக் காட்ட அழைச்சுண்டு போகப்போறேன்னு சொல்லி இருக்கா. உனக்கு ஒரு குறையும் இல்லை. புரியறதா?''

''..........''

''ஞானி இரண்டுநாள் வீட்டிலேயே இருக்கிற சமயத்தில் நீ சிரிச்ச முகமாய் இருக்கணும். நா அந்தண்டை போயிருக்கிற சமயமா ஏதாவது சொல்ல நினைச்சுப் பைத்தியக்காரத்தனமா நடந்துண்டே, அப்புறம் நான் உன்கிட்டே சொன்னதை செய்தே காட்டுவேன்...திங்கள்கிழமை ஞானி வேலைக்குப் போயிடுவா. நா இன்னும் ஒரு வாரம் லீவில் இருப்பேன். அதனாலே என்னை மீறிண்டு நீ எது பண்ணினாலும் அது உன் நல்லத்துக்கு இல்லை. புரியறதா?''

'புரிகிறது' என்று தலையை ஆட்டினாள் விசாலி.

பூக்களைக் கையில் எடுத்துக்கொண்டு பேஸ்மெண்ட்டுக்குப் போய் மீனாக்ஷி அம்மனுக்கு விளக்கேத்தியபோது அவளுக்குத் திரும்ப அழுகை பொத்துக்கொண்டு எழுந்தது.

பொறியில் அகப்பட்டுக்கொண்ட எலியைப் பூனை சீண்டுவதுபோல, அருகிலேயே குமார் நின்று, ''அழாதே, ஞானி வர நேரம்'' என்று அதட்டியதால், எழுந்த விசும்பலை அடக்கித் தரையில் விழுந்து அம்மனை நமஸ்கரித்தாள்.

# 17

## இருபத்துஆறாவது நாள்

கடைக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்த விசாலிக்குத் தலையை வலித்தது. ஜுரம் வரும்போல மூட்டுக்கு மூட்டு வலி வேறு...

வெள்ளிக்கிழமை குமார் மிரட்டின மிரட்டில் அன்றே அவளுக்குக் காய்ச்சல் வந்திருந்தாலும் ஆச்சரியமில்லை. தனக்கு மாலையிட்டவன் தன் சௌகரியத்துக்காகக் கொலை கூடச் செய்ய அஞ்சமாட்டான் என்ற நினைப்பு மனதில் தோன்றிவிட்டதால் வாயைத் திறந்து அவனிடம் எதொன்றும் பேசவே அவள் அஞ்சினாள்.

ஞானி வந்தபிறகு, ஒன்றுமே நடக்காதமாதிரி அன்பான முகமாக மூஞ்சியை மாற்றிக்கொண்டு குமார் இருந்தான். ஞானியை பேஸ்மெண்ட்டுக்கு அழைத்துச் சென்று காண்பித்தான். ''நீ பூக்கள் கொடுத்ததைக் கொண்டு என் தங்கை எவ்வளவு அழகாய் அலங்கரித்திருக்கிறாள். பார்'' என்றான். விசாலி ஈஸ் பீலிங் மச் பெட்டர் டு டே'' என்றான். ''இரண்டு நாட்களாய் உன்னோடு அதிக நேரம் இல்லை என்று அவளுக்கு வருத்தம். உன்னோடு பேச முடியவில்லையே என்று உணர்ந்து அதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள்'' என்றான். ''நாளையிலிருந்து உனக்குப் பிடித்தமான உணவு வகைகளையெல்லாம் செய்து போடப் போகிறாளாம்; இன்னும் ஒரு வாரத்தில்

எல்லா வீட்டு வேலைகளையும் கற்றுக்கொண்டு விண்டியை திருத்திவிடும் அளவுக்குப் பண்ணப்போறாளாம்... சொன்னான்'' என்றான்.

''ஸோ ஸ்வீட் ஆஃப் யூ. டார்லிங்'' என்று ஜானி கிட்டத்தில் வந்து அவனைக் கட்டிக்கொண்டபோது, என்னமோ சொன்னதில்தான் இவளுக்கு இத்தனை சந்தோஷம் என்று விசாலி புரிந்துகொண்டாள்.

குமார் சொன்னபடியே அவர்களோடு உட்கார்ந்து உணவு அருந்தி டி.வி. பார்த்தாள். மனசு மரத்துப்போய் இருந்தாலும், ''விசி...! மூஞ்சியை உம்னு' வைச்சிக்காதே...'' என்று நடுவில் குமார், ஜானி அறியாமல் இவளிடம் கூறினதுக்கும் விசாலி அடிபணிந்தாள்.

ஒரு வழியாய் இவளைத் தூங்கச் செல்ல குமார் அனுமதித்தபோது, கையில் ஒரு தூக்கமாத்திரையைக் கொடுத்து அனுப்பினான்.

மனசும், உடம்பும் நொந்துபோயிருந்ததால், விசாலி படுக்கையில் சாய்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் நன்கு உறங்கிவிட்டாள்.

ஆனால், நடு இரவில் ஒரு சமயம் முழித்துக்கொண்டபின் தன் சூழ்நிலையின் பயங்கரம் நெஞ்சில் உறுத்தவே, எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

மாலையிலிருந்து தாள் போடப்பட்டிருந்த கண்ணீர் மீண்டும் பிரவாகமெடுத்தது.

நான் என்ன பண்ணுவேன்? இவர் என்கிட்டே காட்டின அன்பெல்லாம் வெறும் வேஷம். இந்த ஜானி மேல்தான் இவருக்கு நிஜமான பிரியம் இருக்கு. 'இவளோடயே இருங்கோ, என்னை அனுப்பிடுங்கோ'ன்னாலும் கேட்க மாட்டேங்கறாரே...! அந்நிய தேசத்துலே, சொந்த மனுஷான் யாரும் கிட்டக்கூட இல்லாத இடத்திலே நா மாட்டிண்டுட்டேனே...இனி எனக்கு விமோசனம்



இல்லையா...? சந்துரு அண்ணாவுக்கு விஷயத்தை எப்படியாவது சொல்லிட்டாத் தேவலை. ஆமாம்! அண்ணாவுக்கு விஷயம் தெரிஞ்சா மட்டும் என்ன பண்ணுவான்? இவர் கேட்டமாதிரி பறந்தா வருவான்...? பத்தாயிரம் பணம் வேணுமாமே...!

ஜானி நல்லவளா தெரியறா. அவகிட்டே எப்படியாவது உண்மையைச் சொல்லிட்டா அவ உதவி பண்ணலாம். ஆனா எப்படிச் சொல்லறது...?

இவர் சொல்லறபடி நா கேட்காட்டா பொல்லாத கோபம் வரும்னாரே...? இவரா நம்மைக் அடிச்சுக் கொல்லறத்துக்கு முன்னாடி நாம்பளாவே ஏதாவது பண்ணிண்டு செத்துப்போயிட்டா...?

என்ன பண்ணிக்கிறது...?

சாகறதுக்காகவா இத்தனை வயசு வளர்த்து, இத்தனை பணம் செலவழிச்சுக் கல்யாணம் பண்ணிண்டு இத்தனை தூரம் பயணம் பண்ணி ஓர் அயல் தேசத்துக்கு வந்தோம்?

விக்கி விக்கி அழும்போது, சப்தம் கேட்டு குமார் வந்து விடப்போகிறானே என்ற நினைப்பு எழுந்ததும், புடவைத் தலைப்பைச் சுருட்டி வாயில் அடைத்துக்கொண்டு அழுதாள் விசாலி.

'தற்கொலை பண்ணிக்கொள்ள வேண்டியதுதானா' என்று அவள் வேதனைப்பட்டபோது, ஆதிச்சபுரத்தில் நடந்த சமாசாரம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

மூணாவது வீட்டு ருக்மணிப் பாட்டியின் ஒரே மகள் கமலா—சின்ன வயசில் கணவனை இழந்து தன் நாலு வயசு இரண்டு வயசுப் பெண் குழந்தைகளுடன் தாய் வீட்டில் இருக்க வந்த சமயத்தில், அவளுக்கு வயிற்றில் நாலு மாசம். கணவன் செத்த ஆறாம் மாசம் இராஜாத்திபோல இன்னொரு பெண் பிறந்தது. கமலாவின் குழந்தைகள் கண்ணுக்கு ரொம்ப லட்சணமாய் இருக்கும்.

இரண்டே வயசான கௌரிக்கு நகைகள் பூட்டினால் கிருஷ்ண விக்ரகம் மாதிரி இருக்கும்! அன்று கோகுலாஷ்டமி. மாப்பிள்ளை இறந்த ஒரு வருஷத்துக்கு பண்டிகைகள் இல்லாததால், வருஷாப்திகம் முடிந்துவந்த கோகுலாஷ்டமியை நன்றாகக் கொண்டாட எண்ணிய ருக்மணிப் பாட்டி விதவிதமாய் பட்சணங்கள் செய்து, வெண்ணை கடைந்து, கோலம் போட்டு, மாவிலை கட்டி ஏற்பாடு பண்ணினாள்.

மதியம் மணி மூன்று இருக்கையில் கமலா கௌரியை அழைத்து, கையில் வளை, காலில் வெள்ளிக்கொலுசு, கழுத்தில் ஒரு வடம் சங்கிலி அணிவித்து, முன்னுச்சி மயிரைத் தூக்கிக் கட்டி, நெத்தியில் சந்தனக் கீறு இட்டாள். குழந்தையைத் தயார் செய்ததும், 'வீட்டுக்குள்ளேயே விளையாடிண்டு இரு' என்று சொல்லிவிட்டு அம்மாவுக்கு ஒத்தாசை பண்ண உள்ளே போய்விட்டாள்.

பால் ஊற்ற வந்த வீராசாமி தனியாய் திண்ணையில் உட்கார்ந்திருந்த கௌரி குட்டியைப் பார்த்திருக்கிறான். நகைகள் பளபளத்து அவனை ஈர்த்துவிட்டன. குழந்தையிடம் பேச்சுக்கொடுத்து வயக்காட்டுக்கு அழைத்துப் போய் கைநிறைய பொட்டுக்கடலையைக் கொடுத்து குழந்தையைத் தின்னச் சொல்லி இருக்கிறான். வாய் கொள்ளாமல் பொட்டுக்கடலையைப் போட்டுக்கொண்டு மெல்லவும், முழுங்கவும் தெரியாமல் குழந்தைக்கு தொண்டையை அடைத்த சமயத்தில், நகைகளைக் கழட்டிக்கொண்டு கழுத்தை நெறித்து, பக்கத்தில் இருந்த கிணற்றில் எறிந்துவிட்டுப் போய்விட்டான்!

பிறகு என்ன...?

குழந்தையைக் காணோம் என்று தேட, பிணம் கிணற்றில் மிதக்க, பால்காரனோடு குழந்தை போனதை யாரோ பார்த்ததாகச் சொல்ல, ராத்திரிக்குள் வீராசாமியைப் பிடித்துவிட்டதுகூட பெரிசில்லை...



'குழந்தைக்கு நகையைப் பூட்டி நானே அதன் சாவுக்குக் காரணம் ஆனேனே...! என்று அலறிய கமலா, அதே ராத்திரி உத்திரத்தில் புடவையைக் கட்டித் தொங்கவிட்டுத் தூக்குப் போட்டுண்டு செத்தாளே—அதுதான் ரொம்ப கண்ணராவி.

ஒரேநாளில் இரண்டு சாவு, ருக்மணிப் பாட்டியாத்தில...

கமலா செத்துப்போன பிறகு பாலுக்கு அழுத கைக் குழந்தையை வைத்துக்கொண்டு ருக்மணிப் பாட்டி பட்ட கஷ்டம் சொல்லி மாளாது!

அப்போதுதான் விசாலியின் அம்மா சொன்னாள்: 'அந்தப் பழிகாரி போயிட்டா. ஆனா, அவ பொறுப்புக்களைச் சுமந்துண்டு இந்தப் பாட்டி படற கஷ்டத்தைப் பாரு. இந்த மாதிரி ஒரு கோழையைப் பெத்ததுக்குப் பாட்டி, வயத்துலே பிரண்டையை வைச்சுக் கட்டிக்கணும். தற்கொலை பண்ணிக்கறது மகாபாவம். அகாலமா இப்படிச் சாகறவாளுக்கு நிம்மதியில்லை. அவா ஜென்ம ஜென்மத்துக்கும் ஆவியா அலைஞ்சுண்டு இருப்பா...பிறப்பைக் கொடுத்த பகவான் சாகறத்துக்கும் நேரம் குறிச்சுத்தானே வைச்சிருப்பான்...? எல்லாம் விதிப்படி நடக்கிறதுன்னு விடாம இது என்ன அசட்டுத்தனம்?'

விசாலிக்கு அம்மா பேசின பேச்சுக்கள் நினைவுக்கு வர எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

தற்கொலை பண்ணிக்கிறவா ஆவியா சுத்திண்டு இருப்பாளாம்! அது குடும்பத்துக்கே மகா பாவம்னு அம்மா சொன்னாளே...

அப்போ நான் தற்கொலை பண்ணிக்க நினைக்கறது தப்புத்தானா...!

சாகாம இங்கே அந்த மனுஷனின் போக்குக்கு இசைந்து இருக்க முடியுமா—?

'இரண்டு பெண்டாட்டிக்காரரா நம்ம ஊர்லேஇல்லையா? இங்கே நீ இருந்தா என்னா'ன்னு கேட்டாரே...அப்படித் தான் இருக்கணுமா?

ஏனோ, விசாலிக்கு மறுபடி குமாரை அணைத்து, காதல் செய்வதை நினைத்தாலே எரிச்சலாக இருந்தது.

'சீ...! அந்த மனுஷனை என்னைத் தொடவிட்டேன்னா தெரு நாய்க்கும் எனக்கும் அப்புறம் என்ன வித்தியாசம்...?

வேற என்னதான் வழி...?

மெரென்று சுஜாதா எழுதிய 'காயத்ரி' கதை விசாலிக்கு ஞாபகம் வந்தது. தொடர்ந்து படிக்காவிட்டாலும், விட்டுவிட்டு அவள் அந்தக் கதையைப் படித்திருந்தாளே!

அந்தக் கதையிலேயும் இப்படித்தான் பெண்டாட்டியை ஆம்படையான் ஏமாத்திக் கல்யாணம் பண்ணிண்டு, அவளை வைச்சு அசிங்கமான படங்களை எடுக்கிறான்! அப்புறம் அவ எப்படித் தப்பிக்கிறா...?

ஒரு நோட்டிலே தன் நிலைமையை எழுதி வேஸ்ட் பேப்பரோட வெளியே அனுப்பிடறா. அதை ஒருத்தர் படிச்சுட்டு அவளைக் காப்பத்தறார். இல்லை...? அந்த மாதிரி இந்த ஊர்லே எப்படி நடக்க முடியும்?

அந்தக் கதை நடந்தது மெட்ராஸிலே. நா இருக்கறது அமெரிக்காவிலே...! இங்கே என் பேச்சுப் புரிஞ்சு என்னை யார் வந்து காப்பாத்துவா...?

மறுபடி அழத்தான் தோன்றியது. மணியைப் பார்த்தாள்: ஐந்து.

இது மார்கழி மாசம் இல்லையா...? ஊர்லே இருந்தா இந்த மணிக்கு எழுந்து அரிக்கேன் விளக்கை வைச்சுண்டு தெருவில் சாணி தெளிச்சு, பெருக்கி எத்தனாம் பெரிய புள்ளிக் கோலம் போடுவேன்! 'விசாலி போல நம்பளாலே போட முடியுமா'ன்னுதானே தெருவிலே எல்லாரும்



பேசிப்பா...? சந்துருண்ணா பாவம், தங்கை இருட்டிலே கோலம் போடறாளே, பூச்சி பொட்டு வந்திடுமேன்னு பயந்துண்டு கூடவே வந்து திண்ணையில் உட்கார்ந்திருப்பானே...

ஐயோ, அண்ணா! என்மேல் உசிரா இருப்பியே! இப்போ நா இந்த மாதிரி இக்கட்டிலே இருக்கிறதை நினைச்சா எப்படித் துடிச்சுப் போவே...? இப்படி அழுதுண்டே இருந்தா ஆச்சா...! மேற்கொண்டு என்ன பண்ணறது...? எப்படி யாவது நம்ம தேசத்துக்குப் போயிடணுமே...எப்படி?

அழுகையை மறந்து நிதானத்துடன் இனி என்ன பண்ணவேண்டும் என்பதைப்பற்றி யோசித்தாள் என்ன...?

, இந்த வீட்டுலேருந்து நான் தப்பிக்கணும்னா அதுக்கு முதல்லே இந்த ஊரைப்பத்திக் கொஞ்சம் தெரிஞ்சுக்கணும். கொஞ்சம் பொறுமையாக இருந்து பார்ப்பதுதான் புத்திசாலித்தனம். ஜானி இன்னிக்கும் நாளைக்கும் ஊர் சுத்திப் பார்க்க அழைச்சுண்டு போகப்போறாளாம். அப்படிப் போறச்சே யாராவது நம்மூர்க்காரா கண்லே தெரியமாட்டாளா? அவாகிட்டே சொன்னா நமக்கு விமோசனம் பிறக்காதா...?

நிதானத்துடன் யோசனை பண்ணினபோது பகவான் தன்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை பிறந்ததால், தூங்கி எழுந்து காலை உணவு முடிந்ததும், 'ஷிகாகோவைச் சுற்றிப் பார்க்கலாம்' என்று ஜானி சொல்வதற்கு முன் இவள் தயாராக இருந்தாள்.

குமார் வண்டி ஓட்ட, ஜானி அருகில் உட்கார்ந்து கொண்டாள். விசாலி பின்னால்.

டவுனுக்குப் போனார்கள். ஜான் ஹேன்காக் பில்டிங், சியர்ஸ் பில்டிங் எல்லாம் பார்த்தார்கள்.

எக்ஸ்ப்ரஸ் லிப்டில் நூறு மாடிகளைக் கடந்து மேலிருந்து கீழே பார்த்தார்கள். சின்னக் குழந்தையைப் பரிவுடன் இட்டுச் செல்வதைப்போல பல இடங்களில் விசாலியின் கைகளைப் பிடித்துக்கொண்டு போனாள் ஜானி.

'இதைப் பார், விசாலி—அங்கே பார், விசாலி' என்று அவள் ஒவ்வொன்றாகச் சொல்ல குமார் மொழிபெயர்த்தான்.

சிலசமயம் ஜானி சொன்னதைச் சொல்லாமல், ''உனக்கு அடிக்கற யோகம் யாருக்கு அடிக்கும்? ஷிகாகோவைப் பார்க்கற பாக்யம் வேறு எந்தப் பொண்ணுக்குக் கிடைக்கும்? சிரி! இவ சொல்றதை ஆர்வத்தோட கேளு...'' என்றான்.

மதியம் பூராவும் சுத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

இத்தனை அலைஞ்சும் ஓர் இந்தியனைக்கூட பார்க்கலியே. இவர் சொன்னது நிஜம்தானா...? இங்கே நம்மூர்க் காரா மருந்துக்குக்கூட கிடையாதோ...?

விசாலியின் நினைப்பு தப்பு. அவள் டவுனில் அலைந்த போது எத்தனையோ இந்தியர்கள் எதிர்ப்பட்டார்கள். ஆனால் 'விண்ட்டர்' சமயமாதலால், இந்தியப் பெண்மணிகள் புடவை அணிந்தால் தடுக்கி விழுந்துவிடுவோம் என்று பேன்ட் அணிந்திருந்ததால், அவளால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை என்பதை விசாலிக்கு யார் விளக்குவார்கள்...?

அன்றிரவு விசாலியை நல்ல சமையலாய் சமைக்கச் சொன்னான் குமார்.

வாயைத் திறக்காமல் செய்தாள் அவள். ஜானி ரசித்துச் சாப்பிட்டாள். நாள் பூராவும் அலைந்து திரிந்த அலுப்பில் சீக்கிரம் படுக்கப்போனார்கள்.



மறுநாள் காலையில் ஒன்பது மணி அளவில், முதல்நாள் போலவே டிபன் முடிந்ததும் புறப்பட்டார்கள். முதலில் வீட்டுக்கு இரண்டு மைல் தள்ளி இருந்த ஒரு பெரிய ஷாப்பிங் சென்டருக்குப் போனார்கள்.

விசாலி கடைகளின் அளவைப் பார்த்துப் பிரமித்துப் போனாள். சாப்பாட்டு சாமான்கள் விற்கவென்று பிரும்மாண்டமான கடை, பக்கத்திலேயே மற்ற வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, துணிக்கடை என்று ஒவ்வொரு கடையும் பரந்து விரிந்திருந்தது.

வண்டி ஒன்றைத் தள்ளிக்கொண்டு ஒவ்வொரு கவுண்டராகப் போய்ச் சாமான்களைச் சேர்த்தார்கள்.

''விசாலி, உனக்கு ஆப்பிள் ஜூஸ் பிடிக்குமா? வறுத்த முந்திரி பிடிக்குமா? எந்த வகை ஐஸ்கிரீம் பிடிக்கும்? சாக்லெட் போதுமா...?'' என்று ஜானி அன்போடு கேட்டு பொருட்களை வாங்கினாள்.

ரொட்டிகளில் எத்தனை ரகம்...? பாட்டில்களில் அடைத்த ஜூஸ்தான் எத்தனை தினுசு...? அம்பாரமாகக் கொட்டி வைத்திருந்த பிஸ்கெட், சாக்லெட்டுகளின் வகையறா விசாலிக்கு பிரமிப்பாக இருந்தது.

கடையின் அமைப்பிலும், இது வரைக்கும் தான் கண்டறியாத பொருள்களைக் கண்டதிலும் ஜானியின் அன்பிலும் தன் மனசின் துக்கம் கொஞ்சம் குறைந்திருப்பதாகவே விசாலி நினைத்தாள்.

எல்லாச் சாமான்களையும் வாங்கின பிறகு 'பில் கௌண்ட்டருக்கு வந்தார்கள். மிஷினில் கணக்குப் பார்த்துப் பணம் வாங்கிக்கொண்ட பெண், பெரிய பிரவுன்

பேப்பர் பைகளில் சாமான்களை அடுக்கித் தந்ததை, ஆளுக்கு இரண்டாகத் தூக்கிய வண்ணம் வாசலுக்கு வந்தார்கள். விசாலி கையில்கூட ஒரு பை.

''நீங்கள் இங்கேயே நில்லுங்கள்; நான் போய் வண்டியைக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி, குமார் போனான்.

கடையில் வருவோரும், போவோருமாய் நல்ல கூட்டம்.

சுற்றி நடந்த மனிதர்களை விசாலி பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவளுக்கு வெகு அருகாமையில் ஒரு வண்டி வந்து நின்றது. கையில் இரண்டு பைகளுடன் காத்திருந்த ஆண் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்பட்டது. வண்டி தாண்டும்போது வண்டியோட்டியை நன்றாகப் பார்த்தாள் விசாலி. காருக்குள் ஹீட்டர் ஓடியதால் அணிந்திருந்த ஸ்வெட்டரின் அடியில் பளிச்சென்று தெரிந்தது சிகப்பு வண்ணப் புடவை. திடுக்கிட்டு நன்றாகப் பார்த்தாள் விசாலி. சிகப்புப் புடவை, கறுப்பு ஒற்றைப் பின்னல், நெற்றியில் பொட்டு. சத்தியமாய் அவள் ஓர் இந்தியப் பெண்மணிதான்.

# 18

## இருபத்து ஏழாவது நாள்

**நே**த்துப் பார்த்தது நம்மூர்க்காராதானா? புடவை கட்டிண்டு இருந்தாளே? ஒரு நொடியிலே கார் தாண்டிண்டு போயிடுத்து! சரியா பார்க்க முடியலையே...ஒருவேளை அந்த மார்க்கெட் பக்கம் அவா குடியிருக்காளா? திரும்ப அவாளைப் பார்க்க முடியுமா? இந்த மார்க்கெட்டுக்குப் போற வழியை நன்னா பார்த்து வைச்சுக்கணும். என்னிக்காவது நாமே தனியா அந்த மார்க்கெட்டுக்குப் போயிட்டா, அவா வீட்டைத் தேடிப் பிடிச்சு, பேச முடியுமோ?

ஆக, இந்த ஆள் புரியாத காட்டிலே நாம் தனியாக இல்லை. நம்மூர்க் குடும்பம் ஒன்று இருக்கிறது என்ற நினைப்பு விசாலிக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. இரவெல்லாம் தூங்கமுடியாமல் அவஸ்தைப்பட்ட விசாலி, அதிகாலையிலேயே எழுந்துவிட்டாள்.

ஷாலியும் குமாரும் இன்னும் எழுந்திருக்கவில்லை.

ஷாலியும் இன்றைக்கு வேலைக்குப் போய்விடுவாள்... குமாரோடு தான் தனியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குப் பயத்தைத் தந்தது.

என்னத்துக்காகப் பயப்படணும்?

அவர் என்ன புலியா, சிங்கமா? நம்மைக் கடிச்சுத் தின்னுடுவாரா?

கூடுமான வரையில் வாயை மூடிண்டு அவர் சொல்றதை நாம்ப பண்ணிட்டா, அவருக்குக் கோபம் ஏன் வரப்போறது? அப்புறம் என் வம்புக்கு ஏன் வரப்போறார்?

மணி ஏழு...

கீழே வந்த ஜானி வேலைக்குப் புறப்பட்டுப் போனாள்.

கதவைச் சாத்திக்கொண்டு திரும்பின குமாரின் சந்தோஷம் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

சாப்பாட்டு மேஜைமேல் கையை ஊன்றிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்த விசாலியிடம் வந்தான். அவளை இறுகக் கட்டி முத்தமிட்டான்.

"சமர்த்தா இருந்ததால் எல்லாருக்கும் திருப்தி பார்த்தியா? இப்படியே நா சொல்றபடியே நடந்துண்டா நீ ராஜாத்தி மாதிரி இருக்கலாம்! சரி வா மாடிக்குப் போகலாம்."

குமார் முத்தமிட்ட இடத்தை அழுத்தித் துடைத்தாள் விசாலி. அவன் கைகளை விலக்கினாள். தள்ளிப்போய் நின்றுகொண்டாள்.

"ஏய், என்னாச்சு உனக்கு...ம்?"

மிரட்டின மிரட்டலில் தன் வழிக்கு வந்து சரணாகதி அடைந்துவிட்டாள்; இனி இவளைத் தன் சுண்டு விரலால் ஆட்டிப் படைக்கலாம் என்று நினைத்திருந்த குமார், விசாலி உதறித் தள்ளியதும் ஆச்சரியப்பட்டான்.

விசாலி பதில் சொல்லவில்லை.

கிட்டத்தில் வந்து அவள் கையைப் பற்றினான் குமார்.

"என்னை விட்டுடுங்கோ...எனக்குப் பிடிக்கலை!"

"என்ன பிடிக்கலை?"

"........."

"சொல்லுடீ! என்ன பிடிக்கலை?"



"நீங்க தொட்டா பிடிக்கலை...நான் உங்களோட மாடிக்கு வரமாட்டேன்."

அடிசக்கை—இந்தப் பொண்ணுக்கு இத்தனை ரோஷமா! குமாருக்குச் சிரிப்புதான் வந்தது.

இரண்டு நாட்களாய் விசாலியைத் தொடாமல், கண்ணால் மட்டும் கண்டு ரசித்ததின் வேதனை இன்று காலை முதலே அவனுக்கு இருந்தது...

விசாலியை நெருங்கி அவள் முகத்தை வலுக்கட்டாயமாகத் திருப்பி உதடுகள் அழுந்த, அவள் மூச்சுத் திணற முத்தமிட்டான்.

"சீ...என்னை விடுங்கோ! எனக்குப் பிடிக்கலைங்கறேன். அப்புறம் என்ன?"

விசாலி நிமிரிப் பார்த்தாள்.

அவள் கோபமும், உடம்பைக் கொடுக்க மறுப்பதும் குமாருக்குப் புது அனுபவமாக இருந்தது.

இன்றுவரை அவன் தொட்ட பெண்களெல்லாம், அவன் ஸ்பரிசத்தில் உருகி மெய்மறந்தவர்கள்தாம்! நாலு நாட்கள் வரைக்கும் நாணத்தால் தலை கவிழ்ந்து, பார்வை தாழ கைகளால் முகத்தை மூடிக்கொண்ட விசாலி, இன்று சீறுவது அவனுக்குத் தனி இன்பத்தைத் தந்தது.

"விடாட்டா என்ன பண்ணுவேடீ?"

"கத்துவேன் பெரிசாய்."

குமாரின் சிரிப்பு அவளுக்குப் பிடிக்கவில்லை. புஸ்ஸென்று பெருமூச்சு விட்டுக்கொண்டு, கண்கள் ஒரு தினுசாய்ப் பார்க்க, கிட்டத்தில் வந்து நின்ற அவனைப் பார்த்தால் பயமாக இருந்தது.

விசாலியை ஆட்டுக்குட்டி மாதிரி தூக்கி மாடிப்படியில் ஏறிக்கொண்டே குமார் கேட்டான்; "கத்துவேன்னியே கத்தேன்!"

—முரட்டுத்தனமாக அடிக்குரலில் பேசிக்கொண்டே அவளைக் குமார் பலவந்தப்படுத்தினபோது கொஞ்சம் திமிறினாள். கொஞ்சம் கத்தினாள், கொஞ்சம் கடித்தாள். ம்ஹூம்...ஒன்றுக்கும் பயனில்லை. ஒரு புழுவாய் அவனின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறோமே என்ற இயலாமை அவளை நெருட, 'ஹோ' என்று அழுதாள்.

குமார் எழுந்து பாத்ரும் போய்விட்டு வந்தான்.

முகம் கழுவி, தலையை வாரிக்கொண்டு வெளியே வந்தவன், விசாலியிடம் நின்று புன்சிரிப்போடு அவளைக் கவனித்தான்.

இரண்டாக மடிந்து உட்கார்ந்து, அழும் அவளைப் பார்க்கையில் மனசுக்கு ரொம்ப திருப்தியாக இருந்தது.

கழுதை—என்கிட்டியா வால் ஆட்டினாள்? வைக்கிற இடத்தில் வைச்சால், தானே பயம் வந்து ஒழுங்காய் இருக்கமாட்டாளா!

ஐந்து நிமிஷங்கள் போல ஆனதும், ''என்ன, அழுகை நின்னுதா...இல்லை. இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கா?'' என்று ஏளனமாய்க் கேட்டான்.

நீட்டியிருந்த அவள் காலை விரலால் நிமிண்டி, ''சரி... எழுந்துவா. எனக்குப் பசிக்கிறது. ஜோராய்ப் பொங்கல் பண்ணிக் கொடு'' என்றான்.

விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள் விசாலி.

கோபமும், ஆத்திரமும் நெஞ்சில் முட்ட, ''போடா'' என்று கத்தினாள்.

—இந்தச் சின்னப்பெண்ணுக்கு எத்தனை ஆத்திரம் வருகிறது...!

அவள் 'டா' சொன்னதில் அவனுக்கு வருத்தமில்லை மாறாக ரசித்தான்!

''நா போயிடுவேண்டி—ஆனா நீ எங்கே போவே...?''



எழுந்து கைவிரல் நகங்களால் அவன் முகத்தைப் பிராண்ட வேண்டும் என்ற வெறி தோன்றவே, மீண்டும் ''போடா'' என்று சொல்லி, ''படவா...என்னை ஏமாத்திட்ட ராஸ்கல், சீ! போ'' என்று வெறுப்போடு பேசினாள்.

மென்மையாய் சிரித்து, மெல்லப் பேசும் விசாலியின் ஆக்ரோஷமான பேச்சுக்கள் நிஜமாகவே குமாருக்குப் பிடித்திருந்தன.

உழக்கு மாதிரி இருந்துகொண்டு அழுது சிவந்த கண்கள், நழுவின மேலாடை, விரிந்த தலையோடு விசாலி பேசினது ஒரு கவர்ச்சியைத் தந்ததாகவே அவன் நினைத்தான்.

''நீ இந்த மாதிரி பேசறதிலே எனக்குக் கொஞ்சம்கூட கோபம் வரலை. இன்பாக்ட்...இந்த முரட்டுத்தனத்தோட உன்னைத் திரும்ப அனுபவிக்கணும்னுதான் தோணறது! என்ன ரெடியா?''

''சீ...!'' குமார் சொன்னதைச் செய்துவிடுவானோ என்ற பயம் எழ பாத்ருமுக்குள் ஓடிக் கதவை சாத்திக் கொண்டாள் விசாலி.

எழுந்து கதவைத் தட்டினான் குமார். ''ஏய் விசாலி, ரொம்ப நாழி மாய்மாலம் பண்ணிண்டு இருக்காம, சட்டு புட்டுனு குளிச்சுட்டு கீழே வா. எனக்குப் பசிக்கிறது. வீணாக என்பொறுமையை சோதிக்காதே. என்னைப் பொறுத்தவரை நீ என் பெண்டாட்டிதான்! எனக்கு எப்போ நீ வேணும்னு தோணறதோ, அப்போ நிச்சயமாய் உன்கிட்டே வருவேன். அதனாலே அழுது அழிச்சாட்டியம் பண்ணறதை எல்லாம் விட்டுட்டு, ஒழுங்கா இரு. இன்னொரு தடவை உன்கிட்டே நா இதைப் பத்திப் பேசும்படி வைக்காதே!'' சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு குமார் சீட்டி அடித்த வண்ணம் வெளியேறினான்.

எனக்கென்ன? நான் ஆம்பிளை ராஜா... என் இஷ்டப்படி, திட்டப்படிதான் எல்லாம் நடக்கும்!

பாத் டப்பில் ஏறி உட்கார்ந்துகொண்டு ஷவரைத் திறந்தாள் விசாலி. சூடான தண்ணீர் உடம்பில் விழ விழ மனசின் வேதனை கொஞ்சம் குறைந்தது.

''சனியன்! படவா ராஸ்கல்...பொம்பளைகிட்ட தன் பலத்தைக் காட்டற...'' என்று வாய்விட்டு குமாரை வைது தீர்த்தாள்.

'உங்க பேரை வாயால சொல்லக்கூடாது—சொன்னா உங்க ஆயுசு கொறைஞ்சுபோயிடுமாம்!' போனவாரம் ஒரு சமயம் தன்னைப் பேர் சொல்லிக் கூப்பிடு என்று குமார் கேட்டபோது பதில் சொன்ன அதே விசாலிதான், இன்று அவனை வாயில் வந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லித் திட்டுகிறாள்!

அன்பையும், வெறுப்பையும் பிரிப்பது மெல்லிய கோடு தான் என்று தெரியாமலா பெரியவர்கள் சொன்னார்கள்...?

குமாரின் பண்பான நடத்தையால், அழகான தோற்றத்தால், அவனிடம் விசாலிக்கு உண்டாயிருந்த காதல் ஏமாற்றம் என்ற அதிர்ச்சிக்கு உள்ளானபோது தன் வரம்பை மீறி வெறுப்பாக மாறிப்போனதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது...?

ஷோபா மாதிரி தற்கொலை பண்ணிக்கப்போற தில்லைன்னு தீர்மானம் பண்ணியாச்சு. இனி எதிர்நீச்சல் போடறதைத் தவிர வேறு என்ன வழி?

டிரஸ் பண்ணின பின் கீழே வந்து, வாயைத் திறக்காமல் அடுப்பிடம் சென்று பொங்கல் செய்து, தயார் ஆனதும் ஒரு தட்டில் அதையும்—ஒரு கிளாசில் ஆப்பிள் ஜூஸையும் எடுத்துக்கொண்டு மேஜையில் வைத்து விசாலி சாப்பிட்



டாள். தட்டு, தம்ளரை சோப்பு போட்டு அலம்பித் துடைத்து வைத்ததும், லிவிங் ரூம் சோபாவில் அமர்ந்து டி.வியைப் பார்க்கத் தொடங்கினாள்.

விசாலி கீழே வரலே அடம் பிடிப்பாள். இரண்டு அடி கொடுத்து இழுத்து வந்து, சமைக்கச் சொல்லிக் கட்டாயப் படுத்தி டிபன் சாப்பிட வைக்கணும்—என்று எண்ணியிருந்த குமாருக்கு அவள் நடவடிக்கை வியப்பைத் தந்தது.

இவளுக்கு என்மேலே கோபம் இல்லையா? 'இதுதான் நம்ப தலைஎழுத்துன்'னு காம்ப்ரமைஸ் ஆயிட்டாளா?

அவனும் பொங்கலை ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு விசாலியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

''பொங்கல் ரொம்ப ஜோர், விசாலி!''

''......''

''என்ன—நா பேசறது காதுலே விழலை?''

''......''

''இதுதான் அசட்டுத்தனங்கறது! நான் கேள்வி கேட்டு நீ பதில் சொல்லலைனா, அது எனக்குப் பிடிக்காது.''

''......''

''சரி, வரயா கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம். காரை அலம்பணும், பெட்ரோல் போடணும். தமாஷா இருக்கும், வரயா?''

''......''

விசாலியின் கல்லுளிமங்கத்தனம் குமாருக்கு சினத்தை மூட்டியது. பிட்ச்—இவளுக்கு இத்தனை திமிரா? இது கூடாது. இதுக்கு ஒரு வழி பண்றேன். அலறிண்டு பேச வைக்கறேன்...

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். விசாலி என்ன ஏது என்று புரிந்துகொள்ளும் முன், அவள் இடது கை ஆள் காட்டி விரலைப் பிடித்து, நகத்திற்கு அடியில் விரல் நுனியை நெருப்பால் சுட்டான்.

''ஸ்...'' கையை இழுத்துக்கொண்டாள் விசாலி.

சிகரெட் நெருப்பால் கையை சுடறாரே—பைத்தியம் பிடிச்சுடுத்தா?

''இப்போ நா கேக்கற கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்றயா...இல்லை அடுத்த விரலைச் சுடட்டுமா?''

சுட்ட இடத்தை வாயால் ஊதிக்கொண்டே விசாலி, நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். கண்கள் வலியின் காரணமாகக் கசங்கி இருந்தன. 'என்னை என்ன செய்யச் சொல்றேள்...?' என்று அவைகள் கேட்டன.

''எழுந்திரு—உன் ஓவர்கோட், ஷூ எல்லாம் போட்டுண்டு கிளம்பு!''

விசாலி பயத்துடன் அவன் சொன்னபடி செய்தாள்.

காஸ் ஸ்டேஷனுக்குள் கார் நுழைந்தது.

பின்பக்கம் 'கார்வாஷ்' என்ற இடத்தில் ஒரு மூடப்பட்ட அறைக்குள் வண்டியைச் செலுத்தி நிறுத்தினான் குமார்.

கார் மெல்ல நகரத் தொடங்கியதும், நாலு பக்கத்திலிருந்தும் 'சர்'ரென்று தண்ணீர் பீச்சியது. அரைநிமிஷத்தில் அருவி மாதிரி கொட்டிய நீர் நின்று, சோப்புநுரை வண்டி மேல் வழிந்தோடியது. ராட்சத பிரஷ்கள் எங்கிருந்தோ தோன்றி வண்டியை தேய் தேய் எனத் தேய்த்ததும், திரும்ப



நீரில் குளிப்பாட்டல், கடைசியாய் புஸ்ஸென்ற சூடு காற்று வீசி காரை காய வைத்தது. எதிர்ப்புறம் இருந்த கதவு திறந்து கொள்ள காரை வெளியே ஓட்டிவந்தான் குமார்.

பக்கவாட்டில் வண்டியை நிறுத்தி, ஒரு குழாய் போன்ற வாக்குவம் க்ளீனரை எடுத்தான். சுவிட்சைத் தட்டி, அதை ஓடவிட்டு வண்டிக்குள் இருந்த குப்பை தூசிகளை அதனால் உறிஞ்சி எடுத்தான்.

பார்த்துக்கொண்டே இருந்த விசாலிக்கு கையின் எரிச்சல் மறந்துபோய் ஆச்சரியம்தான் விரவி நின்றது.

காருக்குள் கண்ணாடியைப் போட்டுட்டு, நாம உட்கார்ந்துண்டு இருக்கறச்சியே—காரை அலம்பி, துடைச்சா விடுத்தே! இது என்ன மந்திர ஜாலம்?

காருக்கு பெட்ரோல் போட்டுக்கொண்டபின் வண்டியை சாலையில் செலுத்தினான் குமார்.

# 19 இருபத்துஒன்பதாவது நாள்

இரண்டு நாட்களில் விசாலிக்கு வாக்குவம் க்ளீனர், வாஷர், ட்ரையர் போன்ற சாதனங்களைக் கிட்டத்தில் நின்று உபயோகப்படுத்தக் கற்றுக் கொடுத்துவிட்டான். இயந்திரங்களை இயக்குவதும், நிமிஷத்தில் அம்பாரமாய்த் துணிகளைத் துவைத்துக் காய வைப்பதும், தூசி, தும்பு இல்லாமல் க்ளீனரால் வீட்டைச் சுத்தம் செய்வதும், வாரத்துக்கு ஒரு தரம் பெருக்கித் தட்டினால் போதும் என்பதும், வைத்த சாமான்கள் வைத்த இடத்தில்—குப்பை செத்தை சேராமல் பளிச்சென்று இருப்பதும், தொடர்ந்து வேலை செய்ய விசாலிக்கு ஆசையைக் கொடுத்தாலும், ஒரு வேலைக்காரியை நடத்துவதுபோல பக்கத்தில் நின்றுகொண்டு சதா குமார் அதட்டுவதும், இஷ்டப்பட்டபோது அவளை அணைப்பதும், கண்ட இடத்தில், சோபாவில், லிவிங்ரூம் கோச்சில், மாடியில் என்று உறவுகொள்ளுவதும் அவளால் தாளமுடியாத துன்பமாக இருந்தது.

வேஷம்—அத்தனையும் வேஷம்! ஆதிச்சபுரத்திலே பார்த்த பார்வை, பேசின பேச்சு, விதரணையான நடத்தை, மென்மையான அணைப்பு, 'விசாலி, விசாலி' என்று வாய்க்கு வாய் கொண்டாடியது எல்லாம் வேஷம். இப்படிக்கூட ஒரு மனுஷனால் வேஷம் போடமுடியுமா, என்ன? எத்தனை நாள்...? பெண் பார்த்து, கல்யாணம் ஆகி இங்கே அழைச்சிண்டு வந்தது மொத்தம் எத்தனை நாளில்? இத்தனை



நாளும் விடாம எப்படி இந்த மனுஷனால் சிரிச்சுண்டே நடிக்க முடிஞ்சுது? எப்படி ஒரு க்ஷணம்கூட வேஷம்கற முகமூடியைக் கழட்டி வைக்காமல் போட்டுண்டு இருக்க முடிஞ்சுது? மூச்சு முட்டலியா...?

குமாரின்மேல் இருந்த காதல் என்று வெறுப்பாக மாறியதோ, அன்றே அவன்மேல் இருந்த மரியாதையும் மறந்து போய்விட்டது.

ஓட ஓட விரட்டினாள். தாங்கமுடியாமல் எதிர்த்து வாயாடுவாள், பதிலுக்குக் கையைக் குமார் நீட்டுவதுதான் மிச்சம்!

முதல் தடவை மனசுக்குள் 'அவர்' என்ற நினைப்புக்கு பதிலாக 'அவன்' என்று எண்ணியபோது—தொட்டுத் தாலி கட்டின புருஷன்னுகூட நினைக்காம இப்படி, 'அவன், போடா, ராஸ்கல்'னு திட்டறேனே—இது எத்தனை தப்பு என்று கலங்கினாள். ஆனால் மறுநிமிஷமே தன்னைத் தேற்றிக்கொண்டாள். 'இவன் ஒரு நல்ல ஆம்படையானா? ஏமாத்துக்காரன்—இவனுக்கு என்ன மரியாதை வேண்டிக் கிடக்கு?' என்று பழையபடி தொடர்ந்து வைது தீர்த்தாள்.

சென்னையில் இருக்கும் அவள் அத்தை பெண் ஸ்வர்ணாவை அவள் கணவன் தள்ளி வைத்துவிட்டான். ஒரு சமயம் அவள் ஆதிச்சபுரம் வந்தபோது, 'நா என்னை தேய்ச்சுக் குளிக்கிறப்போ தாலியைக் கழட்டி வைச்சுட்டு, குளிச்சானதும் திரும்ப எடுத்து மாட்டிப்பேன். என் மாமி பார்த்தாரி ஒரு தடவை பார்த்துட்டு கத்தினாள். அதுக்கு நான் ''என்னதுக்காக இப்படி அலறேள்? ஒரு நிமிஷம் தாலியைக் கழட்டி வைச்சுட்டு மறுபடி போட்டுண்டா என்ன தப்பு? குளிக்கறச்சே கால் விரல் இடுக்கிலே அழுக்கு இல்லாம இருக்க மெட்டியைக் கழட்டி வைச்சுட்டு, குளிச்சப்புறம் நீங்க போட்டுக்கலையா? ஏன், நீங்க இத்தனை நாள் மடிசார் கட்டிண்டவர், இடுப்பு ஆறு கஜத்துக்கு மாத்திண்டேளே—உங்க சௌகரியத்துக்கு நீங்க பண்ணறதெல்

லாம் மட்டும் தப்பில்லையா? கல்யாணத்தன்னிக்கு மடிசார் உடுத்தி, தாலிகட்டி, மெட்டி போடறா—இதுலே ஒண்ணை சித்த கழட்டி வைக்கலாம்னா, தாலியைக்கூடத்தானே கழட்டிவைக்கலாம்'னு பதிலுக்கு வாயாடினேன்—ஆம்படையானே விட்டுட்டுப் போனப்புறம் தாலியாவது, மண்ணாவது மாமி—இதெல்லாம் யாருக்குப் புரியும்?' என்று சொல்லி ஸ்வர்ணா அழுதது இன்று இவனுக்கு நினைவு வந்தது.

வாஸ்தவம்தான்! 'புருஷனே பிடிக்காமல் போனப்புறம் கழுத்தில் தொங்கும் தாலியை அவிழ்த்து எறிந்துவிட்டு இந்தக் கூண்டிலிருந்து தப்பி ஓடினால் என்ன...?' என்று இந்த ஒரு வாரத்துக்குள் விசாலி எத்தனை தடவைகள் நினைத்திருப்பாள்!

விசாலியின் பொறுமையை ரொம்பவும்தான் குமார் சோதித்தான். மிரட்டலுக்கு மட்டுமே விசாலி அடிபணிகிறாள் என்பதை முதல் நாள் அனுபவத்தில் உணர்ந்தவன், தொடர்ந்து அதையேதான் ஆயுதமாகக் கொண்டான்.

ஜானகிக்கு இது நிறை மாசம். மூன்று வாரங்களில் பிரசவம் ஆகிவிடும். அதற்குள் பரிபூரணமாய் விசாலி இவனிடம் மண்டியிட்டு, இவன் விருப்பப்படி வாழ்பவளாக மாறவேண்டும், பிரசவம் ஆனபிறகு பதினைந்து நாட்களோ, அதற்குமேலோ ஜானகி வீட்டில் இருப்பாள். அவள் குழந்தையை விசாலி நன்றாய்க் கவனித்துக்கொள்கிறாள் என்ற நம்பிக்கை வந்தாலொழிய வேலைக்குத் திரும்பப் போகமாட்டாள்.

குமார் திட்டம் தீட்டத் தொடங்கிய செப்டம்பர் மாசத்திலிருந்து இன்றுவரை—எல்லாம் சரியாக நடக்க வேண்டுமே என்ற 'ஆங்ஸைட்டிக்கு' அவன் தொடர்ந்து ஆளாகி இருந்ததால், இன்று தன் திட்டத்தின் கடைசிக் கட்டத்தில் எழும் பிரச்சினைகளைச் சமாளிக்க அவனுக்குப்



போதுமான மனதிதானம் இல்லை. குழதிக்கொண்டு எழும் எரிச்சலைக் குறைக்க விசாலியை ஒரு வடிகாலாகத் தேர்ந்தெடுப்பதுதான் அவனுக்கு சௌகரியமாய் இருந்தது!

அளவுக்கு மிஞ்சிப்போய் தாங்கமாட்டாமல் போகின்ற சமயங்களில், மரியாதைக் குறைவாய் விசாலி பேசுவது, நடந்துகொள்ளுவது அவனுக்கு விளையாட்டு போல இருந்தது. கையாலாகாத பெண்ணாய், அவள் இவன் முன் நின்று சீறுவதை அவன் ரசிக்கவே செய்தான். என்றாலும் அவளுக்கு இவன்பால் உண்டான பயம் மட்டும் குறையக் கூடாது என்பதற்காக, உதைத்து மிரட்டி, அவளை அடக்குவதை அவன் விட்டுவிடவில்லை.

சில சமயம் அவள் சோர்ந்துபோய் இவன் சொன்ன பாட்டிற்கு ஆடிவிட்டுச் சோகச் சித்திரமாய் இருக்கையில், பாவம் என்ற உணர்வும் எழுந்ததுண்டு. அதன் விளைவாய்த் தன் செயலுக்குப் பரிகாரம் செய்வதுபோல அவளை வெளியில் கூட்டிப்போய், ஷாப்பிங் சென்டரில் ஏதாவது வாங்கிக் கொடுத்து அழைத்து வருவான். எதற்கும் முரண்டு பண்ணும் விசாலி, 'ஷாப்பிங் போகலாமா?' என்றால் மட்டும் உடனே கிளம்புவது அவனுக்கு சௌகரியமாக இருந்தது. மார்க்கெட் போகும் வழியை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையினாலேயே விசாலி ரெடியாய் நிற்கிறாள் என்பதைக் குமார் எப்படி அறிவான்...?

விசாலியின் ஆவலை வளர்ப்பதுபோல், ஒருநாள் வீட்டில் சிகரெட் தீர்ந்துவிட்டதால் மதியம் அதை வாங்கக் குமாருடன் விசாலியும் கிளம்பி ஷாப்பிங் சென்டர் போன போது ஒரு நிகழ்ச்சி நடந்தது.

இரண்டு நாளாய் ஓயாமல் பெய்த பனியில், ஷாப்பிங் சென்டரே தடிமனான வெள்ளைப் பனிப்போர்வையைப் போர்த்துக்கொண்டிருந்தது. காரை ஓட்டித்து நிறுத்திய

குமார். ''ரொம்ப ஸ்லோவா இருக்கு—நீ சரியான பூட்ஸ் போட்டுக்கலை. அதனால் காரிலேயே இரு. நா போயிட்டு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

பனி மழையின் காரணமாகவோ என்னமோ, முன்பு ஞாயிறு அன்று இருந்த கூட்டத்தை இன்று காணவில்லை. இரண்டு, மூன்று வரிசை கார்களே நின்றிருந்தன. கலர் கலராய், ஒவ்வொரு காரும் இந்தக் கோடிக்கு அந்தக் கோடி நின்றிருந்தது.

விசாலி பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, பெரிய காகிதப் பையை எடுத்துக்கொண்டு ஒரு பெண்மணியும், அவள் பின்னாலேயே நாலு அல்லது ஐந்து வயசு குழந்தையும் வெளியே வந்தனர்.

அது ஆண் குழந்தையா, பெண்ணா என்று விசாலிக்குத் தெரியவில்லை. ஓவர் கோட்டு உடுப்பை மறைத்திருந்தது. என்னமோ கவனத்தில் அந்தப் பெண்மணியைப் பார்த்த விசாலிக்கு, அவளின் நெற்றியில் பளிச்சென்று பொட்டு இருப்பது தெரிந்தது.

கார் கண்ணாடியைச் சற்றே இறக்கினாள் விசாலி.

''நோ ராஜி—நாட் தேர். இங்கே இருக்கு வண்டி...''

அம்மா! தமிழா, அந்தப் பெண்மணி தமிழா? தமிழிலே தானே பேசினா...? ஆமாம்—சத்தியமாய்த் தமிழ்தான்!

ஒரே ஓட்டமாய் ஓடி, 'என்னை காப்பாத்துங்கோ'னு அவா கால்லே விழ வேண்டியதுதானே...எதுக்காகப் பிரமை பிடிச்சவமாதிரி உட்கார்ந்துண்டு இருக்கேன்...?

அந்தப் பெண்மணி குழந்தையுடன் நாலாம் வரிசையில் நின்றிருந்த நீல வண்டியிடம் போவதைப் பார்த்தவுடன், கதவைத் திறந்துகொண்டு விசாலி இறங்கினாள். 'பொளுக்' கென்று பனியில் கால் புதைந்து போனது. சாதாரண ஷூவைத் தாண்டிக்கொண்டு பனி கடித்தது.



எதையும் விசாலி பொருட்படுத்தவில்லை. நடக்க முயன்றவளைப் புடவை தடுத்ததால் புடவையைத் தூக்கிக்கொண்டு முழங்காலுக்குமேல் மேலும் இரண்டடி வைத்துவிட்டு, அந்தப் பெண்மணி இருக்கிறாளா என்று பார்க்கத் தலையைத் தூக்கி நிமிர்ந்தபோது, பார்வையில் குமார் தெரிந்தான்.

கடையிலிருந்து இறங்கிச் சாலையைக் கடந்து இவளிடம் குமார் வருவதைக் கண்டதும் விசாலி அப்படியே நின்றுவிட்டாள்.

''என்னத்துக்காக இப்படி இறங்கி நின்னுண்டு இருக்கே...? பனியிலே நின்னு ஃப்ராஸ்ட் பைட் ஐ' வரவழைச்சுக்கணுமா? ம்...ஏறு...ஏறு.''

விசாலி திரும்பி வண்டிக்குள் ஏறும்போது அந்த நீல வண்டி இவளைக் கடந்து விரைந்து மறைந்தது.

ஏமாற்றத்தால் விசாலிக்கு அழுகை வந்துவிட்டது. காரின் சூட்டில் சமாளித்துக்கொண்டாள்.

''என்னத்துக்கு இறங்கினே? ம்...?''

குமார் அந்தத் தமிழ்ப் பெண்மணியைப் பார்த்திருப்பானோ? இவள் அவளைப் பார்த்துவிட்டு இறங்கினதைத் தெரிந்துகொண்டு கேட்கிறானோ? குமார் நம்பும்படி எதையாவது சொல்ல வேண்டும். என்ன...என்ன...சொல்வது?

முதலில் வாய்க்கு வந்ததைச் சொன்னாள்: ''சாக்லெட் வேணும்போல இருந்தது...உங்களைக் கேட்கலாம்னு இறங்கினேன்.''

குமார் அவளையே கண்கொட்டாமல் பார்த்தான்.

என்ன பெண் இவள்...?

வருந்தி வருந்திப் பேசினாலும் சில சமயங்கள் பேச மாட்டேங்கறா! இப்ப வலிய வந்து சாக்லெட் வேணுங்கறா! இன்னும் மனசுக்குள் இவ ஒரு குழந்தைதானா?

''இதுக்காகவா இறங்கினே? வீட்டுலே வேற சாக்லெட் இருக்கு, தரேன். தேவலையே, நீகூட ஆசைப்பட்டு என் கிட்ட ஒண்ணு வேணும்னு கேட்டுட்டயே!''

கார் புறப்பட்டு வீட்டை நோக்கிச் சென்றபோது, இவள் தன் வழிக்கு வந்துகொண்டிருக்கிறாள் என்று குமாருக்கு சந்தோஷமாக இருந்தது.

'இரண்டு தடவை இந்த மார்க்கெட்டுக்கு வந்த சமயத் தில் நம்மூர்க்காரர்களைப் பார்த்துட்டேன். இது மனசுக்கு எத்தனை தெம்பாய் இருக்கு...' என்று விசாலிக்கு சந்தோஷ மாக இருந்தது.

## முப்பதாவது நாள்

முதல் நாள் உண்டான சந்தோஷம் இன்று செத்துப் போனதும் அல்லாமல், இனி இந்த ராட்சதனுடன் ஒரு நாள்கூட இருக்கமுடியாது என்ற தீர்மானத்தையும் எடுக்க வைத்தது, விசாலிக்கு அன்று கொடுத்த அனுபவம்...

வியாழக்கிழமை. ஸின்டி பிற்பகல் வரும் நாள், 'விசாலியை எங்கு கிளப்பிக்கொண்டு போவது' என்று யோசித்த குமாருக்கு புத்தி ஏனோ வக்ரமாய்ப் போயிற்று.

ஒரு 'ப்ளு பிலிம்'க்கு விசாலியைக் கூட்டிப் போனால் என்ன? அதைப் பார்த்து அதிர்ச்சி அடைவாளா? இருக் கட்டுமே. அப்படியொரு படத்தைப் பார்த்ததை யாரிடம் சொல்ல இவளுக்குத் தெரியும்? இவளின் 'ரியாக்ஷன்' என்னன்னு பார்த்தா என்ன?



கிராமத்துப் பெண்ணான இவளுக்கு 'ப்ளு பிலிம்' காட்டி இவளோட உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, நா அனுப விச்சால் எப்படி இருக்கும்? அதைப் பார்த்தால் இவளுக்கு மனதில் ஆசைகள் வருமோ? இரண்டு பெண்களோடு ஓர் ஆண் இருக்கிறது சகஜம்னு தோணுமோ...?

மதியம் சாப்பாடானதும், ''ஸளமளன்னு கிளம்பு விசாலி—நாம இன்னிக்கு சினிமா போறோம்!'' என்றான்.

என்ன, ஏது என்று விசாலி கேட்கவில்லை. போற இடத்தில் நம்மூர்க்காரரானைச் சந்தித்தால் நல்லதுதானே...? கிளம்பினாள்.

ஊருக்கு தெக்குப்புறமாய் இருந்த கொட்டகைக்குப் போனார்கள்.

தியேட்டர் தடபுடலாய் விளக்குகளும், அதுவுமாய்ப் பளபளத்தது.

இருட்டில் உள்ளே போய் அமர்ந்தார்கள்.

எல்லாம் கட்டை, தடி ஆம்பிளைகளா இருக்கானே... ஏன் ஒரு பொம்பளைகூட இல்லை?

படம் ஆரம்பித்தது. பத்து நிமிஷம் பார்ப்பதற்குள் விசாலிக்கு இதயம் படபடத்தது. கை கால் கிலிவிட்டு, மூச்சு அடைத்துப்போனது. மேலே படத்தைப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள். மூடின கண்களிலிருந்து கோடு கிழித்த மாதிரி கண்ணீர் வழிந்தது. வாய்விட்டுக் கத்தினால், யாராவது ஏதாவது சொல்லப்போகிறார்களே என்று மிரண்டாள்.

படத்தை ரசித்தவாறு குமார் அவள் கைகளை, இடையே வருடினது அவளுக்குக் குமட்டியது.

படம் முடிந்து வீட்டுக்கு வந்தார்கள்.

பார்த்த அசிங்கத்தின் அதிர்ச்சி அவளை முழுமையாகத் தாக்கியிருந்ததால், படியில் இறங்கும்போது தடுமாறி விழப் பார்த்தாள். உட்கார்ந்த இடத்தில் ஆணி அடித்த மாதிரி விரைத்துப்போனாள். நல்ல வேளையாய் குமார் அவளிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. இவளின் வெளிறிய முகத்தைப் பார்த்ததும் வாளாவிருந்து விட்டான்.

**மா**லையில் ஷாலி வந்ததும் விசாலியின் மனசு கொஞ்சம் தேறியது. ஆனால் அவள் சொன்ன சமாசாரத்தைக் கேட்டதும் தேறிய மனசு மறுபடி அதிர்ந்தது.

ஷாலி நாளைக் காலை விமானத்தில் நியூயார்க் போகிறாளாம். அவசரமாய் ஒரு கேஸ் பற்றி ஆலோசிக்கக் கூப்பிட்டிருக்கிறார்களாம். நாளை இரவோ...இல்லை, சனிக்கிழமையோ வந்துவிடுவாளாம்.

காலையில் ஒன்பது மணி பிளேனுக்குப் போகிறாளாம். ரொம்பப் பனி கொட்டுவதால் விமானக்கூடத்தில் காரை நிறுத்தவேண்டாம் என்று எண்ணி, குமாரிடம் தன்னை ஏர்போர்டில் இறக்கிவிடச் சொன்னாள்.

ஷாலி ஊருக்குப் போகப் போவதைச் சொன்ன உடனேயே குமார் இவளைப் பார்த்த பார்வை விசாலிக்குப் பிடிக்கவில்லை.

இன்னிக்கு எந்தமாதிரி சினிமாக்கு அழைச்சுண்டு போனான் இவன்! ஒரு பெண்டாட்டிக்கு ஆம்படையான் காட்டற சினிமாவா இது? தூ...நாளைக்கு என்கிட்டே இவன் எப்படி நடந்துப்பானோ...?-

'ஐயோ—நா என்ன பண்ணுவேன்?'

பதறிய விசாலிக்கு, இவனிடமிருந்து தப்பவேண்டுமானால் வீட்டை விட்டு ஓடுவது ஒன்றுதான் சிறந்த வழி என்று தோன்றியது.

# 20

## முப்பத்தொன்றாவது நாள்

**ஒ**ரு முடிவுக்கு வந்தாகிவிட்டது; இனி பயந்தென்ன ஆகும்...?

ஷாலியை குமார் விமானகூடத்தில் கொண்டுவிட்டு வர ஒன்னரை மணி நேரமோ, அதற்குமேலேயோ ஆகலாமாம்...

''தனியா இருக்கணுமே—நீயும் எங்களோட வரயா...?''

—குமார் முதல்நாள் ராத்திரி கேட்டபோது மறுத்து விட்டாள் விசாலி. ''எனக்கொண்ணும் பயமில்லே. நா குளிச்சு, சமைச்சு, மத்த காரியங்களைப் பார்க்கறதுக்குள்ளே நீங்க வந்துடமாட்டேளா?''

•

கடந்த ஒரு வாரத்தில் இரண்டு முறைகள் அவளை அரை மணிபோல தனியாய் விட்டுச் சென்று பழக்கம் ஆகிவிட்டதால் குமார் யோசிக்கவில்லை.

விசாலி ஊமையாகி, பணிந்துவிட்டாள் என முழுசமாய் நம்பிவிட்டான்.

ஆனானப்பட்ட 'ப்ளு ப்லிம்' பார்த்ததுக்கே இவள் ஒண்ணும் சொல்லலியே! சிலசமயம் குளிச்சுண்டு இருந்தா, ஒரே ஒரு தடவை ஆத்துக்குப் போயிடலாம்னா...அவ்வளவு தானே? படம் பார்த்தது ஷாக்தான்! ஆனாலும் அழுது

ஆர்பாட்டம் பண்ணலை; என்னைத் தொடாதேனு கத்தலை. போடா—தடியானு வையலை. திஸ் விசாலி இஸ் எ ஸ்ட்ரேஞ்ச் கேர்ல்!

ஹாலி இரண்டு நாட்களுக்கு வெளியூர் போகப்போவது இவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. விசாலியிடம் இருபத்து நாலு மணி நேரமும் இஷ்டப்படி இருக்கலாம். அடிமனசில் 'பக் பக்'கென்று பயந்துகொண்டே இருக்கவேண்டியதில்லை.

குமாரின் மனவோட்டம் வெளிப்படையாகவே விசாலிக்குப் புரிந்ததால். ஹாலி இல்லாத இரண்டு நாட்கள் இவனிடம் மாட்டிக்கொள்ளக்கூடாது... என்னவானாலும் சரி ஓடிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள்.

ஷாப்பிங் சென்டர் போகும் வழியை நன்றாய் மனதில் எழுதிக்கொண்டுவிட்டதால், அங்கு போய்விடலாம் என்று நிச்சயமாய் நம்பினாள்.

கார்லே அங்கே போறத்துக்கு எட்டு நிமிஷம் ஆறது—நடந்துபோனா அரைமணிலே போயிட முடியாதா...?

ஆத்தை விட்டு வெளியே நேரே நடந்து மெயின் ரோடு வந்ததும், முதல் வலது திருப்பத்திலே திரும்பி அப்படியே நடந்தா இடது பக்கம் ஒரு மொட்டை மரம் பெரிசாய் இருக்கும். அதை ஒட்டித் திரும்பி நடந்தா மார்க்கெட் போயிடலாம்.

வெளியிலே பனி ஜாஸ்தியா இருக்கு...இதுக்கு சரியா கோட், அது இது, மாட்டிண்டு வேகமாய் ஓடிடலாம்.

இவா கிளம்பிப்போன கொஞ்சநேரம் கழிச்சுதான் புறப்படணும். ஏதோ சாமானை மறந்து வைச்சுட்டேன்னு இவா திரும்பி வந்தாலும் வரலாம்—அதனாலே சித்த தாமதிச்சு புறப்படறதே நல்லது...



மனசில் திட்டம் உருவாகிவிட்டதால் விசாலி காலையில் சுருக்க எழுந்தாள்.

காப்பி சாப்பிட்டு முன் அறை சாமான்களைத் தட்டினாள். குவிந்திருந்த துணிகளை வாஷரில் போட்டு அதை இயக்கினாள். வீட்டு வேலைகளை சுவாரஸ்யமாய் செய்வதாக குமார் அர்த்தம் கொள்ளவே இந்த முன் ஏற்பாடு.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். முன்தினத்தை விட இன்று பனி அதிகமாய் இருக்கும்போலிருந்தது.

துணிந்தாகிவிட்டது. அப்புறம் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன...?

ஹாலி சின்னப் பெட்டியுடன் கீழே இறங்கி வந்தான். பின்னாலேயே குமார்.

ஹாலி சோர்வாக இருந்த மாதிரி விசாலிக்குத் தோன்றியது.

எத்தனை நல்லவ...? என்கிட்டே அன்பா இருக்கா. இவ நன்னா இருக்கணும். ஏன் வாடின மாதிரி இருக்கா? நிறை மாசம் ஆயிடுத்தே; ஏன் இப்படி அலையறா...? தேமேனு ஆத்துலே அக்கடானு இருக்கப்படாதோ...?

காப்பி கலந்து குமாருக்கும் ஹாலிக்கும் கொடுத்தாள்.

''வாஷரில் துணி போட்டிருக்கிறாயா?''

''காலங்கார்த்தாலே எழுந்து வேலை பண்ணாத்தான் சுறுசுறுப்பா இருக்கு. இவ சோர்ந்து இருக்கிற மாதிரி தோணறது—என்னு கேளுங்கோ...''

அதிசயம், ஆனால் உண்மை! ஹாலியைப் பற்றி மிகுந்த பரிவுடன் விசாலியே விசாரிக்கிறாளே...!

பேஷ்!

குமார் ஹாலியைக் கேட்டான்.

''ஸோ கைண்ட் ஆஃப் யூ டார்லிங்...ஐ ஃபீல் பிட் அன் ஈஸி, பட் தட்ஸ் நத்திங் டு ஒர்ரி...''

—விசாலியின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு ஆலி கிளம்பினாள்.

''ஆஸ்க் ஹர் இஃப் ஷி வாண்ட்ஸ் எனிதிங் ஃப்ரம் நியூயார்க்...''—ஆலி கேட்டதை குமார் மொழி பெயர்த்தான்.

''எனக்கு ஒண்ணும் வாண்டாம்! இங்கேதான் எல்லாமே இருக்கே...''

அவர்கள் கிளம்பினார்கள்.

''தைரியமா இரு. கதவை தாள்போட்டுக்கோ விசாலி.''

கார் புறப்பட்டுப் போனது. வாசல் அறை ஜன்னல் வழியாக விசாலி பார்த்தாள். மெயின் ரோடில் வண்டி எதிர் பக்கமாய் திரும்பினதை—அவள் போக வேண்டிய திசையிலேயே இவன் கார் செல்லுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை. இது இந்தப் பக்கம், அது அந்தப் பக்கம்.

'குளிர் தெரியாமே இருக்கணும்னா வயிறு ரொம்ப சாப்பிடணும்' என்று ஒரு சமயம் குமார் சொல்லி இருந்தது நினைவுக்கு வர சாப்பாட்டு அறைக்குப் போனாள்.

ஒரு கிண்ணம் பருப்பு.

நாலு டோஸ்ட், வெண்ணெய், ஜாம், ஒரு வாழைப் பழம்.

போதும்—இப்போதைக்கு இது போதும். புறப்படற சமயத்திலே சூடா பால் குடிச்சுட்டுக் கிளம்பலாம்.

மாடிக்குப் போய் தன் ஓவர்கோட்டை எடுத்து வைத்தாள். இரண்டு கம்பளி சாக்ஸ், பூட்ஸ், கையுறைகள், மப்ளர் இன்னும் என்ன வேணும்...?

கீழே வந்தாள். குமார் புறப்பட்டுப் போய் அரைமணி ஆகிவிட்டது. கிளம்ப வேண்டியதுதான்.



சுவாமி படத்திடம் போய் விளக்கேற்றி, நமஸ்கரித்தாள்.

''நா தப்பு எதுவும் பண்ணலை. என்னைக் காப்பாத்து''—என்று பிரார்த்தித்தாள்.

சாக்ஸ், பூட்ஸ், கையுறைகளை வரிசையாய் அணிந்து கொண்டாள்.

ஸ்னோவில் நடக்க முடியாமல் புடவை தடுக்கலாம் என்ற எண்ணத்தில் உள் பாவாடை, புடவையின் கொசுவம் இவைகளை தூக்கி இடுப்பில் சொருகிக்கொண்டாள்.

ஓவர்கோட்டை மாட்டி, தலையில் மப்ளரை சுற்றினாள்.

லிவிங் ரூம் கண்ணாடிக் கதவை, வலைக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள்.

பொல பொலவென்று ஐஸ் துகள் பூ மாதிரி தூவிக் கொண்டிருந்தது.

அரை நொடியில் முகம் ஜில்லிட்டுப் போனது—

இனிமே தாமதப்படுத்தக்கூடாது கிளம்பிடணும்...

“ஆபதாம் அபஹார்த்தாரம்...''—வாய் முணுமுணுக்க இறங்கி ஸ்னோவில் கால் புதைய நடந்தாள்.

பீச் மணல்லேகூட நடந்துடலாம். இந்த ஸ்னோவிலே நடக்க முடியாதுபோலிருக்கே!

புடவையைத் தூக்கிக்கொண்டு காலைத் தூக்கி வைத்து முன்னேறினாள். மெயின் ரோடுக்கு போயிட்டா கவலை இல்லை. ரோடை மிஷன் சுத்தமாய் வைச்சிருக்கும்.

விசாலியின் மூச்சுக் காற்று புகை மண்டலமாக மாறி அவள் கண் முன்னே உறைந்தது.

இரண்டு தடவைகள் தடுக்கி விழுந்தவள் ஒருவழியாய் மெயின் ரோடுக்கு வந்ததும், தலையைத் திருப்பி இப்படியும் அப்படியும் பார்த்தாள்.

ச காக்கை இல்லை.

விசாலி தொடர்ந்து நடந்தாள். இப்போது கொஞ்சம் வேகமாய் நடக்க முடிந்தது.

குளிர் அவள் போட்டிருந்த கம்பளி உடைகளையும் மீறிக்கொண்டு உடம்பைத் தாக்கியது.

எதிர்ப் பக்கத்திலிருந்து ஒரு கார் வந்தது.

குமாரா...?

'சேச்சே!'—இல்லை. அந்தக் கார் எதிர் பக்கமானா போச்சு.

முதல் வலது திருப்பத்தை அடைந்துவிட்டாள்.

தேவலையே வேகமாகத்தான் நடக்கிறோம்.

புடவையின் ஓரங்கள் பனியில் விரைத்துப்போய் அவள் கால்களின் சதையில் உரசி அறுத்து அவளுக்கு வலியைக் கொடுத்தன.

பாதி தூரம் வந்தாச்சு—இன்னும் பாதி தூரம்தான். அங்கே நிச்சயம் யாராவது இருப்பா—நமக்கு விமோசனம் கிடைக்கும்.

விசாலி நடந்தாள்.

இடது பக்கம் மொட்டை மரம் தெரிகிறதா என்று பார்த்துக்கொண்டே நடந்தாள்.

முதல் நாள் இரவு பெய்திருந்த ஸ்னோவின் காரணமாய் பனியால் மூடப்பட்டிருந்த மொட்டை மரத்தை விசாலியால் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை.

நேரே நடந்துகொண்டிருந்தாள்.

இவ்வளவு தூரமா நடக்கணும்...? கார்லே வந்தப்போ உடனேயே அந்த மொட்டை மரம் தெரியுமே! ஒரு வேளை கார் வேகமாய் போறதுனாலே எனக்கு தூரம் புரியலையா...

விசாலி மேலும் நடந்தாள்.



இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தெரிந்த பங்களாக்களைத் தாண்டி நடந்தாள்.

இன்னும் எத்தனை தூரம் நடக்கணும்?

தூரத்தில் பாக்டரி மாதிரி ஒரு கட்டடம் தெரிந்தது.

இந்த ஒனுசிலே ஒரு கட்டடத்தையும் இத்தனை நாள் ...ா பார்த்ததில்லையே! மொட்டை மரத்தைத் தாண்டி வந்துட்டோமோ...? திரும்பி நடக்கலாமா...?

இது என்ன அசட்டுத்தனம்? வழியை சரியா பார்த்துண்டுட்டதா நினைச்சேனே...?

விசாலி திரும்பி நடந்தாள். நேரம் வேற ஆயிண்டு போறது...குமார் வீட்டுக்கு வந்துடுவாரே?

ரொம்ப நாழிகை பனியில் நடந்ததால் பூட்ஸ், சாக்ஸைத் தாண்டிக்கொண்டு பாதங்கள் மரத்துப்போன மாதிரி இருந்தது. முகத்தில் ஊசி குத்துகிறதைப்போல குளிர் அறுத்தது.

தலையை மூடியிருந்த மப்ளரை இழுத்து வாய் மூக்கைப் பொத்திக்கொண்டாள்.

ஆள் நடமாட்டமில்லாத அந்த இடம் அவளுக்குப் பயத்தைக் கொடுக்கத் தொடங்கியது.

அந்த மொட்டை மரம் எங்கே? ஐயோ, புரியலையே!

அழக்கூடாது. மனசுலே இருக்கிற தைரியத்தை இழக்கக் கூடாது.

'ஆபத்தாம் அபஹர்த்தாரம்'—விடாமல் மனசுக்குள் முணுமுணுத்தாள் விசாலி.

'அப்பா நீங்க தெய்வமா இருக்கேன்னு அம்மா சொல்லு வாளேப்பா...எனக்கு துணையா வாங்கோப்பா! எனக்கு ...யமா இருக்கே—மார்க்கெட் போறவழி தெரியலையே... குளிர் வேற தாங்கலைப்பா. உடம்பு விறைச்சுப்போறது. காலைத் தூக்கி நடக்கறது கஷ்டமா இருக்கு...'

பனியின் கொடுமை விசாலிக்கு நன்றாய் உறைக்கத் தொடங்கியது.

சூடாய்ப் பால் சாப்பிடணும்னு நினைச்சு மறந்து இனைப்பிட்டேனே...அப்படிச் சாப்பிட்டிருந்தா இவ்வளவு குளிராதோ...?

ஓர் இடத்தில் நின்று நிதானித்தாள் விசாலி. தூரத்தில் தெரிந்த பங்களாவினுள் நாய் குலைப்பது எதிரொலியுடன் மெல்லக் கேட்டது.

அங்கே போய் விசாரிக்கலாமா?

என்னன்னு விசாரிப்பது?

ஷாப்பிங் சென்டர்ங்கற வார்த்தை மட்டும்தான் தெரியும்...அதுக்கு எப்படிப் போறதுன்னு இங்கிலீஷ்லே கேட்கத் தெரியாதே...?

காலை ஒன்பது மணி அளவில் ஊர் இப்படி ஸ்னோ போர்வையில் தூங்குவது விசாலிக்கு ஆத்திரத்தைத் தந்தது.

என்ன ஊர் இது. நடு ரோடிலே கொலை நடந்தாக்கூட கேட்பார் இல்லாமல்...?

'இனிமேல் எங்களால் நடக்கமுடியாது' என்று கால்கள் முரண்டு பிடிக்கத் தொடங்கின.

நுரையீரல்கள் காற்றை முழுவதுமாய் இழுத்துவிட்ட தினுசில், ஒவ்வொரு தடவை மூச்சை, இழுத்துவிடும்போதும் அவளுக்கு வலியைக் கொடுக்க முற்பட்டன.

நட்ட நடு ரோடில் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு விசாலி நின்றாள்.

எந்தப் பக்கம் போகணும்? சுற்றிச் சுற்றிப் பார்த்தவளுக்கு ஒன்றும் புரியவில்லை.



கொஞ்சநாழி இப்படியே உட்கார்ந்துண்டு ஆசுவாசம் பண்ணிண்டு போனா என்ன...?

பொத்தென்று உட்கார்ந்தாள். மென்மையான ஐஸ் துகள்கள் இதமான சோபா மாதிரி இருந்தது.

மேலிருந்து விழும் ஸ்னோ அவள்மேல் பன்னீர் தெளிப்பது மாதிரி விழத் தொடங்கியது. மடிமேல் வெள்ளை வெள்ளையாய் திட்டுக்கள். மார்புமேல், தலைமேல், தோள் பட்டைமேல்—

இப்படியே உட்கார்ந்துண்டு இருந்தா கொஞ்சம் கொஞ்சமாய் இந்த ஸ்னோ என்னை மூழ்கடிச்சிடுமோ...? ஜல சமாதிங்கற மாதிரி, ஐஸ் சமாதியா...?

அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டுக்கொண்டு எழ 'அம்மா—ஆ' என்று வாய்விட்டு ஆற்றி விசாலி அழத் தொடங்கினாள்.

கண்ணீர், கன்னத்தில் உறைந்து, அவள் முகத்தை வலி பிடுங்கத் தொடங்கியது.

'ம்ஹூம் ...அழக்கூடாது...அழுதா குளிர் ஜாஸ்தி தெரியும்.'

விசாலிக்கு உடம்பு மரத்துப்போய்விட்டது. கை கால் எல்லாம் இருக்கா இல்லை, கழன்டு விழுந்துட்டதா என்ற சந்தேகம் எழுந்ததால் காலை ஆட்டிப் பார்த்தாள். எழுந்திருக்க முயற்சித்தாள். முடியவில்லை.

நா என்ன பண்ணுவேன்?

'அம்மா....ஆ...' விசாலியால் அழத்தான் முடிந்தது. குனிந்து இரண்டாக மடிந்துகொண்டு அவள் அழும் நாழிகையில் தூரத்தில் இருந்து மெல்ல வந்து, தன் அருகில் நின்ற காரை அவள் கவனிக்கவில்லை.

காரிலிருந்து குமாரும், ஸாமும் இறங்கினார்கள்.

மெயின் ரோடிலிருந்து வலது பக்கம் விசாலி திரும்பிய இடத்தில் இருக்கும் முதல் வீடு ஸாமினுடையது. பள்ளிக்குப் போகக் கிளம்பிய ஸாம் ஜன்னல் வழியாகத் தூரத்தில் சென்ற பெண் உருவைப் பார்த்திருக்கிறான். மனதில் சந்தேகம் எழ குமாரின் வீட்டுக்குப் போய் பெல் அடித்திருக்கிறான்.

பதில் இல்லை. என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போது குமார் திரும்பியிருக்கிறான்.

''விசாலி, விசாலி'' என்று கூப்பிட்டும் பலன் இல்லை.

சற்று முன் புடவை கட்டிய பெண் ஒருத்தி போனதைப் பார்த்ததாகவும், அது குமாரின் தங்கையா என விசாரிக்கவே தான் வந்ததாகவும் ஸாம் சொன்னான்.

சந்தேகம் எழ இரண்டு பேரும் காரில் ஏறிக்கொண்டு கிளம்பியிருக்கிறார்கள்.

தெருவில் அவள் வலது பக்கம் திரும்பும் இடத்தில் சென்றதை ஸாம் பார்த்ததால், காரை அதில் திருப்பிச் செலுத்தினான் குமார்.

அதே தெருவின் கோடியில், 'போன மச்சான் திரும்பி வந்தான்' என்ற கதையாய் வெகுதூரம் போய்விட்டுத் திரும்பி நடந்து, ஓரமாய் உட்கார்ந்து அழும் விசாலியைக் கண்டுபிடிப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இல்லை.

# 21

## முப்பத்து நான்காவது நாள்

நடந்ததை நினைத்துப் பார்க்கிற போதெல்லாம் விசாலியின் உடம்பும் மனசும் அதிர்ந்தன.

சம்பவம் நடந்து மூன்று நாட்கள் ஆனபோதிலும் கண்களை மூடிக்கொண்டால் 'ஹோ' என்ற பனிக்காட்டில் தான் தனித்து நிற்கிற மாதிரியும், 'அம்மா...! ஆ...!' என்று அழுகிற மாதிரியும், குமார் ருத்ர தாண்டவம் ஆடுகிற மாதிரியுமே தோன்றின.

நான் பண்ணினது அசட்டுக் காரியம்தானே? வழியை எப்படி மறந்துபோனேன்? அந்த மொட்டை மரத்தை ராவோடு ராவாய் யாரும் வெட்டிட்டாளா? அன்னிக்கு குமார் வரலைன்னா என்னாயிருக்கும்? செத்துச் சமாதியாகி இன்னிக்கு நாலாம் நாள் ஆகியிருக்கும்...

செத்துப்போனாலும் போய்விடுவோம் என்ற நினைப்பு அன்று எழுந்தபோது அவள் பயந்துபோனாள் அல்லவா...?

எனக்கு உசிரு வெல்லமா? அதனால்தான் அப்படிப் பயந்துபோனேனா? அதனால்தான் குமார் காரில் வந்து காப்பாத்தினபோது சந்தோஷப்பட்டேனா?

விசாலிக்கு தன்மேலேயே சலிப்புத் தோன்றியது. மனசில் ரோஷம், வெட்கம் மான அவமானம் இல்லாமல் இங்கே குமாரோடு நடத்தும் வாழ்க்கை எத்தனை கேவல

மானது? இதிலிருந்து தப்பிக்க விரும்பித்தானே ஓடினேன்... அதில் தோல்வியுற்றபோது மகிழ்ச்சியோடு சாகத் தயாராக இருந்திருக்க வேண்டாமா?

இது என்ன கோழைத்தனம்? உயிர் வாழறதுக்காக நா எந்தவிதமான வாழ்க்கைக்கும் தயார்னுதானே அர்த்தம்?

சீ...

அன்று காலை வீட்டுக்கு வந்தபிறகு காப்பாற்றப்பட்டு விட்டோம் என்ற சந்தோஷம் தணிந்தபிறகு—அவள் குமாரை நினைத்து ரொம்பவும் கலங்கிப்போனாளே!

காரைவிட்டு இறங்கிய குமார், ஸாம் உடன் இருப்ப தால் கோபத்தை அடக்கிக்கொண்டு தவிப்பை மட்டும் வெளிக்காட்டினான்.

''விசாலி...விசாலி...யூ ஆர் அலைவ்! தேங்க் காட்... மை சைல்ட், ஆர் யூ ஆல் ரைட்?'' என்று வேண்டுமென்றே ஆங்கிலத்தில் பேசியவண்ணம் அவளை நெருங்கினான்.

விசாலிக்கு இவன் பரிவு புரிவது இப்போது அவளுக்கு அவசியம் இல்லை. ஸாமுக்குத் தெரியவேண்டும். தங்கையைக் காணாததால் அண்ணன் எப்படித் துடித்துப்போனான் என்பது ஸாமின் கருத்தில் பதிய வேண்டும்.

இருவருமாக விசாலியை இரண்டு பக்கமும் கை கொடுத்துத் தூக்கினார்கள். குழந்தைபோல அவளை வாரி அணைத்து பின் ஸீட்டில் குமார் படுக்க வைத்தான்.

வீட்டுக்குள்ளும் தூக்கியே வந்து, அவளது கோட் பூட்ஸ் முதலானவற்றைக் கழற்றினான்.

''ஸாம், கீழ் கப்போர்டில் இரண்டு ஹாட் வாட்டர் பேக் இருக்கின்றன. நிரப்பிக்கொண்டு வா—லிவிங் ரூமில் நெருப்பை மூட்டு. இந்த அறையின் சூடு இவளுக்குப் போதாது. ப்ளீஸ்...'' என்று பணித்தான்



ஒரு நொடியில் பிராந்தியைக் கொஞ்சம் விட்டு விசாலி பின் உதட்டில் அழுத்தி வைத்து தலையை நிமிர்த்திக் குடிக்க வைத்தான். கை, பாதம் இவைகளைச் சூடு பறக்கத் தேய்த் தான். ஸாம் கொணர்ந்த ஹாட் வாட்டர் பைகளை அவள் முதுகின் கீழ் வைத்துப் படுக்க வைத்தான். தடித்த கம்பளி இரண்டைப் பிரித்துப் போர்த்தினான்.

இதற்குள் ஸாம் மூட்டின கணப்பின் சூடு அறைக்குள் பரவத் தொடங்கியது.

விசாலி தன் சோர்வு நீங்கிக் கண்களை விரித்து சாதா ரணமாய் கை, கால்களை நீட்டி மடக்க அரைமணி ஆயிற்று.

சூடாய் காப்பி கலந்து அவளிடம் குடிக்கக் கொடுத்த குமார், ஸாமுக்கு நன்றி சொல்லி அவனை அனுப்பி வைத்தான்.

விசாலியோடு அவன் ஒன்றுமே பேசவில்லை. அலுப் போடு கண்களை மூடினவள் அப்படியே தூங்கினபோது அவன் அவளைத் தொந்தரவு செய்யவில்லை.

மணி பன்னிரண்டை நெருங்குகையில் விசாலி எழுந்து பாத்ரூம் போய்விட்டு வந்தாள்.

இவள் சரியாகிவிட்டாள் என்ற தைரியம் வந்ததால் இத்தனை நாழிகை அடக்கி வைத்திருந்த சீற்றம் பீறிட்டு எழ குமார் கேட்டான்.

''எங்கேடி போனே?''

''......''

''கழுதை ஸ்னோலே விரைச்சு செத்திருந்தா உன் பாடு தேவலை. போயிடுவே. ஆனா நான்...? போலீஸ் கேஸ்லேனா மாட்டிண்டு முழிக்கணும்? யாரோட போனம்பா—என் தங்கையோடதுன்னு தெரியவரும்—விசாரிச்சா என் தங்கை

இல்லை—என் பொண்டாட்டினு புரிஞ்சுப்பா...ந் மாட்டிண்டு திண்டாடணும்; அதானே உன் இஷ்டம்... சனியனே!''

காலையில் வீட்டுக்குள் நுழைந்து விசாலியைக் காணோம் என்று தெரிந்த பின் தவித்த தவிப்பு அவனுக்கல்லவா தெரியும்...?

வீட்டை விட்டு வெளியே ஓடும் அளவுக்குத் துணிச்சல் பிறந்திருப்பதை நினைத்து அசாத்தியக் கோபம் மூண்டது.

விசாலியைக் கண்டுபிடித்தாக வேண்டும். உடனே உடனே...

யாரிடமும் எதுவும் பேசிவிடுவாள் என்ற பயம் இல்லை. ஆனால் செத்துப்போய்விட்டால் வம்பு—வேறு வினையே வேண்டாம்!

போலீஸ்—விசாரணை—உண்மை.

ஸாமுக்கெதிரில் அவன் ஆத்திரத்தைக் காட்டக்கூடாது அடக்கிக்கொண்டு காரில் புறப்பட்டான்.

நல்ல வேளையாய் ஸாம் அவளைப் பார்த்திருக்கிறான். இல்லாவிட்டால்...? குமாரின் பாதாதிகேசம் நடுங்கியது.

அதிர்ஷ்டம் குமாரின் பக்கம்தான்.

எண்ணி ஐந்தாவது நிமிஷம் விசாலியைப் பார்த்து வீட்டுக்குத் தூக்கி வந்தாகிவிட்டது.

விசாலியை உலுக்கி, 'எங்கேடி போனாய்?' என்று அலற நினைத்தாலும் பொறுமையாய் இருந்தான்.

தூங்கி எழட்டும் சனியன்—கொஞ்சம் தெம்பு வந்ததும் விளாசுகிற விளாசில் அஸ்தியில் ஜுரம் பிடிக்கணும்...

படிக்காத கிராமத்துப் பெண்ணாய் அழைச்சுண்டு வந்தா சொன்னபடி ஆடுவாள்னு எப்படித் தப்புக் கணக்குப் போட்டேன்? ஹாயாக பணம் சம்பாதிக்க ஒருத்தி; கொஞ்சிக்



கை கால் பிடித்து உட்கார்ந்த இடத்தில் சிஸ்ருஷை பண்ண தம்மூர் பண்பாடுள்ள பெண் ஒருத்தினு ஆசைப்பட்டது நடக்கலியே! இவளைக் கூட்டி வந்ததே தப்போ? கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாய் இவளாலே நா இதுநாள் அனுபவிச்சு வந்த வாழ்க்கையும் போயிடுமோ?

பிட்ச்! இவளை என்ன பண்ணினால் என்ன?

விசாலி கண்முழிக்கும்போது குமாரின் ஆத்திரம் உச்ச கட்டத்தில் இருந்தது.

''சொல்லேண்டி, கழுதை—வீட்டை விட்டு எதுக்காக வெளியே போனே...?''

நம்பும்படி ஏதையாவது சொல்லலைனா கொன்னுடுவான் போலிருக்கே! என்ன சொல்றதுன்னு புரியலையே.

இவள் ஜடமாய் உட்கார்ந்திருப்பது இன்னும் எரிச்சலை ஊட்ட அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு சமையல் அறைக்குள் போனான் குமார்.

''ரொம்பத் துளுத்துப் போயிட்டே—போனாப் போகுதுன்னு குப்பையிலே கிடந்த உன்னை, குடிசையிலே வாழ்ந்த உன்னை, தூக்கி மாடி வீட்டுலே வைக்க நினைச்சேன் பாரு, அது என் தப்பு. உன்னை வைக்கிற இடத்தில் வைச்சால் தான் சரியா இருப்பே. நாயே...சனியனே...''

ஊரலிக்கு இவள் காயத்தை ஒரு காரணத்தோடு காட்டும் சித்ரவதையாக என்ன செய்யலாம் என்று யோசித்தவன் எவர்சில்வர் தொட்டிக்கு நேராய் இருந்த குழாயைத் திருப்பினான். ஆவியோடு கூடிய வெந்நீர் கொட்டத் தொடங்கியது.

கண்களில் ராக்ஷஸத்தனம் கூத்தாட, விசாலியின் வலது கையை அந்த வெந்நீருக்கு நேராக நீட்டி, அவள் திமிறாமல் இருக்க இன்னொரு கையால் அவள் தோளை அழுத்திப் பிடித்துக்கொண்டான்.

''ஆ...ஆ...ஐயோ...''

என்னவென்று புரிவதற்குள் குமார், அவள் கையைக் கொதிக்கும் நீரில் நீட்டிவிடவே பயங்கரமாய் அலறினாள் விசாலி. விரல்கள், உள்ளங்கை தோல் நொடிப் பொழுதில் வழண்டு போயின.

கையை இழுத்துக்கொண்டு 'அம்மா ஆ...' என்று தரையில் விழுந்து கத்தினாள் அவள்...

விசாலியின் துடிப்பு குமாருக்குத் திருப்தியாக இருந்தது.

''துடி நன்னாத் துடி...! கேட்ட கேள்விக்குப் பதில் இல்லைனா இப்படித்தான். இன்னிக்காவது கையோடு போச்சு. இன்னொரு தடவை இப்படி நடந்துண்டே மூஞ்சி, உடம்பு எல்லாத்துக்கும் இதே கதிதான் புரியறதா...?''

—அவன் சொன்னதை காதில் வாங்காமல் விசாலி வலி தாங்காமல் பெரிதாய் அழுதாள்.

கட்டை விரலைத் தவிர நாலு விரல்களிலும், உள்ளங் கையிலும் பெரிய பெரிய கொப்புளங்கள். ஒரு சில இடங்களில் தோல் வழண்டு போய் வெள்ளையாய் நீர் கசிந்தது.

கை ரொம்ப எரிந்தது—வலித்தது. நடுநடுவில் அழுகையை நிறுத்திவிட்டு வாயால் ஊதிக்கொண்டாள். அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''அம்மா—ஆ...ஐயோ...''

''இப்போ சொல்லு; எதுக்கு வெளியே போனே?''

இனியும் சும்மா இருந்தால் இவன் இன்னொரு கை, முகம் உடம்பை மிச்சம் வைக்கமாட்டான் என்ற பீதி எழ வாயில் வந்ததை அரற்றினாள்:

''பனி கொட்டறதைப் பார்க்க ஆசையாய் இருந்தது... அதுலே நடந்தா எப்படி இருக்கும்னு தோணித்து... போனேன்...ஆ...ஆ...''

உண்மையைத்தான் சொல்றாளோ?

''இரண்டு நிமிஷம் நின்னுட்டு உள்ளே வரவேண்டியது தானே...?''



''அப்படித்தான் நினைச்சுப் போனேன். கால் புதைஞ்சு புதைஞ்சு நடக்கறது வேடிக்கையா இருந்தது...ஆ...ஆ... கொஞ்சதூரம் போனதும் திரும்பி வர வழி தெரியலை...ஆ... அம்மா வலிக்கறது...எரியறது...''

நிஜமாய்த்தான் வெளியே போய், வழி தெரியாம மாட் டிண்டுட்டாளோ! நா அவசரப்பட்டு ரொம்ப கொடு மையா நடந்துட்டேனோ?

மருந்து அலமாரியிலிருந்து ஆன்டி செப்டிக் க்ரீம் கொணர்ந்து தடவி, பஞ்சை வைத்துக் கட்டுப் போட்டான் குமார்.

தங்கள் குடும்ப டாக்டருக்கு போன் பண்ணி உடனே அப்பாய்ண்ட்மென்ட் வாங்கிக்கொண்டான்.

கையில் படாமல் விசாலிக்கு ஓவர் கோட் போட்டு காருக்கு அழைத்துப்போனான்.

''நீ என்னை ஏமாத்திட்டு ஓடப்பார்த்தேங்கற நினைப்பு தான் எனக்கு வெறி கொடுத்துடுத்து. என்னை வீணா சீண்டி ஏன் வலிய கஷ்டத்தை அனுபவிக்கறே...ம்...''

விசாலி பதில் சொல்லாமல் கார் ஸீட்டில் சாய்ந்து கொண்டாள். அவளுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ஒரு பக்கமாய் ஒடுங்கிக்கொண்டாள்.

கை 'விண் விண்'ணென்று தெறித்தது.

''டாக்டர்கிட்டே, நீ பிரஷர் குக்கர் திறக்கும்போது அஜாக்கிரதையா இருந்த காரணத்தால் கையிலே ஆவி அடிச்சுடுத்துன்னு சொல்லப்போறேன், என்ன...?''

கார் கிளினிக்குக்குள் நுழைந்தது;

கையைச் சோதனை செய்து, வழண்டுபோன தோல் களைக் கத்தரித்து, மருந்து தடவி பான்டேஜ் போட்டு, செப் டிக் ஆகாமல் தடுக்க ஊசி போட்டு, வலி குறைய, தூக்கம் வர உள்ளுக்கு மாத்திரைகளும் கொடுத்தார் டாக்டர்.

'நல்ல வேளையாக மேல் தோல் காயமாகத்தான் இருக்கிறது. நாலு நாட்களில் நன்றாய் ஆறிவிடும்' என்று அவர் சொன்னது குமாருக்கு நிம்மதியாக இருந்தது.

ஹூஸி சனி இரவு ஊர் திரும்பினாள்.

விசாலியின் குக்கர் விபத்தைக் கேட்டு விசனமுற்றாள்.

''இந்தச் சின்னப்பெண்ணுக்கு ரொம்ப போதாத காலம் குமார்! ஒன்று மாற்றி ஒன்றாய் படுத்துகிறது. நம்மை நம்பி ஊர்விட்டு ஊர் வந்திருக்கிறாள். நாம்தானே கவனிப்பாய் பார்த்துக் கொள்ளணும்...?''

ஞாயிறு பூராவும் அவளே கிட்டத்தில் இருந்து விசாலிக்குத் தேவையானவைகளைச் செய்து கொடுத்தாள்.

நிறை மாச கர்ப்பிணியான அவள் இத்தனை அன்புடன் தன்னைக் கவனித்தது விசாலிக்கு இதமாக இருந்தது.

இன்று கை ரணம் நன்றாய் குணமாகி இருந்தது.

காலையில் டாக்டரிடம் போனபோது, பான்டேஜ் இனி தேவை இல்லை என்று சொல்லி ஆயின்ட்மென்ட் தடவி உள்ளுக்கும் மருந்து கொடுத்தார். ஒருவாரம் பொறுத்து வந்தால் போதும் என்று சொல்லி அனுப்பினார்.

விசாலி கிராமத்தில் வளர்ந்தவள். வெயிலிலும், மழையிலும் ஆடித்திரிந்து வளர்ந்தவள். அதனால் நோய்க் கிருமிகளின் பாச்சா அவளிடம் பலிக்கவில்லை.

ஜுரம் வராமல், செப்டிக் ஆகாமல் அவள் ரணம் ஆறியதற்கு அவளின் ஆரோக்கியமான தேக வாகுதான் காரணம்.

வெள்ளிக்கிழமை ஓடிய அனுபவத்தாலும், பின்பு குமாரிடம் தண்டனை வாங்கியதாலும் பெரிய பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டாள் விசாலி.

என் தலையெழுத்தை மாற்ற என்னால் முடியாது. எதையாவது செய்யப்போய் அடி, உதை வாங்க நம்மால் இயலாது. நடக்கிறது நடக்கட்டும் என்ற விரக்தி பிறந்து அவள் நெஞ்சை அடைத்துக்கொண்டதும் இந்த அனுபவத்தால்தான்.

# 22

## முப்பத்தாறாவது நாள்

அம்மாவிடமிருந்து ஆபீஸ் அட்ரஸுக்கு வந்திருந்த லெட்டரை விசாலியிடம் முதல் நாள் குமார் கொடுத்திருந்தான்.

அம்மா ஒரு பக்கமும், சந்துரு அண்ணா ஒரு பக்கமும் எழுதியிருந்தார்கள்.

''அவர்கள் சௌக்கியமாய் ஊருக்குப் போய்ச் சேர்ந்தது குறித்து சந்தோஷம் என்றும், அழகாய் விசாலி குடும்பம் நடத்துகிறாள் என்று மாப்பிள்ளை எழுதியிருப்பது குறித்து மகிழ்ச்சி என்றும், நல்ல கணவனுக்கு ஏற்ற மனைவியாய் நடந்துகொள்ள வேண்டும்'' என்றும் அம்மா எழுதியிருந்தாள்.

உன்னை மாப்பிள்ளை விதவிதமாய் போட்டோ எடுத்து அனுப்பினதைப் பார்த்து நாங்கள் மலைத்துப்போனோம். உன் முகத்தில் தாண்டவமாடும் சிரிப்பைக் கண்டபிறகுதான் என் மனம் நிம்மதியானது. புது ஊரில் எதையும் கண்டு மிரளாமல், குமார் சொல்லிக்கொடுத்த நினுசில் வாழ்ந்து உனக்கு சந்தோஷத்தையும், எங்களுக்கு பெருமையையும் தேடிக்கொள்'' என்று அண்ணா எழுதியிருந்தான்.

வருகிற வழியிலும், முதல் நாள் ஷிகாகோவிலும் எடுத்த படங்கள் இருக்கிறவரைக்கும் கஷ்டமில்லை. வாரத்துக்கு ஒரு படத்தோட நாலுவரி எழுதினால்கூடப்

போதுமே! அதுவும் இல்லாட்டா, பேனாவைக் கையிலே வைச்சுண்டு, 'எழுதப்போறயா இல்லையான்னு...?' அதட்டல் போட்டா நான் எதை வேணுமானாலும் எழுது வேன். இப்ப வேணா கை வெந்திருக்கிறதால்—இந்த வாரம் எழுத முடியாது, அடுத்த வாரம்....

''சந்துருண்ணா! ஆம்படையான் சொன்னபடி இருன்னு எழுதியிருக்கியே...நா அவர் எழுந்திருன்னா எழுந்திருக் கிறேன், உட்காருன்னா உட்காரறேன். படுக்கைக்கு வான்னா வரேன். உனக்குத் திருப்திதானேண்ணா?''

வாஸ்தவம்தான். இந்த ஐந்து நாட்களாய் குமார் அவளைக் கடுமையாய் பார்வை பார்க்கக்கூட அவன் இடம் வைக்கவில்லை. உடம்பில் வாங்கின ரணத்தின் ஞாபகம் அவளை அப்படிக் கிடுகிடுக்க வைத்தது.

எள் என்பதற்குள் எண்ணெயாகி நின்றாள்!

வீட்டு வேலைகளை சொல்லாமல் செய்தாள். துணிமணி களைத் தோய்த்து மடித்து வைத்தாள். ஊர்மி, குமாரின் அறைகளை அவர்கள் வெளியில் போன பிற்பாடு பளிச் சென்று துடைத்து வைத்தாள். பாத்ரூம்களை அலம்பி வாசனை சென்டைத் தெளித்தாள். குமார் சொன்ன சமையலைச் செய்தாள். ஊர்மிக்கும்—குமாருக்கும் கையில் காப்பி கொண்டுபோய் கொடுத்தாள்.

''கை சரியில்லாத சமயத்தில் ஒரு வேலைக்காரி மாதிரி இவள் இப்படிக் கஷ்டப்படக்கூடாது'' என்று பலமுறை ஊர்மி, குமாரிடம் சொன்னதை, அவன் இவளிடம் சொன்ன போது, ''வேலை பண்ணினாத்தான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. தவிர, நானும் தண்டச் சோறு சாப்பிடறேங்கற தயக்கம் குறையறது'' என்று, ஒரே ஒருதரம் மட்டும் பதில் சொன்னாள்.

மிருகத்தனமாக விசாலியிடம் நடந்துகொண்டு விட்டோம் என்ற குற்ற உணர்வு எழுந்ததால், தன் கோப தாபங்களை மறந்துவிட்டு விசாலியிடம் நிஜமான அன்புடன் இருக்கவே குமாரும் முயற்சித்தான்.



வேலைக்குப் போகத் தொடங்கிய நாளிலிருந்து ஆபீஸிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை அவளுக்கு போன் பண்ணி, 'சரியாக இருக்கிறாயா?' என்று தெரிந்து கொண்டான்.

என்ன கேட்டாலும், 'ம்...சரி' என்று மட்டுமே பதில் சொல்லி விசாலி சம்பாஷணையை முடித்துவிடுவாள்.

ஓரிரு நாள் மதியம் வீடு திரும்பி ''நீ தனியா இருப் பேன்னு சுருக்க வீடு திரும்பிட்டேன்'' என்றபோதும் பதிலுக்கு விசாலி ஒன்றும் சொல்லவில்லை.

அவன் படுக்கைக்கு அழைத்தால் பொம்மை மாதிரி வந்து படுத்துவிட்டு எழுந்து போவாள்.

சுவாமிக்கு விளக்கேற்றும் பழக்கத்தை சில நாட்களாக விசாலி விட்டுவிட்டதைக் குறித்து குமார் கேட்டபோது, ''எனக்கு ஏத்தணும்னு தோணலை. நீங்க ஏத்தச் சொன்னா செய்யறேன்'' என்றாள்.

இவள் இப்படி சாதுவாய் இருக்கணும்னுதானே ஆசைப் பட்டேன்! ஆச்சு அடுத்த வாரத்திலிருந்து ஊர்மி வேலைக்குப் போகமாட்டாள். வீட்டில் இவர்கள் இரண்டுபேரையும் விட்டுட்டு நான் மட்டும் ஆபீஸ் போகணும். அதுக்கு இவ இப்படி இருந்தாத்தானே சரிப்பட்டு வரும்! முதல்லே இள ரத்தத்தாலே துள்ளியிருக்கா. என்கிட்டே விளையாடி ஒரு தரம் நன்னா பட்டுண்ட்டா இனிமே ஒழுங்கா இருப்பா!

முதல் நாள் ஆபீஸுக்கு வந்த அம்மாவின் லெட்டரைக் கொண்டுவந்து கொடுத்து, ''இதுக்குப் பதில் நானே எழுதிடறேன்; உன் கை சரியானதும் நீ எழுதலாம், என்ன?'' என்றதற்கும் விசாலி 'சரி' என்று தலையாட்டினாள்.

நேற்று இரண்டு தரம் படித்த கடிதத்தை மீண்டும் குமாரும் ஊர்மிளாவும் வேலைக்குப் போனபிறகு காலை வேலைகள் முடித்தபின்பு மீண்டும் திரும்பத் திரும்பப் படித்தாள்.

'வருகிற வெள்ளிக்கிழமை முதலாம் தை வெள்ளிக் கிழமை. அம்மன் கோவிலுக்கு மாவிளக்குப் போட்டுப் பொங்கல் இடப்போகிறோம். அன்று பூராவும் எனக்கு உன் நினைவாகவே இருக்கும்.''

ஆதிச்சபுரத்து அம்மன் கோவிலை நினைக்கையில் உடனே அங்கு போய்விடமாட்டோமா என்று விசாலியின் மனசு பரபரத்தது.

மாமரங்கள் அடர்ந்த தோப்பு; அதில் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு பெரிய அம்மன் முகம்; இதற்கு கூரையும் இல்லை, கோபுரமும் இல்லை. இதுதான் ஊர் மக்கள் அனைவரும் வழிபடும் அம்மன் கோவில்.

எத்தனையோ நூறு வருஷங்களுக்கு முன்னால் தானே உண்டான முகமாம் அது. உருண்டை உருண்டையாய் கண்களும் மூக்கும், நீட்டின நாக்கும் பார்க்கவே பயமாக இருக்கும். யார் யாரோ இந்த அம்மனுக்கு கட்டடம் எடுக்க முயற்சித்தார்களாம். ஒரு சுவர் எழுப்பி மற்றது கட்டு வதற்குள் முதல் சுவர் வீழ்ந்துவிடுமாம்! மீறிக்கொண்டு கட்டினால், அந்தக் குடும்பத்தில் ஒரு துக்கம் நிகழ்ந்து விடுமாம். அதனால் ஊர் ஜனங்களுக்கு அம்மனிடம் எத்தனைக்கெத்தனை பக்தியோ அத்தனைக்கத்தனை பயமும் உண்டு.

'அம்மனுக்குத் திறந்த வெளியிலே இருக்கத்தான் சம்மதம்...இனி யாரும் கோவில் கட்ட முயற்சிக்க வேண் டாம்' என்று ஐம்பதோ, நூறோ வருஷங்களுக்கு முன்னால் அக்ரஹாரத்து ஜனங்களெல்லாம் சேர்ந்து தீர்மானித்து விட்டார்களாம்.

தை வெள்ளிக்கிழமைகளில் அம்மன் கோவில் அமர்க் களப்படும்!



புதுசாய் அறுவடையான நெல்லை, குளித்து மடியாய் அம்மாவே உரலில் போட்டுக் குத்தி அரிசி எடுப்பாள். பின்பு பாதியை எந்திரத்தில் மாவாக அரைப்பாள். மிகுதியைப் பொங்கல் இட அரிசியாகவே வைத்துக்கொள்வாள்.

முதல் வெள்ளிக்கிழமை அன்று ஆதிச்சபுரத்தைச் சேர்ந்த அத்தனை பெண்மணிகளும் அவரவர்கள் பொங்கல் மாவிளக்கு, சாமான்களுடன் அதிகாலையில் குளித்துவிட்டு தோப்புக்கு வந்துவிடுவார்கள்.

அம்மன் சன்னதியில் விளக்கு ஏற்றி அம்மனுக்குப் பச்சை பசேல் என்று அரைத்த மஞ்சளைப் பூசி, குங்குமம் இட்டு, பூ வைத்து கற்பூரம் காட்டினதும் பொங்கல் படைக்கத் தொடங்குவார்கள்.

அத்தனை பெண்களும் ஒரே சமயத்தில் அடுப்பு மூட்டி, பொங்கல் பானையை ஏற்றி, பொங்கல் சமைப்பது கண் கொள்ளாக் காட்சியாய் இருக்கும்!

அம்மாக்கள் பொங்கல் சமைக்கும் நாழிகையில், சின்னப் பெண்கள் மாமரத்து நிழல்களில் பாண்டி கீறி ஆடுவார்கள்

பூஜை முடிந்து வீடு திரும்ப இரண்டு மணிகூட ஆகும்.

நெல் குத்தி, மாவு அரைத்துக் கொடுத்து, காலையில் வீடு மெழுகி, வாசலில் கோலம் போட்டு, செம்மண் இட்டு என்று எல்லாவிதத்திலும் அம்மாவுக்கு விசாலி ஒத்தாசை செய்து கொடுப்பாள். அதனால்தான், அவள் இல்லாதது கை ஒடிந்த மாதிரி இருக்கும் என்று அம்மா எழுதியிருக் கிறாளோ...?

இதே லெட்டர் போன வாரம் வந்திருந்தால் அம்மாவை நினைத்து ஒரு பாட்டம் அழுதிருப்பாள் விசாலி. ஆனால் இன்று அப்படி இல்லை.

அதது விதிப்படிதான் நடக்கும்! அழுது சிரிச்சு என்ன பிரயோஜனம் என்ற அதீதமான விரக்தி அவளுள் புகுந்த திலிருந்து அவள் கண்களிலிருந்து சொட்டு ஜலம் வரவில்லை.

சோம்பேறியாய் உட்கார்ந்தால் வேண்டாத யோசனைகள் வருகிறதென்பதால், முடிந்த மட்டும் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு—டி.வி. பார்த்தே தன் பொழுதைக் கழிக்க விசாலி பழகிக்கொண்டாள்.

என்னென்னவோ நிகழ்ச்சிகள்...

சினிமாக்கள், பாடல்கள், விளையாட்டுக்கள், டான்ஸ், இப்படி.

விளையாட்டுக்களில் ஒன்பதரை மணி, விளையாட்டை—அதன் பேர்கூட அவளுக்கு வாயில் நுழையவில்லை—பார்ப்பது அவளுக்குப் பிடித்தது.

கையில் மைக்கை வைத்துக்கொண்டு சிரித்த முகத்தோடு நிர்வாகி வருவான். அரங்கில் பலர் இருப்பார்கள்.

'நீ எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்...' என்று நிர்வாகி சபையில் ஒருவனைக் கேட்பான்.

அந்த ஆள் பதிலுக்கு ஓர் அல்ப சாமானை நீட்டுவான்.

அதை வாங்கிக்கொண்ட நிர்வாகி, 'உனக்கு பதிலுக்கு இந்த சின்ன டப்பாவினுள் இருப்பது வேண்டுமா? இல்லே, அந்தத் திரைக்குள் இருப்பது வேண்டுமா? என்று கேட்பான். நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் நபர் பெரிசாய் ஆசைப்பட்டு திரை என்பான். திரையைத் தூக்கினால் நூறு செங்கல் இருக்கும். சின்னப் பெட்டிக்குள் புதுசாய் கார் ஒன்று வாங்க செக் இருக்கும்.

அடுத்தவன் முதல்வனின் ஏமாற்றத்தைப் பார்த்து ஜாக்கிரதையாய் சின்னப் பெட்டியில் இருப்பது வேண்டும் என்பான். திறந்தால் பல் குத்தும் குச்சி இருக்கும். திரைக்குப் பின்னால் வீட்டுக்கான சோபா செட், டி.வி. எல்லாம் இருக்கும்!

தினம் அரைமணி நேரத்துக்குப் பத்துப் பேர்களுடனாவது பேரம் பண்ணி நிகழ்ச்சியை நடத்துவான் நிர்வாகி.



பார்த்துக்கொண்டே இருக்கும் விசாலிக்கு ஆச்சரியமாய் இருக்கும். எதற்காக சும்மா இருக்கிறவர்களையெல்லாம் கூப்பிட்டு அள்ளி அள்ளிக் கொடுக்கிறான்? ஆதாயம் இல்லாமல் இருக்குமா? யாரிடம் சந்தேகத்தைக் கேட்பது? குமாரிடமா? வேண்டாம், இந்த சந்தேகம் தீர்ந்து என்ன செய்யப்போகிறோம்?

அன்றும் அந்த புதன்கிழமை காலையிலும்—'வெட் அல் மேக் எ மேல்' என்ற அந்த நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு எழுந்தாள் விசாலி.

குளிக்கலாமா? இல்லை சமைக்கலாமா? தலைக்குக் குளிச்சுட்டு, ஸ்வாமி விளக்கு ஏத்தினா என்ன? அம்மா கேட்டு எழுதி இருக்காளே? எனக்காக வேண்டாம், அம்மா, அண்ணா ஞானம் எல்லாருக்கும்—என் ஜூலிகூடத்தான்—நன்னா இருக்கட்டும்னு பிரார்த்தனை பண்ணினா?

விசாலி மாடிக்குப் போய் குளித்தபின், பேஸ்மெண்டுக்குப் போனாள்.

படத்தைத் துடைத்து, விளக்கை ஏற்றினாள்.

''மனசுக்கு நிம்மதியைக் கொடு. எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக்கிற சக்தியைக் கொடு'' என்று வேண்டி நமஸ்கரித்த பின் மேலே வந்து சமைக்கத் தொடங்கினாள்.

மத்தியானம் விசாலி சமையல். ஜூலி 'இண்டியன் குக்கிங்' வேண்டும் என்றால் மாலையும் அவள் சமைப்பாள். இல்லாதபோனால் காலையில் சமைத்ததையே விசாலி மட்டும் ராத்திரி சாப்பிட, குமார், ஜூலிக்கும்—தனக்கும் தேவையான மாமிச உணவைத் தயாரிப்பான்.

அசைவ உணவைச் சமைக்கும்போது எழும் நெடியை விசாலி தாங்கமுடியாமல் தவித்ததால் ஏதோ மனமிரங்கி ''உனக்குக் கஷ்டமா இருந்தா அந்தண்டை போயிடு'' என்று குமார் சொல்லிவிட்டான். அந்தமட்டுக்கும் விசாலி பிழைத்தாள்.

சமையல் ஆனது—

மணி என்ன...?

பன்னிரண்டு—இன்னும் அரைமணி கழித்து சாப்பிட்டால் போதும்! சோபாவில் சாய்ந்தவண்ணம் இன்னொரு முறை அம்மாவின் லெட்டரைப் படிக்கக் கையில் எடுத்தாள் விசாலி.

கடைசியில், ''உன் சௌகரியத்துக்கும் மாப்பிள்ளை சௌகரியத்துக்கும் அடிக்கடி லெட்டர் போடு. உடம்பைப் பார்த்துக்கொள். வாரம் வாரம் எண்ணெய் தேய்த்துக் குளி. மற்றபடி 'குளித்த' விவரத்துக்கு லெட்டர் போடு. உன் அன்புள்ள அம்மா'' என்று எழுதியிருந்ததைப் படித்தபோது திடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

'குளித்த' விவரத்துக்கு லெட்டர் போடு.

எப்படி நேத்திலேந்து இந்த வரியை மனசில் வாங்கிக்காமல் படிச்சேன்?

இன்னிக்கு தேதி என்ன? என்னிக்குக் கல்யாணம் ஆச்சு? ஸ்டடியில் ஒரு டெஸ்க் காலெண்டர் இருந்த இடம் நோக்கி ஓடினாள்.

கல்யாணத்துக்கு இரண்டு நாள் முன்னாடித்தான் தூரம் குளிச்சேன். இன்னிக்குக் கல்யாணமாகி முப்பத்தி ஆறுநாளா ஆறது...? அப்படீன்னா?—முப்பத்தாறும் இரண்டும், முப்பத்தெட்டு! வழக்கமாக முப்பத்திரண்டு, முப்பத்தி மூணு நாள்லே உட்கார்ந்துடுவேனே! மேற்கொண்டு ஆறுநாள் ஆயிடுத்தே! அப்படீன்னா? ஐயோ! கடவுளே—நான் பிள்ளையாண்டு இருக்கேனா? இந்த அயோக்கியன் குமாரோட பிள்ளை என் வயத்துலே வளர்றதா? சித்த முன்னாடித்தானே 'எனக்கு நிம்மதியைக் கொடுன்'னு வேண்டிண்டேன்.



இருக்கிற நிம்மதியும் போயிடுத்தே. என்ன பண்ணறது? 'ஒரு வருஷத்துக்கு குழந்தை வாண்டாம். சந்தோஷமா இருந்துட்டு அப்புறம்தான் என்ன?'னு குமார் கேட்டுட்டு மேட்ரானிலே ஒரு லேடி டாக்டர்கிட்டே கூட அழைச்சிண்டு போனானே, எப்படி உண்டானேன்?

ஆமா நா பிள்ளையாண்டு இருக்கிறது ஊருக்குத் தெரிஞ்சா இந்தத் ''தங்கை கதை என்னாகும்? நிச்சயமா குமாரையும் மீறிண்டுதான் ஏதோ தப்பு நடந்திருக்கு. இப்போ இந்த சமாசாரம் தெரிஞ்சா அவன் தன் வாழ்க்கை போயிடும்னு, துடிப்பானே! அந்த ஆத்திரத்தை என்மேல் தானே காட்டுவான்?

அழாமல் விரக்தியுடன் இருந்த விசாலிக்கு இப்போது பொத்துக்கொண்டு அழுகை எழ, ''ஐயோ—ஓ...அம்மா...!'' என்று வாய்விட்டுத் தலையில் அடித்துக்கொண்டு அழுதாள்.

# 23 முப்பத்தெட்டாவது நாள்

பயம், பயம், பயம்—இது விசாலியைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது. அவள் வேண்டாத தெய்வமில்லை; சொல்லாத ஸ்லோகம் இல்லை.

வயத்தை வலிக்கிறதோ, முகத்தில் பரு வந்திருக்கோ, என்று ஒவ்வொரு நிமிஷமும் கவனித்துக்கொண்டு ஏமாந்து போனாள்.

நாற்பது நாள் கணக்கு ஆறதே! அப்படீன்னா வாந்தி, தலை சுத்தல் வராதோ? வரலியே நா சாதாரணமாதானே இருக்கேன். சில சமயம் இப்படி முன்னப் பின்னே தூரம் வரது சகஜம்னு ஒரு சமயம் சாஸ்திரிகள் ஆத்து மாமிகிட்டே அம்மா சொன்னாளே! அந்தமாதிரி இந்தத் தடவை எனக்கும் ஆயிடுத்தோ?

இருக்கும்—இருக்கும் ஊர் விட்டு ஊர் வந்திருக்கோம். சாப்பாட்டிலே மாறுதல், அலைச்சல். மனசிலே முதல்லே அசாத்தியமா கிளுகிளுப்பு, அப்புறம் ஏமாத்தம். இப்போ வேதனை—எல்லாம் இருக்கறதுனாலே உடம்பும் பாதிக்கப் பட்டு இருக்கலாமோ? இன்னும் இரண்டுநாள் போனா தன்னாலே ஆகலாம். கண்டிப்பாய் வந்துடும்.

பகலெல்லாம் இப்படித் தேற்றிக் கொண்டாலும், இரண்டு நாட்களாய் 'தன்னையேதான் ஏமாத்திக்கிறோம்' என்பது விசாலிக்குப் புரிந்துதான் இருந்தது.



அலைச்சல், அலைச்சல்னா சூடு...

சூடுன்னா கருக்கனா வரணும்! நாபெரியவளானதுலேந்து இன்னிவரை எனக்கு ஒருநாள் இப்படி அப்படி கிடையாது. மணி அடிச்சு கூப்பிட்ட மாதிரின்னா 'டாண்'னு வந்துடும்!

இது பிள்ளைதான். இதை கலைச்சால்தான் நா பிழைச்சேன். இல்லாட்டா உடம்பு பூராவையும் இவன் வேக வைச்சாக்கூடப் பட வேண்டியதுதான்.

என்ன பண்ணலாம்?

ஐயோ...அம்மா...ஆ...

பாத்ருமுக்குள் ஓடி... கதவைச் சாத்திக்கொண்டு அழுதாள் விசாலி.

அவளுக்கு விஷயம் புரிந்த தினம் புதன். இன்று வெள்ளி.

ஜானி, குமார் இரண்டுபேரும் நாளையும், மறுநாளும் வீட்டிலேயே இருப்பார்கள். அவர்களுக்குத் தெரியாமல் அழுவதுகூடக் கஷ்டமாயிற்றே!

குமார் எமகாதகன்! நேற்றுக் கேட்டுவிட்டான்: ''ஏன் உன் மூஞ்சி ஜிவு ஜிவுனு இருக்கு? அழுதாயா?''

இவனிடம் பொய் சொன்னால் பிய்த்துவிடுவானென்று தெரியும்.

''அம்மா லெட்டர் பார்த்ததுலேருந்து ஊர் ஞாபகமா இருக்கு. அதான்...''

கிட்டத்தில் வந்து, ''அசடு'' என்று அணைத்து முத்தமிடப் போகும் தருணத்தில் சொல்லாமல் கொள்ளாமல் ஜானி வந்துவிட்டான்.

குமார் குனிந்து விசாலியின் கண்களை ஊதுவதுபோல பாவனை செய்து, ''கண்ணுக்குள் ஏதோ போய் உறுத்துகிறதாம்—அதான் பார்த்தேன்'' என்றவன், ''ஊரிலிருந்து அம்மா லெட்டர் போட்டிருக்கிறாள், ஜானி! 'என் பேரன்

எப்போது பிறக்கப்போகிறான். எனக்கு உங்களை எல்லாம் பார்க்க வேண்டும்போல ஆசையாய் இருக்கிறது' என்று எழுதியிருக்கிறாள். அம்மா கடிதத்தைப் பார்த்ததிலிருந்து இரும்ப இவளுக்கு ஊர் ஞாபகம். பாவம், அதான் சமாதானம் செய்துகொண்டிருந்தேன்'' என்றும் ஒரே நொடியில் பிரவாகமாகப் பேசி, ஊர்மியின் கிட்டத்தில் சென்று அவள் வயிற்றில் காதை வைத்துக் கேட்டு, ''ஹி—மை ஸன் ஹவ் ஆர் யூ? யுவர் க்ரானி வாண்ட்ஸ் டு ஸீ யு ஸூன், பேபி'' என்றான்.

''நாட்டி'' என்று அவன் தலையில் தட்டிய ஊர்மி, அவன் கையைப் பிடித்து அழைத்துப் போனாள்.

பார்த்துக்கொண்டே நின்ற விசாலிக்குக் குமட்டியது.

அயோக்கிய ராஸ்கல். படவா...பொண்களை மேயற பொறுக்கி!

எத்தனை தைரியம் இருந்தால், என்னைக் கட்டிண்டதை இவ பார்த்தபிறகு இத்தனை அழகாய் பேசி, சிரிச்சு அவளைச் சமாளிப்பான்?

அவன் பேசியது விசாலிக்குப் புரியவில்லை என்றாலும் அவன் அவளிடம் மலர்ந்து பேசி, வயிற்றில் காதை வைத்துக் குழைந்ததும், ஊர்மி மகிழ்ந்ததும்—தூ அசிங்கம் ..

இவன் பிள்ளையை என் வயத்திலே சுமக்க நா எத்தனை பாவம் பண்ணியிருக்கணும்...?

ஐயோ கடவுளே! எனக்கு இந்தக் குழந்தை வாண்டாமே. இது கர்ப்பமா இருக்கக்கூடாதே...

என்ன பண்ணலாம்?

நம்ம ஊரில் பப்பாளிப் பழம் சாப்பிடலாம்; எள்ளை வெல்லத்தோடு அரைத்துச் சாப்பிடலாம் என்பார்கள். இங்கு பப்பாளிப் பழம் கிடைக்குமோ? ஓ! அன்னிக்கு ஷாப்பிங் சென்டரில் காய்கறி, பழம் விற்கிற இடத்தில்



பார்த்தேனே; அது பப்பாளிதானே? ஆமாம்! அதை வாங்கணுமே—அப்புறம் இந்தத் தடியன்கிட்டே கேட்டா எப்படி யாவது என்று கொண்டுவந்து கொடுப்பான். கொஞ்சம் தாஜா பண்ணிப் பேசிப் பார்க்கலாமா? வேறு வழி...

மாலை மணி நாலிருக்கும்.

குமார் அலுவலகத்திலிருந்து வந்துவிட்டான். மாடிக்குப் போய் அவன் முகம் கழுவி வருவதற்குள் என்றுமில்லாத அதிசயமாய் ஊர்மியும் வீடு திரும்பிவிட்டாள். மறுநாளிலிருந்து அவள் வீட்டோடு தங்கப்போவதால் இன்றைக்கு ரொம்ப அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கவில்லையாம். அதனால் வேலை சுருக்க முடிந்து இவர்களுக்கு ஒரு 'சர்ப்ரைஸ்'ஸாக இருக்க எண்ணி போன் பண்ணாமல் வந்துவிட்டாள். காப்பி சாப்பிட்ட பிறகு, ''வருகிறாயா விசாலி ஷாப்பிங் சென்டர் வரை போய்வரலாம்?'' என்று நிறுத்திப் பொன்று ஊர்மி கேட்டாள்.

''இப்போது என்ன திடீரென்று, ஊர்மி? நாளையிலிருந்து நீ வீட்டில்தானே இருக்கப்போகிறாய்? மெதுவாய் கடைக்குப் போய் வரலாமே...''—குமார் டி.வி.யில் 'பேஸ்பால்' விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தவன் பதில் பேசினான்.

''நாளையிலிருந்து மாடி நர்ஸரியில் வேலை செய்ய ஆட்கள் வருகிறார்கள். குழந்தை பிறக்கும் நாள் கிட்டத்தில் வந்துவிட்டது. இன்னும் அறை அலங்காரத்தை முடிக்காவிட்டால் எப்படி? அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வேலை சரியாய் இருக்கும். அதனால் இன்று போய் வாங்க வேண்டியவற்றை வாங்கிவிட நினைக்கிறேன்.''

''நீ எதற்காக அலைகிறாய், பேபி? என்னென்ன வேணும் என்று சொல். நான் போய் வருகிறேன்.''

''டோண்ட் பாதர்! ஐ வாண்ட் டு கோ மை செல்ஃப்.''

இந்த ஜானியிடம் எப்போதுமே இந்தப் பிடிவாதம் தான் அவளுக்குப் பிடிக்காது. 'முயலுக்கு மூன்று கால்தான்' என்றால், நாலாவது காலை வெட்டிக் காட்டுவான்!

''விசாலி, லெட்ஸ் கோ. கெட் யுவர் ஓவர் கோட்.''

விசாலி புரிந்துகொண்டு கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

''நானும் வரட்டுமா?''

''ஏன்...? உன் தங்கையை நான் ஒன்றும் பண்ண மாட்டேன். நீ டி.வி.யைப் பார்.''

ஜானியுடன் தனியாக விசாலி போவது இதான் முதல் தடவை.

காரில் ஏறும்வரை குமார் கூடவே வந்தான்.

கார் கிளம்பிப் போனது.

குமார் வராதது நல்லது. பப்பாளிப்பழம் வாங்கிடலாம். பழத்தைத் தொட்டுக் காட்டி, 'இது வேணும்' என்றால் தங்கமாய் ஜானி புரிந்துகொள்வானே...

விசாலி ஜானியைப் பார்த்துச் சிரித்தாள்.

ஷாப்பிங் சென்டருக்கு முன் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே முதலில் 'புட்ஸ்டோரு'க்குள் நுழைந்தார்கள்.

இந்த ஷாப்பிங் சென்டர் ரொம்பப் பெரியது. நடந்தால் காலை வலிக்கக்கூடிய கடைகள் அடுத்தடுத்து இருந்தன. ஒன்றினுள் புகுந்துவிட்டால் மற்ற கடைகளுக்கு வெளியில் வராமலேயே போய் வரலாம்.

ஜானி பால், முட்டை மற்றும் சில அத்தியாவசியமான சாமான்களை அந்தந்த கௌண்ட்டரிலிருந்து எடுத்து வண்டியினுள் வைத்தான்.



மறுநாள் மாடியிலிருந்த 'குழந்தை ரூமி'ல் வேலை செய்ய சில குறிப்பிட்ட சாமான்களை தச்சன் கேட்டிருந்தான். அறைக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை டவுனில் ஆர்டர் பண்ணியது வந்துவிட்டன. விட்டுப்போன சில்லறைச் சாமான்களை வாங்குவதற்காக டவுனுக்குப் போக வேண்டாமே. பக்கத்து 'ஆல்பர்ஸ்' கடையில் வாங்கினால் என்ன என்று யோசித்த ஜானி, பக்கவழி வழியாக அந்தக் கடைக்குள் நுழையப்போனான். சமுத்திரம் மாதிரி பெரிய அந்த 'ஆல்பர்ஸ்' கடைக்குள் நுழைந்தால் திரும்ப பப்பாளிப் பழம் வாங்க இங்கு வரமுடியுமோ, முடியாதோ என்ற எண்ணத்தில் ஜானியின் கையைப் பிடித்து நிறுத்தினாள் விசாலி.

உணவுக் கடையின் உட்பக்கம் கையை நீட்டி, 'அங்கே போகலாமே' என்றாள்.

ஜானி வேறு விதமாய் அர்த்தம் கொண்டான். 'நான், இங்கேயே இருக்கிறேன். நீ மட்டும் போய்வா' என்று சொல்லுவதாக எண்ணி, ''ஆல் ரைட் யூ பி ஹியர். ஐ வில் பி பாக் இன் ஃப்யூ மினிட்ஸ்'' என்று சொல்லி, பக்கத்துக் கடைக்குள் நுழைந்து மறைந்துபோனான். கைவண்டியை ஒரு பக்கமாகத் தள்ளி வைத்துவிட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள் விசாலி.

பப்பாளிப் பழம் இன்னிக்கு இருக்குமோ...?

ஏதேச்சையாய் திரும்பின விசாலி அதிர்ந்து நின்றாள்.

புடவை! புடவை கட்டிக்கொண்டு ஒரு பெண்மணி. கறுப்புத் தலைமுடி, நெற்றி வகிட்டில் சிகப்புக் குங்குமம்.

தெய்வமே—இவ நம்மூர்க்காரியா? நா கனவிலேயும் எதிர்பார்க்காத சந்தர்ப்பமா?' 'ஓடு—ஓடு அவ காலிலே விழு. விஷயத்தைச் சொல்லு'—மனசு ஆர்ப்பரித்தது.

நாலே எட்டில் அவளை நெருங்கின விசாலி, அந்தப் பெண்மணியின் காலில் விழுந்து, ''காப்பாத்துங்கோ—என்னை காப்பாத்துங்கோ'' என்று மெல்லிய குரலில் அரற்றினாள்.

அந்தப் பெண்மணிக்குத் திடுக்கிட்டுப் போயிற்று. புடவையை அணிந்த சின்னப் பெண் ஒருத்தி எதற்காகத் தன் காலில் வந்து விழுகிறாள், ஏன் அழுகிறாள்? எந்த பாஷையில் பேசுகிறாள்?

''ஆப் ஹிந்துஸ்தானி ஹை க்யா?''

'ஐயோ கடவுளே—இவ ஹிந்திக்காரியா? நா என்ன பண்ணுவேன்? எப்படிப் புரியவைப்பேன்? ஜானி வந்துடுவானே...''

—பதறினாள் விசாலி, மாலை மாலையாய் கண்ணீர் பெருக இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு, ''காப்பாத்துங்கோ தயவுபண்ணிக் காப்பாத்துங்கோ!'' என்று விசும்பினாள்.

அந்தப் பெண்மணிக்கு தர்மசங்கடமானது.

யார் இவள்? ஹிந்தி புரியவில்லையே! ஸவுத் இண்டியனா?

''ஹூ ஆர் யூ...? இண்டியன்!''

விசாலிக்கு இப்போது அவள் கேட்டது புரிந்தது.

பலமாக தலையை ஆட்டிக்கொண்டு; ''நா இண்டியன்... இண்டியன்'' என்றாள்.

நல்ல வேளையாக அந்தக் கௌண்ட்டரில் யாருமே இல்லை. அன்றைக்குக் கடையில் கூட்டம் ரொம்பக் கம்மி.

ஹிந்திக்காரிக்கு மனசு என்னமோ செய்தது.

''க்யா சாஹியே? குச் ப்ராப்ளம் ஹை...?''

பாஷை புரியலையே...? எனக்கு ஹிந்தியும் தெரியலை... ஒரு மண்ணும் தெரியலை. பாவி...பாவி...



சட்டென்று முதல் நாள் சினிமாவிலே கேட்ட வார்த்தை ஞாபகம் வந்தது. நெருப்புப் பிடித்துக்கொண்ட கட்டத்திலிருந்து, 'ஹெல்ப் ஹெல்ப்' என்று ஒரு சின்னப் பையன் கத்தினானே...உதவி கேட்டு அவன் 'கத்தறான்னு' குமார் விளக்கினானே!

எழுந்து அந்தப் பெண்ணின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். 'அம்மா...அம்மா ஹெல்ப்...நா இண்டியன்...ஹெல்ப்...'' என்று விடாது கெஞ்சினாள்.

''இந்தப் பெண் ஆபத்தில் இருக்கிறாளா? உதவி என்று அழுகிறாளே...சுற்றுமுற்றும் வேறு பார்க்கிறாள்—யாராவது கூட வந்திருப்பவர்களைக் கண்டு பயப்படுகிறாளோ?''

—சின்னப் பெண்ணாய் பால் வடியும் அழகோடு விசாலி அழுதது அந்தப் பெண் இதயத்தை நெகிழ வைத்தது!

''வாட் ஸல் இட்? டெல் மி...ஐ'வில் ஹெல்ப் யூ'' என்றாள்.

விசாலிக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. என்ன செய்வாள்? ஜானி வந்துவிடுவானோ? அப்புறம் அந்தத் தடியன் இல்லாமல் இவள் தனியாக எப்போது வர முடியுமோ? இந்தியப் பெண்மணியும் அன்று வர வேண்டுமே!

பக்கத்தில் குப்பைக் கூடை இருந்ததை விசாலி பார்த்தாள். பாய்ந்து சென்று ஒரு பிஸ்கெட் பேப்பரை எடுத்தாள். ''பேனா...? பேனா இருக்கா...?''

கைப்பையிலிருந்து பேனாவை பெண்மணி எடுத்துக் கொடுக்க, கௌண்ட்டர்மேல் பேப்பரை வைத்து விசாலி எழுதினாள்: 'அண்ணா காப்பாத்து. ஆபத்து! அண்ணா காப்பாத்து.' சற்றுத் தூரத்தில் 'விசாலி' என்று ஜானி கூப்பிடும் சப்தம் கேட்டது.

பரபரவென்று தன் ஆதிச்சபுரம் விலாசத்தை தமிழ்ப் பேப்பரின் மறுபக்கம் எழுதினாள். 'இண்டியாலே மெட்ராஸ் அட்ரஸ்—போஸ்ட் பண்ணிடுங்கோ. தயவுபண்ணி—ஹெல்ப் ...'' அந்தப் பெண்மணியின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டு குனிந்து பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்து பேப்பரை அவளிடம் நீட்டினாள் விசாலி.

கையை நீட்டி அந்தப் பெண், பேப்பரை வாங்குவதற்கும் ஜானி, ''வாட் ஆர் யூ டூயிங் ஹியர், வைசாலி?'' என்று கேட்டுக்கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது.

தரையில் மண்டியிட்டு, அழுத கண்களோடு இருக்கும் விசாலியைப் பார்த்து அவள் அதிர்ச்சியுற்றாள்.

''வொய்? வாட் ஹாப்பண்ட்?''

எழுந்து ஜானியின் முதுகுப் பக்கம் நின்று, மீண்டும் இரண்டு கைகளையும் கூப்பி, 'இவளிடம் ஒன்றும் சொல் லாதே' என்ற பாவனையில் முகத்தை வைத்துக்கொண்டு விசாலி கெஞ்சினாள்.

வார்த்தைகளுக்கு இல்லாத சக்தி கண்களுக்கு உண்டல்லவா?

ஹிந்திக்காரி புரிந்துகொண்டாள்.

மெல்ல விசாலி கொடுத்த பேப்பர் துண்டை கைப்பை யில் போட்டுக்கொண்டே, ''நத்திங்; ஷி ஜஸ்ட் ஸ்லிப்ட்... தட்ஸ் ஆல்...!'' என்றாள்.

''விழுந்தாயா? அடிபட்டதா? எங்கே வைசாலி'' என்று ஜானி கேட்பது புரியாமல் கூப்பிய கரங்களுடன், ஹிந்திக் காரி ஓர் ஆறுதலான சிரிப்போடு நகர்வதையே விசாலி பார்த்துக்கொண்டிருந்தாள்.

# 24

## முப்பத்துஒன்பதாவது நாள்

பேனர்ஜியும், ஷீலா பேனர்ஜியும் அமெரிக்காவில் குடியேறி வருஷம் ஏழாகிவிட்டது; அதன் பிரஜைகளாக மாறி வருஷம் ஒன்றாகிவிட்டது!

பேனர்ஜி கெட்டிக்காரன், அதிபுத்திசாலி. எம்.பி.ஏ படித்தவன். ஷிகாகோவின் மிகப் பிரபல்யமான கம்பெனி ஒன்றில் நல்ல வேலையில் இருந்தான். கை நிறைந்து வழிந்து ஓடும் அளவுக்குச் சம்பளம். சௌகர்யமான வீடு, கார் இத்யாதி...இத்யாதி.

தருண்குமார் போஸ் ஷீலாவின் தம்பி. பி.ஏ.படித்து அரசாங்க அலுவலத்தில் ஆடிட்டராக இருந்தவனுக்கு நல்ல யோக ஜாதகம். 'இரண்டு வருஷத்துக்கு வாஷிங்டன் இந்திய ஆதரகத்து அக்கௌண்ட்ஸ் ஆபீசராக டெபுடேஷனில் உன்னை அனுப்புகிறோம்' என்று அரசாங்கத்தில் அனுப்பி வைத்தார்கள்.

பிரும்மச்சாரி. அக்கா வேறு ஷிகாகோவில் இருக்கிறாள். தருணுக்கு என்ன? கொண்டாட்டம்தான்!

அமெரிக்கா வந்து, அங்கு வாழ்க்கையை அனுபவித்த வனுக்கு இரண்டு வருஷம் ஓடின ஓட்டம் தெரியவில்லை. இன்னும் சரியாய் இரண்டு வாரங்கள். அப்புறம் 'டாடா' சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்...

முடிந்தபோதெல்லாம் தம்பி ஷிகாகோவுக்கு வருவான்; இல்லையென்றால் அக்கா, அத்திம்பேர் குழந்தை உத்தம் சகிதமாய் வாஷிங்டனுக்குப் போவார்கள். அதுவும் இல்லையென்றால் காரை எடுத்துக்கொண்டு மியாமி, ஹூஸ்டன் என்று ஒரு முறையும்; மறுசமயம் லாஸ்ஏஞ்சல்ஸ், மெக்ஸிகோ என்றும் நாய் அலைச்சல் அலைந்துவிட்டு வருவார்கள்?

அந்த ஊரில் கார் பயண சௌகரியத்துக்குக் கேட்க வேண்டுமா...? மணிக்கு எண்பது மைல் பறக்கும் கார், துடைத்துவிட்ட மாதிரி மேடு பள்ளம் இல்லாத வழவழா சாலைகள், ஆங்காங்கே சர்வ வசதிகளையும் கொண்ட கார் ஸ்டேஷன்; ஹோட்டல்கள்—கையில் காசு இருந்தால், மனசில் ஆசை இருந்தால், அமெரிக்காவில் சௌகரியங்கள் இருக்கின்றன. அப்புறம் அனுபவிக்க என்ன தடை...?

தருண் வாஷிங்டனில் இருந்தது ஷீலாவுக்கு ஒரு தெம்பு.

ஆயிரம் இருந்தாலும், நம்ம குடும்பத்து ஆள் ஒருத்தன் அருகிலேயே இருக்கிறான் என்ற தெம்பு.

இன்னும் இரண்டு வாரங்களில் அவன் தாயகம் திரும்பி விடுவதில் அவளுக்கு வருத்தமே.

ஏதோ இந்த மட்டும் இரண்டு வருஷமாவது கூட இருந்தானே என்று திருப்திப்பட வேண்டியதுதான்...

கடந்த வியாழன், வெள்ளி ஷிகாகோவுக்கு வேலையாய் வந்தவன் இவர்களோடு தங்கிவிட்டு, இன்று காலை ப்ளைட்டில் வாஷிங்டனுக்குத் திரும்புகிறான்.

காலை மணி ஆறரை. தம்பிக்குப் பிடித்தமான டிபன்களைத் தயாரிப்பதில் ஷீலா ஈடுபட்டிருந்தாள்.

அடுத்த சனி, ஞாயிறு அவனுக்கு மூட்டை கட்ட வேண்டிய வேலை இருக்கிறதாம். ''முடிந்தால் ஊருக்குப்



போகுமுன் ஒருநாள் வருகிறேன், இல்லாவிட்டால் இப்போதே சொல்லிக்கொண்டுவிடுகிறேன்'' என்று தருண் வந்து இறங்கினதுமே சொல்லிவிட்டான்.

''இன்றும் நாளையும் சனி, ஞாயிறுதானே—இருந்துவிட்டுப் போயேன்...''—ஷீலா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ம்ஹூம்...முடியாதாம். தருணுக்கு வாஷிங்டனில் இன்று மதியம் இருந்தாக வேண்டுமாம்...

தருண் டிப்ளமாடிக் சர்வீஸைச் சேர்ந்தவன். சாமான் சஜ்ஜா தடையில்லாமல் கொண்டு போகலாம். இவர்களைத் தடுத்து நிறுத்தி ஆயிரம் கேள்விகள் கேட்டு, பெட்டிகளைத் தலைகுப்புறக் கவிழ்த்து ஆட்டுவைப்பதைப்போல, அவனிடம் இந்திய கஸ்டம்ஸார் சோதனை செய்யமாட்டார்கள். அதனால் ஊருக்கு என்னென்ன சாமான்கள் வாங்கி அனுப்பலாம் என்று யோசித்து இரண்டு நாளாய்ச் சேர்த்தாள் ஷீலா.

அன்று மாலை ஐந்து மணிக்கு லிண்டாவைப் பார்க்க வருவதாக அவள் சொல்லி இருந்தாள். லிண்டா, ஆர்லிங்டன் ஹைட்ஸில் இருக்கும் தோழி, பிள்ளை பெற்று நாலு நாட்களாகின்றன. அவளைப் பார்ப்பதற்கு முன்னால் கிட்டத்தில் இருக்கும் ஷாப்பிங் சென்டருக்குப் போய் சாமான்களை வாங்கிவிட்டால் என்ன...? ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

ஷீலா கிளம்பினாள்.

பேனர்ஜி அலுவலகத்திலிருந்து திரும்பவில்லை. அவர்களுடைய மூன்று வயசுப் பிள்ளை உத்தம், நான் வரவில்லை என்று கடைசி நிமிஷத்தில் ஸ்ட்ரைக் பண்ணவே, தருண் வீட்டில் குழந்தைக்குத் துணையாய் இருக்க, இவள் மட்டும் மூன்று மணி அளவில் கிளம்பினாள்.

ஷாப்பிங்கை முடித்துக்கொண்டு, லிண்டாவையும் பார்த்துவிட்டு மாலை ஆறுக்குள் வீடு திரும்பிவிட்டாள்.

இரவு சாப்பாடு ஆனதும், ஊருக்கு அனுப்பவேண்டிய சாமான்களைக் கட்டி முடித்துவிட்டு அவர்கள் மூவரும் பன்னிரண்டுவரை ஏதேதோ பேசினபிறகே படுக்கப் போனார்கள்.

இன்று காலை ஆறுக்கெல்லாம் எழுந்துவிட்டாள் ஷீலா.

ஏழு மணிக்கு தருணை விமானக்கூடத்தில் விட இவர்கள் கிளம்பிப் போக வேண்டும்.

தம்பிக்குப் பிடித்த ரஸமலாயை பிரிஜ்ஜிலிருந்து எடுத்து டேபிளில் வைத்தாள். மற்ற டிபன் ரெடியானதும், தன் அறைக்குப் போய் ஹவுஸ் கோட்டைக் களைந்து—புடவை உடுத்தி வெளியே வந்தவள், ''தருண்! நாழியாயிடுத்து, டிபன் சாப்பிட வா...'' என்று குரல் கொடுத்தாள்.

பேனர்ஜி, தருண், இவள், உத்தம் எல்லாரும் டிபன் சாப்பிட உட்கார்ந்தார்கள். பெங்காலிகள் காலையில் இனிப்பு சாப்பிட அஞ்சமாட்டார்கள்.

ரஸமலாய் பாத்திரம் காலியானது.

டிபன் முடிந்து டீ அருந்தினதும் புறப்பட்டார்கள்.

காரை பேனர்ஜி ஓட்டினான், ''அம்மா, எனக்கு ஒரு 'கம்' தா—'' உத்தம் ஷீலாவின் பையில் எப்போதும் இருக்கும் சூயிங்கம்மைக் கேட்டான். கணவன், தம்பியுடன் பேசியவண்ணம் பையில் 'கம்'மைத் தேடினாள் ஷீலா. கிடைக்கவில்லை. பையை அப்படியே மடியில் கவிழ்த்து அதன் அடக்கங்களைக் கொட்டினாள்.

என்னென்னமோ பேப்பர்கள், பில், அட்ரஸ் புக், கூடவே முதல் நாள் விசாலி கொடுத்த பிஸ்கட் பேப்பர் துண்டு.

அந்தப் பெண் சமாசாரத்தை இவர்களிடம் சொல்லவே மறந்துபோச்சே பாம்!



''ஐ பர்காட் டு டெல் யூ பிபோர். நேற்று ஷாப்பிங் சென்டரில் என்ன நடந்தது தெரியுமா...? நான் சோப்புகள் வாங்கிக்கொண்டிருந்த போது ஒரு இந்தியப் பெண் ஓடிவந்து என் காலில் விழுந்தாள். அழுதாள். என்னென்னமோ சொல்லிக் கெஞ்சினாள். கடைசியில் 'ஹெல்ப், ஹெல்ப்' என்று மட்டும் இங்கிலீஷில் கேட்டு, கையைக் கூப்பி அழுதாள். அவள் ஒரு பேப்பரில் ஏதோ எழுதிக் கொடுத்து 'போஸ்ட்...மெட்ராஸ்' என்றாள் டுக் ஹியர்...''

பேனர்ஜியும், தருணும் இது என்ன சினிமாவில் வரும் சம்பவம் மாதிரி என்று ஆச்சரியப்பட்டார்கள்.

ஷீலா நீட்டின துண்டுப் பேப்பரில் எழுதியிருந்தது அவர்களுக்குப் புரியவில்லை.

''கூட யாரும் இல்லையா...?''

''அந்தப் பெண் பேசி முடிக்கும்போது ஒரு அமெரிக்கன் லேடி வந்தாள். நிறைமாச கர்ப்பிணி. அவள் நல்ல மாதிரியாகத்தான் தெரிந்தாள். ஆனால், அவளைக் கண்டதும் இந்தப் பெண் பயந்துபோய், அவள் முதுகுக்குப் பின்னால் நின்று, 'எதுவும் சொல்லாதே' என்பதுபோலக் கெஞ்சினாள்.''

''வாட் ஈஸ் திஸ் யார்...? ஹௌ கான் வீ நோ வெதர் தட் கேர்ல் நீட்ஸ் ஹெல்ப் ஜெனுவின்லி ஆர் நாட்...?''

''அவளைப் பார்த்தால் பரிதாபமாய் இருந்தது, தருண்! வலது கை நெருப்புக் காயம் மாதிரி புண்பட்டு இருந்தது. அவள் ஏன் நாலுபேர் பார்க்கும்படியான ஸ்டோரில் என்னிடம் அழவேண்டும்? காலில் விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்...?

''ஆமாம். இத்தனை நடந்திருக்கிறது; நேற்றே நீ சொல்லி இருக்கலாமே!''

''ஐ ஷுட் ஹாவ்—என்னமோ மறதி. விண்டோவைப் பார்த்தேனா...? பிறகு வீட்டுக்கு வந்து சாமான்கள் கட்டும் மும்முரத்தில் சுத்தமாய் மறந்துவிட்டது.''

''அந்தப் பெண் இங்கு தான் எங்கு இருக்கிறேன் என்றாவது சொன்னாளா...?''

''ம்ஹூம்— அவளுக்கு ஹிந்தியும் தெரியவில்லை, இங்லீஷும் தெரியவில்லை. ஐ திங்க் ஷி இஸ் எ ஸவுத் இண்டியன். கழுத்தில் மஞ்சள் கயிறு பார்த்தேன். கல்யாணம் ஆனவள்தான் போலிருந்தது. பட் ஷி வாஸ் ஸோ யெங். ஆல் மோஸ்ட் எ சைல்ட்—என்னிடம் அவள் பேசி, அழுது, எழுதிக் கொடுத்த நாழிகை ஐந்து நிமிஷம் கூட இருக்காது. அதற்குள் அந்த அமெரிக்கன் லேடி வந்துவிட்டாளே...''

''ம் நீ என்ன பண்ணியிருக்க வேண்டும் தெரியுமா, ஷீலா...? அவர்கள் கிளம்பிய பிறகு நைஸாக அந்தக் காரை தொடர்ந்து போய் வீடு எங்கே என்று பார்த்திருந்தால், நாம் அந்தப் பெண்ணுக்கு உதவுவது சுலபமாய் இருந்திருக்கும். இப்போது இந்தத் துண்டுப் பேப்பரை வைத்துக் கொண்டு நாம் என்ன பண்ண முடியும்...?''

''அந்த மாதிரி எனக்குத் தோணவில்லை. அமெரிக்கன் லேடி இவள் பேப்பர் கொடுத்ததைப் பார்த்திருப்பாளோ என்ற பயத்தில் சீக்கிரம் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட்டேன்.''

ஏர்போர்ட் அருகில் வந்துவிட்டது.

''அந்தப் பெண் ரொம்ப அழுதாள். ஐ ஸார்ட்டன்லி ஃபீல் ஸாரி ஃபார் ஹர்.''

மூவரும் மௌனமாக இருந்தார்கள்.

திடீரென்று நினைத்துக்கொண்டு ஷீலா சொன்னாள். ''அமெரிக்கன் லேடி அவளை ஏதோ பேர் சொல்லிக் கூப்பிட்டாளே...! நல்ல இண்டியன் நேம்...ம்...ஓ...எஸ்...— அவளை 'வைசாலி' என்று கூப்பிட்டதாய் நினைக்கிறேன்!

ஏர்போர்ட்டில் கார் நின்றது.



காரைவிட்டு இறங்கும்போது தன் கையிலிருந்த விசாலியின் துண்டுக் கடிதத்தை ஏதோ கவனத்தில் கோட்டுப் பையில் போட்டுக்கொண்ட தருண் பெட்டிகளை இறக்கினான்.

பேனர்ஜி காரை பார்க் செய்ய ஓட்டிக்கொண்டு போக இவர்கள் உள்ளே நுழைந்து லக்கேஜ் கவுண்ட்டருக்குப் போனார்கள்.

அத்துடன் விசாலியை அவர்கள் மூவருமே மறந்து போனார்கள்.

வாஷிங்டனை அடைந்த தருண்குமார் சாமான்களை அறையில் வைத்தபின், ஊருக்குப் போகுமுன் முடிக்க வேண்டிய சில அர்ஜெண்ட் வேலைகளைக் கவனிக்க இன்று அலுவலகத்திற்குப் பதினொருமணி அளவில் வருவேன் என்று சொல்லி இருந்ததால், அலுவலகத்திற்குப் போனான்.

தலையை நிமிர்த்தாமல் செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்து, கைகளை மேலே தூக்கி சோம்பல் முறித்து தருண் மணியைப் பார்த்தான்—ஒன்று.

அருகில் இருந்த கஃபேடேரியாவில் ஹாம்பர்கர் சாப்பிட்டு, காப்பி குடித்தான். பணம் கொடுக்க, பையில் கையை விட்டதும் பணத்தோடு, விசாலியின் துண்டுக் கடிதமும் கூடவே வந்தது.

அடடே, இது என்னிடம் வந்துவிட்டதா...? பாவம் அந்தப் பெண்! அவளுக்கு என்ன கஷ்டம்...? என்ன சொல்ல நினைத்தாள்? இதில் என்ன எழுதியிருக்கிறாள்? தெரிந்து கொண்டால் எத்தனை உபயோகமாய் இருக்கும்...?

பணத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும் அலுவலகத்துக்கு வந்தான். யோசித்துக்கொண்டே டைப்பிஸ்டுகள் இருக்கும் இடத்துக்குப் போனான்.

மக்கிஜானி மட்டும்தான் வேலைக்கு வந்திருந்தான்.

''குட்ஆப்டர்நூன், மக்கிஜானி.''

''குட்ஆப்டர்நூன். ஆப் கைஸே ஹை மிஸ்டர் போஸ் ஸாப்...?''

''இங்கு ரங்கநாதன் என்ற ஸவுத்இண்டியன் உண்டே... அவர் இன்று வேலைக்கு வரவில்லை...?''

''இல்லை'' என்றான் மக்கிஜானி. சில நிமிஷங்கள் மௌனமாய் இருந்த தருண், ''அவர் வீடு தெரியுமா?'' என்று கேட்டதற்கு, ''தெரியும்'' என்றான் மக்கிஜானி.

''எனக்கு ரங்கநாதனிடம் ஒரு வேலை இருக்கிறது வருகிறாயா...? போய் அவனை வீட்டில் பார்க்கலாம்'' என்று தருண் கேட்க, இருவருமாய் காரில் கிளம்பினார்கள்.

ரங்கநாதன் வீட்டில் இருந்தான். சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வந்தான் தருண்.

''எனக்கு ஓர் உதவி பண்ண வேண்டும்—இந்தச் சீட்டில் எழுதியிருப்பது எந்த பாஷை...? என்ன எழுதியிருக்கிறது? உங்களுக்குப் புரிகிறதா?''

ரங்கநாதன் வாங்கிப் படித்தான்:

'அண்ணா, காப்பாத்து ஆபத்து...காப்பாத்து!'

'தமிழ்மொழிதான், மிஸ்டர் போஸ்' என்ற ரங்கநாதன் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான்.

''பின்னால் எழுதியிருப்பதையும் பாருங்கள்...'' என்றான் தருண்.



ரங்கநாதன் படித்து விளக்கினான்...

'ராமச்சந்திரன்,

அக்ரஹாரம்

ஆதிச்சபுரம்,

விழுப்புரம்—(வழி)

மெட்ராஸ்.'

ஆக, இந்தியாவில் இருக்கும் 'அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதக்கூட வகையில்லாத பெண் ஒருத்தி இங்கு ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறாள். காப்பாற்ற வேண்டாமா...?

ரங்கநாதனையும் அழைத்துக்கொண்டு அம்பாஸிடரின் வீட்டுக்கே போனான் தருண். இந்திய தூதரின் மனைவி அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

சில நிமிஷங்களில் அம்பாஸிடரே வெளியில் வந்து அவர்களைத் தன் அறைக்கு அழைத்துப் போனார்.

ஷீலா சொன்னதை அப்படியே அவரிடம் ஒப்புவித்தான் தருண்.

இந்தியப் பெண், பாஷை தெரியாத சின்னப்பெண். கையில் நெருப்புக் காயங்களைக் கொண்ட பெண். ஆபத்தில் இருக்கிறாள் என்றால், அவளைக் காப்பாற்றுவது இந்திய தூதரகத்தின் தலையாய கடமை அல்லவா...?

அம்பாஸிடர் மனிதாபிமானம் கொண்ட உத்தமமான இந்தியர்!

''டெல்லிக்கு டெலக்ஸ் அனுப்பு. எக்ஸ்டர்னல் அஃபேர்ஸில் பட்டாச்சாரியாவுடன் தொடர்பு கொள்! அவசியமானால் டெலிபோனில் கூப்பிடு நானே பேசுகிறேன்'' என்று வரிசையாய் உத்திரவுகள் பிறப்பித்தார்.

# 25

## நாற்பதாவது நாள

ஆனந்தமான தூக்கத்தில் ஆழ்ந்திருந்த பட்டாச்சார்யா போன் மணி அடிப்பதைக் கேட்டு விழித்துக் கொண்டார்.

மணி என்ன...?

விடியற்காலை நான்கு—

இந்த ஜனவரி குளிரில், காலை நான்கு மணிக்கு எவன், இப்படிக் கழுத்தை அறுக்கிறான்...?

ரஜாயை உதறிவிட்டு எழுந்தார்.

''ஹலோ...கோன் ஹை...?''

''வாஷிங்டனிலிருந்து ட்ரங்க்காலாம்...''

பட்டாச்சார்யாவின் தூக்க மயக்கம் ஓடிப்போயிற்று.

இப்படி அகாலவேளையில் வாஷிங்டன் தூதரகத்திலிருந்து போன் வரவேண்டுமானால் விஷயம் ஏதோ இருக்கிறது.

''ஹலோ...மிஸ்டர் பட்டாச்சார்யா? ஸாரி டு டிஸ்டர்ப் யூ ஆட் திஸ் ஆட் அவர், வி ஹாவ் எ ப்ராப்ளம்...''

—அம்பாசிடரே பேசினார்.

வெள்ளி அன்று மிஸஸ் பேனர்ஜி ஷிகாகோ ஷாப்பிங் சென்டர் ஒன்றில் ஓர் இந்தியப் பெண்ணைச் சந்தித்த விவரத்தைக் கூறினார்.



''முதலில் டெலக்ஸ் அனுப்பலாம் என்று டாப்—சீக்ரெட் பிரிவில் ஒரு டெலக்ஸ் அரைமணி முன்பு அனுப்பினேன். அப்புறம் யோசித்துப் பார்த்ததில் கால தாமதம் ஆக ஆக அந்தப் பெண்ணுக்கு ஆபத்து என்று தோன்றியதால், உங்களிடம் நேரில் பேசுவதுதான் சரி என்று தோன்றியது. அந்தக் கடிதத்தை அனுப்பி அதன்பின் நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது நடக்காது. கடிதத்தில் உள்ள விஷயத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விலாசத்தோடு சொல்கிறேன், குறித்துக் கொள்ளுங்கள்...''

''அந்தப் பெண் ஷிகாகோவில் எங்கு இருக்கிறாள் என்று தெரியாதா...?''

''அது தெரிந்தால் நான் ஏன் உங்களைத் தொந்தரவு செய்யப்போகிறேன்? அந்தப் பெண்ணின் பேர் மட்டும் தெரிகிறது—வைசாலி.''

''மினிஸ்டருடன் பேசி என்ன செய்வது என்று முடிவெடுத்தபின் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்...''

பேசி முடித்து போனை வைத்தார் பட்டாச்சார்யா. எங்கோ அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் பெண்ணை நினைக்கையில் பாவமாக இருந்தது.

நல்ல வேளையாக மினிஸ்டர் ஊரில்தான் இருக்கிறார். எந்தப் பிரச்சினையையும் காது கொடுத்துக் கேட்டு, உடனே ஆவன செய்யும் புண்ணியவான்...

ஏழு மணி சுமாருக்கு மினிஸ்டர் வீட்டுக்குப் போன் செய்து அவரை அவசர வேலையாகப் பார்க்க வேண்டும் என்று காரியதரிசியிடம் சொல்லி, எட்டு மணிக்கு அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிக்கொண்டார்.

பட்டாச்சார்யா வெளி உறவு இலாகாவில் முக்கியமானதொரு பதவி வகிப்பவர். கூர்மையான புத்தி படைத்தவர். மந்திரிக்கு அவரிடம் பிடித்தம் உண்டு. இவர் போனபோது மந்திரி காலை உணவு அருந்திக்கொண்டிருந்தார்.

''உட்காருங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்...?''

''வெறும் காப்பி போதும்'' என்றார் பட்டாச்சார்யா. காப்பி வந்தது. மந்திரியின் குறிப்பு அறிந்து ஆட்கள் அறையை விட்டு விலகினார்கள்.

அம்பாஸிடர் போன் செய்ததையும் விவரங்களையும் பட்டாச்சார்யா கூறினார். உடனடியாகக் காரியத்தில் இறங்க வேண்டியது முக்கியம் என்பதைப் புரிந்துகொண்ட மந்திரி, ''எந்த விதத்தில் இந்தப் பிரச்சினையை அணுகலாம் என்று யோசித்துவிட்டீர்களா...?'' என்றார்.

''அமெரிக்க விலாசம் தெரியாமல் இருக்கும்வரை நமக்கு ரொம்பச் சிரமம்—அதனால் முதலில் அதைக் கண்டு பிடிக்க வேண்டும்...''

''எப்படி...?''

''துண்டுக் கடிதத்தில் இருக்கிற 'தமிழ் நாடு' விலாசத்துக்கு முதலில் ஆள் அனுப்ப வேண்டும். அந்தப் பெண் எழுதியிருப்பதிலிருந்து 'ராமச்சந்திரன்' என்பது அந்தப் பெண்ணின் அண்ணாவாக இருக்கலாம். அந்தப் பெண்—தாய் தகப்பன் அற்ற பெண்ணாகவும் இருக்கலாம். அதர்வைஸ் வொய் ஷுட் ஷி அட்ரஸ் த லெட்டர் டு ஹர் ப்ரதர்...? அண்ணனுக்குக் கண்டிப்பாய் தங்கையின் விலாசம் தெரிந்திருக்கக்கூடும். அப்புறம் நாம் அந்தப் பெண்ணை மீட்பது சுலபம், ஆனால்...?''

''என்ன ஆனால்...?''

''அந்தப் பெண்ணின் விலாசம் அண்ணனுக்குத் தெரியாமல் போனால் நம் நிலைமை திண்டாட்டம்தான்! வீட்டுச் சம்மதத்தோடு போயிருந்த பெண்ணின் விலாசம் இவர்களுக்குத் தெரியலாம். ஆனால் 'ஓடிப்போன' பெண்ணாக இருந்தால்? பெண், பார்க்க ரொம்பச் சின்ன வயசாக இருக்கிறாள் என்ற ஒரே பாயிண்ட்டை வைத்துக்கொண்டு தான் அவள் ஓடிப்போயிருக்க முடியாது—பெரியவர்கள் சம்மதத்



துடனேதான் சென்றிருக்கலாம் என்று நம்ப இடம் இருக்கிறது. ஏனென்றால் வயசு வராத பெண்ணுக்கு பாஸ்போர்ட், விசா, வாங்குவது கொஞ்சம் சிரமந்தானே?''

''ம்...'' மந்திரி யோசனையில் ஆழ்ந்தார்.

''பிரஸ்ஸுக்குக் கூடுமான வரையில் இந்த விஷயம் தெரியாமல் இருப்பது நல்லது, பட்டாச்சார்யா! ஏற்கெனவே அரபு நாடுகளில் நம் நாட்டுப் பெண்கள் அவதிக்கு உள்ளாகி இருப்பது பெரும் பிரச்சனையைக் கிளப்பி இருக்கிறது. ஐ டோண்ட் வாண்ட் திஸ் இன்ஸிடெண்ட் டு பி பப்ளிஸைஸ்ட், ஆபீசுக்குப் போய் அந்த டெலக்ஸ் மெஸேஜை நீங்களே வாங்கிக்கொள்ளுங்கள். இந்த விஷயமாக என்னுடன் நீங்கள் நேரடித் தொடர்பு கொள்ள அனுமதிக்கிறேன். உங்களுக்கு எந்த வழியில் நடவடிக்கைகள் எடுத்தால் சரி என்று தோணுகிறதோ, செய்யுங்கள். மை ஃபுல் கோ ஆபரேஷன் ஈஸ் தேர்...ஃபார் யூ...''

''விலாசம் தெரிந்துவிட்டால் சரி. தெரியாவிட்டால் என்ன செய்ய உத்தேசம்...?'' என்று மினிஸ்டர் கேட்டதற்குப் பதில் சொன்னார் பட்டாசார்யா:

''இங்குள்ள அமெரிக்க தூதரகத்தில் தொடர்பு கொள்ளுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அங்குள்ள விலாசம் கண்டுபிடிக்கவும், பின்பு இங்கிருந்து யாராவது போகவும் விசா முதலியன உடனே ஏற்பாடு செய்யவும் அவர்களின் உதவி தேவை என்று நினைக்கிறேன்...''

''யாரோடு இதைப் பற்றிப் பேசலாம்?''

''வாட் அபௌட் மிஸ்டர் ஆண்டர்ஸன்...?''

மினிஸ்டர் 'சரி' என்று தலையை ஆட்டினார். பின்பு, ''அவர்களிடமும் சொல்லிவிடுங்கள், பத்திரிகைக்குக் கண்டிப்பாய் விஷயம் போகக்கூடாது என்று. இந்த 'டைம்' 'நியூஸ்

வீக்' ரிப்போர்ட்டர்கள் எமகாதகர்கள்! கழுகுக்கு மூக்கில் வேர்க்குமோ வேர்க்காதோ...இவர்கள் மோப்பம் பிடித்துப் பத்திரிகையில் எழுதிவிடுவார்கள். ஆண்டர்ஸனுடன் பேசின விவரத்தை என்னைச் சந்தித்துச் சொல்லுங்கள்.''

பட்டாச்சார்யா மந்திரியிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினார்.

அன்று பகல் இரண்டு மணி அளவில் மீண்டும் மந்திரியைச் சந்திக்க அவர் அலுவலக அறைக்குள் நுழைந்தார், பட்டாச்சார்யா. விவரங்களை எடுத்துரைத்தார்.

ஆண்டர்ஸனைப் பார்த்து விஷயத்தை விளக்கியதுமே அவர் தன் முழு ஒத்துழைப்பையும் தரத் தயார் என்றாராம். சென்னையில் உள்ள தங்கள் கான்ஸலேட்டுக்கு போன் செய்து அவர்களை ஆவன செய்யச்சொன்னால் என்ன என்றும் கேட்டாராம். 'சரி' என்ற பட்டாச்சார்யா, எக்ஸ்டர்னல் மினிஸ்ட்ரியில் தனக்குக் கீழ் வேலை பார்க்கும் கணபதியை அழைத்தாராம். டெலக்ஸில் ஆங்கில எழுத்துக்களில் வந்த தமிழ் வார்த்தைகளை—விலாசத்தைக் குறித்துக் கொள்ளச் செய்து மீண்டும் ஆண்டர்ஸனை கணபதியுடன் சந்தித்தாராம்.

ஆண்டர்ஸன் சென்னை கான்ஸலேட்டுடன் தொடர்பு கொண்டு, அங்குள்ள தமிழ் பேசும் அதிகாரி ஒருவரை போனுக்கு வரச்சொல்லி இருக்கிறார்.

உமாகாந்தன் போனுக்கு அழைக்கப்பட்டான்.

கணபதி தமிழ் வாக்கியத்தைச் சொல்ல உமாகாந்தன் அப்படியே குறித்துக்கொண்டான்.

தொடர்ந்து ஆண்டர்ஸன் சென்னை தலைமை அதிகாரியிடம் பேசினார். உடனடியாக கார் ஒன்றை எடுத்துக் கொண்டு கான்ஸலேட்டிலிருந்து நம்பிக்கையான ஆள் ஒருவர்—முடிந்தால் உமாகாந்தனே புறப்பட்டு குறிப்பிட்ட



விலாசத்திற்குப் போகவேண்டும். எந்நேரமானாலும் விலாசதாரைக் கண்டுபிடித்து—ராமச்சந்திரனை அமெரிக்கன் கான்ஸலேட்டில் சந்திக்க விரும்புவதாய் கூறி சென்னைக்கு அழைத்து வரவேண்டும். ராமச்சந்திரன் இல்லாவிட்டால் விலாசத்தில் உள்ள மற்ற பொறுப்பான நபரை இட்டு வரவேண்டும். விவரங்கள் எதும் சொல்லத் தேவையில்லை. நாளைக் காலை விமானத்தில் புறப்பட்டு தானும், எக்ஸ்டர்னல் மினிஸ்ட்ரியைச் சேர்ந்த மிஸ்டர் பட்டாச்சார்யாவும் வந்தபின் மற்ற விவரங்களைச் சொல்வதாகக் கூறியிருக்கிறாராம்.

பகல் மணி இரண்டுக்குள் விஷயம் சென்னைக்குப் போய் விட்டது.

''இந்நேரம் அவர்கள் காரில் கிளம்பி இருப்பார்கள். நான் நாளை போய்ச் சேருவதற்குள் ராமச்சந்திரனோ... இல்லை மற்றவரோ நிச்சயமாய் வந்துவிடுவார்கள்...''

''இந்த நடவடிக்கைகளை அமெரிக்க கான்ஸலேட் மூலமாக ஏன் செய்யவேண்டும், பட்டாச்சார்யா? நம் அரசாங்க அலுவலகங்கள் மூலமாகச் செய்யக்கூடாதா...''

''அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆனால், 'எங்கள் நாட்டில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் பெண்ணை நாங்கள் காப்பாற்றித் தருவதுதான் முறை. ப்ளீஸ் அலவ் அஸ் டு ஹெல்ப்' என்று ஆண்டர்ஸன் கேட்டுக்கொண்டார். தவிரவும் நம் உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கு விஷயம் தெரியாமல் இருக்க இவர்கள் உதவுவது நல்லதே என்று நினைத்தேன்...''

''ஆல்ரைட்...நீங்கள் சொல்வது ஒருவிதத்தில் சரிதான். எப்படியாவது அந்தப் பெண் காப்பாற்றப்பட்டால் சரி. நீங்கள் நாளை சென்னைக்குப் போனதும், அங்கு கிடைக்கும் விவரங்களை எனக்கு அவ்வப்போது தெரிவியுங்கள். ஆல் தி பெஸ்ட்...''

பட்டாச்சார்யாவுக்கு மந்திரி தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்த அதே நேரத்தில், சென்னையில் உமாகாந்தன் ஆதிச்சபுரம் புறப்பட கான்ட்ராக்ட்டில் உத்தரவு பிறந்தது.

''இந்த ஆதிச்சபுரம் எங்கிருக்கிறது தெரிந்ததா?''

''சிவரிடம் கேட்டேன். யாருக்கும் தெரியவில்லை. ஆனால் விழுப்புரம் வழி என்பதால் அதற்குக் கிட்டத்தில் இருக்கும் பல கிராமங்களில் ஒன்றாக இருக்கலாம்.''

''விழுப்புரம் எங்கே இருக்கிறது—?''

''என். எச். 45—ல், இங்கிருந்து நூறாவது மைலில் இருக்கிறது.''

''சரி நீங்கள் கான்ட்ராக்ட் வண்டி ஒன்றில் கிளம்புங்கள். இரவுக்குள் அவரை அழைத்துக்கொண்டு திரும்பி விடுங்கள். டெல்லி அதிகாரிகள் நாளைக்கு வந்துவிடுவார்கள் விலாசதாரிடம் எதுவும் சொல்லவேண்டாம். முக்கிய சமாசாரம் என்று மட்டும் சொல்லுங்கள். தங்கை பேர் என்னவென்று கேளுங்கள். அவளுக்கு என்னவோ ஏதோ...என்று பயப்படப்போகிறார்கள். நல்ல காரணமாய்ச் சொல்லிச் சமாளியுங்கள்.''

வெள்ளை செவர்லேட் காரை யூனிபார்ம் போட்ட டிரைவர் ஓட்ட விழுப்புரம் நோக்கி உமாகாந்தன் புறப்பட்டான்.

விழுப்புரத்தை நெருங்கும்போது மணி ஐந்து. வாசவி விஹார் என்ற ஓட்டலில் இறங்கி காப்பி சாப்பிட்ட பின் சர்வரிடம், ''ஆதிச்சபுரம் எங்கேப்பா இருக்கு...'' என்று கேட்டான். அவனுக்குத் தெரியவில்லை. வாசல் பங்குக் கடையில் கேட்டான்.

''ஆதிச்சபுரமா?—திருச்சி சாலையிலே நேராப் போங்க. இடப்பக்கம் ஒரு சிமிண்ட் பைப் கம்பெனி வரும். அதைத்



தாண்டிப் போங்க ஜானகிபுரம் வரும். அங்கே சோத்துக் கைப் பக்கம் திரும்பி நேரே போனா, முதல்லே மரகதபுரம், அப்பாலே ஆதிச்சபுரம்...''

உமாகாந்தன் அவன் சொன்ன வழியில் காரை ஓட்டச் சொன்னான்.

'தி ஸ்பன் பைப் கம்பெனி' பலகை தெரிந்தது—
தான் சிமிட்டி பைப் கம்பெனியா இருக்கும். ராஜ்,
போனார்கள்.
ட்டு
என்று

ஜானகிபுரம் வந்தது. வலப்பக்கம் திரும்பி வை
ஓட்டினான் டிரைவர்.

'அன்னா ஆபத்து' என்ற வாசகம் தெரிந்திருந்ததாம், அமெரிக்காவில் பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணை விடுவிக்கும் பணியில் தானும் பங்கேற்றிருப்பது மட்டும் உமாகாந்தனுக்குப் புரிந்திருந்தது.

செம்மண் சாலை, வளைந்து வளைந்து போனது. மரகதபுரம் தாண்டியாகிவிட்டது.

அடுத்தது ஆதிச்சபுரம்...

அக்ரஹாரத்தில் வண்டி நின்றது.

கப்பல் மாதிரி கார் வந்து நிற்கவும், தெருக் குழந்தைகள் அதைச் சூழ்ந்துகொண்டனர். பெரியவர்கள் தத்தம் வீட்டு வாசலில் வந்து நின்றனர்.

காரிலிருந்து இறங்கிய உமாகாந்தன், ''இங்கே ராமச்சந்திரன் வீடு எது...?'' என்று கேட்கவும், கூட்டத்தை விலக்கிக்கொண்டு சத்துருவே வந்தான்.

''யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்...?''

''ராமச்சந்திரனங்கறது...?''

''நான்தான்—ஏன்...?''

''நா மெட்ராஸிலேந்து வரேன். உங்க வீட்டுக்குள்ளே போய்ப் பேசலாமா...?''

ஆ
இட சந்துரு தன் வீட்டுக்குள் அவனை அழைத்துப் போனான். யில் உமாகாந்தனை உட்காரச் சொல்லி, பக்கத்தில் ம் அமர்ந்தான்.

இர ''என் பேரு உமாகாந்தன். நா அமெரிக்கன் கான்ஸு லட்லே வேலையா இருக்கேன்.''

ராமச்சந்திரனிடம் என்ன பேசவேண்டும் என்று தீர்மானித்துவிட்ட உமாகாந்தன் நிதானமாய்ப் பேசினான்:

''அமெரிக்காலே இருக்கிற இண்டியன்ஸ் பத்தி அப்பப்போ விசாரிக்கிறது என் வேலை. அவங்க சௌகரிய அசௌகரியங்களை ஆராய்ந்து விவரம் சேகரிப்போம். அதுக்காகத்தான் இந்த டிஸ்ட்ரிக்குக்கு நான் இன்னிக்கு வந்திருக்கேன்...''—பெரிசாய் அளந்தான். உமாகாந்தன்.

சந்துருவுக்கு வாயெல்லாம் பல்! தன் தங்கையை எத்தனை பெரிய இடத்திலே கொடுத்திருந்தால் இப்படிப் பட்ட விசாரிப்பெல்லாம் வரும்...?

''என் தங்கை அமெரிக்காவிலே ராஜாத்தியாட்டம் இருக்கா. இன்னிக்குக்கூட மாப்பிள்ளைகிட்டேயிருந்து கடிதாசியும், போட்டோவும் வந்தது. அம்மா, அந்தக் கவரைக் கொண்டா...''

பட்டம்மா காப்பியுடன் ஏர்மெயில் கவரையும் பெஞ்ச் மேல் வைத்தாள்.



''காபி சாப்பிடுங்கோ, வார்! இதோ பாருங்கோ... இதான் விசாலி.''

இவன் நீட்டின படத்தைப் பார்த்தான் உமாகாந்தன். அகமும், கண்களும் சிரிக்க நிற்கும் இவளா ஆபத்தில் இருக்கிறாள்...?

அவனுக்கு நம்புவது கஷ்டமாக இருந்தது. ஆனால், விசாலிதான் 'வைஷாலி' என்று திரிந்துபோய்விட்டது என்று புரிந்ததால், ஆள் மாறாட்டம் இல்லை என்று தெரிந்துகொண்டான்.

''எப்போக் கல்யாணம் ஆச்சு?''

சந்துரு சொன்னான்.

''மாப்பிள்ளை என்ன பண்ணறார்?''

சந்துரு மாப்பிள்ளையின் பெருமையை நீளமாய் சொல்லி திருத்தினான்.

சந்துரு பேசப் பேச உமாகாந்தனுக்கு இந்தப் பெண்ணும் தான் தேடும் பெண்ணும் ஒன்றா என்ற சந்தேகம் மீண்டும் எழுந்தது.

''எதுக்கு இத்தனை விவரங்கள் கேட்கிறேன்னா, ஊருக்குப் போனபோது அவங்க பெட்டி ஒண்ணு நியூயார்க்லே இடம் மாறித் தவறிப் போயிடுத்து...ப்ரம் அட்ரஸ் பார்த்து எங்ககிட்டே அனுப்பியிருக்காங்க. நீங்க வந்து அந்தப் பெட்டி உங்க தங்கை, மாப்பிள்ளையோடது தானானு சொன்னால் நாங்க திரும்ப அவங்களுக்கு அனுப் பிடுவோம். தங்கை அட்ரஸ் இருக்கா...? எடுத்துட்டு என்னோட கார்லியே கிளம்புங்க. நாளைக்குத் திரும் பிடலாம்.''

இப்படி நடக்குமா...? இது சாத்தியமா என்பதெல்லாம் எந்த ஆதிச்சபுரத்துவாசிக்கு அலசிப் பார்க்கத் தோன்றும்? சந்துருவும் நம்பினான்.

''மாப்பிள்ளை லெட்டர்லே ஒண்ணும் இதப்பத்தி எழுதலையே...சார்!''

''வீணா நீங்க கவலைப்படக்கூடாதுன்னு எழுதாமல் இருந்திருக்கலாம். இல்லையா?''

அதுவும் சரிதான்.

இரண்டு வேஷ்டி, சட்டைகளையும், குமாரின் அலுவலக விலாசம் கொண்ட கடிதத்தையும் எடுத்துக்கொண்டு அம்மாவிடம் விடைபெற்றபின் சந்துரு புறப்பட்டான்.

## 26 நாற்பத்தொன்றாவது நாள்

காலை மணி ஒன்பது.

ஜெமினி சர்க்கிளில் இருந்த அமெரிக்கன் கான்ஸலேட்டின் ஓர் அறையில் சந்துருவும், உமாகாந்தனும் பட்டாச்சார்யாவின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

ஆண்டர்ஸனுடன் அவர் நேராக ஏர்போர்ட்டிலிருந்து கான்ஸலேட்டுக்கு வருவதாக போன் செய்துவிட்டார்.

முதல் நாள் இரவு பத்து மணிக்கு சென்னைக்கு வந்த பிறகு சந்துருவை ஒரு ஓட்டலில் இரவு தங்கச் செய்து, காலையில் அவனோடு கான்ஸலேட்டுக்கு வந்துவிட்டான் உமாகாந்தன்.

பட்டாச்சார்யா, ஆண்டர்ஸன், உள்ளூர் அமெரிக்க கான்ஸல் எல்லோருமாய் அறைக்குள் வந்தார்கள்.

அவர்கள் விரைவாகப் பேசின ஆங்கிலம் முழுமையாகப் புரியாவிட்டாலும், என்னமோ பெரிய விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பது மட்டும் சந்துருவுக்குத் தெளிவானது.

என்ன விஷயம்...?

பெட்டி பார்க்கணும்...அது இதுன்னாரே இவர், அதெல்லாம் இல்லையா...?

உமாகாந்தனிடமிருந்து முழுத் தகவலையும் தெரிந்து கொண்ட பின், உண்மை விவரத்தைச் சந்துருவிடம் சொல்லச் சொன்னார் பட்டாச்சார்யா.

உமாகாந்தன் சொன்னான்.

சந்துரு பதறினான்.

''என் தங்கை லெட்டர் கொடுத்திருக்கிறாளா...எங்கே சார்...? 'ஆபத்து'ன்னா? 'அண்ணா காப்பாத்து'ன்னா? இருக்காது சார். ஏதாவது தவறு இருக்கும். மாப்பிள்ளை நல்லவர். நேத்துக்கூட லெட்டர் வந்திருக்கு நீங்க பார்த்தேளா...அவா சந்தோஷமா இருக்கா, சார்...''

''உங்கள் விலாசம் அதில் சரியாக இருக்கிறதே, மிஸ்டர் சந்துரு! பெயர் வேறு வைசாலி. அது உங்கள் தங்கையைத் தவிர வேறு யாராய் இருக்கமுடியும்?''

ஆமாம்! அது விசாலிதான்...

''உங்கள் தங்கையைக் காப்பாற்ற நாங்கள் எல்லா முயற்சிகளையும் எடுக்கத் தயாராய் இருக்கிறோம். நீங்கள் கவலைப்படாதீர்கள். அவன் விலாசம் எங்கே...?''

சந்துரு கொடுத்தான்.

''இது வீட்டு விலாசம் இல்லை. குமாரோடா ஆபீஸ் விலாசம். வீடு மாறப்போறோம்; மாறின பிறகு புது அட்ரஸ் எழுதறேன்னான்...''

அட்ரஸை வாங்கிப் பார்த்தார் ஆண்டர்ஸன்,

இவான்ஸ்டன் விலாசம்—

''என்ன பண்ணலாம்?'' என்றார் பட்டாச்சார்யா.

சந்துரு சொன்ன விவரங்களிலிருந்து இரண்டு விதமாக இருக்கலாம் என்று தோன்றியது...

ஒன்று—அந்தக் குமார் எமகாதகனாய் இருக்கலாம்' இங்கே நல்லவன்போல் நடித்துவிட்டு அங்கு போய் தன்



சுயரூபத்தைக் காட்டியிருக்கலாம். அவ்வளவு படித்த பையன் என்னத்திற்காக சின்னப் பெண்ணான, படிக்காத— கிராமத்து விசாலியை அவசர அவசரமாய் மணந்துகொள்ள வேணும்...?

இரண்டு—இந்த விசாலி மூளைக் கோளாறு உள்ளவளாக இருந்து, புது தேசம், புது சூழ்நிலை கண்டு மிரண்டு இப்படி நடந்துகொண்டிருக்கலாம்.

ஆனால், அவள் கையில் நெருப்புக் காயம் இருந்ததாமே...!

பட்டாச்சார்யா சந்துருவிடம் கேட்டார்: ''உங்கள் தங்கைக்கு இங்கு இருக்கும்போது கையில் ஏதாவது காயம் உண்டா...?

''கிடையாது சார்...! பட்டு மாதிரி அவ கை இருக்கும். இதோ இந்தப் படத்திலே பாருங்கோ! அவ கை எத்தனை அழகாய் இருக்கு...?''

வாஸ்தவம்தான். தாமரை இதழ்கள் விரிந்த மாதிரி மருதாணி பூசின விரல்களில் ஐஸ்க்ரீம் பிடித்துக்கொண்டு விசாலி நின்றிருந்தாள்.

இத்தனை சந்தோஷமாக இருக்கும் பெண், 'ஆபத்து, காப்பாத்து' என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன...?

ஆண்டர்ஸன் பேசினார்: ''எனக்கென்னமோ நாம் ஆர அமர்ந்து யோசிக்கும் நேரத்தில், ஷிகாகோ எப்.பி.ஐ-க்கு தெரியப்படுத்தினால் இந்த விலாசத்தில் உள்ள குமாரை நன்கு கண்காணித்து நமக்குத் தெரிவிப்பார்கள். என்ன சொல்கிறீர்கள்...?''

பட்டாச்சார்யா சம்மதித்தார். ஆண்டர்ஸனுக்கு இந்த விஷயம் பத்திரிகைக்குப் போகக்கூடாது என்பது நன்றாய்த் தெரியும். கவனமாய் வேலை செய்பவர்; பயப்படவேண்டாம்.

விவரம் வரும் வரையில் என்ன செய்யலாம்...?

சந்துருவைப் பார்த்தார். எட்டு முழ வேஷ்டியும், சட்டையும், செருப்புமாய் அவன் இருந்தான்.

உண்மையிலேயே விசாலி ஆபத்தில் இருந்தால், இந்த சந்துரு அங்குபோய் அவள்முன் நிற்பதுதான் அவளுக்கு மன அமைதியைத் தரும் என்று நினைத்த அவர், ''இவரை அழைத்துப்போய் ரெடிமேட் உல்லன் ஸூட் ஒன்று, ஓவர் கோட், ஸ்வெட்டர், உல்லன்ஸாக்ஸ், ஷூ எல்லாம் இன்றே வாங்கித் தயார் செய்துவிடுங்கள். எந்த நிமிஷமும் இவர் யு.எஸ். புறப்படும்படி இருப்பது நல்லது...'' என்றார் உமாகாந்தனிடம்.

அவர் சொன்னபடியே பிற்பகலுக்குள் சந்துருவின் பயணத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கி முடித்ததும், அவர்கள் மீண்டும் கான்ஸூலேட்டுக்கே வந்தார்கள்.

சந்துரு மனசுக்குள் அதிர்ந்துபோனாலும், இத்தனை பேர்கள் நமக்காகப் பாடுபடும்போது—நாமும் தைரியமாக இருந்து நம்மால் ஆன உதவிகளைச் செய்யவேண்டும் என்ற முடிவோடு இருந்தான்.

அமெரிக்காவிலிருந்து தகவல் வந்துவிட்டால் எந்த நிமிஷமும் சந்துரு கிளம்புவதற்கு ஏதுவாய் ஆண்டர்ஸன் டிக்கெட், விசா முதலியவைகளை கவனித்த நேரத்தில் சந்துருவுக்கு பாஸ்போர்ட்டைத் தயார் பண்ணும்படி உத்தரவு இட்டார பட்டாச்சார்யா.

இங்கிருந்து புறப்பட்டுப் போய், தங்கையைக் கையோடு அழைத்து வருவதுதான் சந்துருவின் பயணத்தின் குறிக்கோளாக இருக்குமாதலால், அமெரிக்கா அவன் பயணச் செலவுகளை ஏற்கும் என்றும் ஆண்டர்ஸன் சொன்னார்.

இரண்டு நாளில் திரும்பி ஆதிச்சபுரம் போகாவிட்டால் அம்மா பயப்படுவாளே என்று சந்துரு தெரிவித்ததும், அதற்கும் பட்டாச்சார்யா வழி சொல்லிக் கொடுத்தார்.



'விசாலியின் பெட்டியை பம்பாய்க்குக் கொண்டுபோய் கொடுத்துவிடுங்கள். நாங்கள் அனுப்புகிறோம்' என்று கான்ஸூலேட்டில் சொன்னதால், நான் பம்பாய் போய்விட்டு ஒரு வாரத்தில் வந்துவிடுவேன். ஊருக்குத் திரும்பி மற்ற விவரங்களைச் சொல்லுகிறேன்' என்று கடிதம் எழுதிப் போட்டான்.

'பெட்டியையாவது பம்பாயில் கொண்டு கொடு என்று கான்ஸூலேட்டில் சொல்லுவதாவது' என்று அம்மாவோ அல்லது வேறு யாருமோ சந்தேகப்படமாட்டார்கள் என்பது சந்துருவுக்குத் தெரியும். கிராமவாசிகளுக்கு அத்தனை தூரம் உலக ஞானம் ஏது...?

## நாற்பத்து இரண்டாவது நாள்

விசாலிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ஜூரம் வரும் போல உடம்பு வலித்தது.

காலையில் எழுந்தால் வயிற்றின் குமட்டல் அவளால் தாங்க முடியாததாக இருந்தது. இது பிள்ளைதான் அவளுக்குத் தீர்மானமாகத் தெரிந்துபோயிற்று.

இதைக் கலைக்கவும் வழியில்லை. வெளியில் சொல்லவும் முடியாது.

ஆனால் இனி எத்தனை நாளைக்கு இந்த விஷயத்தை மறைக்க முடியும்?

காப்பி கிட்டத்தில் போனால் குமட்டியது; சாதத்தைப் பார்த்தால் வேண்டியிருக்கலை.

ஜானி ஆத்தில் இல்லாவிட்டாலும் எப்படியோ சமாளிச்சுடலாம். ஆனா அவனும் கூடவே இருக்கானே! ஒவ்வொரு தடவை வாந்தி எடுக்க வரும்போதும் எப்படி பாத்ரூமுக்குள் ஓடமுடியும்? அவ பார்த்துட்டா? குமாருக்குத் தெரிஞ்சுட்டா?

பயத்தில் கைவிரல்கள் சில்லிட்டுப் போயின.

நல்ல வேளையாய் 'நர்ஸரி' வேலை செய்ய ஆட்கள் வந்திருப்பதால் ஜூலி அவர்களின் வேலையை மேற்பார்வை பார்த்துக்கொண்டே பெரும் பொழுதைக் கழிப்பதில் விசாலி வாந்தி எடுத்ததையோ, குமட்டுவதையோ கவனிக்கவில்லை.

அம்மாவுக்கு மசக்கை ரொம்பப் படுத்துமாமே? வாசப் படியிலே தலையை வைச்சுண்டு படுத்துண்டே இருப்பாளாமே? வாந்தி எடுத்து எடுத்து உடம்பு சோர்ந்துபோயிடுமாமே? எனக்கும் அப்படி இருந்தா, நா எப்படிச் சமாளிப்பேன்...?

'முணுக்'கென்றால் கண்ணீர் விசாலியின் கண்களில் எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றது.

வெள்ளி அன்று ஒரு ஹிந்திக்காரப் பெண்ணிடம் துண்டு லெட்டர் எழுதிக் கொடுத்தபின் அவள் தவித்த தவிப்பு அவளுக்குத்தான் தெரியும்.

பின்னாலேயே வந்து 'இந்தா நீ கொடுத்த லெட்டர்னு' கொடுத்துட்டா; ஜூலி அதைக் கொண்டு குமாரிடம் காண்பிச்சா...என் கதி?

ஷாப்பிங் செண்டரிலிருந்து வீடு வந்து வெகுநேரமாகியும் அவளின் இந்த நடுக்கம் ஓயவில்லை.

''விழுந்தியா, எங்கே? ஒரு இண்டியன் லேடியாமே யாரு...?''

''சறுக்கிடுத்து...விழுந்தேன். அது யாரோ எனக்குத் தெரியாது. நா பார்க்கலை.''

ஒரேயடியாய்ச் சாதித்துவிட்டாள் விசாலி. அன்று முழுவதும் போய் மறுநாள் பிறந்த பிறகு பயம் குறைந்து மனசில் நம்பிக்கை தலையைக் காட்டியது.



அந்தச் சீட்டை அவ என்ன பண்ணுவா? அவளுக்குப் புரிஞ்சிருக்காதே...ஏதோ இருக்கல்னு குப்பைக் கூடையிலே போட்டிருப்பாளோ?

விசாலிக்கு அழுகைதான் வந்தது.

இரண்டு வார்த்தை இங்லீஷ்லே பேசத் தெரிஞ்சிருந்தா இந்தக் கஷ்டம் உண்டா? என்னைமாதிரி ஒரு துரதிர்ஷ்டம் பிடிச்சவ உண்டா? முதல்தான் வந்த தமிழ்க்காரி மறுபடியும் வந்திருக்கக்கூடாதா?

நினைத்து நினைத்து மாய்ந்துபோனாள் விசாலி. மேற்கொண்டு அவளால் அந்தச் சம்பவத்தை நினைக்க முடியாதபடி வயிறு புரட்டல், வாந்தி, தலைசுற்றல் ஆரம்பித்து இரண்டே நாளில் அவளை ஆட்டி வைக்கத் தொடங்கின.

'நா என்ன பண்ணுவேன்? பயமா இருக்கே'—என்று சதா மனசுக்குள் புலம்பத் தொடங்கினாள்.

இன்று மதியம் சாப்பிட ஜூலி கூப்பிட்டபோது தலையை தொட்டுக் காட்டி, 'வலிக்கிறது; சாப்பாடு வேண்டாம்' என்று சைகை காட்டினாள்.

அன்று மாலை குமார் ஆபீஸிலிருந்து வந்தபோது கவலையுடன் ஜூலி, ''விசாலி சரியாக இல்லை, ஹனி—என்னமோ படுத்துகிறது. சொல்ல மறுக்கிறாள். நேற்றும் சாப்பிடவில்லை. இன்றும் வேண்டாம் என்று சொல்லி விட்டாள். வெறும் ஜூஸ் மட்டும் நிறையக் குடிக்கிறாள். நீ வேணுமானால் நிதானமாகப் பேசிப் பாரேன். யோசிக்க யோசிக்க நாம் தப்புப் பண்ணிவிட்டோமோ என்று தோன்றுகிறது, குமார். அவளுக்கு மனசில் நிச்சயமாய் சந்தோஷம் இல்லை என்றே நான் நினைக்கிறேன். எவ்வளவுதூரம் நமக்கு உதவியாக இருக்கப்போகிறாள் என்பதிலும் எனக்கு சந்தேகப்படத் தோன்றுகிறது'' என்று ஒருவித சலிப்புடன் சொல்லவும், மாடியேறி விசாலியின் அறைக்குள் எரிச்சலுடன் நுழைந்தான் குமார்.

ஜானியின் வற்புறுத்தலுக்காகப் பாலைக் குடித்தபின் கஷ்டப்பட்டு அடக்கி வைத்திருந்ததை, அப்போதுதான் சப்தமில்லாமல் பாத்ரூமில் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள் விசாலி.

''என்ன விசாலி, உடம்புக்கு?''

குமார் 'தடக்கென்று' கதவைத் திறந்துகொண்டு வருவான் என்று விசாலி எதிர்பார்க்கவில்லை.

பதில் சொல்லத் தெரியாமல் அழுகை மட்டும் வெடித்துக் கொண்டு வர தலைப்பை வாய்க்குள் திணித்துக்கொண்டாள்.

''என்ன விசாலி! வாந்தியா எடுத்தே...? ஏன் வயிறு சரியில்லையா?''

வாயால் ஒன்றுமே பேசாமல் பொங்கிப் பொங்கி விசாலி அழவும், 'என்னாச்சு இவளுக்கு? நிஜமாய் உடம்பு சரியில்லையா...இல்லை மாய்மாலம் பண்ணறாளா? ஜானி சொன்னதுபோல் இவளாலே நமக்கு உபயோகம் இருக்கறத்துக்குப் பதிலா தலைவேதனைதான் அதிகம் இருக்குமா?'' என்று நினைத்ததும் குமாருக்குக் கோபம் மூண்டது.

''என்னடீ, கேக்கறேன்...பதில் சொல்லேன்!'' அடிக்குரலில் அதட்டினான்.

என்னவென்று சொல்லுவாள் விசாலி? கையும், களவுமாய்ப் பிடிபட்டாயிற்று. இனி என்ன சொல்லி என்ன?

இவனுக்குத் தெரியக்கூடாதுன்னு நினைச்சேன்; பார்த்துட்டான். உண்மை தெரிஞ்சா என்ன பண்ணுவான்? தவிப்பான் இல்லை? என்னைக் கொன்னாலும் சரி இவன் கிடந்து தவிக்கட்டும்...

அழுகையை நிறுத்தி ஒருவிதக் குரூர வெறியுடன் குமாரைப் பார்த்தாள் விசாலி.



''நா பிள்ளையாண்டு இருக்கேண்டா, புரியலை...?'' என்றாள் பல்லைக் கடித்துக்கொண்டு.

பாய்ந்தான் குமார். ஒரு கையால் அவள் முடியைப் பிடித்துக்கொண்டு மறு கையால் ஓங்கி இரண்டு கன்னத்திலும் அறைந்து, ''விளையாடாதே சனியனே...பொய் சொல்லாதே'' என்று உறுமினான்.

விசாலி அழவில்லை சிரித்தாள்.

அவனுக்கு இருந்த மனநிலையில் எல்லாமே மரத்து விட்டது.

''சொல்லுடீ—நிஜத்தைச் சொல்லு!''

''என்னை அடிச்சா மட்டும் நா பிள்ளையாண்டிருக்கிறது இல்லேனு ஆயிடுமா...?''

''அடிப்பாவி! எத்தனை நாள் ஆயிருக்கு? ஏன் என் கிட்டே சொல்லலை?'' ஜானி பார்க்க முடியாத இடமா உள்துடையில் தன் ஆத்திரம் தீரப் பல முறைகள் கிள்ளி அவள் மண்டையில் குட்டி, அவளை உலுக்கினான்.

''நாற்பத்து நாலு நாள்.''

இவளை என்ன செய்தால் தேவலை?

''குமார்'' என்று கீழிருந்து ஜானியின் குரல் கேட்டது.

''சரியா, ஒழுங்கா இரு. அவனுக்குத் தெரிஞ்சதோ உன்னைத் தொலைச்சுடுவேன்...'' என்றவன் கீழே போனான். அன்று பூராவும், இவள் கர்ப்பத்தை, ஜானிக்குத் தெரியும்முன் எப்படிக் கலைப்பது என்று எண்ணி எண்ணி அவன் கலங்கினான்.

## நாற்பத்து நான்காவது நாள்

**கா**லை எட்டு மணிக்கு அமெரிக்காவிலிருந்து குமாரின் ஜாதகமே வந்துவிட்டது.

'குமார், ஜூலியா வில்லியம்ஸ் என்ற பிரபல டாக்டரை மணந்து வருஷம் மூணாகிறது; ஜூலியா இப்போது நிறை மாத கர்ப்பிணி; குமார் சமீபத்தில் இந்தியாவுக்குப் போய்த் திரும்பியபோது தன் தங்கையை உடன் அழைத்து வந்திருக்கிறான்; குமாருக்குப் புத்தி இருக்கிறது; ஆனால் உழைக்க மனம் இல்லை; பணக்காரப் பெண்டாட்டியின் பணத்தில் சௌகர்யமான வாழ்க்கை நடத்துபவன்.'

இன்னும் வேறு என்ன விவரங்கள் வேண்டும்?

எதற்காகக் குமார் ரொம்ப நல்லவன் மாதிரி நடிக்க வேண்டும்? எதற்காகப் படிக்காத குடும்பப் பாங்கான பெண்டாட்டியைத் தேடவேண்டும்? எதற்காக அவசரம் அவசரமாய்த் திரும்பி ஓட வேண்டும், என்பதெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியானது.

விவரங்கள் முழுதும் தெளிவானபோது, இத்தனை அதிகாரிகள் நடுவில் இருக்கிறோமே என்ற உணர்வுகூட இல்லாமல் குழந்தைபோல, ''என் தங்கையைப் பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டேனே—நான் பாவி'' என்று சந்துரு வாய்விட்டு அழுதான்.

ஏர்—இந்தியா விமானத்தில் அன்றே சந்துரு கிளம்புவது என்று தீர்மானமாயிற்று.

வாஷிங்டனுக்கு போன் செய்து ரங்கநாதனை நியூயார்க்குக்கு அனுப்பும்படி அம்பாஸிடரிடம் பேசினார் பட்டாச்சார்யா.



சந்துருவின் விமானம் நியூயார்க் போய்ச் சேரும்முன் ரங்கநாதன் அங்கு தயாராய் இருப்பான். சந்துருவுடன் அவன் நாளை இரவு ஷிகாகோவை அடையும்போது அவர்களை வரவேற்று டாக்டர் வில்லியம்ஸின் வீட்டுக்குக் கூட்டிப்போக எப். பி. ஐ. ஆள் காத்திருப்பார் என்று ஆண்டர்ஸன் ஏற்பாடு பண்ணிவிட்டார்.

அன்று இரவு ஏர்—இந்தியா ஜம்போ விமானத்தில் முதல் வகுப்புப் பிரயாணியாகப் பயணம் செய்த சந்துருவுக்கு மனசில் தங்கையை உயிரோடு காண்போமா என்ற பயமே நிறைந்து இருந்தது.

# 27 நாற்பத்தைந்தாவது நாள்

ஆபிசுக்கு வந்ததும் முதல் வேலையாய் தன் இந்திய நண்பன் சுசீலுக்கு போன் செய்தான் குமார். சுசீலும் கிட்டத் தட்ட இவனை மாதிரிதான். அவன் உ.பி. காரன், இவன் தமிழன். சுசீல் வெள்ளைக்காரியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் ஊர் மேய்கிறான். இவன் கல்யாணம் என்ற போர்வையில் எதையும் செய்கிறான். இதுதான் வித்தியாசம்.

ரொம்ப நெருங்கிய நண்பர்கள் இல்லை என்றாலும், இதுமாதிரி விஷயங்களில் தாராளமாய்ச் சேர்ந்துகொள்ளும் ரகம்தான்.

விசாலி கர்ப்பமாக இருப்பது தெரிந்த இரண்டு நாட்களாய் அவனும் படாதபாடு படுகிறான். யார் யாருக்கோ போன் செய்தான். விசாரித்துப் பார்த்தான். ம்ஹூம்... ஒன்றும் நடக்கவில்லை. சுசீலையும் அவனால் பிடிக்க முடிய வில்லை. வெளியூர் போனவன் இன்றுதான் அகப்பட்டான்.

''அபார்ஷன் ஒன்று அவசரமாய் செய்யப்பட வேண்டும். ஒரு சில மணி நேரங்களில் செய்து வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டிய கேஸ். பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே! யாராவது டாக்டர் தெரியுமா?''

பெண்டாட்டிக்குத் தெரியாமல் கள்ள நட்புக் கொண்டுள்ள பெண் மூலம் இவன் ஆபத்தில் இருக்கிறான் என்று சுசீல் புரிந்துகொண்டான்.



விவரங்களைக் கேட்டாலும் குமார் சொல்லமாட்டான் பணம் நிறைய உண்டு என்கிறான். அப்புறம் என்ன?

'விசாரித்து, மறுபடியும் போன் பண்ணுகிறேன்' என்றவன் அரைமணியில் திரும்பக் கூப்பிட்டான். 'அவனுக்கு வேண்டிய டாக்டருக்கு இந்த வாரம் சௌகரியப்படாதாம்: ஊருக்குப் போகிறாராம். இன்னொருத்தர் நிறையப் பணம் கேட்கிறாராம். பரவாயில்லை என்றால் சிலமணி நேரங்களில் அனுப்பமாட்டேன்—குறைந்தபட்சம் அரைநாளாவது என் கிளினிக்கில் வைத்துப் பார்த்துத்தான் அனுப்புவேன்' என்கிறாராம்.

ம்ஹூம்...! இது சரிப்படாது. அரைநாள் என்னால் லூஸியிடம் என்னவென்று சொல்லி ஏய்க்க முடியும்? சில மணி நேரங்கள் என்றால் பரவாயில்லை. முக்கியமாய் வரும் ஞாயிற்றுக்கிழமை, லூஸியின் அம்மா இறந்த தினம் அன்று தாயின் கல்லறைக்குப் போய் மலர் வளையம் வைத்துவிட்டு வருவாள். இரண்டு மணி நேரம் ஆகும், போய்த் திரும்பிவர.

குமாரையும் நிச்சயம் கூப்பிடுவாள். ஆனால் இவன் எப்படியாவது சமாளித்துவிடலாம். அந்த டயத்தை உபயோகப் படுத்திக்கொண்டால் தேவலை. கூடக் கொஞ்ச நாழிகை ஆனாலும் எப்படியோ சரிக்கட்டிவிடலாம் என்று நினைத்தான். நடக்கவில்லையே! அரைநாள் என்றால் லூஸியிடம் என்ன சொல்வது?

''உனக்கு வேண்டிய டாக்டரை அடுத்த வாரம் பார்க்கலாமில்லையா? அவரிடமே எங்கேஜ்மெண்ட் நிச்சயம் செய்துவிடு'' என்று சொல்லி போனை வைத்தான்.

டேபிளை உடைக்க வேண்டும்போல ஆத்திரம். கையில் கிடைத்த பொருளைக் கண்ணாடிச் சுவரில் எறிந்து அதை உடைக்க ஆத்திரம், கண்ணில் படும் எவரையும் அடித்து உதைக்கத் தூண்டும்படியான ஆத்திரம்.

சனியன்; மூதேவி, தரித்திரம்...எல்லாம் இந்தக் கழுதை யால் வந்த வினை. மெட்ராசில் டாக்டரிடம் அழைச்சுண்டு போய் 'லூப்' போருத்தினேனே, என்ன ஆயிருக்கும்? விழுந் துடுத்தா? சில பேருக்கு நழுவி விழுந்திடும்னு கேள்விப்பட் டிருக்கிறேன். அது மாதிரியா? கழுதைக்கு அது விழுந்தது கூடவா தெரியலை? நா ஒரு மகா மடையன். இங்கே இருக்கிற வாழ்க்கையில் திருப்தி அடையாம ஊர்லேருந்து ஒண்ணை இழுத்துண்டு வந்தேனே. இதனாலே முதலுக்கே மோசம் வந்துடும் போலிருக்கே! அடுத்த வாரம் வரை ஆலிக்கு விஷயம் தெரியாமல் இருக்குமா? அந்தச் சனியன் வேற வீட்டிலேயே சதா சர்வகாலம் 'நர்ஸரி டெகரேஷன் அது இதுனு இருந்துண்டே இருக்கு. எங்காவது ஷாப்பிங் பிரெண்ட்ஸ் வீடுனு போய்த் தொலைக்கக்கூடாது? அவா அவா குழந்தை பிறக்கிற நிமிஷம் வரை வேலை பார்க்கிறா. இவ மகா சொகுசு; இரண்டு வாரம் ரெஸ்ட் வேணுமாம். சனியன்!

ஜம்போவின் முதல் வகுப்பில் பறந்துகொண்டிருந்த சந்துருவுக்கு இருப்பே கொள்ளவில்லை. அப்ஸரஸ்களாய் உலாவின பெண்களைப் பார்க்கத் தோன்றவில்லை. முதல் முதலாய் விமானப் பயணம் செய்வதைக் கிளுகிளுப்புடன் நினைக்கத் தோன்றவில்லை. முதல் வகுப்பின் சௌகர்யங் கள் எதையும் ஏறிட்டு நோக்கக்கூட மனமில்லை.

''ட்ரிங்ஸ் ஃபார் யூ, ஸார்?''

'வேண்டாம்' என்று தலை ஆட்டினான் சந்துரு.

''காபி ஆர் எனி அதர் ட்ரிங்க்? சாப்பிட ஏதாவது வேண்டுமா?''

இதற்கும் தலை அசைப்புத்தான்.

அம்மாவுக்கு நிலைமை தெரிஞ்சா என்ன பண்ணுவா? வயத்திலே அடிச்சுண்டு அழுது, 'அடேய் சந்துரு, பச்சைக் கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்துட்டோ



மேடா'னு அலறுவா. ஞானம்? இந்தக் குமாரைவிட ஞானத்து ஆத்துக்காரர் தேவலைபோலிருக்கே. திரிச்சு ஆளை ஏமாத்திட்டானே, அயோக்கியன்! சிச்சுச் குழந்தை கையிலே தீப் புண்ணாமே! ஐயோ...என்னாச்சு? ஒண்ணுமே புரியலையே?

விமானம் வழியில் சிரம பரிகாரம் செய்த இடங்களில் மற்றவர்கள் இறங்கினபோதும் தன் இருக்கையிலேயே சாய்ந்து கிடந்தான் சந்துரு.

நா அழக்கூடாது.

நா ஆம்பளை.

என் கஷ்டம் என் மனசோட இருக்கணும்.

லண்டன் வந்தது.

பயணிகள் அனைவரும் இறங்கியே ஆகவேண்டும் என்று நிர்பந்தித்ததால் சந்துருவும் ஏர்போட்டுக்குள் போனான்.

சோதனையாய் விமானம் குறிப்பிட்டபடி முக்கால் மணியில் புறப்படவில்லை.

பறவை ஒன்று இஞ்ஜினில் புகுந்துவிட்டதாம். அதனால் பழுதடைந்த இன்ஜினை, சரி பார்த்த பிறகே திரும்பப் பயணம் என்று சொல்லிவிட்டார்கள்.

சந்துரு தவித்துப்போனான்.

இந்த பிளேன் திரும்ப எப்போது கிளம்பும்? நியூயார்க்லே ரங்கநாதன்னு ஒருத்தர் காத்துண்டு இருப்பார். அப்புறம் ஷிகாகோவிலே எப்.பி.ஐ. அதிகாரி வேறு. இவான்னாம் நா வரலைனு திரும்பிப் போயிட்டா? ஐயோ, எனக்கு எங்கே போகணும், எப்படிப் போகணும்னுகூடத் தெரியாதே... இவா வருவாங்கற தைரியத்துலே விசாரிச்சு வைச்சுக்கலையே. வழி, விலாசம் தெரியாம நாளைக் கடத்தற நாழிகையிலே விசாலிக்கு ஏதேனும் ஆயிடுத்துன்னா?

சந்துருவுக்கு நினைக்கவே பயமாக இருந்தது. தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் விடாமல் பயணிகளையும், ஏர்-இந்தியா அதிகாரிகளையும் விசாரித்துக்கொண்டே இருந்தான்.

''பயணிகளின் கஷ்டத்துக்கு வருந்துகிறோம். இன்ஜின் இப்போது ரிப்பேர் ஆகாது. பழுது பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இரவோ...இல்லை, நாளைக் காலையோ தான் நிச்சயமாய்க் கிளம்ப முடியும். அதனால் எல்லாப் பயணிகளும் ஹோட்டல்களில் தங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தயவுசெய்து வாருங்கள். உங்களுக்காக பஸ்கள் காத்திருக்கின்றன.'' அதிகாரி ஒருவர் இப்படி அறிவித்ததும் பயணிகள் எழுந்து நடந்தனர்.

பலருக்குக் காசு கொடுக்காமல் லண்டனில் ஒருநாள் தங்குவது குறித்து ஏக சந்தோஷம். எப்போது அமெரிக்காவை அடைவோம் என்று துடித்துக்கொண்டிருந்த சந்துரு போன்றவர்களுக்கு ரொம்ப வருத்தம்.

பஸ், நகரில் வலம் வந்து ஹோட்டலை அடைந்தபோது கூட சந்துரு இப்படி அப்படிப் பராக்குப் பார்த்து மகிழவில்லை. 'விசாலிக்கு ஒன்றும் ஆகக்கூடாது' என்ற பிரார்த்தனைதான் மனசுக்குள்.

சௌகரியமான ஹோட்டல்களில் தங்க வசதி. சக பயணிகள் ஏர்-இந்தியா ஏற்பாடு செய்திருந்த பஸ்களில் லண்டன் மாநகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டபோது சந்துரு செல்ல மறுத்துவிட்டான்.

முதல் வகுப்புப் பயணி அல்லவா? அதனால் அவனுக்கும் மற்ற முதல் வகுப்புப் பயணிகளுக்கும் பிரத்தியேகமாக ஊர் சுற்றிப் பார்க்க லிமோஸின்கூட இருந்தது.

சந்துரு அறையை விட்டு அசைய மறுத்துவிட்டான்.



விசாலிக் குட்டிக்கு அங்கே என்ன கஷ்டமோ? 'அண்ணா' ஆபத்து காப்பாத்துன்னு' குழந்தை அழுதிண்டு இருக்கா. எனக்கு என்ன ஊர் சுத்திப் பார்த்து மகிழ்ந்துபோறது வேண்டியிருக்கு...?

இரவு சாப்பாட்டானதும் அறைக்குள் இருந்த போன் பாடியது.

இரவு விமானம் புறப்படாதாம். விடிகாலையில் கண்டிப்பாய். ரெடியாகிவிடுமாம். 'நன்றாய்த் தூங்குங்கள் குட்நைட்' என்றார்—இந்திய அதிகாரி.

சந்துருவுக்குத் தூக்கம் வருமா என்ன?

அது லண்டன் ஆகட்டும், ஐந்து நட்சத்திர பிக்கடிலி சர்க்கிள் ஹோட்டல்தான் ஆகட்டும்! எதுவானால் என்ன? இனித் தங்கையை முழுசாய்ப் பார்த்து, பத்திரமாய் அவளை ஊர் கொண்டு சேர்த்தால்தான் அவனுக்கு நிம்மதி, தூக்கம் எல்லாம்.

## 28 நாற்பத்தேழாவது நாள்

விசாலிக்கு எழுந்திருக்க மனமே இல்லை. அசதியாய் இருந்தது. படுத்துக்கொண்டே இருக்கலாம் போன்ற ஆசை.

'ஆர். யூ. ஆல் ரைட் விசாலி?'—என்று ஜானி அறைக்குள் எட்டிப் பார்த்துக் கேட்டுவிட்டான். இனியும் படுத்துக் கிடந்தால் குமாரிடமிருந்து செம்மையாய் உதை கிடைக்கும். கடந்த சில நாட்களாய் அவனிடமிருந்து கிடைக்கும் சித்ரவதைக்கு அளவே இல்லை. ஜானி அந்தப் பக்கமாய் ஒரு நிமிஷம் போனாலும் போதும்—ஆங்காரத்துடன் கிள்ளுவான், குட்டுவான். சிகரெட்டால் சுடுவான். விசாலி ஜடமாய் இருக்கக் கற்றுக்கொண்டுவிட்டாள்.

இந்தப் பிள்ளையை இவன்தானே கொடுத்தான்? இவனுக்கு இதில் சமபங்கு இல்லையோ? என்னமோ ஆகாசத்திலேருந்து தான் பறிச்சுண்டு வந்த மாதிரி என்மேலேயே குத்தம் படிக்கறானே? இன்னும் போகப் போக என்னென்ன பண்ணப்போறானோ...?

உசிரு இருக்கிறவரைதானே ஹிம்ஸிப்பான்—அப்புறம்?

விசாலி எழுந்தாள்.

கீழே போகப் பிடிக்கவில்லை. ப்ரேக் பாஸ்ட்டுக்கு ஹாஸி பேகன் வறுக்கும் மணம் மாடிக்கே வீசி, குடலை வாய்க்குக் கொண்டு வந்தது!

ஹாஸி வீட்டில் இருக்க ஆரம்பித்ததிலிருந்து காலை உணவை அவள்தான் தயாரிக்கிறாள். நீளநீளமான சிகப்பு பன்றி மாமிசத்தை—பேகனை—வறுத்தால் வீடே நாறிப் போகும். முட்டை வேறு.

நல்ல நெடிகளே விசாலியின் வயிற்றை அறுத்தபோது இதற்குக் கேட்கவா வேண்டும்?

பல் தேய்த்துவிட்டுக் கீழே போனாள். புதுசாய் தலையைச் சுற்றி மயக்கம் வரும்போல இருந்தது.

பல்லைக் கடித்துக்கொண்டு காபியைக் கலந்து—லிவிங் ரூமுக்கு டி. வி. பார்க்கும் சாக்கில் போய்விட்டாள். காபி வாசனை வயிற்றைக் குமட்டியது. பக்கத்து லைட்டேபிளில் அதை வைத்துவிட்டு சோபாவில் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டாள். அப்படியே தூங்கி இருப்பாள் போலிருக்கிறது.

ஹாஸியின் குரல் கேட்டு விழித்துக்கொண்டாள்.

"இவளை என்னமோ படுத்துகிறது குமார். ரொம்ப தூங்குகிறாள்—சாப்பிடமாட்டேன் என்கிறாள்—ஏன் இப்படி? ஊரிலும் இப்படித்தான் இருப்பாளா, இல்லை இங்கேதானா? நீ அவளிடம் இதுபற்றிப் பேசினாயா இல்லையா?"



ஹாஸி முடியாமையுடன் பேசினமாதிரி இருந்தது குமாருக்கு.

என்ன என்று பதில் சொல்வான்?

"எழுந்து உட்காரேண்டி கழுதை. அவளுக்கு எதிர்லே ஒழுங்காயிருனு சொன்னேனோல்லியோ?"

"அவளை எதற்காகக் கடிந்துகொள்கிறாய், குமார்? உடம்பு முடியவில்லையோ என்னமோ? இன்று காலை நான் செமட்ரிக்குப் போய் வந்தபின் அவளை டெஸ்ட் பண்ணலாம் என்று இருக்கிறேன். என்ன சொல்கிறாய்?"

என்ன சொல்லுவான் குமார்?

"ஓ! தட்ஸ் வெரி கைண்ட் ஆஃப் யூ ஹாஸி—பட் ஐ டோண்ட் திங்க் தட் யூ ஷுட் பாதர்."

"இது என்ன சிரமம் குமார்? அவளை நீ இங்கு முக்கியமாய் அழைத்து வந்ததன் காரணம் என்ன? அவள் மனம் தேற வேண்டும். நான் பிள்ளை பெற்று இருக்கும் சமயம் அவள் வீட்டைப் பார்த்துக்கொண்டு உதவியாய் இருக்க வேண்டும். அப்புறம் நான் வேலைக்குப் போகும் நேரம் குழந்தையை அன்பாய்க் கவனிக்க வேண்டும் என்றுதானே? இவள் உடம்பை முதலில் சரியாக்கினால்தானே இதெல்லாம் நடக்கும். ஒரு வாரமாய் நானும் பார்க்கிறேன்—மறுபடி—விசாலி சரியாக இல்லை."

உரலில் தலை கொடுத்தாகிவிட்டது; இடிபட்டுத்தான் ஆக வேண்டுமா?.

இவ்வளவு சிரமப்பட்டபின், எல்லாம் பாழாக எப்படி அனுமதிப்பது? கூடாது, கூடாது!

"அதுக்கென்ன பேபி—உன் இஷ்டம்" என்று சொல்லி குமார் ஆபீசுக்குப் புறப்பட்டுப் போனான்.

ஆபீசுக்குப் போய் சசியுடன் தொடர்புகொண்டவனுக்கு மேலும் அதிர்ச்சி. சசிக்குத் தெரிந்த டாக்டர் வெளியூரிலிருந்து இப்போதைக்குத் திரும்பமாட்டாராம்—பத்து நாட்கள்கூட ஆகலாமாம்.

கடவுளே! அதுவரைக்கும் என்ன பண்றது? வெள்ளைக்காரின்னா பரவாயில்லை; தானே எங்காவது போய் காரியத்தை முடிச்சுண்டு வந்துடுவா? ஆனால் விசாலி? இவளைத் தனியா எங்கே அனுப்பி என்னத்தைச் செய்யறது? மூணாவது மனுஷனுக்குச் சந்தேகம் வராமல் வேறு இருக்கணும்.

சுசீலைக் கெஞ்சினான் குமார்.

''எனக்கு வேறு யாரும் தெரியாது. ஐ டோண்ட் வாண்ட் டு டேக் ரிஸ்க் வித் நியூ டாக்டர்ஸ். ஏன் குமார், ஒரு வாரம் பொறுத்தால் என்ன? குடியா முழுகிவிடும்...?''

'ஆமாம்...குடிதான் முழுகிவிடும்' என்று குமார் எப்படிச் சொல்வான்?

குமாரின் வேதனை சுசீலுக்கும் புரியவில்லை. 'ஒரு வாரம் பொறு குமார்—எல்லாம் நல்லபடியாய் நான் முடித்துத் தருகிறேன்'' என்றவன் சிரிப்பொன்று சிரித்து, ''அப்படி அவசரமென்றால் நம் நாட்டில் ஆதிவாசிகளிடையே இருக்கும் பழக்கத்தைத்தான் செய்ய வேண்டும். பழுக்கக் காய்ச்சின கம்பியால் அடிவயிற்றில் சூடு போட்டால் அதிர்ச்சியில் குறைப் பிரசவமாகிவிடுமாம்—என்ன, செய்கிறாயா? காசுக்குக் காசும் மிச்சம்...''—தொடர்ந்து விளையாட்டாகப் பேசி போனை வைத்தான் சுசீல்.

சரியாய்ப் பதினோரு மணிக்கு ஊஷி லெமட்ரிக்குப் போய்விட்டாள். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் குமாரின் கார் உள்ளே நுழைந்தது.

குமார் பைத்தியம் பிடித்தவன் மாதிரி இருந்தான்.

ஓயாமல் யோசித்தும் அவனுக்கு ஒரு வழிகூடத் தெரியவில்லை. ஊஷி வீட்டில் இல்லாமல் இருந்தால் சுலபமாய்ச் சமாளித்திருக்க வேண்டிய பிரச்சினை இன்று பூதமாய் வளர்ந்து அவனையே துரத்தியது.

என்ன பண்ணலாம்...?

மாலை ஊஷி விசாலியைப் பரிசோதிப்பதை எப்படித் தடுக்கலாம்?



ரொம்ப சிரமம்—என்ன சொல்லித் தடுப்பான்? முதலும் முடியாது. ஊஷி பிடிவாதக்காரி. நினைத்ததைச் சாதிப்பாள்.

இந்தத் தரித்திரத்தை மிரட்டி, சிரித்துக்கொண்டு இருக்க வைத்தால்...? அவளை விட்டே ஊஷியிடம், 'ராத்திரி தூங்கவில்லை. அதனால் காலையில் களைப்பாக இருந்தேன்; இப்போது சரியாகிவிட்டேன்' என்று சொல்ல வைத்தால்? ஓடியாடி விசாலியை வேலை செய்ய வைத்து ஊஷியை நம்பும்படி செய்தால்? இவனும் கூடவே இருந்து 'ஷி ஈஸ் ஆல்ரைட்' என்றால்? ஊஷிக்கு நம்பிக்கை வராதா?

'நீ ஏன் ஆபீஸ் போகாமல் வீட்டிலேயே இருக்கேன்னு?' ஊஷி கேட்பாளே! 'ஜுரம் வரும்போல இருந்தது. வந்து விட்டேன்' என்று வேஷம் போடலாமா?

பட் பட்டென்று முகத்தில் பல முறைகள் அறைந்து கொண்டான் குமார்.

அசாத்திய கோபம்—ஆத்திரம்.

இவன் உள்ளே நுழையும்போது விசாலி காலையிலிருந்து மாடிக்கு ஓடிஓடி, ஊஷிக்குத் தெரியாமல் மூன்று முறைகள் வாந்தி எடுத்துவிட்ட களைப்பில், ஒன்றுமே சாப்பிடாத சோர்வில், தலை கிறுகிறுத்ததால் சோபாவில் நீட்டிப் படுத்திருந்தாள்.

நீளமான அவளின் தலைப்பின்னலைப் பிடித்து இழுத்து அவளை எழுப்பி உட்கார வைத்தான் குமார்.

அறைந்தே அவளைக் கொன்றால் என்ன என்ற வெறி தான் எழுந்தது.

முரட்டுத்தனமாய் அவள் கன்னத்தில் அறைந்து, கீழே தள்ளிக் காலால் பல முறைகள் உதைத்தான்.

''என் மானத்தை வாங்கறதுக்குன்னு அங்கேயிருந்து உன்னைக் கூட்டிண்டு வந்த என் புத்திய செருப்பால அடிக்கணும். நாயே—நீ செத்து ஒழிஞ்சாதான் எனக்கு நிம்மதி. என் மானம் போறதுக்கு முன்னாலே உன்னை ஒழிச்சிக் கட்டிட்டுத்தான் மறுவேலை...''

ஆத்திரத்தில் குமாருக்குப் புத்தி மழுங்கிப் போனது.

இரண்டு கைகளாலும், கால்களாலும் அவளைப் புரட்டி எடுத்தும் அவன் கோபம் தணியவில்லை.

அவளைத் தூக்கி நாற்காலியில் உட்கார வைத்து அவள் புடவையை அவிழ்த்தே அவளை நாற்காலியோடு சேர்த்துக் கட்டினான். பாவாடை, சட்டையோடு மட்டும் இருந்த விசாலிக்கு வாய்விட்டு அழக்கூடத் தெம்பில்லை.

என்னத்துக்காக இப்படிப் புடவையை அவிழ்க்கிறான்? பொம்பளை வெறி ஜாஸ்தியாயிடுத்தா...?

''சிரிச்ச முகத்தோட இரு. சுறுசுறுப்பா இருன்னா... சும்மா நடிக்கவா செய்யறே? உன்னை இன்னிக்கு உண்டு இல்லைனு ஆக்கிடறேன். வா—நா உனக்கு குடுக்கிற குடுப்பிலே பல் பிடுங்கின பாம்பா நீ இருக்கும்படி பண்ணறேன் பாரு! பிள்ளையாண்டு இருக்கிற களைப்பெல்லாம் ஓடிப்போக வைக்கிறேன். உன் வயத்துப் பிள்ளையைக் கலைச்சுட்டுத்தான் மறுவேலை.''

நண்பன் விளையாட்டாய்ச் சொன்ன ஆதிவாசிகள் வைத்தியம் அவனுள் விஸ்வரூபம் எடுத்தது. சூடு போட்டால் அபார்ஷன் ஆகுமாமே! செய்தால் என்ன? வேறுவழி? இவள் திமிரையும் அடக்கின மாதிரி இருக்குமே!

குமாரின் முகத்தில் தாண்டவமாடின குரூரத்தைக் கண்டு விசாலி வெலவெலத்துப் போனாள். கன்னம் வலித்தது. உதட்டில் ரத்தத்தின் உப்புக் கரித்தது. கால் முட்டி எலும்பு மேஜையில் மோதினதில் விண் விண்ணென்று தெறித்தது.

''என்னை விட்டுடுங்கோ—விட்டுடுங்கோ. நா நீங்க சொன்னதைச் செய்யறேன்.''—பதைப்புடன் பேசினாள்.

பேஸ்மெண்ட்டுக்குப் போன குமார் நீளமான தடித்த இரும்புக் கம்பி ஒன்றை எடுத்துக்கொண்டு அடுப்பருகே போனான். அடுப்பை ஏற்றிக் கம்பியை அதில் வைத்துப் பழுக்கக் காய்ச்சத் தொடங்கினான்.

சூடு போடப் போகிறானோ...

விசாலி 'ஹோ' என்று கத்தினாள்.

''வாண்டாம்—வாண்டாம்...எனக்குப் பயமா இருக்கு.''



''கத்து. நன்னா கத்து. தொண்டை கிழியக் கத்து... உடம்பிலே நாலு இடத்திலே சூடு இழுக்கறேன்—அப்போ இன்னும் கத்து...''

* * *

லண்டனிலிருந்து மிகவும் தாமதமாகக் கிளம்பிய விமானம் காலை எட்டு மணிக்கு நியூயார்க்கை அடைந்தது. சந்துருவைத் தவிக்க வைக்காமல் ரங்கநாதன் காத்திருந்தான். இருவருமாய் அடுத்த பிளைட்டில் ஷிகாகோ போய்ச் சேரும் போது மணி பத்தரை.

எப்.பி.ஐ. அதிகாரி நுழைவாசலிலேயே நின்று இவ்விருவரையும் எதிர்கொண்டு அழைத்தார்.

''ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''வாண்டாம் சார்—எனக்கு இருப்புக் கொள்ளலை. உடனே என் தங்கையைப் பார்க்கணும் சார்.''

சந்துருவின் விருப்பப்படி எப்.பி.ஐ.அதிகாரி தன் காரில் அவர்களை ஏற்றிக்கொண்டு டாக்டர் ஜூலியா வில்லியம்ஸின் வீட்டை நோக்கிப் பறந்தார்.

சப்தமில்லாமல் பனி கொட்டிக்கொண்டிருந்தது.

காரை ஜூலியாவின் வீட்டின் முன் நிறுத்திவிட்டு வாசல் மணியை அடிப்பதற்காக அதிகாரி கையை நீட்டும்போது—

''ஐயோ— வாண்டாம்... விட்டுடுங்கோ... பயமா இருக்கு...வாண்டாம்...வாண்டாம்...''

விசாலியின் கதறல் அவர்களுக்குத் தெளிவாய் கேட்டது.

வாசல் கதவை முட்டிப் பார்த்தார் எப்.பி.ஐ. தாளிட்டிருந்தது. அவர் அந்த ஊர் மனிதர். அந்த ஊர் வீடுகளின் அமைப்புகள் அவருக்கு நன்கு தெரியும்.

சாதாரணமாய் வீட்டின் நுழைவாசலை எல்லாரும் தாளிட்டுவிட்டுப் பின்கட்டுக் கதவைத் திறந்து வைத்திருக்கலாம் என்பது தெரிந்தவர்.

பனியில் குதித்து வீட்டைச் சுற்றி ஓடினார்.

லிவிங் ரூம் வலைக்கதவை நெருங்குகையில் விசாலி அலறின அலறல் அவர்களை உறையச் செய்தது.

ஒரு வேகத்தோடு தன் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு வலைக்கதவைத் திறந்து உள் கண்ணாடிக் கதவைத் திறந்து திரையை விலக்கினார் எப். பி. ஐ.

உள்ளே நாற்காலியில் அலங்கோலமாய் விசாலி—எதிரில் பழுக்கக் காய்ச்சின இரும்புக்கம்பியுடன் குமார். விசாலியின் உள்பாவாடை வயிற்றின் பக்கம் நெகிழ்ந்து அவள் அப்போதுதான் வாங்கியிருந்த சிவந்த சூட்டைக் காட்டியது.

''ஆ...ஆ''—விசாலி நாராசமாய்க் கத்தினாள்.

அடுத்தமுறை அவன் கம்பியை நீட்டுவதற்குள் இவர்கள் உள்ளே நுழைந்துவிட்டனர்.

யார் இவர்கள்? எப்படி வந்தார்கள்?

துப்பாக்கியோடு ஒரு வெள்ளைக்காரன்; பின்னாலே ஒரு புது ஆள். அதுக்கும் பின்னாலே யாரு...?

''சந்துருண்ணா...ஆ...''

—தாயைக் கண்டதும் கன்று கத்துகிற தினுசில் அலறிய விசாலி, அதிர்ச்சியின் காரணமாய் மயங்கியே போனாள்.

அவ்வளவுதான் கதை முடிந்துவிட்டது. இனியும் வேறு என்ன சொல்லி வளர்த்த வேண்டும்...?

* * *

எப்.பி.ஐ. குமாரைக் கைது செய்ததையும், ஊவி விவாகரத்து கோரியதும் அல்லாமல் அவன்மேல் கிரிமினல் கேஸ் போட்டதையும் எழுதி வீணாய் கதையை வளர்த்த நான் விரும்பவில்லை.

ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிமுடிக்கிறேன்...

ஆயிரம் காலத்துப் பயிர் என்று நம்பிய விசாலியின் திருமண வாழ்க்கையின் உயிர் நாற்பத்து ஏழு நாட்கள் தான். அதன் சின்னமாக அவள் வயிற்றில் வளர்ந்ததையும் அவள் ஊவியின் உதவியுடன் அழித்ததும் அந்த நாற்பத்து ஏழாவது நாளில்தான். பிறகு இனி ஒரு கணம்கூட இங்கு இருக்கமாட்டேன் என்று முரட்டுப் பிடிவாதத்துடன்—அண்ணாவுடன் தாயகத்துக்குப் புறப்பட்டதும் அந்த நாற்பத்து ஏழாவது நாளின் இரவில்தான்...

★

INVOICE / DELIVERY CHALLAN
Email:ecdchn@vsnl.net